# அலை மொழி

மலர்:01 இதழ்:02




வெளியீடு

தீவகம் வடக்கு கலாசார பேரவை

பிரதேச செயலகம்

ஊர்காவற்றுறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலைமொழி

பிரதேச மலர்

மலர் - 1 இதழ் - 2

தீவகம் வடக்கு கலாசாரப் பேரவை

பிரதேச செயலகம்

ஊர்காவற்றுறை

2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | "அலை மொழி" - பிரதேச மலர் |
| வெளியீடு | : | தீவகம் வடக்கு கலாசாரப்பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>ஊர்காவற்றுறை. |
| தொகுப்பாசிரியர் | : | இ.ஜோன்சன்,<br>கலாசார உத்தியோகத்தர்,<br>ஊர்காவற்றுறை. |
| பக்கங்கள் | : | 107+30 |
| பிரதிகள் | : | 300 |
| நிதி அனுசரணை | : | பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,<br>கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு<br>வடக்குமாகாணம் |
| பதிப்பகம் | : | ஈஸ்வா டியிற்றல் அச்சகம்,<br>இல:172,174,<br>இராமநாதன் வீதி, திருநெல்வேலி. |
| Title | : | "Alaimoli "Divisional Book |
| Published by | : | Island North Cultural Committee<br>Divisional Secretariat,<br>Kayts. |
| Compiled by | : | E.Johnson,<br>Cultural Officer,<br>Kayts. |
| Pages | : | 107+30 |
| No.of copies | : | 300 |
| Supported by | : | Dept. of Cultural Affairs,<br>Ministry of Education, Cultural Affairs Sports and Youth Affairs,<br>Nothern Province |
| Printed By | : | Eeswaa Digital Press,<br>No:172,174, Ramanathan Road<br>Thirunelvely. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இலட்சினை

தீவகம் வடக்கு பிரதேச செயலகம்

செம்மை நெறியில்

DIVISIONAL SECRETARIAT ISLANDS NORTH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேச கீதம்

காவலூர் அம்மா நின் அடிபணிந்தோம் ...ஊர்
காவலூர் அம்மா அடிபணிந்தோம். (காவலூர்...)

கைப்பணி கருப்பணியும் கடல்வளமும் ... மக்கள்
செய்பணி திறம்படவே திகழ்வளமும்
செப்பெரும் கல்விவளம் கலைவளமும் ... இங்கு
ஒப்பெரும் புகழுடைய தனவளமும் .. கொண்ட (காவலூர்....)

எத்தனை இன்னல்கண்டும் எழுந்தவளே... எங்கள்
சொத்தென மானிலத்தில் திகழ்பவளே
இத்தனை சிறப்பெல்லாம் கொண்டவளே- நீ
எங்களின் உயிரம்மா உனையணிந்தோம் ...நெஞ்சில் (காவலூர்....)

புரட்டினோம் வரலாற்றுப் பதிவேட்டை – அதில்
உட்கார்ந் திருக்கிறதே கடற்கோட்டை
கரம்பொன் தம்பாட்டி சுருவிலொடு – அன்னை
அருளைப் பொழிகின்ற சின்னமடு
புளியங் கூடலொடு மெலிஞ்சிமுனை.. நெல்
களனி தனுவிலொடு நாரந்தனை
அனலை எழுவைதனை அணைத்தபடி ... பழம்
பெருமை துறைமுகத்தை சுமந்தபடி ... செல்லும் (காவலூர்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூர நோக்கு

புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஒரு பயனுறுதிவாய்ந்த உற்பத்தி திறன் மிக்க மக்கள் சேவை

## VISION

AN EFFICIENT AND PRODUCTIVE PUBLIC SERVICE WITH NEW TECHNOLOGY

## குறிக்கோள்

பயனுறுதி வாய்ந்த மற்றும் வினைத்திறன் மிக்க மக்கள் சேவையை உறுதிப்படுத்தல், தேசிய முன்னுரிமைகள் மற்றும் மக்களுடைய அபிலாசைகளுக்கு பதிலளிக்க கூடிய வகையில் பிரதேச மட்டத்தில், வலுவான நிர்வாக முறைமையை உறுதிப்படுத்தல். இந்தப்பிரிவிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுதல்.

## MISSION

ENSURE EFFICIENT & EFFECTIVE PUBLIC SERVICE & SOUND ADMINISTRATIVE SYSTEM IN THE DIVISIONAL LEVEL RESPONSIVE TO THE ASPIRATIONS OF THE PEOPLE & NATIONAL PRIORITIES IMPROVEMENT OF LIVING STANDARD OF PEOPLE IN THIS DIVISION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் ஆலய பிரதம குருக்களின் ஆசிச்செய்தி

ஊர்காவற்றுறை பிரதேசசெயலகத்தால் இவ்வருடம் வெளியிடப்படும் **அலைமொழி** என்னும் பிரதேசமலர் எமது பிரதேசத்தின் வாழ்வினையும் கலை வடிவங்களையும் தாங்கி வருகின்ற இம்மலர் வருடா வருடம் வரவேண்டுமென்று கூறி எமது அன்பான ஆசியை தெரிவித்துக் கொள்கின்றேன்

ஜெ.சந்திரகாந்தக்குருக்கள் M.A
(சமயமும் தத்துவம்)
பிரதம சிவாச்சாரியார், தர்மகர்த்தா
சிவன்கோவில்
ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீவக மறைக்கோட்ட குருமுதல்வரின் ஆசிச்செய்தி

எமது ஊர்காவற்றுறை, தீவகம் வடக்கு பிரதேச செயலகம் **"அலைமொழி"** என்னும் மலரினைத் தாங்கி வெளிவரும் இத்தருணத்தில் இப்பிரதேசத்தின் பின்னனியை யாமறிந்து இம்மலரிற்கு வடிவம் கொடுப்பதில், உருக்கொடுப்பதில், ஆசீர் அளிப்பதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஊர்காவற்றுறை என்ற பெயர் பின்னனியை நோக்குமிடத்து பல வெளிநாட்டுக்கப்பல்கள் வணிக நோக்கமாக இத்துறையில் தங்கி சென்ற கதைகள் பல உண்டு. விசேடமாக பொலனறுவையை ஆண்ட மன்னன் 1ம் பராக்கிரமபாகு இத்துறைமுகத்தை கைப்பற்றிய போது அவன் காலத்தில் இத்துறைமுகம் பிரபல்யம் அடைந்துள்ளது. பல வெளிநாட்டு வணிகர்களுக்கு பு க ல ி ட மு ம ், பாதுகாப்பும் அளித்துள்ளது. அதேவேளை உடைந்த கப்பல்களை சீர் செய்யவும், திருத்தவும் இவ்விடம் சிறப்புப் பெற்றது. மன்னன் 1ம் பராக்கிரமபாகு ஆட்சிக்காலத்தில் அதாவது 14ம்,15ம்,16ம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவுடனும், யாழ்ப்பாணத்துடனும் நல்லுறவை பலப்படுத்தவும், தென்னிந்தியாவை ஆண்ட மன்னர்களுக்கு யானை, யானைத்தந்தம் போன்றவற்றை கப்பமாக கட்டவும் இத்துறைமுகத்தை ஆதாரமாக பயன்படுத்தினார்கள், அதுமட்டுமல்லாமல் தன் படைகளை ஒன்றுதிரட்ட இத்துறைமுகம் முக்கிய தளமாக விளங்கியது.

இத்துறைமுகம் யாழ்ப்பாண கோட்டையையும், யாழ்ப்பாண நகரத்தையும் யாழ்ப்பாணத்தின் தலைநகரம், அரசாட்சிப் பீடம் என்று அழைக்கப்பட்ட நல்லூரையும் பாதுகாத்த ஓர் துறைமுகம் ஆகும். பாக்கு நீரிணை ஊடாக வரும் எந்தக் கப்பல்களையும் கண்காணிக்க போர்த்துக்கீசர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் கட்டப்பட்ட இரண்டு கோட்டைகள் உண்டு. ஒன்று துறைமுகத்தின் அண்மையிலும் இன்னொன்று குடாநாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கமாக கட்டப்பட்ட கடற்கோட்டை ஆகும்.

"உறுவு" அல்லது "உறு" என்பது கப்பல் துறை அதாவது கப்பல்கள் தரித்து நிற்கும் இடம் அல்லது கப்பல் கட்டும் இடம் என்ற பெயர் வழங்கலாயிற்று அதிலிருந்து தான் ஊர்காவற்றுறை என்ற பெயர் உருவாகியது.போர்த்துக்கீசர் காலத்தில் இவ்விடத்தை "கசிஸ்" என்று அழைத்தனர். அவர்களின் மொழியில் "இறங்குதளம்" என்பதாகும். அதிலிருந்து தான் "கசிஸ்" என்ற சொற்பதம் "கைற்ஸ்" (Kayts) என்று பிற்பட்ட காலத்தில் அழைக்கப்பட்டது.

இப்படிப்பட்ட பிரபல்யம் வாய்ந்த பிரதேசத்தில் வாழ்வியலையும், கலைவடிவங்களையும் எடுத்தியம்பி நிற்கும் ஒவ்வொரு இதழ்களையும் ஒன்றாய்ச் சேர்த்து மலராய் மலரும் இவ்விதழை வெளியிட உழைத்த ஒவ்வொருவரையும் பாராட்டி நிற்கின்றேன். வாழ்வியல் ஓங்கவும் அப்பண்பாட்டில் தோன்றும் கலைவடிவங்கள் எம் தேசத்தின் மகுடங்கள் ஆகும். வாழ்வும், கலையும் இரண்டல்ல, அவை ஒன்றை ஒன்று பின்னிப்பிணைந்து வாழ்வின் விழுமியங்களையும் நம் இனத்திற்கும் ஏன்? ஏனைய சமூகத்திற்கும் பரிமாறிக் கொள்ளும் முதுசம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் எண்ணங்களையும், திறமைகளையும், ஆற்றல்களையும் படைக்கும் ஆற்றலே கலை. அது ஒரு இனத்தின் மொழி, நடை, கலை, கலாசாரம் ஆகிய விழுமியங்களை மேலோங்கச் செய்து எம் இனத்தின் பெருமையை, புகழை எட்டுத்திக்கும் அறியச் செய்வதாகும்.

வாழ்வே கலை, கலையே வாழ்வு என்ற எம்மவரின் கோட்பாடுகளைத் தாங்கி வரும் புதுமைகளை சொல்லித் தரும் வீரத்தினை காட்டிவரும் எம் கலைவடிவங்களை தாங்கி வரும் இம்மலரிற்கு எனது நல்லாசிகள் உரித்தாகுக.

வாழ்வும் கலையும் படைத்த பரம்பொருளின் கொடையே எனவே தான் ஓங்கி நிற்கும் கோவில்களும் ஆலயங்களும் அதன் வடிவங்களை சிற்பங்களாக, கட்டடகலைகளாக, மனிதனின் உயர்வுகளையும், திறமைகளையும் வெளிக்கொணர்ந்து நிற்கின்றது. எனவே பரம்பொருளை இறைஞ்சி வாழ்வு செழிக்கவும் கலைகள் ஓங்கவும் இறைவனை பிரார்த்தித்து தங்கள் முயற்சி, ஆக்கம், திறமைகள் ஒருங்கிணைத்து மலரும் இவ்விதழிற்கு ஆசிகூறி நிற்கின்றேன்.

வண.பிதா.ஞா.பீற்றர்.
தீவக மறைக் கோட்டகுரு முதல்வரும்
நாரந்தனை பங்குதந்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் ஆசிச்செய்தி

தீவகம் வடக்கு பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் "**அலைமொழி**" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சிடைகிறேன்.

இம்மலரானது ஊர்காவற்றுறை பிரதேசத்தின் கலை. கலாசார, வாழ்வியல் தொன்மைகள், மற்றும் நாட்டுப்புறவியல் சார்ந்த பல விடயங்களை தாங்கி வெளிவருவதுடன் சான்றுப்படுத்தக்கூடிய ஆவணமாக அமையும் என்பதிலும் ஐயமில்லை.

பிரதேச மக்களின் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை பிரதேச செயலகங்கள் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் பிரதேசத்தின் அபிவிருத்தி, பொருளாதாரம், கல்வி, மருத்துவம், கலைத்துறை சார்ந்த முக்கிய அடைவுகளையும் சாதனைகளையும் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்கு கையளிக்கும் முக்கிய வரலாற்று பதிவாக பிரதேச மலர்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்களின் நல்வாழ்வுக்காகவும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் மேற்கொள்ளக்கூடிய சமூகம் சார் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதனூடாக பிரதேசத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியினை உறுதி செய்வதுடன் மக்களின் உயர்ச்சியிலும் மகிழ்ச்சியான வாழ்விலும் எமது பங்களிப்பினை வழங்குவதற்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பினை சரியாக பயன்படுத்த வேண்டியது முக்கியமானதாகும்.

காலத்தின் தேவையறிந்து இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் வெளியீடு செய்யப்படுகின்ற **அலைமொழி** என்னும் பிரதேச மலர் 1 இன் இதழ் 2 சிறப்புடன் வெளிவர என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

மொழி, பண்பாடு, பாரம்பரியங்கள், மிகத் தொன்மையான வரலாற்று ரீதியான பெறுமதி மிக்க பெரும் செல்வங்கள் எனலாம். மொழியினை தாய்க்கு நிகராக ஒப்பிடப்படுவதும் தாய் தன் பிள்ளையை எவ்வாறு நேசிப்பவர் என்பதனையும் குறிப்பிடத்தேவையில்லை என்பதனை யாவரும் அறிவர். மொழியின் மதிப்பு அதனை பேணிப்பாதுகாக்க வேண்டிய கடப்பாடு எல்லோருக்கும் உண்டு. அலைமொழி வையகத்தின் மொழி இதே போல் ஊர்காவற்றுறை பிரதேசத்தின் "அலைமொழி" மலர் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் அமைகின்றது. இவ்அலைமொழி இப்பிரதேச மக்களின் வாழ்வினையும், கலைவடிவங்களையும், வரலாற்று ஆவணங்களையும், மொழிப்பண்பாட்டு சிறப்புக்களை எல்லாம் உள்ளடக்கி, இப்பிரதேச சிறப்புக்களாகிய ஊர்காவற்றுறை கடற்கோட்டை, அனலைதீவு ஐயனார் தேர்ச்சிற்பங்கள் முதலானவை மிகப்பழமையான கலைப்பொக்கிசங்கள் எனலாம். இப்பிரதேசத்தின் கலை வடிவங்களில் கூத்துக்கலை மிகச் சிறப்பிடம் பெற்றமையும் அறியப்படுகின்றது. இவ்வாறான அரிய சிறப்புக்களையெல்லாம் தாங்கி அலைமொழி வெளியீடு செய்யப்படுவதும் பாராட்டுக்குரியதாகும்.

இவ் அலைமொழி எல்லோருக்கும் நல்லிசையாக ஒலிக்க ஆக்கமும். ஊக்கமும் கொடுத்த பிரதேச செயலர், கலாசாரப்பேரவை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவரையும் பாராட்டி என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாண மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

இந்து சமுத்திரத்தின் "நித்திலம்" என புகழப்படும் இலங்கையின் வடபால் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களில் ஒன்றாக விளங்கும் ஊர்காவற்றுறை கடலோடு கடல் சார்ந்த நெய்தல் நிலத்தையும், வயலோடு வயல் சார்ந்த மருத நிலத்தையும் ஒருங்கே கொண்ட தரைப்பகுதியில் கடல் அன்னையின் என்றும் ஓயாத அலைகளால் தாலாட்டும் இவ்வேளையில் **"அலைமொழி"** மலரின் இரண்டாவது இதழ் வெளிவருவதனையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்பட்டு அதன் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு மக்களின் மனங்கள் குளிர்ந்து மகிழ்ந்துள்ள இவ்வேளையில் மண்ணின் பெருமையினையும் வளங்களின் சிறப்பினையும் தாங்கி மலரும் இதனை வெளியிட முன்வந்த தீவகம் வடக்கு கலாசாரப் பேரவையினருக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளை கூறி நிற்கிறேன்.

தொடர்ந்தும் இவ்வாறான மலர்கள் மலர்ந்து இதழ்கள் விரிந்து நறுமணம் வீச இப்பணியில் அனைவரும் ஒன்றுபட்டு ஒரே குடும்பமாக உழைக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறேன்.

"கலையை வளர்ப்போம் கலையால் நாம் வளர்வோம்"

திருமதி.எ.அன்ரன் யோகநாயகம்,
பிரதேச செயலர்/தலைவர்,
தீவகம் வடக்கு கலாசார பேரவை
ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாபனக்கிளை– ESTABLISHMENT BRANCH



**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக):** திருமதி. பு. சுபாஜினி (PMA), திருமதி. எ. அன்ரன்யோகநாயகம் (DS), திரு. க. கடோற்கசன் (SA)

**நிற்பவர்கள் (1ம் நிரல் இடமிருந்து வலமாக):** திருமதி. ஆ. ஜெஸ்மின் கார்மேலா (DO), செல்வி. உ. ஜெபப்பிரியா (PMA), செல்வி. ர. ராஜினி (PMA), செல்வி. சி. யோகராணி(DO), செல்வி. அ. ரேணுகா (PMA), செல்வி. தே. டயானி ( DO), திரு. பே. குகனேசர் ( DO), திரு. சு. பிரதீஸ் (DO), திரு. ச. சுரேஸ்குமார் (DO), திரு. க. மயூரன் (DO), திரு. த. கோபிகாந்தன் (PMA), செல்வி. க. ஆன்ஜஸ்மின்(PMA), திருமதி. கு. தாரணி (DO)

**நிற்பவர்கள் (2ம் நிரல் இடமிருந்து வலமாக)** திரு. அ. யோகேஸ்வரன் ( OES) , திரு. க. வசந்தகோகுலன் (PMA), திரு. பா. பிரதீபன் (PMA), திரு. கி. தர்சன் (DO), திரு. த. சந்திரகுமார் (DO), திரு. சி. அகிலன் (TA), திரு. தே. சசிதரன்(OES), திரு. சோ. சத்தியகாந்தன் (DO), திரு. வை. ஞானசேகரன் (OES)

**சமூகம் அளிக்காதவர்கள் :** செல்வி. சா. ராஜா (AO), திரு. S.M. அன்ரன்(OES), திரு. T. பிறேமநாதன் (சாரதி), திரு. S. குமாரதாஸ் (சாரதி) , திரு. பொ. புவனேஸ்வரன் (காவலாளி), திருமதி. S. அனஸ்ரன்(DO)

*DS – பிரதேச செயலர் *AO - நிர்வாக உத்தியோகத்தர் *SA - ஆளணி உதவியாளர் *PMA - பொது முகாமைத்துவ உதவியாளர, DO - அபிவிருத்தி உத்தியோகத்தர்
*TA - தொழில்நுட்ப உதவியாளர் *OES - அலுவலகப்பணியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணக்கு கிளை – ACCOUNTS BRANCH



<u>இருப்பவர்கள் [இடமிருந்து வலமாக]</u>

திரு.தி.திருவருட்செல்வன் (Acct), திருமதி.எ.அன்ரன்யோகநாயகம் (DS)

<u>நிற்பவர்கள் [இடமிருந்து வலமாக]</u>

செல்வி.ஸ்ரீ.பானுஸ்ரீ (PMA), திருமதி.வி.வினோஜா (DO), திருமதி.ரா.பகீரதி (DO) , செல்வி.இ.யசோதா (PMA), செல்வன்.சி.ரிஷாந்தன் (PMA), செல்வன்.ப.துஷ்தரன் (DO), செல்வன்.மு.ஜெயந்தன் (PMA), செல்வன்.சூ.அஜித்செபராஜ் (OES),

<u>சமூகமளிக்காதவர்கள்</u>

திரு.கு.சுதர்சன் (FA), திரு.இ.சிவகுமார் (DO)

DS– பிரதேச செயலர் • Acct – கணக்காளர் • FA– நிதி உதவியாளர் • PMA– பொது முகாமைத்துவ உதவியாளர்,
DO– அபிவிருத்தி உத்தியோகத்தர் • OES– அலுவலகப் பணியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் கிளை PLANNING BRANCH



<u>**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**</u> திரு.பொ.ஜெயரூபன் (DA), செல்வி.வ.தர்சினி(ADP), திருமதி.எ.அன்ரன்யோகநாயகம் (DS) திரு.க.நேதானந்தன் (DA), திரு.தி.மங்களேஸ்வரன் (DA)

<u>**நிற்பவர்கள் (1ம் நிரல் இடமிருந்து வலமாக)**</u> திரு.உ.வதனராஜ் (DO), திருமதி.சி.நிலானி (DO), திருமதி.ப.சிறிகௌரி (DO), செல்வி.நா.செல்வதி (DO), செல்வி.சீ.விப்ரரூபா (DO), செல்வி.செ.ஜீன்சியா (DO), திருமதி.ர.அபிராமி (DO), செல்வி.சு.கலைவாணி (DO), செல்வி.பா.பாலேந்தினி (PMA), திரு.சி.லோகேஸ்வரன் (DO), திரு.ஆ.லெ.நிலோஷன் (DO), திரு.கி.தனுசியன் (DO), திரு.ம.ரஜீவ் (DO)

<u>**நிற்பவர்கள் (2ம் நிரல் இடமிருந்து வலமாக)**</u> திருமதி.மு.தாட்சாயினி (DO), செல்வி.ந.கல்பனா (DO), திரு.கா.சுதர்சன் (DO), திரு.யே.கொன்மக்காரியஸ் (DO), திரு.வி.விஜயராஜ் (DO), திரு.க.சுதாகரன் (DO), திரு.இ.ரணேசன் (DO), திரு.மு.சஞ்ஜீவன் (DO)

<u>**சமூகம் அளிக்காதவர்கள் :**</u>திரு.ச.ஜனார்த்தனன்(OES)

*DS – பிரதேச செயலர் *ADP – உதவித்திட்டப்பணிப்பாளர் *DA – அபிவிருத்தி உதவியாளர் *PMA –பொது முகாமைத்துவ உதவியாளர்
*DO – அபிவிருத்தி உத்தியோகத்தர் *OES - அலுவலகப்பணியாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கள உத்தியோகத்தர்கள் கிளை FIELD OFF ICER'S BRANCH



**இருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

திரு.வி.விஜயநேசன் (LUPO), திரு.ந.சத்தியரூபன் (CDA), திரு.இ.ஜோன்சன் (CO), செல்வி.வி.கிருஸ்ணவேணி (SDA), திருமதி.எ.அன்ரன்யோகநாயகம் (DS), திரு.க.சிதம்பரநாதன் (SSO), திரு.கு.விக்னராஜா (IO), திரு.பே.சக்திவேல் (SO)

**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

திருமதி.வ.சர்மிலா (DO), செல்வி.ஞா.ஸ்ரீதேவி (DO) , திருமதி.ஜெ.உதயகலா (DO) , செல்வி.நா.கிருசாந்தி (DCPO), செல்வி.இ.சிந்துஷா (DO), செல்வி.க.அபிராமி (DO), செல்வி.தெ.துஸ்யந்தினி (DO), செல்வி.லெ.ஆ.கொலஸ்ரிகா (DO), திருமதி.ப.உஷா (DO), செல்வி.க.தனுஷா (DO), திருமதி.க.நல்லைமாமணி (DO), திருமதி.தி.கவிதா (DO), திரு.ம.தயாபரன் (DO), திரு.டொ.ஜெ.பிராங்கிளின் (DO)

**சமூகமளிக்காதவர்கள்**

திரு.ஸ்ரீ.செந்தூரன் (DO), திருமதி.அ.ஏஞ்சலின் (DO), செல்வி.சு.நிதனாஞ்சலி (DO), திருமதி.இ.பிருந்தா (CRPO) திரு.அ.யூட்ததேயுஸ் (RDO Acting), திரு.இ.தவக்குமார் (DA)

• DS - பிரதேச செயலர் • CO - கலாசார உத்தியோகத்தர் • SSO - சமூகசேவை உத்தியோகத்தர் • RDO (Acting)- கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் (பதில் கடமை) •DA- அபிவிருத்தி உதவியாளர். •LUPO - காணி பயன்பாட்டு திட்டமிடல் உத்தியோகத்தர் • CDA- கலாசார அபிவிருத்தி உதவியாளர்
• SDA - திறன் அபிவிருத்தி உதவியாளர் • IO - தொழிற்றுறை உத்தியோகத்தர் • SO - விளையாட்டு உத்தியோகத்தர்
• CRPO - சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் • DCPO - பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் • DO - அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம உத்தியோகத்தர்கள் GRAMA SERVANTS



**இருப்பவர்கள் [இடமிருந்து வலமாக]** திரு.இ.சிறீஸ்கந்தராசா (GS-1), திருமதி.எ.அன்ரன் யோகநாயகம் (DS), திரு.வீ.சிவசுப்பிரமணியம் (GS(Hq), திரு.தே.பாலச்சந்திரன் (GS-I) ,

**நிற்பவர்கள் [இடமிருந்து வலமாக]** திரு.வ.வடிவழகையன் (GS-II), திரு.கு.துஷிதரன் (GS-III), திரு.அ.ஆரூரன் (GS-III), திரு. V.R.C.ஜோன்சன் (GS-III), திரு.நா.தர்சன் (GS-III), திரு.அ.சா.பஸ்தியன் (GS-III), திரு.மி.புருஷோத்தமன் (GS-III), திரு.சி.வினேஸ் (GS-III), செல்வி.பொ.சகிர்தினி (GS-III)

*DS – பிரதேச செயலர். *GS(Hq) – கிராம அலுவலர்( தலைமைப்பீடம்], *GS – கிராம அலுவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் எழுச்சி கிளை DIVINEGUMA BRANCH



**இருப்பவர்கள் [இடமிருந்து வலமாக]** திருமதி.வி.அறிவரசி (DM(Hq),திருமதி.எ.அன்ரன்யோகநாயகம் (DS),திரு.க.சபேசன் (DM(Bank)

**நிற்பவர்கள்[1ம் நிரல் இடமிருந்து வலமாக]** திரு.வீ.கணேஸ்வரன் (DDO),செல்வி.ச.பானுஷா (DDO),திருமதி.ர.சிந்துஜா (DDO),
திருமதி.வி.நிஷாந்தினி (DDO),திருமதி.ஜே.புஸ்பராஜி (DDO), திருமதி.ம.தர்மினி (DDO),திருமதி.ஜே.யூலியற்பெல்சியா (DDO),செல்வி.ச.மிதுலா (DDO)
திருமதி.சி.மோகனாங்கி (DDO),செல்வி.பா.சென்சலோமி (DDO),செல்வி.பு.திவ்யா (DDO),திருமதி.பு.பகீரதி (DDO),திரு.பா.பிரசன்னா (DDO)

**நிற்பவர்கள்[ 2ம் நிரல் இடமிருந்து வலமாக]** செல்வி.டே.கிறிஸ்ரீனா (DDO), திருமதி.நி.புஸ்பவாணி (DDO), திருமதி.ஜெ.ரம்பா (DDO),
திரு.சோ.சரவணன் (DDO), திரு.நா.தயாளன் (DDO),திரு.மு.யுகேந்திரன் (DDO), திரு.கோ.கருணாகரன் (DDO), திருமதி.அ.மேரியூக்கறஸ்ரா (DDO),
திருமதி.அ.கிறசென்சியா வேர்ஜினி (DDO), செல்வி.அ.கிருபாலினி (DDO)

**சமூகமளிக்காதவர்கள்** திருமதி.ர.தர்சிகா (DDO)

* DS – பிரதேச செயலர், * DM(Hq) – வாழ்வின் எழுச்சி முகாமையாளர் [தலைமைப்பீடம்]
* DM(Bank) – வாழ்வின் எழுச்சி வங்கி முகாமையாளர், * DDO – வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறை வாசல்

தீவுக்கா போறீங்கள்?

இல்லை.. இல்லை

ஊர்காவற்றுறைக்கு போறம்

வாங்கோ போவம்

உங்களை அன்புடன்

## அலைமொழி

வரவேற்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொருளடக்கம்.**


- ☞ எமது இலட்சினை (LOGO)
- ☞ பிரதேச கீதம்
- ☞ தூர நோக்கு (VISSION), குறிக்கோள் ( MISSION)
- ☞ ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் ஆலய பிரதம குருக்களின் ஆசிச்செய்தி
- ☞ தீவகமறைக் கோட்ட குருமுதல்வரின் ஆசிச்செய்தி
- ☞ வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் ஆசிச்செய்தி
- ☞ அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி
- ☞ பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி
- ☞ பிரதேசசெயலக பணிக்குழாம்
- ☞ **துறைவாசல்**

| | |
|---|---|
| 01. ஊர்காவற்றுறை நகர் அபிவிருத்திப்பார்வை | 01 – 04 |
| 02. தீவகமும் அதன் வரலாற்றுப்பாரம்பரியமும் | 05 – 16 |
| 03. கலையும் சமூகமும் | 17 – 18 |
| 04. மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் தாக்கம் செலுத்தும் கவனிக்கப்பட வேண்டிய மூன்று சூழற்காரணிகள் | 19 -22 |
| 05. ஊர்காவற்றுறை ஓர் சிறப்புப் பார்வை | 23 -55 |
| 06. புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலய வளர்ச்சியும், சமூக எழுச்சியும் | 56 -61 |
| 07. வல்லமை தரும் வைரவர் வழிபாடு | 62 -65 |
| 08. சரவணை சின்னமடுசெபமாலை அன்னை ஆலயத்தின் குறுகிய வரலாறு | 66-74 |
| 09. உளசமூகப்பிரச்சினையும் ஊர்காவற்றுறையும் | 75 -80 |
| 10. ஊர்காவற்றுறைப்பிரதேத்தில் முதியோர் வாழ்வு | 81 – 89 |
| 11. கமுவி காயவிடப்பட்ட கிணறுகள் | 90 – 94 |
| 12. ஊர்காவற்றுறை பிரதேசத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி | 95 -100 |
| 13. ஊர்காவற்றுறை பிரதேசத்தின் இயற்கை பேரிடர்களான வெள்ளமும் வரட்சியும் | 106- 107 |
| 14. உள்ளத்தின் ஆழத்திலிருந்து………………….. | 108 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை நகர் - ஓர் அபிவிருத்திப் பார்வை

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணை வேந்தர் /
வாழ்நாள் பேராசிரியர்

1991ஆம் ஆண்டு தீவக இடப்பெயர்வால் ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து இன்னும் ஊர்காவற்றுறை நகரம் மீள முடியாமல் இருந்து வருகின்றது 1991ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னரே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்நகர மக்கள் 1980களின் பிற்பகுதியில் இடம்பெயர்ந்து சின்ன மூளாய் ஆஸ்பத்திரிக்குக்கிழக்கே சென்று விட்டனர். சிலர் யாழ்ப்பாணத்துக்கும் ஏனையோர் நாரந்தனை மற்றும் சாட்டிக்கும் இடப்பெயரலாயினர். பின்னர் 1991 இல் தீவகப்பகுதிகளான வேலணைத்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு மற்றும் காரைநகரைச் சேர்ந்த மக்கள் யாவரும் தங்கள் கிராமங்களை விட்டு யாழ்ப்பாணத்துக்கும் வலிகாமத்திற்கும் இடம்பெயர்ந்தனர். ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட இடம்பெயர்வு அகதி வாழ்க்கையை அனுபவித்தனர். பின் 1996 மே மாதத்தில் இருந்து மக்கள் தத்தம் கிராமங்களுக்குக்குடியேறத் தொடங்கினர். ஐந்து வருடங்களுக்கு மக்கள் இல்லாத இடங்களாக தீவகப்பகுதிகள் இருந்ததால் குடியிருப்புக்கள் பெருஞ்சேதத்திற்குட்பட்டன. இதே காலப்பகுதியில் பெரும் எண்ணிக்கையான தீவக மக்கள் வெளிநாடுகளுக்கும் இடம்பெயராயினர். மீள்குடியேற்றம் எதிர்பார்த்தபடி துரிதமாக இடம் பெறாமல் மிகவும் ஆறுதலாக இடம் பெற்றது. மக்கள் தொகை வீழ்ச்சியுற்றது பொருளாதார நடவடிக்கைகள் சுருக்கமடைந்தன. நலிந்தோர் எண்ணிக்கை உயர்வடைந்தது. இப்பிரதேசத்தின் சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு சாதகமற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளது. இந் நிலையில் ஊர்காவற்றுறை நகரின் வளர்ச்சிக்கு எத்தகைய அபிவிருத்தித்திறன் முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதி அகலமாக்கப்பட்டு, காப்பெற் இடும்பணி துரித கதியில் இடம் பெறுவதால் இந்நகர் பற்றிய புது நம்பிக்கை பிறந்துள்ளது. நகரின் வளர்ச்சி துறைமுக வளர்ச்சியுடன் மீள இணைக்க முடியுமா, அல்லது நீதிச்சேவை, மற்றும் பிற சேவைகள் விரிவாக்கத்துடன் தொடர்புபட்டதாக அமைக்க முடியுமா, அல்லது சிறு கைத்தொழில் நிலையமாக விருத்தி செய்ய முடியுமா? எனப்பார்ப்போம். 1950ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊர்காவற்றுறை ஒரு முக்கிய துறைப்பட்டணமாகவும், நிர்வாக வர்த்தக மையமாகவும் விளங்கியது. நகரம் துடிப்பான செயற்பாட்டுடன், பொருளாதார வளமிக்க மக்கள் தொகையைக் கொண்டு இருந்தது. 1950களுக்கு முன்னர் வருமான அடிப்படையில் கொழும்புத்துறைமுகத்திற்கு அடுத்து ஊர்காவற்றுறை இரண்டாம் இடத்தை வகித்தது. இந்தியா மற்றும் பர்மா போன்ற நாடுகளில் இருந்து பல்வேறு பொருட்கள்

இத்துறைமுகம் வழியாகவே இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. 1950களில் கப்பல்களின் பருமன் அதிகரித்ததும், பெரிய கப்பல்கள் வரக்கூடியதாகவும் ஊர்காவற்றுறை இருக்கவில்லை. மேலும் நாடு சுதந்திரமடைந்ததும் இலங்கை அரசாங்கம் இறக்குமதி, ஏற்றுமதிகளை படிப்படியாக கொழும்பு ஊடாக முன்னெடுத்தது. நாட்டின் வர்த்தகத்தில் பிரித்தானியர் காலத்தில் வகித்த பங்கை ஊர்காவற்றுறை படிப்படியாக இழந்தது. இதனால் இறக்குமதி, ஏற்றுமதியில் முன்னர் வகித்த நிலை இல்லாமல் போக நகரத்தின் செயற்பாடு குன்றியது. 1960களுக்கு முன்னர் தீவகப்போக்குவரத்தில் ஊர்காவற்றுறை முக்கிய இடத்தைப்பெற்றிருந்தது. நெடுந்தீவு, நயினாதீவு,அனலைதீவு, எழுவைதீவு ஆகிய தீவகப்பகுதி மக்கள் ஊர்காவற்றுறை ஊடாகவே பயணங்கள் மேற்கொண்டனர். மேலும் தென்னிலங்கை – நயினாதீவு பௌத்த யாத்திரிகர்களும் ஊர்காவற்றுறை - காரைநகர் வழியாகவே நயினாதீவிற்கு சென்று வந்தனர். மேலும் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, புங்குடுதீவு போன்ற தீவுகளுக்குரிய தபால்விநியோகம், உணவுப் பொருட்கள் விநியோகம் யாவும் ஊர்காவற்றுறை ஊடாகவே இடம்பெற்றன. 1961இல் பண்ணைக்கடல் வழி வீதி அமைக்கப்பட்டதால் வேலணை புங்குடுதீவு மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஊர்காவற்றுறையைத் தவிர்த்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்குச் செல்லலாயினர். மேலும் 1962இல் குறிகட்டுவான் இறங்குதுறை அமைக்கப்பட்டதால் நெடுந்தீவு, நயினாதீவு மக்கள் நேரடியாக யாழ்ப்பாணம் செல்லலாயினர். மேலும் பௌத்த யாத்திரிகர்கள் குறிகட்டுவான் வழியாக நயினாதீவிற்குச் செல்லலாயினர். பண்ணைப்பாதை, வேலணை – புங்குடுதீவு வீதி, குறிகட்டுவான் இறங்குதுறை ஆகியன ஊர்காவற்றுறையின் இயக்கத்தைப் பெரிதும் பாதித்தன. மேலும் அண்மையில் அமைக்கப்பட்ட கண்ணகியம்மன் இறங்குதுறையால் அனலைதீவு, எழுவைதீவு மக்கள் கூடப் பல தேவைகளுக்கு ஊர்காவற்றுறையைத் தவிர்த்து நேரடியாக யாழ்ப்பாணம் செல்கின்றனர். தீவகப் போக்குவரத்து வளர்ச்சி பொதுவில் நன்மையாக இருந்தாலும் அது ஊர்காவற்றுறைச் செயற்பாட்டைப் பெரிதும் பாதித்ததால் நகரச் செயற்பாடு சுருக்கமடைந்து பிராந்திய நகர் என்ற நிலையில் இருந்து அது உள்ளூர்சேவை மையமாக மாறியது. 1939இல் ஊர்காவற்றுறை சகல தீவுகளை உள்ளடக்கிய நிர்வாகப்பரப்பின் (Islands DRO) தலைமை இடமாக இருந்தது. 1948இல் நெடுந்தீவு DRO பிரிவு உருவாக்கப்பட்டு இதனைத் தொடர்ந்து 1974இல் தீவகப் பகுதிப்பிரிவு தீவுகள் தெற்குப்பிரிவு, தீவுகள் வடக்குப் பிரிவு என இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. முன்னையதன் தலைமையகம் வேலணையிலும், பின்னையதன் தலைமையகம் ஊர்காவற்றுறையிலும் அமைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து 2002இல் தீவகம் வடக்குப்பிரிவினுள் இருந்த காரைநகர் தனி உதவி அரசாங்க அதிபர் பிரிவாக மாறியது. இதனால் இன்று தீவுகள் வடக்குப் பிரதேச செயலகம் சுமார் 10000 மக்களுக்கு அரச சேவை செய்யும் பிரிவாகவே இருக்கின்றது. தற்போதைய நகரம் இரண்டு நகர்ப்பகுதிகளைக் கொண்டதாக மாறியதால் பழைய நகர் புதுப்பொலிவு பெறமுடியவில்லை. புதிய பிரதேச செயலகம், மற்றும் பல அரசாங்க காரியாலயங்கள் ஆஸ்பத்திரிக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமீபமாக வளர்ச்சி பெற்று புதுப்பொலிவைத் தர பழையநகர் சார் வர்த்தக நிலையங்கள் துடிப்பற்று களைத்த நிலையில் காட்சி தருகின்றன. ஊர்காவற்றுறை பல வழிகளாலும் பாதிக்கப்பட்டு முன்னைய பல்வேறு தொழிற்பாடுகளை இழந்த போதும் இன்றும் தீவகப் பகுதியில் அது நீதிச்சேவை மையமாக இருக்கின்றது. நீதிச்சேவைக்கும், பொலிஸ் சேவைக்கும் தீவகப் பகுதி மக்கள் இன்றும் ஊர்காவற்றுறைக்குப் போக வேண்டும். ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டடங்கள் மிகவும் அழகா-னதாக, புதிதாக அமைக்கப்பெற்றிருப்பது நகரின் வளர்ச்சிக்கு உதவுவதுடன் நகருக்கு அழகையும் கொடுக்கின்றது. இந்நகரின் புனர்வாழ்வு,புதுவாழ்விற்குப் பின்வரும் நடவடிக்கைகள் எடுப்பின் நன்மைகள் கிட்டும்.

01.இந்நகரின் ஆரம்பகால வளர்ச்சி கடல்சார்புத் தொழில் விருத்தியிலேயே தங்கியிருந்தது போல் எதிர்காலத்திலும் தங்கியிருக்கச் செய்ய முடியும் இத்துறைமுகத்தின் காரைநகர்ப்பகுதியில் கடற்படை முகாம் இருக்கின்றது. மேலும் சீநோர் மீன்பிடிப்படகு கட்டும் நிலையம் இன்று செயலிழந்துள்ளது. படகுகள் கட்டும் தொழில் விருத்திக்கு சாதகமான நிலைமைகள் இங்குள்ளதால் இத்தொழில் விருத்தியை முன்னெடுக்கலாம்.

02.இலங்கையின் பெரிய கடற்படைத்தளம் ஒன்று இப்பகுதியில் இருந்த போதும் இத் தளத்தினால் இப்பகுதியைச் சூழவாழும் மக்கள் குறிப்பிடத்தக்க பலனைப் பெறவில்லை. இவ்வாறான கடற்படைத்தளம் ஒன்று நகரில் அமையும் போது இதனைச் சூழவாழும் மக்கள் பல்வேறு தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதோடு இத்தளத்தில் வேலை செய்வோரின் ஊதியத்தின் பெரும் பகுதி இந்நகரில் பல வழிகளில் செலவழிக்கப்படுவது பொதுவானதொரு பண்பாகும். காரைநகர் கடற்படைத்தளத்தின் மூலம் அயற்கிராம மக்கள் தொழிலோ, பொருளாதார நன்மைகளோ பெறவில்லை. இங்குள்ள கடற்படைச் செயற்பாடுகள் மூலம் இந்நகர மக்கள் நன்மைகள் பெறவழி செய்யப்பட வேண்டும். நெடுந்தீவு மக்கள் கடற்படைச் செயற்பாடுகளால் ஓரளவு நன்மைகள் பெறுவதைக் காணமுடிகின்றது.

03.இத்துறைமுகத்தை மீன்பிடித்துறையாக விருத்தி செய்யலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த மயிலிட்டித்துறைமுகம் தற்போது செயற்படுத்தப்பட முடியாமல் இருப்பதால் ஊர்காவற்றுறையைச் சிறந்த மீன்பிடித்துறைமுகமாக விருத்தியாக்கலாம்.

04.யாழ்ப்பாணத்தில் பல இடர்பாடுகளில் இயங்கும் மீன்பிடிக் கல்லூரியை இங்கு இடமாற்றம் செய்யலாம்.

05ஊர்காவற்றுறை உரோமன் கத்தோலிக்க மக்கள் செறிந்து வாழும் நகர். கத்தோலிக்க திருச்சபையின் பல்வேறு செயற்பாட்டு நிறுவனங்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் இயங்குகின்றன. இவற்றுள் சிலவற்றை ஊர்காவற்றுறை நகருக்கு இடமாற்றம் செய்யலாம்.

06.இந்நகரின் வளர்ச்சிக்கும் சிறந்த செயற்பாட்டிற்கும் தடையாக இருக்கும் குடிநீர்ப்பிரச்சனைக்குத் தீர்வு கிட்டவேண்டும். புதிய திட்டங்கள் மூலம் நீர்ப்பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும். யாழ்ப்பாணக்குடிநீர்த்திட்டத்தில் ஊர்காவற்றுறை நகரின் குடிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகம் உரிய இடத்தைப் பெறவேண்டும்.

07.காரைநகரையும் - ஊர்காவற்றுறையையும் இணைக்கும் பாலம், தம்பாட்டி-பாலக்காட்டு வழியாக அமைக்கப் பெற்றால் ஊர்காவற்றுறைக்கும் வலிகாமத்திற்கும் இலகுவாக போக்குவரத்து கிட்டும். இது சமூக,பொருளாதார வளர்ச்சிக்கு வழிசமைக்கும்.

08.புங்குடுதீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் இடம்பெற்ற 779 பஸ்சேவை மீள ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன் மூலம் புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு மக்கள் ஊர்காவற்றுறைக்கு இலகுவாக வரமுடியும்.

09.ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குப் புதிதாக பல மருத்துவப் பரிசோதனை ஆய்வு கூடங்கள் அமைக்கப்படவேண்டும். வெளிநோயாளர் பகுதிக்கான புதிய கட்டிடம் துரிதமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

10 ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை ஆகிய கிராமங்களை இணைத்து ஒருங்கிணைத்த பௌதீக சமூகப்பொருளாதார வளர்ச்சிக்குத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

11.இந்நகர் பின்னணி நிலத்தில் தங்கிநிற்கும் நகர்ப்பொருளாதாரத்தில் இருந்து விடுவித்து நகரின் பொருளாதார நடவடிக்கைகளிலே தங்கி நிற்கக் கூடிய நிலைப்பாட்டினை தோற்றுவிக்கவேண்டும்.

12.ஊர்காவற்றுறையை ஒரு சுற்றுலா நகரமாக விருத்தி செய்யமுடியும். அதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. ஏற்கனவே துறையின் மறுபக்கத்தில் Fort Heimanheil ஒரு சுற்றுலா மையமாக விருத்தி செய்யப்பட்டுள்ளது.

13.யாழ்ப்பாண நகரப்பகுதியில் தற்போது வீட்டு வசதி குறைந்து வாடகை உயர்வாக அதிகரித்து இருப்பதால் கரம்பன், ஊர்காவற்றுறை, நாரந்தனையில் பயன்படுத்தப்படாமலும் பழுதடைந்து கொண்டு இருக்கும் வீடுகள் மீளவும் குடியிருப்புக்குப்பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதைப்பயன்படுத்தி அழிவுக்குட்பட்ட குடிமனைகள் திருத்தப்படின் நகரின் மீள்வளர்ச்சிக்கு உதவியாக அமையும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை முன்னெடுக்குமிடத்து ஊர்காவற்றுறை முன்னைய வளர்ச்சி நிலையை மீளவும் அடையும். யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதி அமைப்புடன் இந்நகர் புதுவாழ்வு பெறும் சந்தர்ப்பம் பிரகாசமாக இருக்கின்றது. தற்போதைய சாதகமான சந்தர்ப்பத்தைத் தவறவிடாது பயன்படுத்திக்கொள்வோமாக.

**சின்னமடு மாதா ஆலயம்**



**இது எமது பிரதேசத்தில் அமைந்துள்ள யாத்திரைத்தலம் ஆகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகமும் அதன் வரலாற்றுப்பாரம்பரியமும்

செல்வி.மங்களரூபி சிவகுமார்,
தற்காலிக உதவி விரிவுரையாளர்,
வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

இலங்கையில் வரலாறானது பெரும்பாலும் தென்னாசியப்பிராந்தியத்தில் தொடர்ச்சியானதொரு தன்மையினைக் கொண்டதாக விளங்குகின்றது. இச்சிறப்பானது தென்னாசியப்பிராந்தியத்தில் அமைந்துள்ள பல நாடுகளுக்கு இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்நாட்டில் அமைந்துள்ள இலங்கையின் வடபகுதியானது சிக்கலான வரலாற்றினைக்கொண்ட பிரதேசமென்பது பலருக்கும் தெரிந்ததே. காரணம் கி.பி 13ஆம் நூற்றாண்டின் முன்னதான வடஇலங்கையின் வரலாறானது அதிலும் குறிப்பாக அரசியல் வரலாறென்பது தெளிவற்றதாகவே உள்ளது. இருப்பினும் அண்மைக்காலங்களில் வடஇலங்கையில் வரலாற்றின் ஆரம்பத்தினை முன்னோக்கிப் பார்ப்பதற்கான முயற்சிகள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் அவதானிக்கத்தக்கது. அந்த வகையில் வடஇலங்கையில் அமைந்துள்ள தீவுப்பகுதிகளது வரலாறும் கூட இக்காலத்திற்குப் பின்னதாகவேதெளிவானதாக உள்ளது. இப்பிரதேசத்தின் பல பகுதிகளிலும் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொல்லியல் ஆய்வுகள் மற்றும் இப்பகுதிகளில் கிடைக்கப்பெற்று வருகின்ற தொல்பொருட்கள், ஐதீகங்கள், மரபுவழிக்கதைகள் போன்றன தீவகத்தின் பெருமையினை உணர்த்துவனவாக உள்ளன. இங்கு கிடைக்கின்ற தொல்பொருட்கள் பல பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்களாகவும் உள்ளன. விவசாயமே பிரதான தொழிலாகக் காணப்பட்டது. புராதன காலத்தில் இங்கு வாழ்ந்த மக்கள் பிற நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளையும் அவற்றுக்குப் பயன்பட்ட துறைமுகங்களையும் இனங்காண முடிகின்றது. இங்குள்ள ஆலயங்களும், பள்ளிவாசல்களும் பௌத்ததூபி, கிறிஸ்தவ தேவாலயங்கள் இவற்றின் பெருமையினைச் சொல்கின்றன.

பொதுவாகத் தீவு என்பது நான்கு புறமும் கடல், ஏரி, ஆறு போன்ற நீர்ப்பரப்புக்களால் சூழப்பட்ட ஒரு நிலப்பகுதியைக் குறிக்கும். கடலிடைக்குறை எனவும் இது அழைக்கப்படுகிறது. ஒரு நாடானது ஒரு தீவினிலோ அல்லது தீவுக்கூட்டத்திலோ முழுமையாக அடங்கியிருந்தால் அது தீவுதேசம் அல்லது தீவுநாடு எனப்படுகிறது. உலகில் மொத்தமுள்ள நாடுளில் 45000இற்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை சிறியவை, தீவுகள் பிற நிலப்பகுதிகளுடன் பாலங்கள் போன்ற செயற்கையான நிலத்தொடர்புகளை உருவாக்கினாலும், குறித்த நிலப்பகுதி தொடர்ந்தும் தீவு என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படும். தீவுகள் பொதுவாக கண்டத்தீவு, கடல்தீவு என இருவகைப்படும். அத்துடன் செயற்கையான தீவுகளும் சில உள்ளன.

ஏதேனும் ஒரு கண்டத்தை அடுத்துள்ள தீவுகளுக்கு கண்டத்தீவுகள் என்ற பெயர் காணப்படுகின்றது. இத்தீவுகள் ஒரு காலத்தில் கண்டத்துடன் இணைந்திருந்தவையாகும். இலங்கை இத்தகையதொரு அமைப்பினைச் சார்ந்ததொரு தீவாகும். இந்துசமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு தென்கிழக்கே காணப்படும் ஒரு தீவாகும். இந்துசமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு தென்கிழக்கே காணப்படும் ஒரு தீவாக இலங்கை விளங்குகின்றது. இது வடக்கே பாக்குநீரிணையையும், கிழக்கே வங்காள விரிகுடாவையும். மேற்கே அராபிக் கடலையும், தெற்கே இந்து சமுத்திரத்தினையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மத்திய கோட்டிற்கு வடக்கே அமைந்துள்ள இத்தீவு ஏறத்தாழ 40 அகலக்கோட்டுப்பரப்பையும் 20 நெடுங்கோட்டுப்பரப்பையும் கொண்டுள்ளது.

ஈழமானது தனித்தீவாக காணப்படினும் அதனுடன் இணைந்த வகையில் பல சிறிய தீவுகளை உள்ளடக்கியதாக அது அமைந்துள்ளது. இலங்கை முழுவதும் தீவுகள் உள்ள போதிலும் முக்கியமான தீவுகள் வடமாகாணத்தில் மேற்கே யாழ்ப்பாணக்குடாநாட்டில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது இலங்கை பண்டைக்காலம் தொட்டு பல்வேறு நாடுகளுடன் தொடர்புகளைக் கொள்வதற்கும் தனித்துவமான அம்சங்களுடன் வளர்வதற்கும் அது தீவாக காணப்படுகின்றமை சாதகமாக அமைந்து கொண்டதெனலாம்.

யாழ்ப்பாணக்குடாநாட்டைப் போலவே அதன் கடற்பரப்பில் பரவிக் கிடக்கும் தீவுகளும் நீண்ட வரலாறு கொண்டவை. வரலாறு, புவியியலைப் பொறுத்தவரை இத்தீவுகள் யாழ்ப்பாணக்குடாநாட்டிற்கு மிக அண்மையில் அமைந்தபோதும் இவற்றுக்கென தனியான சிறப்புக்களும் உண்டு. இத் தீவுகளும் யாழ்ப்பாணத்தைப் போலவே ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுப்பாரம்பரியம் கொண்டவை. இவை ஒரு புறத்திலே யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் வன்னிப்பிரதேசத்தின் வடபகுதியாகிய பூநகரிப் பகுதிக்கும் அண்மையில் அமைந்துள்ளன. அதேவேளையில் இவை மேற்குப்புறமாகத் தென்னிந்திய மாநிலங்களாக தமிழ்நாடு, கேரளக்கரையோரங்களுக்கும் ஓரளவு அண்மையில் அமைந்துள்ளன. இதனால் இவ்விடங்களுக்கும் பல்வேறு தொடர்புகள் ஏற்பட்டதுடன் அவற்றின் தாக்கங்களையும் தெளிவாக இனம் கண்டுகொள்ள முடிகின்றது.

இலங்கையில் வடபுலத்தில் மிகப்பிரதானமான புவியியல் அலகுகளில் ஒன்றாக இவை அமைகின்றன. வேலணைத்தீவு, மண்டைதீவு, அனலைதீவு, காரைதீவு, புங்குடுதீவு,நயினாதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு என வரும் சப்த தீவுகள் "யாழ்ப்பாணப்பண்பாடு" என இன்று அடையாளம் காணப்படும் பண்பாட்டு உருவாக்கத்தில் கணிசமான ஓர் இடத்தைப் பெறுகின்றன (சிவத்தம்பி,கா,2006,ப:24). யாழ்ப்பாணப்பண்பாட்டின் திறவுகோல் எனத் தீவகமே சிறப்பிக்கப்படுன்றது. நயி-னாதீவின் பௌத்தமத தொடர்புகள் முதல் நாரந்தனையின் கத்தோலிக்க தொடர்புகள் வரை ஒரு நீண்ட பாரம்பரியம் இத்தீவுகளுக்கு உண்டு.

ஈழ வரலாற்றை தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதற்கு வரலாற்று மூலாதாரங்கள் காணப்படுவது போன்று இலங்கையின் வடபகுதி அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக்குடாநாடு பற்றிய புராதன தகவல்களை அறிவதற்கு வரலாற்று மூலாதாரங்கள் மிக அரிதாகவே காணப்படுகிறது என்றே கூறவேண்டும். பிற்பட்ட காலப்பகுதியில் ஓரிரு வரலாற்று நூல்கள் தோன்றினாலும் கூட அவை யாழ்ப்பாணக்குடாநாட்டின் பழமை பற்றிய செய்திகளை முழுமையாகக் கூறத் தவறிவிட்டன. இத்தகையதொரு நிலையே தீவகத்திற்கும் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் பற்றிய செய்திகளைக்கூறும் ஓரிரு இலக்கியங்கள் போலன்றி தீவகம் பற்றிய செய்திகளைக்கூறும் இலக்கியங்கள் தோன்றவில்லை என்றே கூறவேண்டும். இலங்கையினது வரலாறு கூறும் இலக்கியங்களிலும், யாழ்ப்பாணத்தினது வரலாறு கூறும் இலக்கியங்களிலும் ஆங்காங்கே கூறிச்செல்கின்ற தீவகம் பற்றிய செய்திகளை ஒன்றிணைத்தும், ஐதீகங்கள், மரபுகளை அடிப்படையாகக்கொண்டு அதனை உறுதிப்படுத்தும் தொல்லியற்சான்றுகளை ஆதாரமாகக் கொண்டும் தீவகத்தினது வரலாற்றுப் பாரம்பரியத்தினை அறிந்துகொள்ள முடிகிறது.

ஈழ வரலாற்றைக் கூறும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், நம்பொத்த,கோகில சந்தேசய பௌத்த ஜாதகக் கதைகள் போன்றனவும் யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, வையாபாடல் முதலிய நூல்கள் வாயிலாகவும், இந்திய இலக்கியங்களான மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய நூல்கள் வாயிலாகவும், தொல்லியல் மூலாதாரங்கள் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர்கால ஆவணங்கள், வரலாற்றாசிரியர்களது குறிப்புக்கள், ஐரோப்பியர் காலப்பகுதியில் கட்டப்பட்ட கட்டடங்கள் வாயிலாகவும் இவற்றினை அறியமுடிகின்றது. ஒவ்வொரு குடியிருப்புக்களும் புவியின் மீது மனிதன் செலுத்துகின்ற ஆதிக்கத்தை வெளிப்படுத்தும் சின்னமாக விளங்குகின்றது. புவி மீது மனிதன் தன் தேவைக்காக அமைத்துக் கொண்ட உறைவிடமே குடியிருப்பாகும். பண்டைய மனிதன் வேட்டையாடுபவனாகவும், மந்தை மேய்ப்பவனாகவும் விளங்கினான். நிரந்தரமான ஒரு உறைவிடம் அவனுக்குத் தேவைப்படவில்லை. பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு நிரந்தரமான ஓர் இடத்தில் தங்கி வாழ நேர்ந்தபோது குடியிருப்புக்கள் உருவாயின.

இலங்கையின் பிற்பகுதிகளைப்போலவே யாழ்ப்பாணத்திலும் அதனை அண்டிய தீவகத்திலும் மக்கள் குடியிருப்புக்களும் வரலாறும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஆரம்பமாயிற்று எனலாம். இத்தீவுகளில் குடியியேறிய மக்கள் யார் என்பது பற்றி நோக்கும் போது அதன் அமைவிடத்தின் வகிபங்கு முக்கியம் பெறுகிறது. தீவுப்பகுதிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மிக அண்மையிலுள்ள அதே வேளை தென்னிந்தியா குறிப்பாக தமிழ்நாட்டு கரையோரப்பகுதிக்கு சற்றுத்தொலைவில் உள்ளன. இந்தியாவிலுள்ள தமிழ்நாடு, கேரளா, ஆந்திரப் பிரதேசங்களிலிருந்து காலந்தோறும் மக்களில் சிலர் அங்கிருந்து வர்த்தகம், மீன்பிடித்தல், புதிய நாடுகளுக்கு செல்லும் ஆவல், சமய ஆர்வம் முதலிய காரணங்களினாலும் பல்லவர், பாண்டியர், சோழர், விஜயநகரப் பேரரசர்களின் ஆதிக்கப்படர்ச்சியைத் தொடர்ந்தும் இத்தீவகங்களிலே வந்து குடியேறியிருப்பர். இக் குடிபெயர் நடவடிக்கையில் தமிழகத்தின் பங்கு பிரதானமானது என்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமில்லை (சிவசாமி,வி.,1990.ப:15).

தமிழ்நாட்டிலிருந்து தீவகத்திற்கு ஏற்பட்ட குடியேற்றம் பற்றி யாழ்ப்பாணம் பற்றிய செய்திகளை எடுத்துக்கூறும் கைலாயமாலை யாழ்ப்பாணவைபவமாலை ஆகிய இலக்கியங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை "யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கை ஆரிய மகாராசனின் வேண்டுகோளின்படி செய்யூர் இரு மரபும் துய்ய தனிநாயகன் எனும் வளவாளன் நெடுந்தீவிலே குடியிருத்தப்பட்டான்" என கூறுகின்றன. தனிநாயகனின் குடும்பத்தை சேர்ந்தோர் என தம்மைக் கூறிக்கொள்வோர் மற்றைய தீவுகளிலும் உள்ளனர். எனவே தனிநாயகனின் வழி வந்தோர் வேறு சில தீவுகளிலும் தொடர்பு கொண்டனர் எனலாம். இந்தியாவிலிருந்து இங்கு வந்த மக்களில் பிறிதொரு சாரார் காலப்போக்கில் மற்றைய தீவுகளிலும் குடாநாட்டிலும் குடியேறியிருப்பர். தமிழ் நாட்டிலிருந்து தீவகத்திற்கும் குடாநாட்டிற்கும் புலம்பெயர்ந்த மக்கட் புலப்பெயர்ச்சியின் ஓர் அலையெனத் தனிநாயகம் பற்றிய குறிப்பினைக் கொள்ளலாம் ஏனெனில் நெடுந்தீவானது ஏனைய தீவுகளைவிட தமிழகத்துக்கு மிக அண்மையில் அமைந்திருப்பதுடன் இந்தியப் பெருங்கடலை அண்டியே அமைந்துள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

தமிழ்நாட்டிலிருந்து தீவகத்திற்கு வந்து குடியேறிய மக்களில் ஒரு சாரார் தீவகத்திற்கு தென்கீழ் திசையிலுள்ள பூநகரிப் பிராந்தியத்திற்கும் சென்று குடியேறினர் என்பது ப.புஸ்பரட்ணம் அவர்களின் கருத்தாகும். (சிவசாமி,வி1990,ப:03) இதனடிப்படையில் மக்கள் புலப்பெயர்ச்சியானது தீவகத்திலும், குடாநாட்டிலும், பூநகரியிலும் ஏற்பட்டிருக்கலாம். பிறிதொருவகையில் நோக்கின் மக்கள் புலப்பெயர்வு குடாநாட்டில் ஏற்பட்ட பின்னர் தீவகத்தில் ஏற்பட்டிருக்கலாம். இவர்கள் பின்னர் வசதிகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை நாடி குடாநாட்டிற்கும், பூநகரிக்கும் சென்றிருப்பர். இங்கு வாழ்ந்த மக்கள் திராவிடர் என்று ஐயத்துக்கிடமின்றிக் கூறலாம்.

தீவகமக்கள் மத்தியில் சில வழக்காறுகள் நிலவி வருகின்றது. இவற்றில் ஆற்றுப்பெருக்கு, மலையடி என்பன குறிப்பிடப்பட்டன. ஆடி மாதத்திலே ஆற்றுப்பெருக்கு இருப்பதனால் நீர் அதிகமாகும் என்பர். இது ஒரு வேளை கடற்பெருக்கையும் குறிப்பிடலாம். ஆனால் இம் மாதத்திலே தமிழகத்தில் மழை பொழி-வதைத் தொடர்ந்து காவிரியாறு நீர் பெருக்கெடுப்பதுமுண்டு இது ஒரு வேளை மூதாதையர் சிலர் காவிரி ஆற்றுப் பிரதேசத்தில் இருந்து குடிபெயர்ந்திருப்பர் என எண்ணத்தோன்றுகிறது. இது அவர்களது பழைய நினைவாக இருக்கலாம். அதேபோல மலையடி என்ற இடம் நெடுந்தீவுக்கப்பால் இருக்கின்றதென்ற ஐதீகம் உண்டு. இதுவும் தமிழ்நாட்டு மலைப்பிரதேசம் ஒன்று பற்றிய பழைய நினைவாக இருக்கலாம். இன்றுவரை இவ்இடப்பெயர் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தீவகத்திலே காணப்படுகின்ற சில இடப்பெயர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தீவுகளில் உள்ளன. "இருப்பிட்டி" எனும் இடப்பெயர் புங்குடுதீவிலும் காரைதீவிலும் உண்டு. "மண்டைதீவு" எனும் பெயர் வேலணைக்கு கிழக்கிலும் புங்குடுதீவிலும் உண்டு. (சிவசாமி,வி,1990,ப:05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய இடப்பெயர்கள் ஒரு தீவிலே குடியேறிய மக்கள் ஏனைய தீவுகளுக்கு தமது குடியிருப்புக்களை நகர்த்திச்சென்றபோது முன்னைய தீவுகளுக்கு தாம் இட்ட இடப்பெயர்களை அப்படியே இட்டிருக்கலாம். சில இடப்பெயர்கள் தீவகத்திலும் யாழ்ப்பாணக்குடாநாட்டிலும், பூநகரிப்பகுதியிலும் பொதுவாகக் காணப்படுகிறது. "உயரப்புலம்" "மூத்தநயினார்புலம்" "இருப்பிட்டி" "செட்டியா தோட்டம்" "செட்டியா வளவு" போன்ற இடப்பெயர்கள் முறையே பூநகரி. தென்மராட்சி, புங்குடுதீவிலும் உள்ளன. யாழ்ப்பாணக்குடாநாட்டின் மேற்கே தெல்லிப்பளை தொடக்கம் அராலி வரையுள்ள "வழுக்கிஆறு" எனும் பெயர் அராலிக்கு மேற்கேயுள்ள சிறு கடலுக்கு அப்பால் எதிர்க்கரையிலுள்ள சரவணையில் உள்ளது (சிவசாமி, 1990, ப: 05).

யாழ்ப்பாணக்குடாநாட்டில் பெருங்கற்காலப் பண்பாடானது கி.மு1000 என இனம் காணப்பட்டுள்ளது. இதே சமகாலத்தில் தீவகத்திலும் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியிருந்தது என்பதை அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. தீவக பெருங்கற்காலப்பண்பாட்டு அம்சங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் மட்டுமன்றி இலங்கையின் பிற பகுதிகளாக கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால அம்சங்களுடன் தமிழகத்தின் பெரும் கற்கால பண்பாட்டு அம்சங்களுடன் ஒத்த தன்மையில் காணப்படுவது சிறப்புக்குரியதாகும். 1980 – 1982 காலப்பகுதியில் பொ.இரகுபதி, சி.கு.சிற்றம்பலம் ஆகியோர் காரைநகர் களபூமியில் மேற்கொண்ட ஆய்வுகளும், 2004ல் பேராசிரியர்.ப.புஷ்பரட்ணம் அவர்கள் வேலணைத்தீவில் சாட்டிக் கிராமத்தில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளும் புங்குடுதீவில் கிடைத்த பெருங்கற்காலச் சின்னங்களும் தீவகத்தில் பெருங்கற்காலப் பண்பாடு நிலவியது என்பதை எடுத்துக்காட்டியதெனலாம்.

சந்திராந்தை தொல்லியலாய்வுகளில் கிடைத்த ஈமத்தாழிகளும் அதனுடன் மீட்கப்பட்ட மீன். மிருகஎலும்புகள், நண்டின், கோதுகள், மாட்டுப்பல், மணிகள், பூனை போன்ற மிருகங்களின் எலும்புகள் போன்ற நிவேதனப் பொருட்களும், நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் முறைகள் யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஆனைக்கோட்டை பெருங்கற்கால அடக்கு முறைகளை ஒத்ததாக காணப்பட்டது. இதையொத்த முறைகள் இலங்கையின் வடமேற்குக் கரையில் மன்னார் மாவட்டத்தில் பொம்பரிப்பு, திருக்கேதீஸ்வரத்திலும், தென்னகத்தில், திருநெல்வேலி, இராமநாதபுரத்திலும் காணப்பட்ட ஈமத்தாழி அடக்கு முறைளுடன் ஒத்தவையாக காணப்பட்டமையினால் இக்கலாசாரத்தைப் பின்பற்றிய மக்களே தீவகத்திலும் பரவி இருந்தனர் என்பதும் அதே சமகாலப்பகுதியில் இங்கு குடியேற்றங்கள் ஏற்பட்டுவிட்டன என்பதையும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இவை தீவகத்தில் குடியிருப்புக்களை அமைத்தவர்கள் திராவிடர் என்பதை ஐயத்துக்கிடமின்றி நிரூபிக்கின்றது.
(பாலேந்திரன்,ச,ஆ, 2002, ப: 71 72).

வேலணைதீவில் சாட்டிக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் 10 மீற்றர் இடைவெளியில் 30ற்கு மேற்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. இங்கு சிறிய கிணற்று வடிவில் அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கற்காலத்தில் பின்பற்றப்பட்ட குழியடக்க ஈமச்சின்ன முறையை நினைவுபடுத்துவதாக அமைகிறது. பிறிதொரு இடத்தில் குடைக்கல் வடிவிலான ஈமச்சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது இவ் ஈமச்சின்னங்களுடன். மீட்கப்பட்ட பலவகை எலும்புக்கூடுகளை ஆய்வு செய்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட உடற்பயிற்சியியல் ஆய்வாளர் கலாநிதி.இராசேந்திரப்பிரசாத் மற்றும் தமிழ்நாடு அண்ணா பல்கலைக்கழக ஆய்வாளரும் அதில் பல்வேறு வயது சார்ந்த மனித எலும்புகளுடன் குதிரையுட்பட சில வகை மிருகங்கள், பறவைகள், கடல், உயிரினங்கள் என்பவற்றின் எலும்புகள் இருப்பதை அடையாளப்படுத்தியுள்ளனர் (புஸ்பரட்ணம்,ப,2006,ப:53)

சாட்டிக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடல், மட்பாண்டம் வனைதல், வர்த்தகம் மற்றும் மீன்பிடித்தல் என்பவற்றை முதன்மைத் தொழிலாக கொண்டிருக்கலாம் என்பதை இறந்தவர்களுடன் சேர்த்து அடக்கம் செய்யப்பட்டுள்ள தொல்லியற் சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. சாட்டியில் மீட்கப்பட்ட தொல்பொருட் சின்னங்களில் சுடுமண் வளையற்கிணறுகள் சிறப்பாக குறிப்பிடத்தக்கது. தொல்லியலாளர்கள் இதனை நகரமயமாக்கத்தின் குறியீடு என அழைத்தனர். பெருங்கற்காலப் பண்பாட்டிலோ அல்லது வரலாற்றுக் காலத்தின் தொடக்ககால பண்பாட்டில் சுடுமண் கிணறுகளை ஈமச்சின்னங்களாக பயன்படுத்தியதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் புராதன காலத்தில் கிணறுகள், கழிவுநீர்த் தொட்டி அல்லது சாயத்தொட்டிகளாக பயன்படுத்திய சுடுமண் கிணற்றை பயன்படுத்த முடியாத நிலையில் அவற்றை அக்கால மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்யும் ஈமச்சின்னங்களாக பயன்படுத்தியிருக்கலாம் என ஆய்வாளர்கள் விளக்கம் கூறியுள்ளனர் (புஸ்பரட்ணம்,ப,2006,ப:59) உரோம நாட்டு ரௌலட்டட் மட்பாண்டங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையானது.

சாட்டிப் பிரதேசம் கடல்சார் வர்த்தகத்தில் பெற்ற முக்கியத்துவத்தையும் கி.மு.2ஆம் நூற்றாண்டளவில் சாட்டிக் கிராமத்தில் மக்கள் வாழ்ந்ததையும் உறுதிப்படுத்துகின்றன.

புங்குடுதீவின் வடபகுதியிலுள்ள ஊரதீவின் வடகரையில் வட்டக்கற்களாலான சிறு கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய கிணறுகள் வல்லிபுரம், பூநகரி, கிராஞ்சி, திருக்கேதீஸ்வரம் முதலிய இடங்களிலும் காணப்பட்டன. இக்கிணறுகள் பெருங்கற்காலப் பண்பாட்டினை சேர்ந்தவை எனப் பொதுவாகக்கொள்ளப்படுகின்றன. ஊரதீவிலுள்ள ஐயனார் ஆலயம் தற்போது சிவாலயமாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இங்குள்ள கருங்கற் தூணில் சில எழுத்துக்கள் காணப்படுகின்றன. இவ் எழுத்துக்கள் தமிழ் கிரந்த எழுத்துக்கள் எனக் கருதப்படுகின்றன. இவ் எழுத்துக்கள் வாசித்தறியப்பட்டால் தீவகத்தில் மக்கள் குடியேற்றம் பற்றிய புதிய தகவல்களைப் பெறமுடியும்.

பெருங்காற்கால சான்றுகளினடிப்படையில் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் தீவகத்தில் மக்கள் வாழத்தொடங்கினர் என உறுதியாகக் கூறமுடியும். (புஸ்பரட்ணம், ப, 2006, ப: 61) தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கும் இடங்களைப்போல யாழ்ப்பாணக் குடாநாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவகங்கள் விளங்கியதால் யாழ்ப்பாணத்தின் புராதன குடியேற்றங்கள் பல தீவகங்கள் ஊடாகவும் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

இலங்கையின் பூர்வீகக் குடிகளாக இயக்கர் மற்றும் நாகர் என்போர் கருதப்படுவதோடு இவர்கள் பற்றிய செய்திகள் மகாவம்சத்திலும் இடம்பெற்றுள்ளன. இவர்களில் இயக்கர்களை ஆதி ஒஸ்ரலோயிட் இனத்தவர் எனவும், நாகர்களை திராவிடர் எனவும் வரலாற்றாசிரியர்கள் அடையாளம் கண்டுள்ளனர். நாகர்கள் பெரும்பாலும் வட பகுதியில் வாழ்ந்ததோடு தீவகத்திலும் இவர்களது தொடர்புகள் காணப்பட்டதை அறிய முடிகின்றது. நாகதீபத்திலே மகோதரன், சூலோதரன் ஆகிய நாக மன்னர்களது சிம்மாசனப் பிணக்கைத் தீர்க்க புத்தர் இலங்கை வந்தார் என்ற செய்தி ஐதீகமாக இருப்பினும், நாகர்கள் வாழ்ந்த பகுதியாக இதனை அடையாளப்படுத்த முடிகின்றது. இவர்கள் மத்தியில் நாக வழிபாடு பிரபல்யம் பெற்று விளங்கியது இன்றும் நாக வழிபாடு தீவகங்களிலே பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. குறிப்பாக நயினாதீவு, அனலைதீவில் இன்றுவரை நாகவழிபாடு சிறப்பாக இருந்துவருவது நோக்கத்தக்கது. வையாபாடலில் "நாகநயினார்தீவு" எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையானது கவனிக்கத்தக்கது. இதன் மூலம் தீவக மக்கள் மத்தியில் புராதன காலம் முதல் இந்துமதம் செல்வாக்கில் இருந்ததை அவதானிக்க முடிகிறது எனலாம்.

தீவகத்துடனான பௌத்தமத தொடர்புகள் ஈழத்தின் ஏனைய இடங்களில் பௌத்தம் பரவியதைப் போன்று தீவகத்திலும் பௌத்தம் பரவியதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கையின் புராதன வரலாற்றைக் கூறும் மகாவம்சம், தீவம்சம் போன்ற நூல்களில் நாகதீபகம் ஒரு முக்கிய பௌத்த நிலையமாகக் கூறப்படுகிறது. நாகதீபம் என்பது வடஇலங்கை முழுவதையும் குறிக்குமாயினும் சிறப்பாக நயினாதீவையே குறிக்குமென கருதப்படுகின்றது. இங்கு புத்தபிரான் வந்து சென்றார் என்ற ஐதீகமும் உண்டு இன்று நயினாதீவிலே உள்ள நாகவிகாரை பிரசித்தி பெற்ற பௌத்த மையமாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இதில் வரும் நாக என்ற சொல்லினை நாகர்களுடன் ஒப்புநோக்க இடமுண்டு.

புங்குடுதீவானது பிறிதொரு முக்கியமான பௌத்த நிலையமாக கூறப்படுகின்றது. இங்கு புகழ்பெற்ற அல் உறந்தஸ் பௌத்த ஞானிகள் வாழ்ந்தனர் என குறிப்பிடப்படுகின்றது. மேலும் வல்லிபுரப் பொற்சாசனத்தில் வரும் குறிப்பு பின்வருமாறு காணப்படுகின்றது.

"சித்த மகாராஜ வஹயஹ ராஜெகி அமெத
இஸிகிரய நகதிவ புஜமெநி
புடகர அதன ஹி பியகக – திச
விஹர கரிதெ"

இதில் இடம்பெறுகின்ற பியங்குதிச என்பது புங்குடுதீவு என அடையாளம் காணப்படுகிறது. தீவகத்திலுள்ள பிற தீவுகளான கேரதீவு, மண்டைதீவு, முதலான இடப்பெயர்கள் மகாவம்சம், தீபவம்சம் போன்ற நூல்களில் வருவதோடு பௌத்த ஜாதகக் கதைகளில் காரதீப (காரைதீவு) பற்றிய செய்திகள் காணப்படுகின்றமை நோக்கத்தக்கது.

தமிழ்நாட்டு பௌத்தமரபினை அடிப்படையாகக் கொண்டெழுந்த மணிமேகலையில் கூறப்படும் மணிபல்லவம் பற்றிய குறிப்புக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினா தீவு என அடையாளம் காட்டப்படுகின்றது. சிலர் இதனை காரைதீவு எனக்கருதுவர். மணிமே-கலை ஆபுத்திரன் பற்றியும், அக்ஷய பாத்திரம் முதலியன பற்றிய ஐதீகங்கள் இன்றும் நயினாதீவில் நிலவுவதோடு, 5ஆம் வட்டாரத்தில் மணிமேகலை அரங்கு அமைந்துள்ள இடமே மணிமேகலை வந்திறங்கிய இடம் எனவும், அதற்கு முன்னுள்ள குளம் தான் அக்ஷய பாத்திரம் பெற்ற பொய்கை எனக்கூறுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. இலங்கைப்பௌத்த மரபுகளும் தென்னிந்திய பௌத்த மரபுகளும் தீவகத்தில் சங்கமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பல்லினப் பண்பாடு கொண்ட பிராந்தியமாக தீவகம் புராதன காலத்தில் விளங்கியதையே இவை எடுத்துக்காட்டுகின்றன. (சிவசாமி, வி, 1990, ப: 08)

தீவகத்தில் புராதன காலத்தில் ஸ்திரமான ஆட்சிமுறை நிலவியதற்கான சான்றுகள் காணப்படாதபோதும். இங்கு சில குறுநிலத் தலைவர்களது ஆதிக்கம் இடம்பெற்றிருக்கலாம். இவர்கள் சுதந்திரமாகவோ யாழ்ப்பாணத்தில் ஆட்சிபுரிந்த அரசர் அல்லது சிற்றரசர்களது, அனுராதபுர மன்னர்களின் கீழ் ஆட்சி செய்த நிர்வாகிகளின் கீழ் நிர்வாகத்தை கவனித்திருப்பர். குளக்கோட்ட மகாராசன், வெடியரசன் பற்றிய கதைகள் நெடுந்தீவிலும், காரைதீவிலும் அல்லிராணி பற்றிய கதைகள் அல்லைப்பிட்டியிலும் நிலவுகின்றன. இவை பெருமளவுக்கு ஐதீகங்களாகவே உள்ளன. நயினாப்பட்டர், வேலன் நாராயணர், முதலியோர், பற்றிய செய்திகளும் நோக்கத்தக்கது (சிவசாமி, வி, 1990, ப: 08).

தமிழகத்தில் ஆட்சியமைத்த வம்சங்களின் செல்வாக்கு சான்றுகள் மீட்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் பல்லவரது ஆட்சி இடம்பெற்ற காலத்தில் தீவகத்துடனான தொடர்புகள் காணப்பட்டமைக்கான தெளிவான செய்திகள் காணப்படாத போதும் தீவகத்திலுள்ள "பல்லதீவு" என்றுள்ள இடப்பெயர் பல்லவத்தொடர்பினை ஞாபகப்படுத்துவதாக அமைகிறது. பல்லவர் இனத்தை சேர்ந்தவர் என்பதும், இம்மணிபல்லவம் நயினாதீவு, காரைதீவு என்ற ஐதீகமும் கவனிக்கத்தக்கது.

தமிழகத்தில் 03 நூற்றாண்டுகளுக்கு மேலாக ஆதிக்கம் செலுத்திய சோழ வம்சத்தினது செல்வாக்கு கி.பி.10.ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் ஏற்பட்டது. சோழப்பேரரசின் செல்வாக்கானது இலங்கை முழுவதும் பரவியதன் பின்னணியில் தீவகத்திலும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. வடஇலங்கையில் சோழரது ஆதிக்கம் ஏற்பட்டிருந்த வேளையில் கேந்திர நிலையத்தில் விளங்கிய ஊர்காவற்றுறை போன்ற துறைமுகங்களை கட்டுப்படுத்த வேண்டிய தேவை இவர்களுக்கு ஏற்பட்டது. இதனை நாரந்தனையில் 1951 ஆம் ஆண்டு மீட்கப்பட்ட சோழ மன்னனான இராஜராஜசோழனின் 38 செப்பு நாணயங்கள், சேரமன்னர்களது 05 வெள்ளி நாணயங்கள், பொன்மணிகளின் உடைந்த துண்டுகள், வட்டமணிகள், இளஞ்சிவப்புக்கல், மெழுகுப்படிவத்தின் மேல் பொன்தகட்டில் அம்மன் உருவம் பதிக்கப்பட்ட பதக்கம் போன்ற சான்றுகள் மூலம் அறியலாம்(செல்வரத்தினம்,ம,பொ.,1973, ப:40:41) தீவகத்திலுள்ள பண்ணைத்துறை என்ற பெயர் சோழநாட்டிலுள்ள பெண்ணையாற்றுப் பகுதியிலிருந்து வந்தோரினால் இடப்பட்டது என்ற கருத்து காணப்படுகின்றது. 1ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேந்திரனின் தென்கிழக்காசிய விஜயம் பற்றிக் கூறும் தமிழ் மெய்க்கீர்த்தி அவன் வென்ற இடங்களில் ஒன்றாக பண்ணையும் குறிப்பிடப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. புங்குடுதீவிலுள்ள சோழகோரை, சோழகன்புலவு போன்ற இடப்பெயர்களை சோழருடன் தொடர்புப்படுத்திப் பார்க்கலாம். 12 ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த சோழர்கால பல்லவராயன் பேட்டை செப்பேடு, திருவாலங்காட்டு கல்வெட்டும் ஊர்காவற்துறை பற்றி கூறுகின்றது.

கி.பி.13ஆம் நூற்றாண்டிலே எழுச்சி பெற்ற யாழ்ப்பாணத் தமிழரசுக் காலத்தில் தீவகம் முக்கியத்துவம் பெற்றதுடன் தமிழ் மன்னர்களது ஆதிக்கதிற்குட்பட்டிருந்தது ஆரியச்சக்கரவர்த்திகள் காலம் நிர்வாக நடவடிக்கைகளின் பொருட்டு குடாநாடு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என 04பகுதிகளாக வகுக்கப்பட்டதோடு தீவகமானது தீவுப்பற்று என வகுக்கப்பட்டும் காணப்பட்டது. இந் நிர்வாகப்பிரிப்பே தொடர்ந்து வந்த போர்த்துக்கீசர், ஒல்லாந்தர். ஆங்கிலேயருக்கு முன்னோடியாக அமைந்து கொண்டதெனலாம் (சிற்றம்பலம், சி., 1992, ப: 110).

அமைவிட ரீதியாக துறைமுகங்களின் செல்வாக்கினால் பன்னாட்டு வாணிபப் பண்பாட்டு தொடர்புகள் நிர்வாகத்தில் நிலவக்காரணமானது. தென்னிந்தியத் தொடர்புகளோடு இணைந்த வகையில் கிரேக்கம், உரோமம், அராபியா, சீன வர்த்தகத் தொடர்புகள் யாழ்ப்பாணக்குடாநாட்டில் நிலவியதைப் போன்று தீவகத்திலும் நிலவியதற்கான சான்றுகள் மீட்கப்பட்டுள்ளன. தென்னிலங்கை மன்னர்கள், வடஇலங்கை மன்னர்கள் தீவகத்துடன் தொடர்புகள் பேணியதை காணமுடிகின்றது. முதலாம் பராக்கிரம பாகுவின் காலத்தில் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஊர்காவற்துறை பிரசித்திபெற்ற துறைமுகமாக இருந்தது என்பதையும் வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய விபரங்களையும் நயினாதீவு நாகபூஷணியம்மன் கோவிலுள்ள கற்பலகை சாசனம் மூலம் அறியலாம். இக்கல்வெட்டில் தமிழிலே வர்த்தக ஒழுங்குமுறை பற்றிக்கூறுவதோடு வர்த்தகத்தில் ஈடுபட்ட வெளிநாட்டவர் பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டு சாசனம் பின்வருமாறு

................நாங்கள்...................

................வந்து ஊராத்துறை

(யில்) பரதேசிகள் வந்து

இருக்க வெணுமென்றும் அவர்கள் ரகைவிப்பட்டு

வணுமென்றும் பலதுறை

றகளில் பரதேசிகள் வந்து நத்து

றையிஙெ(ல) கூட வெணுமென்று

(ம்) நாம் ஆனை குதிரை மெல்ஸ்நெஉற

(மு) ண்டாதலால் நமக்கு ஆனை குதிரை

கொடுவந்த மரக்கலங் கெட்டது

ண்டாகில் நாலத்தொன்று பண்டா

(ர) த்துக்கு கொண்டு மூன்று கூறும்

(உ) டையவனுக்கு விடக்கடவதாகவு

(ம்) வாணிப மரக்கலங்கெட்ட துண்

டாகில் செம்பாகம் பண்டாரத்துக்

(கு) க் கொண்டு செம்பாகம் உடைய

(வ) னுக்கு விடக்கடவதாகவும் இவ்

வவஸ்தை சந்தராதித்ய (ந) ள்ளதனையுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ல்லிலுஞ் செம்பிலும் எமுத்து வெ
ட்டி வித்து இவ்வவஸ்தை செய்துங்கு
டுத்து தேவ (உற) பராப்பமபுஜோரிபுராஜவ
(ம்ச) தேவநல (ஸ்) ஸகலஸிம் உறளசக்ரவ
ர் (த்தி)

புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டிலே முதலாம் புவனேகபாகுகாலச் செப்புக்காசுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாண மன்னர் காலத்தில் தீவகத்திற்கிடையே வணிக தொடர்புகள் இருந்ததை மண்கும்பானில் மீட்கப்பட்ட சேது நாணயங்கள் மூலம் அறியமுடிகிறது. அல்லைப்பிட்டியில் கிடைத்த குஜராத் காசுகள, நாரந்தனையில் கிடைத்த சோழக்காசுகள் போன்றன வர்த்தகத்தின் மூலமாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் (சிவசாமி,வி.,1973,ப:23:24).

சீனாவிற்கும் தீவகத்திற்குமிடையேயான தொடர்புகளை எடுத்துக்காட்டும் சான்றுகள் பல தீவகத்தில் மீட்கப்பட்டுள்ளன. கி.பி. 10 ஆம் நூற்றாண்டளவில் வர்த்தகம் செழிப்பாக இலங்கையில் நடைபெற்று வந்தபோது தீவகத்திலும் அது இடம்பெற்றமை இயல்பே. வேலணையின் மேற்குக்கரையிலுள்ள சீனன்கோயில் என்ற இடத்தில் சீனக்குடியிருப்பு ஒன்று இருந்ததாகச்சொல்லப்படுகின்றது. அரைநூற்றாண்டுகளுக்கு முன்னர் நயின-ாதீவு துறைமுகத்திற்கு அண்மையிலுள்ள பப்பிரவன் சல்லி என்னுமிடத்தில் மீட்கப்பட்ட சட்டிகளை திருமல்பஸ் என்பவர் கி.பி. 12ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த சீனச்சாடி என அடையாளம் காட்டினர். (சிவசாமி,வி, 1973,ப:10) இத்தகைய சீனச்சாடிகள் குறிப்பிடத்தக்கது.

மலாயத்தீபகற்பம், ஜாவா போன்ற தென்கிழக்காசிய நாடுகளுடன் தீவகப்பிராந்தியம் தொடர்புகளைப் பேணியிருக்கலாம் என்பதை தீவகத்தில் காணப்படும் சில இடப்பெயர்களுடன் தொடர்புபடுத்தி நோக்கலாம். தீவகத்திலுள்ள சாவான் (ஜாவாக்காரன்) வளவு, சீனன்புலம், கணக்கனார் வளவு, செட்டியார் தோட்டம், செட்டிவளவு, பணிக்கன்புலம் போன்றவை முறையே ஜாவா, சீனா, இந்தியத்தொடர்புகளை ஞாபகப்படுத்துவதாக அமைகின்றது. இந் நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் இவ்விடங்களில் தங்கியிருக்கலாம் அல்லது. தொடர்புகளைப் பேணியிருக்கலாம் என எண்ணத்தூண்டுகிறது. காரைநகரிலுள்ள “கோவளம்” என்னும் இடப்பெயரும் ஊர்காவற்துறையிலுள்ள “கரம்பன்” என்னும் இடமும் கேரள மாநிலத்தில் உள்ளமை நோக்கத்தக்கது (பாலேந்திரன்,ச,ஆ.,2002,ப,90).

ஐரோப்பியர்களது ஆட்சிக்காலத்தில் முன்னைய காலங்களைப் போலன்றி தீவகப்பிராந்தியம் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் தீவகத்தினது அமைவிடம் மற்றும் அதன் வளங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர் என்றே கூற வேண்டும். ஒல்லாந்தர் தம் தாய்நாட்டிலுள்ள இடப்பெயர்களை தீவகத்தின் இயற்கை அம்சங்களுக்கு ஏற்பச் சூட்டினர் என்பது குறிப்பிடத்தக்கதே. ஒல்லாந்தரது ஆட்சியினை நினைவுகூரும் கோட்டைகள் நெடுந்தீவு, ஊர்காவற்துறை, காரைநகர் முதலிய இடங்களில் இன்றும் உள்ளன. இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே செல்லும் கப்பல்களை அவதானிக்கும் நோக்கமும், யாழ்ப்பாணக் குடாநாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடத்தொடர்புகளை கட்டுப்படுத்த வேண்டிய தேவையினையும் உணர்ந்து போர்த்துக்கீசர்கள் இங்கு கோட்டைகளை அமைத்தனர். அதன்பின் வந்த ஒல்லாந்தர் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இக்கோட்டைகளை திட்டமிட்டுப் பெரிதாக்கிக் கட்டினர் இவர்களைத் தொடர்ந்து. வந்த பிரித்தானியரும் இக் கோட்டைகளை பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களது தீவகத்துடனான தொடர்பின் காரணமாக கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து ஆகிய கிறிஸ்தவ மையங்களின் செல்வாக்கு ஏற்பட்டது. இதன் பின்னணியில் வழிபாட்டு நோக்கில் தேவாலயங்கள் அமைக்கப்பட்டன. தொடர்ந்து. போர்த்துக்கீசர் காலத்தில் அமைக்கப்பட்ட தேவாலயங்களை ஒல்லாந்தர்கள் திருத்தியோ, திருத்தாமலோ தமது வழிபாட்டிடங்களாக பயன்படுத்தினர். இதனால் போர்த்துக்கீசர் கால தேவாலயங்களை தீவகத்தில் சரிவர அடையாளம் காண முடியவில்லை. இன்று தீவகத்திலுள்ள தேவாலயங்களில் பெரும்பாலானவை ஒல்லாந்தர் காலத்தும் பிரித்தானியர் காலத்தவையுமாகவே உள்ளன.

ஐரோப்பியர்களது வருகையுடன் தீவகத்தில் தொழில் வளங்கள் பெருக்கப்பட்டன. ஊர்காவற்துறையிலே கப்பல் கட்டும் தொழில் நெடுங்காலமாக நிலைத்துள்ளது. காரைநகரின் மேற்குப்பகுதியிலுள்ள சூரியப்பிட்டியும் இவ்விடயமாகக் குறிப்பிடத்தக்கது. ஒல்லாந்தர் நெடுந்தீவிலே குதிரை வளர்த்தலை ஊக்கப்படுத்தினர். அராபியா, பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்து நல்ல இனக் குதிரைகளை இங்கு கொண்டுவந்து பெருக்கினர். பின்வந்த ஆங்கிலேயர்கள் இதில் கவனம் செலுத்தியபோதும் குதிரைகளின் தரம் குன்றியதாகவே இருந்தது. பிரித்தானிய இராணுவ அதிகாரி நோலன் நெடுந்தீவு நிர்வாகத்தை கவனித்தவேளை தனது தாய் நாடான அயர்லாந்தினைப் போன்று முருகைக்கற்களாலானவேலியினை அறிமுகப்படுத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இவ்வேலி முறை நெடுந்தீவிற்குரிய சிறப்பம்சமாகும். இத்தகையதொரு முறை புங்குடுதீவின் மேற்கே கல்லடைப்பில் முன்பு இருந்தபோதும். தற்காலத்தில் இல்லை என்பது நோக்கத்தக்கது.

போர்த்துக்கீசர் மற்றும் ஒல்லாந்தரது ஆவணங்கள் வாயிலாக தீவகத்தில் வாழ்ந்த மக்கள் தொகை, அவர்களின் தொழில், ஐரோப்பியரால் வழங்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கள், பொருள் வளங்கள் முதலியன பற்றியும், தீவகத்திலே விவசாயம், மந்தை வளர்த்தல், வியாபாரம், மீன் பிடித்தல் முதலிய தொழில்களும், சாயவேர், சிற்பி, சங்கு, மீன், மான், முயல், ஆடு, மாடு, எருமை, குதிரை, பனை, தென்னை மூலவளங்கள் பற்றிய செய்திகளை அறியக் கிடக்கின்றது. சாயவேர் தீவகத்தில் பல இடங்களில் கிடைத்தாலும் காரைநகரில் கிடைத்த சாயவேரே மிகச்சிறந்த ரகமானதாக கூறப்படுகிறது. திரு.முத்தையாப்பிள்ளை என்பவர் பருத்தித்தீவிலே பருத்தி உற்பத்தியைப் பெரிய அளவில் தொடக்கினார் (சிவசாமி,வி,1990,ப:13). ஆயினும் இலாபகரமின்மையால் அது கைவிடப்பட்டது. ஆனால் பருத்தி அடைப்பு, பருத்திவளவு, பருத்தித்தீவு என்ற பெயர் மட்டும் இன்று நிலைத்துள்ளது. நோலன் என்பவர் நெடுந்தீவில் சணல் உற்பத்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரித்தானியரது ஆட்சிக்காலத்திலே தீவக மக்களில் ஒரு சாரார் வர்த்தகம் செய்யும் நோக்குடன் தென்னிலங்கைக்கும் பிற நாடுகளுக்கும் சென்றதை காணக்கூடியதாக உள்ளது.

தீவகப்பிராந்தியம் நீண்டகால வரலாறும் தனித்துவமான பாரம்பரியமும் கொண்ட பிரதேசமாகவும் காணப்பட்டதனை மேற்கூறப்பட்ட விடயங்களிலிருந்து அறிந்துகொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு எத்தகையதொரு வரலாற்றுப் பாரம்பரியமுண்டோ அதே சமகால வரலாற்றுப் பாரம்பரியத்தினை தீவகமும் கொண்டுள்ளது. பல்லினப் பண்பாட்டை உள்வாங்கியதொரு பிராந்தியமாக தீவகம் இன்றும் மிளிர்கிறதென்பது குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்

1.சிவசாமி, வி, 1990, தீவகம் ஒரு வரலாற்று நோக்கு, செட்டியர் அச்சகம்

2.சதாசிவம் சேவியர், 1979, சப்த தீவுகள்.

3.மாணிக்கவாசகர், ச.,2006, வேலணை ஒரு வரலாற்று அறிமுகம், வேலணை வரலாற்று வெளியீட்டு சபை வேலணை.

4.பாலேந்திரன், ச, ஆ.,2002, காரைநகர் தொன்மையும் வன்மையும், பாலாவோரை அம்மன் பதிப்பகம் கொழும்பு.

5.சிவலிங்கராஜா,எஸ்.,2014, யாழ்ப்பாணப் பணபாடு மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தக இல்லம்.

6.சிற்றம்பலம், சி,க.,1192, யாழ்ப்பாண இராச்சியம், யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.

7.தம்பிஐயா தேவதாஸ், 2007, புங்குடுதீவு வாழ்வும், கொழும்பு – புங்குடுதீவு அபிவிருத்திச்சங்கம், கொழும்பு.

8.சிவநாயகமூர்த்தி, சு., 2003, நெடுந்தீவு மக்களும் வரலாறும், ரொறன்ரோ- கனடா.

9.Silva, K,M,de., 1981, History of Sri LanKa New Delhi Oxford University Press.

### புறாக்கூடு



**இது எமது பிரதேசத்தில் கரம்பன் கிழக்கில் அமைந்துள்ள பண்பாட்டு சின்னமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் சமூகமும்

திருமதி. மலர்விழி கனகசபை
உதவிக்கல்விப்பணிப்பாளர் (அழகியல்)
வலயக்கல்விஅலுவலகம்,வேலணை.

கலை மனிதனால் படைக்கப்படுகிறது. கலைகளின் அமைப்பு, பணி பற்றிய நுட்பங்களைக் கற்காமலே கலைஞர்கள் கலைகளைப் படைப்பதையும் சாதாரண மக்கள் அவற்றை சுவைப்பதையும் காணலாம். அதுவே கலையின் தனிச்சிறப்பு ஏனெனில் கலைகள் யாவும் மனித அனுபவ உணர்வுகளின் தொகுப்பாகும். மனித உழைப்பிலிருந்தே கலைகள் தோன்றுகின்றன. கலையைச் சுவைப்பவனும் மனிதனே.

மாலை வானத்தைப்பார்த்து நாம் மயங்கி நிற்கின்றோம். செக்கல் வானத்தின் அழகு எங்கள் உணர்வைத் தாக்குகின்றது. புதிய உணர்வு அதன் வெளிப்பாடு வார்த்தைகளாக வெளிப்படுகின்றது. ஆயினும் வானத்தில் கண்டு சுவைத்தது கலையல்ல. அது இயற்கையின் புறத்தோற்றம். செவ்வானத்தைப் பார்த்து ஏற்பட்ட உணர்வுகளைக் கவிதையாகப் பாடலாம் அல்லது வர்ண ஓவியமாகத் தீட்டலாம். கமராகொண்டு படம் பிடித்துப்போட்டோவாகவோ, திரைப்படமாகவே காட்டலாம், கட்டுரை எழுதலாம், புதுக்கவிதை வடிக்கலாம் மேற்கூறியவை எல்லாம் கலை வடிவங்கள். மனிதனால் படைக்கப்பட்டவை.

தான் அனுபவித்த கருத்துக்களைத் தன் எண்ணங்களை ஒரு மனிதன் மக்களிடையே பரப்ப பல்வேறு வழிகளில் முயல்கின்றான். அதற்குக் கலை வாய்ப்பான சாதனமாகும். ஆயினும் எல்லோருக்கும் இவ் வாய்ப்புக் கிடைப்பது. இல்லை கலைஞன் சமூகத்தின் அகநிலையை மாற்றுபவன். தான் அனுபவித்த அழகுணர்வில் எத்தனை விகிதத்தைக்கலைஞன் தன் படைப்பின் மூலம் வெளிப்படுத்திப் பிறரோடு பகிர்ந்து கொள்கிறான்? அதில் தான் அவனது வெற்றி உள்ளது. இது அவன் கலை வடிவத்தைக் கையாளும் சிறப்பை ஒட்டியது. தான் கண்டதை அப்படியே கலை வடிவம் மூலம் வழங்குவதில்லை. அத்தோடு கற்பனையையும் சேர்ந்து அழகுணர்வுடன் வழங்குகின்றான். அதற்கு மேலாக சில சமுதாய உண்மைகளை தெரிவிக்கிறானா? என்பதே கேள்வி அவ்வாறு தெரிவிப்பதற்கு அவனுக்கு உரிமை உண்டு.

இதில் முன் கூறிய கலைவடிவங்கள் மட்டுமல்ல கூத்து, நடனம், இசை, சிற்பம், சிறுகதை, நாவல், நாடகம் இவ்வாறாகக் கலை வடிவங்கள் பரந்து உள்ளன. இவற்றின் மூலமெல்லாம் மனிதன் தன் அனுபவ உணர்வுகளை வெளிப்படுத்துகிறான். என்று கொள்வோம் ஏன்? எதற்காக வெளிப்படுத்த முயல்கிறான் என்பது அடுத்த வினாவாகும். இதற்கு விடையாக கலைஞன் தன் ஆத்ம திருப்திக்காகப்படைக்கின்றான். என்பது ஒரு விடை. இது வெறும் பொய்மை ஏமாற்றமாகும். இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிக்கொள்ளும் கலைஞர்களும் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளும் சுயநலவாதிகள் இவர்கள். கலைகளைப் படைத்துவிட்டு தாமே கட்டி வைத்துவிடலாம்.

இதனை அதாவது தன் படைப்பை மற்றொருவருக்கு காட்ட முயலும் போதே கலைஞன் சமுதாயத்தோடு தொடர்பு கொள்ளத் தொடங்கி விட்டான் என்று கூறலாம். கலைஞர்கள், சிற்பிகள் என வர்ணிக்கப்படும் ஒரு சமுதாயத்தில் நிலவும் குறைகளைச்சுட்டிக்காட்டி அச்சமூகச் சீர்கேடுகளைக் கலைகளின் மூலம் தீர்த்து வைக்கக்கூடிய அதீத சக்தி படைத்தவர்கள்.

ஒரு பக்கத்தில் சமூக வளர்ச்சிக்குக்கலைகளும் மறுபக்கத்தில் கலை வளர்ச்சிக்கும் சமூகமும் மிக உன்னத பணியை மேற்கொண்டால் சமூகச்சீர்கேடு சமூக விளைவு மாற்றம் சிறப்பான எதிர்காலத்தை உடைய புதிய சமூகத்தை கட்டி எழுப்பலாம் என்பதை உறுதியாக்கலாம்.

கலைஞனின் உள்ளப் பரிமாணத்தை அறியும் சமூகம் சிறந்த கலைச்சிற்பிகளை உருவாக்கும்.

**புனித யாகப்பர் ஆலயம்**



**இது எமது பிரதேசத்தில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் தாக்கம் செலுத்தும் கவனிக்கப்பட வேண்டிய மூன்று சூழற்காரணிகள்

வி.இ.ஹஸ்ரன் றோய்
அதிபர்
யா/ தம்பாட்டி அ.த.க.வித்தியாலயம்.

இந்த நாட்டின் வருங்காலத் தலைவர்களாகவும், நாட்டில் புதிய தொரு சமூகத்தைக் கட்டி எழுப்புகின்ற தூண்களாகவும் விளங்குகின்ற மாணவர் சமுதாயம் மீது இன்றைய காலத்தில் பரவலாக எல்லோரின் மத்தியிலும் ஒரு அதிருப்தி நிலவுகின்ற தன்மையை நாம் காணலாம்.

யாழ் மாவட்டத்தைப்பொறுத்தவரை மாணவரின் கல்வி ஒழுக்கம். வீழ்ச்சியடைந்து வருகிறது. ஆசிரியர் மாணவரால் தாக்கப்பட்டார், மாணவர்கள் வகுப்புக்களை பகிஸ்கரித்தல், மது போதைவஸ்து போன்றவற்றின் பழக்கத்திற்கு அநேகமானோர் அடிமையாதல், பாலியல் துஸ்பிரயோகங்கள் போன்ற மாணவர் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களின் பட்டியல் பெருகிக் கொண்டே செல்வதை நாம் அவதானிக்கலாம்.

மாணவரின் கல்வி, ஒழுக்கம் என்பன குறைவடைந்து செல்வதற்கு பல்வேறு சூழல் காரணிகள் மாணவர்கள் மீது தாக்கம் செலுத்துவதை நாம் அவதானிக்கலாம். அந்தவகையிலே சமகாலத்தில் மிக முக்கியமான சூழல் காரணிகளாக வீட்டுச்சூழல், பாடசாலைச்சூழல், தனியார் கல்விச்சூழல் என்பன தான் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்கக் குறைவுக்கு மூல காரணமாய் அமைவது இம் மூன்று சூழல்களுமே என்றால் அது மறக்கப்பட முடியாதனவாய் அமைவதை அவதானிக்கலாம்.

மாணவர்களின் மிக முக்கிய கடமைக்கூறு கல்வி கற்பதும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதும் தான் இவ்வித நோக்கங்களுக்காகத்தான் அவர்களுக்கு கல்வி வழங்கப்படுகின்றது. ஆனாலும் இன்றைய காலத்தில் மாணவர்களின் பல்வேறு செயற்பாடுகளுக்கு பலவித சவால்கள் விடுக்கப்பட்டமையும் கவனிக்கப்பட வேண்டியது.

மாணவப்பருவம் பல்வேறு பகுதிகளைக் கொண்ட ஒரு சிக்கலான பருவம் என்பது உளவியலாளர்களின் கருத்து. அதுவும் மாணவப் பருவத்தின் பிற்பகுதியாக விளங்கும் கட்டிளமைப் பருவம் மாணவர் வாழ்வில் புயல் வீசும் பருவமாகவே கருதப்படுகின்றது. இதன் விளைவாக குறும்பு ஆராயும் திறன் வேடிக்கை, தற்றுணிவு, கவர்ச்சிகளை விரும்புதல், வக்கிர குரோத எண்ணங்கள் பலவற்றை இவர்கள் சமூகத்தில் பிரயோகிக்கும் போது அது அவர்களுடைய சுய ஒழுக்கத்தின் பால் பல எதிர்விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

அதேவேளை எமது சமூகத்தில் தோன்றியுள்ள நவீன விஞ்ஞான சாதனங்களின் துஸ்பிரயோகம், சினிமா கலாசாரம், சின்னத்திரைகளின் தாண்டவம் மற்றும் சமவயதற்ற சகபாடிகளின் இணைவு பாடசாலைகளுக்கும் தனியார் கல்வி நிலையங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் முளைத்திருக்கும் மதுச்சாலைகள் மாணவர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களைத் திருப்புவதாக உள்ளது.

அதிலும் மிக முக்கியமாக சமவயதுக் குழுக்கள் என்னும் வகுதியில் ஒழுங்கற்ற, ஏற்றத்தாழ்வுள்ள வயதுக் குழுக்கள் அடங்குவதும் அதே வேளை வேறுபட்ட சமவயதுக் குழுக்களின் ஒன்றிணைவு மூலம் மாணவர்களின் செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான ஒன்றிணைவு மாணவர்களின் ஒழுக்கத்தில் கூடிய செல்வாக்கை கொண்டுள்ளது, அந்த வகையில் மாணவரின் ஒழுக்கத்தில் அவர்களும் கூடிய பங்கெடுக்கின்றனர் என்பது புலனாகின்றது. மாணவர் ஒழுக்கத்தில் மாணவரின் சுயகட்டுப்பாட்டுப் பங்கு மிகப் பெரியது. ஆயினும் மாணவர்களால் மட்டும் அதை எய்திவிட முடியாது என்பது கவனிக்கப்பட வேண்டியது.

மாணவரின் நடத்தையில் கூடிய தாக்கத்தை விளைவிக்க கூடிய முக்கிய சூழலாய் அமைவதில் வீட்டுச்சுழலும் ஒன்றாகும். பிள்ளையின் வளர்ச்சியில் முக்கிய பங்கு அதன் குடும்பத்தினுடையது தான், குடும்பம் என்பது பிள்ளைகளின் அறிவு, ஒழுக்கம், வாழ்க்கை நடைமுறைகள் ஆளுமை போன்ற எண்ணற்ற விடயங்களை கற்பிக்கும் ஒரு கலாசாலை ஆகும்.

பெற்றோர்-பிள்ளைகள் தொடர்பின் உறுதித்தன்மை பிள்ளை மட்டில் அவர்களை பூரணமாக்குகின்றது. பெற்றோர் பிள்ளைகளுக்கான கல்வி ஏற்பாட்டை ஏற்ற வயதில் தெரிந்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது மனம்தொடர்பான கடமையாகும். அதே வேளை பிள்ளைகளின் கருத்துக்களுக்கும். உணர்வுகளுக்கும் மதிப்பளித்து அவர்களின் ஆசைகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய பெற்றோரினாலேயே ஒரு சிறந்த கல்வி நிலையை வீட்டுச் சூழலில் ஏற்படுத்த முடியும் என்பது வெளிப்படை.

ஆனால் இன்றைய சமூகத்திலே இருப்போரில் இவ்வாறான குறிக்கோள்கள் எந்தளவில் எட்டப்படுகின்றன என்பது விவாதத்திற்குரியது. பிள்ளைகளுக்கான கல்வி ஏற்பாட்டை மட்டும் செய்து விட்டு பல பெற்றோர் நிம்மதியடைந்து விடுகின்றனர். தம்மால் கல்விக்காக இடப்படும் மூலதனத்தின் பயன்பாடு, பயன்பாடு குறித்த விழிப்புணர்வு பெற்றோருக்கு எப்போதும், இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தற்போது எந்தளவு நடைமுறைச்சாத்தியப்படுகின்றது என்பது சிந்தனைக்குரியது.

குடும்பங்களில் தொலைக்காட்சிச்சாதனங்கள் இன்று தொல்லையை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்துவிட்டது. இதுவும் பெற்றோர்-பிள்ளைகளின் இடைத்தொடர்பில் விரிவை ஏற்படுத்தியுள்ளது. ஒழுக்கம் பற்றிய அறிவும், அறிவுரையும் பெற்றோரால் வழங்கப்படுவது பெரிதாகிவிட்டது. அதற்கும் குடும்பங்களின் மீது செல்வாக்கு செலுத்தும் பல காரணிகளின் விளைவு காரணமாக அமையலாம் ஆயினும் அவற்றைக் காரணம் காட்டி பெற்றோர், பொறுப்பிலிருந்து விலகிவிடாது செயற்படுதல் வேண்டும்.

இந்நிலைமை குடும்பத்துக்கு குடும்பம் வேறுபட்டிருப்பினும் பொதுவாக இன்று எம் சமுதாயத்தில் இது ஒர் பின்னடைவாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்விக்காக செலவிடும் முதலீட்டினை தாம் பெறுவதிலுள்ள இடர்பாடுகளைப்பற்றி பிள்ளைகள் முன் உணர வைப்பதில் பின் நிற்பது வழக்கமான ஒன்றாகி விட்டது. ஏனெனில் அது பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கும் என்பது அவர்களின் எண்ணமாகி விட்டது இந்நிலை மாற வேண்டும் மாணவர் தம் கல்விக்காக பெற்றோர், மூலதனத்தைப் பெறுவதிலுள்ள இடர்பாடுகளை உணர்ந்து கொள்வதன் மூலம் மாணவர் நடத்தையில் பல சாதக விளைவுகளை ஏற்படுத்த முடியும். அது ஒழுக்கத்திலும் உயர்வடைய வழிகளை ஏற்படுத்துகின்றது.

பாடசாலைச் சூழல் மாணவர்களின் கல்வியிலும் ஒழுக்கத்திலும் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. என அறியும் போது பாடசாலைச் சூழலில் அதிபர், ஆசிரியர், மாணவர் எனும் நிலை மட்டுமே காணப்படுவதினால் தான் மாணவர்களின் ஒழுக்க குறைபாடுக்கான முக்கிய காரணம் எனலாம். ஆகவே பெற்றோரும் பாடசாலைச்சூழலில் கூடியளவு பங்காற்ற வேண்டும். அதற்கு பாத்திரமான பெற்றோர் – ஆசிரியர் தொடர்பு வலியுறுத்தப்படுகின்றது. ஏனெனில் வீட்டுச்சூழல், பாடசாலைச்சூழல் என்பவற்றுக்கு இடையிலுள்ள இடைவெளியின் தன்மை தான் மாணவர்களின் ஒழுக்கம் சார்பான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

பெற்றோர் மீது ஆசிரியரும், ஆசிரியர் மீது பெற்றோரும் கொண்டுள்ள மாணவர் தொடர்பான நம்பிக்கையில் ஏற்படும் இடைவெளி மாணவர் ஒழுக்கக்குறைவுக்கு காரணமாக அமையலாம். எனவே கூடியளவு பெற்றோர் பாடசாலைகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். அல்லது பாடசாலைகளினால் பெற்றோர் இயன்றளவு உள்வாங்கப்பட வேண்டும்.

அதேவேளை பாடசாலையில் மாணவர் ஒழுக்காற்றை வளர்க்க வேண்டியவர்கள் ஆசிரியர்களே என்பதில் இரு கருத்துக்கள் இருக்க முடியாது. ஒரு பாடசாலை தான் மாணவர்களுக்கான பாலியல் கல்வி, சுயகட்டுப்பாடு, தற்காப்பு என்பவற்றை வலுவூட்டி மாணவர் ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஆனால் இன்று ஆசிரியர்கள் தவிர்க்க முடியாத வேலைப்பளுவை பாடசாலைகளில் சுமக்க நேரிடுகிறது என்றும் அதனால் மாணவர் ஒழுக்கத்தில் கூடிய அக்கறை கொள்ள முடிவதில்லை என்ற கருத்தும் தற்போது வலுப்பெற்று வருகிறது. அதனாலும் இவை மாணவர்களின் ஒழுக்கம் பற்றிய முக்கியத்துவத்தில் ஒரு ஆசிரியர்க்கு தடைக்கற்களாக நோக்கப்படலாகாது.

இன்று பாடசாலையில் மாணவர் ஒழுக்க மேம்பாட்டிற்கான திட்டமிட்ட செயற்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றன. எமது பாரம்பரியத்துக்கு அமைய ஒழுக்க முறைகளை புகட்டக் கூடிய வழிமுறைகள் பாடசாலைகளில் திட்டமிடப்படவில்லை. இன்றைய நவீன சீர்திருத்தங்களில் நிலை கூட உதட்டளவில் தான் பேசப்படுகிறதே தவிர செயற்பாட்டில் நடைபெறுவதாக இல்லை.

ஆயினும் சமயக்கல்வி என்பது ஓரளவு ஒழுக்க நடைமுறைகளை மாணவர் முன் கொண்டுவந்தாலும் அக்கல்வி கூட மதத்தின் மீது மாணவர்களின் பற்றுதலை அதிகரிக்க உதவுகிறதே தவிர மாணவர் ஒழுக்கம் தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க மாற்றத்தை அவர்களிடம் ஏற்படுத்தத் தவறிவிடுகின்றன.

தனியார் கல்வி நிலையங்கள் கூட மாணவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன. பல குடும்பங்களின் உறவுச் சங்கமம் ஒரு பாடசாலையானால் பல பாடசாலைகளின் ஒன்றிணைவு ஒரு தனியார் கல்வி நிறுவனம் என்றால் மிகையாகாது. இன்றைய காலங்களில் மாணவரின் கல்வி அடைவில் குறிப்பிடத்தக்களவு பங்காற்றுவதில் இந்நிறுவனங்கள் உதவுகின்றன. என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும் மாணவர்களின் பரீட்சை பெறுபேறுகளை பத்திரிகைகளில் பட்டியலிட்டுப் பரவசமடைந்து கொள்ளும், இத்தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் தற்போதைய ஒழுக்கக் குறைபாட்டில் தமக்கும் கணிசமான பங்குண்டு என்பதை மறந்து விடுகின்றன. எனவே மாணவர்களுக்கு கல்வி வழங்கல், நிதி வசூலிப்பு என்ற செயற்பாட்டில் இருந்து சற்று விலகி மாணவர் ஒழுக்க நடவடிக்கைகளிலும் கூடியளவு அக்கறை காட்ட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் மாணவர்களின் கல்வி, ஒழுக்கச் செயற்பாடுகளில் வீட்டுச்சூழல், பாடசாலைச்சூழல், தனியார் கல்விச்சூழல் என்பன தாக்கம் செலுத்துகின்றன. எனவே இச் சூழல்கள் சமாந்தரமாகவும் உறுதியாகவும் நோக்கப்பட்டு சீர்செய்யப்படவேண்டும். இவற்றில் எங்கு சிறு தவறு நேர்ந்தாலும் அது மாணவர்களைப் பாதிப்பதாகவே அமையும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டு செயலாற்ற முன்வரவேண்டும்.

## ஹமன்ஹில் கடற்கோட்டை



**இது எமது பிரதேசத்தில் அமைந்துள்ள**
**பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை ஓர் சிறப்பு பார்வை


இம்மானுவேல் ஜோன்சன்
கலாசார உத்தியோகத்தர்
ஊர்காவற்றுறை

**.அறிமுகம்** (Introduction)

"ஊராற் பெருத்தது ஊர்காவல்
யாழ்ப்பாணம் ஊர் பத்தி
சீராற் பெருத்தது சீதார மானிப்பாய் சேர் நவாலி
பேராற் பெரிய பெருத்ததும் கல்விப்பேருடனே
காராற் பெருத்ததும் கல்விப்பேருடனே
காராற்பெருத்தது காரைநகரெனக் கண்டிடுமே"

என புலவர் வாணவாஸ் செல்லையா அவர்களது பாடல்வரிகளில் ஒன்றாகும். ஊர்காவற்றுறை ஆள்புலம், இடப்பரப்பிலும் அளவிட முடியாததொன்றாகும். ஊர்காவற்றுறை ஏனைய தீவுகளின் கேந்திர முக்கியத்துவம் பெற்ற இடமாக விளங்கிறது. நெடுந்தீவு,வேலணை, காரைநகர் போன்ற பிரதேசங்களுக்கான தேர்தல்தொகுதியாகவும் பொலிஸ், மற்றும் நீதிமன்றத்தின் எல்லைப்பரப்பாகவும் ஊர்காவற்றுறையே விளங்கின்றது. இங்கு உயர்குடிமக்கள், பிரபல்யமான கல்விமான்களை பெற்றெடுத்ததும் இம்மண்ணேயாகும்.

"ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனை
உற்ற நற் புளியங்கூடல் நாரந்தனை
பேர்மிகு சரவணை, வேலணை, மண்கும்பான்.
பெருமைசொல் மண்டைதீவல்லைப்பிட்டி
சேர்ந்தே லைடன் தீவெனும் நிலமாம்
சீர்மிக்கான் பூதம்பி தென்மன்னன்
போர் அரண் கடல்கோட்டைகள் இன்றும்
பொலிவுடன் விளங்குதல் புகந்திடல் இனிது
நேர்மையும் சிறப்பும் நிறைந்ததாம்
லைடன் நிலத்தின் பெருமை நினைப்பதும் நிறை வாம்" என தீவகத்தின் பெருமையினை இப்பாடல் எடுத்தியம்புகிறது.




ஊர்காவற்றுறை பிரதேசம்

அனலைதீவு தெற்கு (J/37), அனலைதீவு வடக்கு (J/38), எழுவைதீவு (J/39), ஊர்காவற்றுறை (J/49), பருத்தியடைப்பு (J/50), கரம்பன் (J/51), கரம்பன் கிழக்கு (J/52), கரம்பன் தென்கிழக்கு (J/53), கரம்பன் மேற்கு (J/54), நாரந்தனை வடக்கு (J/55), நாரந்தனை வடமேற்கு (J/56), நாரந்தனை (J/57), நாரந்தனை தெற்கு (J/58), சுருவில் (J/59), புளியங்கூடல் (J/60) ஆகிய 15 கிராம அலுவலர் பிரிவுகளையும் 10219



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகையினையும் கொண்டமைந்த பிரதே சமாகும்.

ஊர்காவற்றுறை

சமூகம் பண்பாட்டுப்பாரம்பரியங்களை கொண்டமைந்ததும் அந்நிய காலனித்துவம் பின்னர் அண்டைய நவகாலனித்துவம் தொடர்ந்து பண்டைய சோழவாரிசு கரிகாலன் கண்டும் இன்றைய ஜனநாயக ஆட்சியின் மூலமாக அபிவிருத்திப்பணிகளை அடைந்து வருகின்றது.

இலங்கையின்பண்டைக்காலத்தில் வாழ்ந்த நாகர், இயக்கர் என்ற பூர்வீக இனத்தவரும் இந்நாட்டை காலத்திற்கு காலம் தரிசித்த யாத்திரிகர்களும் இந்நாட்டை வென்ற சோழர், பாண்டியர், நாயக்கர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலியோரும் தற்போது வாழ்ந்து வரும் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர், முதலியோரும் தத்தமது மொழிக்கேற்றவாறு சுமார் 130ற்கும் மேலாகுமென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். எல்லம், ஈழம், இலங்கை, இரத்தினத்தீபம், மும்முடிச்சோழமண்டலம், சிங்கள துவிபம், தாமிரபரணி, பாலாசிமுண்டு, சாலிக, முத்துச்சலாபதீபம், செரண்டிப், சிலோன், நாகதீவு, நயினாதீவு, இயக்கதீவு, மணிபல்லவம், குபேரபட்டினம், ஓச்சதீவம், வரதுவிபம், மததுவீபம், தேவலங்கா, ஸ்ரீலங்கா எனும் பெயர்கள் குறிப்பிடத்தக்கன.

இந்து சமுத்திரத்தின் முத்து(Pearl) என மேலைத்தேசத்தவர்களால் வர்ணிக்கப்படுவது இலங்கைத்தீவு. வட இலங்கையில் சப்த தீவுகளின் திலகமாகவும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் ஊர்காவற்றுறை திகழ்கின்றது. நெதர்லாந்தில் அநேக தீவுக்கூட்டங்கள் உண்டு. எனவே டச்சுக்காரர்கள் தீவுப்பகுதியை நேசித்தார்கள். இதற்கு டச்சுக்காரர் தங்களது மொழியில் இட்ட பெயர் (Kayts) என்று அழைத்தார்கள். வேலணைத்தீவை (துண்ணித்தீவு) லைடன்(Leyden) எனவும் காரைநகரை அம்ஸ்ரடாம்(Amsterdam) என்றும் புங்குடுதீவை மிடில்போர்க் (Middleburg) என்றும் நயினாதீவு அல்லது நாகதீவு (மணிபல்லவம்) ஹார்லெம் (Haarlem) என்றும் நெடுந்தீவை டெல்ப்ற் (Delft) என்றும் அழைத்தனர். அம்ஸ்ரடாம் நெதர்லாந்து தேசத்தின் தலைநகராகும். லைடன் அந்நாட்டிலுள்ள ஒரு நகரத்தின் பெயரா-கும். ஹார்லெம் அந்நாட்டின் பிரபல்யமான நகரின் பெயராகும். இத்தீவுகளுக்கெல்லாம் மிகப்பெரிய தீவு வேலணைத்தீவாகும். ஊறாத்துறை தீவுப்பகுதிகளுக்கெல்லாம் தலைநகர் போல் திகழ்வதனால் அதன் பெயர் பின்னர் ஊர்காவற்றுறை என மாறியது. Kayts என்பதற்கு "காவற்றுறை" என்பது பொருள்படும்.

## இயற்கைத்துறைமுகம்
(Natural Harbour)

இலங்கையில் திருமலைக்கு அடுத்ததாக உள்ள சிறந்த இயற்கைத்துறைமுகம் என பண்டைக்காலம் முதல் சர்வதேச ரீதியில் ஊர்காவற்றுறை துறைமுகம் புகழ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை ஆண்டு வந்தனர். அக்காலத்தில் போர்த்துக்கீசர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோரது ஆட்சியின் போதும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை ஊர்காவற்றுறை துறைமுகமாக விளங்கியது. பெரும்புயல் காற்றடித்தாலும் கப்பல்கள் இத்துறைமுகத்தில் பாதுகாப்பாக நிற்க முடியும். எனவே தான் இது இயற்கைத்துறைமுகமென அழைக்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் 1942ம் ஆண்டு வரை பாய்மரக்கப்பல்கள் திருத்துவதற்காக இத்துறைமுகத்தில் நங்கூரமிட்டு தரித்து நின்றன. அக்காலத்தில் கப்பல்கள் திருத்தும் மற்றும் கப்பல்கள் கட்டும் துறைமுகமாககவும் இது பயன்படுத்தப்பட்டது. அராபியர்கள், இந்தியர்கள், சீனர்கள், தங்கள் பிரயாணங்களின் போது பாதுகாப்பிற்காக இத்துறைமுகத்தில் நங்கூரமிட்டு தரித்து நின்று செல்வார்கள், அதனால் ஊர்காவற்றுறை ஒரு பாதுகாப்பான இயற்கைத்துறைமுகமாகவும் சுறுசுறுப்பான செழிப்பு மிக்க துறைமுகமாகவும் பொலிவுடன் திகழ்ந்தது. சுங்கத்திணைக்களமும் சிறப்பாக செயற்பட்டு நல்ல வருமானத்தை ஈட்டியது.

எங்களது ஊர்காவற்றுறையைப் பற்றிய அருமையான செய்திகளை சிலர் சொல்லக் கேட்டு மகிழ்ச்சி அடையக்கூடியதாக உள்ளது. சான்றுகளில்லாத கதைகள் வெறும் புராணக்கதைகளாகவே கருதப்பட்டாலும் அவை எங்கள் மனதிற்கு மகிழ்ச்சியூட்டக்கூடியவையே அதிலொன்றை நூல்களில் கண்டபோது ஆச்சரியமாக இருந்தது. பண்டைய வரலாற்று நூல்களில் யாழ்ப்பாண பிரதேசத்தில் அமைந்துள்ள ஊர்காவற்றுறைத்துறைமுகம் கப்பல்களின் சுவர்க்கம் எனவும் சாலமோன் மன்னனுடைய காலத்தில் இத்துறைமுகத்தினூடாக மயில்களும், யானைத்தந்தங்களும் கூட ஏற்றுமதி செய்யப்பட்டதென அந்நாட்களில் யாத்திரை செய்த அறிஞர்கள் கூறியுள்ளதாக நூல்களில் அறியக்கூடியதாக உள்ளது வடஇலங்கையில் ஊர்காவற்றுறையைத் தவிர ஏனைய துறைமுகங்கள் எல்லாக்காலங்களிலும் பயன்படுத்தக் கூடியவையல்ல ஊர்காவற்றுறைத்துறைமுகம் எல்லா பருவகாலங்களுக்கும் ஈடுகொடுக்க கூடியதாக இருந்தபடியால் இத்துறைமுகம் எப்போதும் சுறுசுறுப்பாகவே இயங்கிக்கொண்டிருந்தது. ஊர்காவற்றுறைக்கடலின் முக்கியத்துவத்தை உணர்ந்த இலங்கை அரசு 1957ல் காரைநகரில் ஒரு கடற்படைத்தளத்தை அமைத்தது. அன்று எம்மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளித்த இத்தளம் போரின் போது பெரும் அச்சத்தையும் அழிவையும் ஏற்படுத்தி விட்டது.

## ஹமன்ஹில் கடற்கோட்டை
## (Hamenhil Fort)

பார்க்கப் பரவசம் ஊட்டிக்கொண்டு பரந்த கடலின் நடுவே நிற்கும்
பறங்கியரால் கட்டப்பட்ட இக்கோட்டை, பழைய கால வரலாற்றின்
சின்னமாக இன்றும் ஊர்காவற்றுறையில் நிமிர்ந்து நிற்கின்றது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மண்ணில் ஆய்வுக்குட்படுத்தப்படவேண்டிய இடங்களில் கோட்டைகளும் அடங்கும். அவற்றுள் ஒன்று ஊர்காவற்றுறைக்கும் காரைநகர் நீலங்காடு வெடியரசன் மாளிகைக்கும் கால்வாயின் மறுகரையில் கடலிலுள்ள கற்பார்திடலில் அமைந்துள்ளது இக்கோட்டையின் துறைமுகப்பாலம் சிறிய படகுகள் அணைப்பதற்குச் சுலப-மானது. நுழைவாயில் கிழக்குத்திசையில் உள்ளது. கோட்டையின் உள்ளே மூன்று அறைகள், வெளிச்சக்கோபுரம் என்பன உள்ளன. இரவில் சிவப்பு நிற வெளிச்சத்தை நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவுப் பகுதிகளில் இருந்து காணக்கூடியதாக இருக்கும். பூவரசு மரங்களும் கோட்டைக்குள் பச்சைப்பசலேன்று காட்சியளிக்கும். இக்கோட்டையை 1580ல் போர்த்துக்கேய வீரனான அமிநார் டெமன்சீல் என்பவனே கட்டுவித்தவன். முப்பது போர் வீரர்கள் தங்கக்கூடிய போட்டலிசா (Fortaleza) என போர்த்துக்கேயரால் அழைக்கப்பட்டது இக்கோட்டை 1658ல் ஓல்லாந்தர் வசம் வீழ்ச்சியடைந்தது. ஓல்லாந்தர் முற்றுகையிட்டு இக்கோட்டையைக் கைப்பற்றிய போது கோட்டைக்குள்ளிருந்த போர்த்துக்கேய போர்வீரர்கள் 15 நாட்கள் தண்ணீரின்றி நாவரண்டு வெள்ளைக்கொடி காட்டி சமாதா-னம் செய்து கொண்டனர். கப்பித்தான் ஜெரோனிமோ தே பாய்வு (Jeronimo de Paviu) தலைமையில் வெள்ளைக்கொடி ஏந்தி சமாதானம் செய்து கொண்ட போர் வீரர்களுக்கு ஒல்லாந்தரால் மன்னிப்பு அளிக்கப்பட்டு அனைவரும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். பின்பு 1658ல் போர்த்துக்கீசரிடம் கைப்பற்றி இதனை புனரமைத்து ஹமன்ஹில் (Hammenhiel) என அழைத்தார்கள். டச்சுக்காரர்களுக்காக டொன் ஸ்ரீபன் பூதத்தம்பி முதலியார் இக்கோட்டையைக் கட்டிக்கொடுத்ததினால் பூதத்தம்பி கோட்டை என்றும் இது அழைக்கப்பட்டு வந்தது. இக்கடற்கோட்டை இன்றும் கடலுக்குள் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. தற்போதைய கோட்டை ஓல்லாந்தர் கால கட்டிட அமைப்பிலே கட்டப்பட்டுள்ளது. இக்கோட்டையின் ஒரு பகுதி ஊருண்டியில் அமைந்துள்ளது.

1945-1946ம் ஆண்டு காலப்பகுதியில் பெரிய அம்மை மற்றும் பொக்குளிப்பான் நோய்களால் பீடிக்கப்பட்டவர்களை இந்தக் கோட்டைக்குள்ளேயே பராமரிக்கப்பட்டனர். 1971ல் இலங்கையில் றோகண விஜயவீரா தலைமையில் சேகுவேரா இயக்கம் நடத்திய புரட்சியில் பிடிபட்ட அவரது தோழர்கள் சிறி-மாவோ அரசாங்கத்தினால் இங்கு தான் சிறை வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் இக்கோட்டை ஊர்காவற்றுறை து/49 கிராம அலுவலர் பிரிவில் அமையப்பெற்றதுடன் இது தொல்லியல் பொருளாராய்ச்சி திணைக்களத்தினால் இலங்கைசனநாயக சோசலிசக்குடியரசின் வர்த்தமானியில் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று இதனை இலங்கைப்பாதுகாப்பு படையினர் உல்லாசப்பயணிகளின் விடுதியாக பயன்படுத்துகின்றனர்.


## தமிழ் பிரதேசம் பற்றிய தொல்லியல் ஆய்வு

இலங்கைத் தமிழருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு குறையாத நீண்டகால வரலாறு உண்டு. இதை அடையாளம்காணும்தொடக்ககாலச் சான்றாக கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கும் பிராமிக்கல்வெட்டுகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம். இக்கால கட்டத்திலிருந்தே அரச உருவாக்கம் ஏற்பட்டதற்கான சான்றுகள் கல்வெட்டுக்களிலும் பாளி இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. இதில் தமிழர்கள் சிற்றரசர்களாக, குறுநிலை மன்னர்களாக, அரச நிலையடையாத ஆதிக்குழுக்களாக (tribes) இலங்கையின் பல பாகங்களில் இருந்துள்ளனர். அக்கால கட்டத்திலிருந்தே இவர்களில் சிலர் பெயர் பொறித்த நாணயங்களை வெளியிட்டு வந்ததற்கு




தமிழ் அரசு கால முக்கிய இடங்கள்

. ஊகாவற்துறை, 2. யாழ்ப்பாணம், 3. கல்முனை, 4. மண்ணித்தலை, . பூநகரி, 6. மட்டுவில்நாடு, 7. கோணாவில், 8. நாகமுனை, 9. புலச்சேரி, 0. ஈழஊர், 11. வீரபாண்டியன் முனை, 12. காக்கை தீவு, 13. மண்ணியாறு, 4. தென்னியங்குளம், 15. இலப்பைக்கடவை, 16. சோழமண்டலம், 7. குருந்தன்குளம், 18. பனங்காமம், 19. மன்னார், 20. மாதோட்டம், 1. வலிகாமம், 22. பொம்பரிப்பு, 23. நல்லூர், 24. குடமுறுட்டியாறு, 5. தியாகம், 26. பல்லவராயன், 27. கோணாவில், 28. செழியாவில், 9. சோழியகுளம், 30. அம்பலப்பெருள், 31. முல்லைத் தீவு, 32. எருப்பொத் தானை, 33. வவுனியா, 34. பதவியா, 35. அநுராதபுரம், 36. நிலாவெளி, கந்தளாய்.

அண்மைக்காலங்களில் தென்னிலங்கையிலும் (அக்குறுகொட), வடஇலங்கையிலும் (கந்தரோடை) சான்றுகள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் நல்லூரை தலைநகராகக் கொண்ட அரசு ஒன்று தோன்று முன்னர் இலங்கையில் இரு அரசுகள் இருந்தது பற்றி பாளி இலக்கியமும், பாண்டியக்கல்வெட்டுகளும் கூறுகின்றன. இதற்கு கலிங்கமாகனது ஆட்சி இலங்கையில் ஏற்பட்டமை காரணம் எனக்கூறப்படுகின்றது. கலிங்கமாகன் 1215இல் 24000 தமிழ் சோழ, கேரளப்படை வீரர்களின் உதவியோடு படையெடுத்து வந்து ஏற்கனவே பலவீனப்பட்டிருந்த பொலநறுவை அரசைக் கைப்பற்றி துணையரசனாகிய ஜெயபாகுவுடன் சேர்ந்து நீண்டகாலம் இராசரட்டையில் ஆட்சிபுரிந்தான் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இவன் தமிழர்களுக்கு சார்பாகவும் சிங்கள மக்களுக்கு எதிராகவும் நடந்து கொண்டதால் இவன் ஆட்சியில் வெறுப்புற்ற சிங்கள மக்கள் தமது 250 ஆண்டுகாலத் தலைநகரான பொலநறுவையைக் கைவிட்டு தெற்கு நோக்கிப் புலம்பெயர்ந்தனர். இதன் விளைவாக புதிய சிங்கள இராசதானியாக தம்பதேனியாவும். பின்னர் யாப்பகூவ, குருநாகல், கம்பளை, கோட்டை என்னும் இராசதானிகளும் காலத்திற்கு காலம் தோன்றின.

சிங்கள இராசதானிகள் தெற்கு நோக்கி நகர்ந்தது போலக் கலிங்கமாகனின் அரச தலைநகரும் காலப்போக்கில் வடக்கிற்குக் மாற்றப்பட்டதாகக் கொள்வதே பொருத்தமாகத் தெரிகிறது. 1247ல் சாவகன் ஒரு அரசின் மன்னனாக இருந்தே தம்பதேனிய அரசின் மீது படையெடுத்தான் என இந்திரபாலா கூறுகின்றார். அவன் ஆட்சி செய்த அரசையே பாண்டியர் வெற்றி கொண்டு அவன் மைந்தனிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்ததாகப் பாண்டியரின் குடுமியாமலைச் சாசனம் கூறுகின்றது. இவற்றின் அடிப்படையில் கலிங்கமாகன் 1215க்கும் 1247க்கும் இடைப்பட்ட காலத்தில் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்தான் எனக் கூறலாம். சூளவம்சம் கூறுவது போல இவன் 21 ஆண்டுகள் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்தான் எனக் கூறலாம். இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவிருப்பின் இவன் வட இலங்கையில் 1236லிருந்து 9ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் எனக்கூறலாம். அக்காலத்தில் சிங்கள மன்னர்கள் வட இலங்கை மீது படையெடுப்பதை தடுக்குமுகமாக பொலநறுவையில் இவன் படைகள் நிலைகொண்டிருக்கலாம். பதின்மூன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கலிங்கமாகன் படைகள் இருந்ததாக கூறும் பாளி நூல்கள் அவற்றுள் ஓரிரு இடங்களைத் தவிர மற்றையவை வடஇலங்கையில் இருந்தாகத் கூறியிருப்பதை கவனத்தில் கொள்ளலாம். இதனால் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகரமாகக் கொண்ட அரசு தோன்ற முன் யாழ்ப்பாணத்துக்கு வெளியே ஒரு தமிழரசு இருந்ததெனக் கூற முடியும். அவ்வரசு எங்கே இருந்தது? எப்போது தோன்றியது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? என்பன தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் முடிவு காணப்படவேண்டியவையாகும். ஆயினும் அவை தொடர்பாக இதுவரை கிடைத்த சில சான்றுகளை இங்கே குறிப்பிடலாம்.

வட இலங்கையில் கலிங்கமாகன் அரசு எங்கிருந்ததென்பதற்கு கல்வெட்டு மற்றும் சான்றுகள் இதுவரை கிடைக்காவிட்டாலும் அவனது படைகள். கோட்டைகள் இருந்த இடங்களைப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. சூளவம்சத்தில் அவ்விடங்கள் புலத்திநகர (PulatthiNagara) (பொலநறுவை), கொட்டசார (kotthasara) (திருகோணமலையில் உள்ள கொட்டியாரம்), ஹங்கதலக (Gangalaka) (கந்தளாய்), காகலய (Kakalaya), பதிமாவட்டம் (Padi District), (பதவியா), குருந்தி(Kurundi), மானாமத்த (Manamattha), மகாதித்த (Mahatittha), மன்னார (Mannara) (மன்னார்), புலச்சேரி (Pulacceri), கோனா மாவட்டம் (Gona distric), மதுபதபதித்த (Madhupatittha) (இலுப்பைக்கடவை), சூறதித்த (Suratittha) (ஊர்காவற்றுறை), வலிகாம (Valikama) (வலிகாமம்) வேறும் சில இடங்கள் எனக்கூறுகின்றது. பூஜவலிய என்ற நூலில் மேற்குறிப்பிட்ட இடங்களோடு தமிழ்பட்டின (தமிழ்ப்பட்டினம்) என்ற இடமும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டவற்றுள் முதலாவது இடத்தை தவிர ஏனையவை திருகோணமலை மாவட்டத்திலும் வட இலங்கையிலும் உள்ள இடங்கள் என்பது தெரிகிறது. இவற்றுள் பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. வேறு ஒரு சில இடங்கள் அடையாளம் காணப்படவேண்டியுள்ளன. அடையாளம் காணப்படாதவற்றுள் காகலய என்ற இடமும் ஒன்றாகும். பாளி மொழியில் காகலா என்பது காகங்கள் தங்கும் இடம் என்ற கருத்தில் கூறப்பட்டுள்ளது.

விஜயபாகுவுக்குப் பின்கலிங்கமாகன் படையெடுப்புக்கு முன் வடஇலங்கையுடன் பொலநறுவை அரசிற்கிருந்த அரசியல் உறவுகள் பற்றிய சான்றுகள் எவையும் பாளி இலக்கியங்களில் காணப்படவில்லை. ஆனால் முதலாம் பராக்கிரமபாகு கால தமிழ்கல்வெட்டொன்று நயினாதீவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு அயல்நாட்டு வர்த்தகர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சில வசதிகள், சுங்க வரிகள் பற்றியும் கூறுகின்றது.

இதே காலப்பகுதியில் சோழ நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது படையெடுக்க இவனது படைகள் வட இலங்கையில் நிலைகொண்டிருந்ததாகவும் அப்படைகளை சோழப்படைகள் வெற்றிகொண்டு அவ்விடங்களைக் கைப்பற்றியதாகவும் இரண்டாம் இராசாதிராசச்சோழன் காலப் பல்லவராயன் பேட்டைக் கல்வெட்டு கூறுகிறது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு வடஇலங்கை பொலநறுவை அரசின் நிர்வாகக் கட்டுக்கோப்புக்குள் அடங்கியிருந்ததெனக் கூறப்படுகிறது. இவை நீண்ட கால வரலாற்றின் தற்காலிகமாக நிகழ்ந்திருக்க கூடிய சம்பவங்கள். அவற்றை அடிப்படையாகக்கொண்டு ஒரு அரசின் ஆதிக்கத்திற்குள் இன்னொரு அரசின் பிராந்தியம் நிரந்தரமாக கட்டுண்டிருந்ததென்ற முடிவுக்கு வர முடியாது.

தமிழ்ப்பிரதேசங்கள் பற்றி தொல்லியல் ஆராய்ச்சியில ஈடுபட்ட பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் ஹமன்கீல் கோட்டையில் கண்டெடுத்த ஒரு கல்வெட்டில் முதலாம் இராசேந்திர சோழன் இலங்கையை கி.பி.1014ல் கைப்பற்றி அதற்கு மும்முடிச்சோழ மண்டலம் எனப்பெயரிட்டதையும் இலங்கையை சோழப்பேரரசின் ஒரு மாகாணமாக சேர்த்துக்கொள்ளப்பட்டதையும் அக்கல்வெட்டில் அறியக்கூடியதாக உள்ளதாக தெரிவிக்கின்றனர். அந்த கல்வெட்டிலுள்ள எழுத்துக்கள் பின்வருமாறு "ஸவஸ்தி ஸ்ரீ ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்து பாண்டியன் குலதானமாக வைத்த முடியும் ஈழத்தரையர் தம்முடியும் ஆங்கவன் தேவி முடியும் பெண்டிர் பண்டாரமும் பிடிச்சுக் கொடுபோன அதி-காரத் தண்ட நாயகன் (கா.இந்திரபாலா1964:-41) இக்கல்வெட்டு இப்பிரதேசத்தில் அமைந்திருப்பது சோழப்பேரரசர் இராசேந்திர சோழனது எண்ணத்திலும் ஊர்காவற்றுறைப்பகுதியின் முக்கியத்துவம் இடம் பெற்றிருந்ததைக் காட்டுகிறது.

## ஊருண்டி கோட்டை (Urundi Fort)

போர்த்துக்கேயர் Caes என அழைத்தனர் அங்கு கடற்கோட்டையை அமைக்குமுன் ஊர்காவற்றுறை மேற்கில் பருத்தியடைப்புக்கும் ஊருண்டிக்குமிடையில் ஒரு ஜரிக்கோட்டையினை அமைத்திருந்தனர். அதற்கு போட் ஏய்றி(Fort eyrie) என்று பெயர் அதன் அழிபாடுகளும் அதனுடன் சேர்ந்த சிற்றாலயமும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. Caes என்பது டச்சுமொழியில் Kayts என அழைக்கப்பட்டது. இது ஒல்லாந்தில் உள்ள ஊராகும்.

ஆதிக்குடியேற்றப்பகுதியான ஊருண்டி



துறைமுகத்தை மையமாக கொண்டு இப்பகுதி செம்மண் கலந்த பூமியாகவும் மக்கள் செறிந்து காணப்பட்டமையாலும் இக்கோட்டையினை போர்த்துக்கேயர் அப்பகுதியில் அமைத்தனர். இது பழங்கோட்டை என்ற பெயரில் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. நயினாதீவில் கி.பி.1620 - 1624ற்கும் இடைப்பட்ட காலத்தில் அங்குகட்டப்பட்டநாகம்மைஆலயத்தினை இடித்து அதன் கற்களைக்கொண்டு ஊர்காவற்றுறை சங்குமால் அருகில் இது கட்டப்பட்டது. 1950 காலத்தில் கோட்டையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்(Chapel), கூரை(Dome) நல்ல நிலையில் இருந்தது. இங்கு பிரபுக்கள் வாழும் மனை அல்லது காசில் (Castle) எனக்குறிப்பிடுவது தகுதியாகும். இக்கோட்டையில் இயேசு சிலுவையில் மரித்த காட்சியினை யாழ்.திருமறைக்கலாமன்றம் வீடியோ படமாக்கியது. இது ஜெருசலேம் கல்வாரி மலையினை ஒத்ததாக காட்சியளிக்கிறது.

இன்று எமது செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் துப்பரவு செய்யப்பட்டு தொல்லியல் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது. இது பருத்தியடைப்பு ஜே/50 கிராம அலுவலர் பிரிவில் அமையப்பெற்றுள்ளது.

## கடலை ஆண்ட தமிழன்

ஊர்காவற்றுறைதீவுப்பகுதி மக்கள் மன்னார் வேத சாட்சிகள் மரபில் வந்தவர்களின் வழித்தோன்றல்களே என்ற பெருமைக்குரியவர்கள். இவர்கள் சாட்டிப்பகுதியில் குடியேறி வேளான் தொழில் செய்து கமம் புலன்களுடன், காணி பூமிகளுடன் செல்வச்செழிப்போடு இருந்தார்கள். இவர்கள் கப்பலோட்டும் பரம்பரையில் கைதேர்ந்தவர்கள் (கமண்டலர்) என அழைக்கப்பெற்றனர். இவர்களின் முன்னோருக்குச் சொந்தமான காணிகள் நாரந்தனை வரை செறிந்திருந்தமைக்கு பண்டைய தோம்புகள் சான்று பகருகின்றன. தொழில்வாய்ப்பை முன்னிட்டு புலம்பெயர்ந்து காவலூரின் உதயதிசையில் குடியமர்ந்தனர் என அறியக்கிடக்கிறது. இத்துறைமுகம் நகரமாக உருப்பெற்று கடல் வணிகம் விருத்தியடையவே மக்களின் கவனம் கப்பல்தொழிலால் ஈர்க்கப்பட்டது. அதன் காரணமாக சிறந்த கப்பல் தளபதிகளாகவும் (Captains) கப்பல் செலுத்தும் மாலுமிகளாகவும் (Seamen) விளங்குகின்றார்கள். அரச கப்பல் கூட்டுத்தாபனம், தனியார் கப்பல் கம்பனிகள். இலங்கை கடற்படை என்பவற்றில் கப்பல் தொழில் நிபுணர்களாக விளங்கியுள்ளனர். துறைமுக ஆணைக்குழுவில் காலஞ்சென்ற M.P ராஜமுத்து அவர்கள் முதல் (Senior Master of Tugs) சுதேச இழுவைக்கப்பல் அதிகாரியாக நியமனம் பெற்றதனை இங்கு குறிப்பிடலாம்.

இவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடெங்கும் தம் பாரிய பாய்க்கப்பல்களைத் திரைகடல் ஓட்டிச் சென்றாலும் உரிய காலங்களில் ஊர்தேடி வந்து விடுவர். இவர்கள் கப்பல் ஓட்டுவதில் மட்டுமன்றி கப்பல் கட்டுவதிலும் கைதேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். காவலூரில் அக்காலத்தில் கப்பல் தொழிலும் பழுதுபட்ட கப்பல்களைத் தரையேற்றி பழுது பார்த்து அவற்றை இலாவகமாக கடலேற்றுவதிலும் கைதேர்ந்த பலர் இருந்தனர். இப்படிப்பட்ட விற்பன்னர்களில் வெள்ளை அதிகாரிகளாலேயே பாராட்டப்பட்டவர் பக்காமரியான் எனப்படுபவர். இவரது திறமைகளைப்பற்றிப் பல கதைகளுண்டு. இவரது தந்தையின் கைவண்ணத்தில் அன்னபூரணி போல பல கப்பல்களும், வத்தைகளும் உருவானதாக முன்னோர்கள் கூறுவர். இங்குள்ள கப்பலோட்டிகள் செலுத்திய கப்பல்கள் பெரும்பாலானவை சாந்தமரியா, சாந்தலேனா போன்ற கிறிஸ்தவப் பெயர்களுடனேயே தென்கிழக்கு நாடுகளெங்கும் ஓட்டித்திரிந்தாக அறியக்கூடியதாகவுள்ளது.

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கு இணங்க சிலுவைதாஸ் அவர்கள் வணிகக்கப்பல் தொழில் வாய்ப்புப்பெற்று கப்பல் ஓட்டிய தமிழனாக அங்கு தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையினால் கப்பலின் கப்டனாகி தான் சேர்ந்த காவலூர் மக்களுக்கு மட்டுமல்லாமல் அயல்கிராமங்களாகிய கரம்பொன், சுருவில். வேலணை, சரவணை, வங்களாவடி, மற்றும் இளவாலை, ஏழாலை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, நீர்கொழும்பு, கொழும்பு, என்று பல இடங்களில் வாழ்ந்த இளைஞர்களுக்கும் கப்பலில் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொடுத்ததின் நிமித்தம் கப்பல் சிலுவைதாஸ் என்ற பெயருடன் பல குடும்பங்கள் வளம் பெற்று வாழ உதவியது மட்டுமல்லாமல் இவர்களில் பலர் இன்று வெளி நாடுகளில் தங்குவதற்கு வழியாகவும் அமைந்தது. காவலூரைச் சேர்ந்த மக்கள் கப்பல் ஓட்டும் தொழிலில் பிரசித்திபெற்றவர்கள். பாய்மரக்கப்பலில் ரங்கூன், விசாகப்பட்டினம், கொச்சின். காக்கைநாடு, தூத்துக்குடி, போன்ற பல்வேறு இடங்களுக்கு தம் முன்னோர் சென்று வந்ததை பெரியவர்கள் கதை கதையாகச் சொல்வார்கள். இற்றைக்கு 50ஆண்டுகளுக்கு முன்னால் கூட டிங்கி என அழைக்கப்படும் சிறிய பாய்க்கப்பல்கள் பல பொருட்களை இந்தியாவில் இருந்து காவலூர் ஊடாக இலங்கைக்கு ஏற்றி வந்து கொண்டிருந்தன. ஒரு காலத்தில் காவலூர் சுங்கப்பகுதி இலங்கையின் முதலாவது அதிக வருமானம் தரும் துறைமுகமாக இருந்தது என்றால் அதன் சிறப்பை ஊகித்தறியலாம். காரைநகர் பகுதிக்கான படகுச்சேவை காவலூர் ஊடாகவே நடந்து வருகிறது.

## துறைமுக அபிவிருத்தி

ஊர்காவற்றுறையில் கப்பல் மூலம் வணிகத்தொழில் செய்தவர்களில் அதிகமானோர் தமிழகத்திலுள்ள பட்டுக்கோட்டை சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த செட்டிமார்களாவார். இன்றும் அவர்களின் ஞாபகமாக ஊர்காவற்றுறையில் C.S.K. கட்டடம் உள்ளது. பிற்காலத்தில் கரம்பன் அல்பிரட் தம்பையா, ஓவசியர் அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் தந்தையர்களும் காரைநகர் வைரமுத்து ஆகியோருடன் இன்னும் பலர் இத்தொழிலில் ஈடுபட்டனர். கரம்பொன், காரைநகர் வர்த்தகர்கள் அண்மைக்காலங்களில் இலங்கை முழுவதும் வர்த்தகத்தில் உச்ச நிலையிலிருந்ததற்கு இத்துறைமுகமே மூலகாரணம் எனலாம்.

அத்துடன் தமிழ்நாட்டிற்கும் தீவுப்பகுதி மக்களுக்கும் கடல்ரீதியான வர்த்தகத்தொடர்புகள் இருந்து வந்தன. மக்களிடையே ஓற்றுமை, இறைபக்தி, தமிழ்ப்பண்புகள் ஆகியன மிளிர்ந்து காணப்பட்டது. நெல்லு, அரிசி, பலசரக்குப்பொருட்கள், சட்டி, தானியவகைகள். ஓடுகள்(பவுண்ட மார்க் - இராசாவின் தலை பதிக்கப்பட்டது) பானைகள், பித்தளைப்பொருட்கள், பீடிகள் சிறந்த இன வெள்ளைநிறக்காளை மாடுகள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்டன. அக்காலத்தில் உழவுத்தொழிலுக்கு எருது மாடுகளே பயன்படுத்தப்பட்டன. கமத்தொழிலும் சீரும் சிறப்புமாக திகழ்ந்தது. அத்துடன் இங்கிருந்து பனை ஓலைகள், பனைமரத்தீராந்திகள், புகையிலை, சங்கு போன்ற பொருட்களும் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஊர்காவற்றுறை நகருக்கு அண்மையிலுள்ள பருத்தியடைப்பு என்ற இடத்தில் சங்குகளை சேமித்து வைக்கும் சங்குமால் இருந்ததினால் அப்பகுதி இன்றும் சங்குமால் என அழைக்கப்பட்டு வருகின்றது. இறைமகன் யேசு மனித அவதாரம் எடுக்க உள்ள செய்தி அறிந்து அவரை தரிசிக்கச் சென்ற கீழைத்தேச ஞானிகளிலிலொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறைத்துறைமுகத்திலிருந்து சென்றதாகவும் ஒரு குறிப்பு உள்ளது.

இலங்கையில் தேசவழமைகள் என்னும் ஆய்வில் பேராதனை பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடும் போது 13ம் நூற்றாண்டில் இந்தியத்தலைநகர் டில்லியில் ஆட்சியிலிருந்த சுல்த்தானின் உயர்நீதிபதியாக இருந்த இபுன்பற்றுற்ரா சீனாவை நோக்கிப் பயணமான போது அவனது கப்பல் புயற்காற்றினால் இலங்கைக் கரையில் தரை தட்டியது. அந்த இடம் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்தியின் அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது. அந்தப் பாரசீக யாத்திரிகன் அரசனுடன் தங்க நேரிட்டபோது பலவித முத்துக்களும் இரத்தினங்களும் அரசன் வசமிருந்ததாகவும் அவனது துறைமுகங்களில் இருந்த நூற்றுக்கணக்கான கப்பல்கள் அரேபிய நாடுகளுக்கு கறுவா போன்ற வாசனைத்திரவியங்களை ஏற்றிச்சென்றன என்றும் அந்த யாத்திரிகனுடைய குறிப்பில் தெரிவதாக குறிப்பிடுகிறார். அத்துடன் பேராசிரியரின் ஆய்வு அக்காலத்தில் ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களே பெரு வளர்ச்சி அடைந்திருந்தன என்றும் அங்கிருந்தே தென்னிந்தியத்துறைமுகங்களோடும் அதன் வர்த்தகத்தில் ஈடுபட்டு பிராந்திய வாணிபத்தில் பெரும் பங்கு வகித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்

ஊர்காவற்றுறை தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான அமரர்.A.S.தம்பிஜயாவின் தந்தையார் கப்பல்கள் வைத்திருந்து ஊர்காவற்றுறைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே வர்த்தகம் செய்து வந்தார். பின்னர் அவரது மகனான தம்பிஜயா கொழும்பில் பல கப்பல்களை வைத்திருந்து துறைமுக சரக்குகூட்டுத்தாபனத்தை ஏற்படுத்தி நடத்தி வந்தார். அதில் தீவுப்பகுதியைச் சேர்ந்தோருக்கு வேலை வாய்ப்பினையும் ஏற்படுத்திக்கொடுத்தார்

பிரித்தானியர்கள் தமது ஏற்றுமதிப்பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்குப்பொருட்கள் முதலியவற்றை இலகுவாக சந்தைப்படுத்தும் நோக்குடன் கொழும்பில் செயற்கைத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்தனர். அதனால் நாளடைவில் இத்துறைமுகம் பொலிவிழந்தது. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான கௌரவ.D.S.சேனநாயக்கா 1950ம் ஆண்டு ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்த போது அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த கௌரவ.A.L.தம்பிஜயா ஊர்காவற்றுறை துறைமுகத்தை மீண்டும் பயன்படுத்த வேண்டுமெனக்கோரிக்கை விடுத்தார்

பின்னர் பிரதமராக இருந்த கௌரவ.டட்லி சேனநாயக்கா காங்கேசன்துறைக்கு விஜயம் செய்த போது அப்போது கைத்தொழில், மீன்பிடி அமைச்சராக இருந்த சட்டமேதை G.G.பொன்னம்பலம் காங்கேசன்துறையை துறைமுகமாக்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார். ஆனால் இருவரினது கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. 1952ம் ஆண்டு உள்நாட்டு அமைச்சரான கௌரவ.T.P.ரத்னாயக்கா காரைநகர் இந்துக்கல்லூரிக்கு விஜயம் செய்த போது காரைநகருக்கு குழாய் மூலம் குடிநீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநியோகம், ஊர்காவற்றுறை துறைமுகத்தை மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜரை கல்லூரி அதிபர் திரு.ஆ.தியாகராஜா கையளித்தார். அதே ஆண்டு ஶ்ரீலங்கா சமசமாச கட்சியைச்சேர்ந்த டாக்டர் கொல்வின் R.D.சில்வா காரைநகர் சைவ மகா சபைக்கு விஜயம் செய்த போது காரைநகர் மக்களின் சார்பில் காரைநகர் மணற்பிட்டியைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் க.இ.அம்பலவாணர் காவலூர் துறைமுகத்தை மீண்டும் பயன்படுத்த ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்தார். ஆனால் அவர்களது வேண்டுகோள்கள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாக அமைந்தன.

ஊர்காவற்றுறையின் மக்கள் பரம்பலையிட்டும் துறைமுகத்தையிட்டும் முதலியார் இராசநாயகம் எழுதிய யாழ்ப்பாண சரித்திரம் என்னும் நூலில் குறிப்பிடுகையில் மாதோட்ட நகரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட இடம்பெயர்வும் துறைமுக வளர்ச்சியுமே ஊர்காவற்றுறை எனத்தெரிவித்துள்ளார். இவரது முடிவின்படி மாதோட்ட நகரின் வீழ்ச்சி எட்டாம் நூற்றாண்டைச்சேர்ந்ததெனக் கருதலாம். ஊர்காவற்றுறையாகிய "கலா" எனும் துறையே பிரசித்தி பெற்று விளங்கியது எனவும் குறிப்பிடுகின்றார். "கலா" என்பது மரக்கலம் கலம் என்பதன் மருவுதலே ஆகும். போர்த்துக்கேயர் கோட்டைக்கு அண்மையாக ஆங்கிலேயரும் தமது காலத்தில் முகாம் அமைத்திருந்தனர். அந்நாட்களில் இந்தியாவிலிருந்து இலங்கை முழுவதற்கும் கால்நடைகள் இறக்குமதி காவலூர் ஊடாகவே நடந்தது. கால்நடைகளை நிறுத்தி வைக்கும் இடம் மாட்டுக்காளை என இன்றும் அழைக்கப்படுகிறது. இயற்கைத்துறைமுகமான ஊர்காவற்றுறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் சப்ததீவுகளின் வர்த்தகத்துறை, பொருளாதாரம், தொழில்வாய்ப்பு ஆகியன விருத்தி அடையும் அப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். பாலைவனமாக இருந்த இஸ்ரயேலை எப்படி யூத இன மக்கள் புனித பூமியாக மாற்றி பசுமைப்படுத்தி தலை நிமிர்ந்து வாழ்கின்றார்களோ அதே போன்று சப்ததீவுகளையும் வளம்படுத்த அரசு உதவ வேண்டும் என்பதே தீவுப்பகுதி மக்களின் எதிர்பார்ப்பாகும்

## கத்தோலிக்க மதப்பரம்பல்

போர்த்துக்கேயரின் வருகையினால் இங்கு கத்தோலிக்கமதம் பரப்பப்பட்டது. அப்போது கண்ணாடிப்பாதிரியார் என அழைக்கப்படும்(Fr.Petro de Betanor) என்னும் பிரான்சிஸ்கன் சபைக்குரு 1602ல் ஊர்காவற்றுறைத்துறைமுகத்திற்கு அருகாமையில் சிறிய கோவிலைக்கட்டியதாகவும் பின் நல்லூர் அரசன் தாமிரசாசனம் செய்து வழங்கிய காணியில் 1614ல் கல்லினால் ஒரு பெரிய கோவிலைக்கட்டியதாகவும் யாழ்ப்பாண சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து யாழ்ப்பாணத்தை 1658ல் கைப்பற்றிய போது இங்கிருந்த கத்தோலிக்க மக்கள் தம் ஆட்சியின் போது எதிரிகளான போர்த்துக்கேயருக்குச் சார்பாக நடப்பார்களென எண்ணியதால் ஆரம்பத்தில் கட்டிய கத்தோலிக்க ஆலயங்களான யுவா-னியார் ஆலயம், வெற்றிமாதா ஆலயங்களையும் அழித்து மக்களையும் பலவித தொல்லைகளுக்கு ஆளாக்கினர். இன்று எஞ்சியுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைமுகத்தை அண்டியுள்ள ஆரம்பக் கிறிஸ்தவர்களின் சேமக்காலையும் அடக்கம் செய்த பின் தம்மைத் தூய்மைப்படுத்துவதற்காக கட்டிய சாந்து கிணறுமே (சாந்து என்பது இலத்தின் மொழியில் தூய என்பதாகும்)

மேலும் சுங்கத்திணைக்கள வளவினுள்ளும், பழைய வாடி வீடமைந்த பகுதியினுள்ளும் காட்டுக்கந்தோர் (விறகுகாலை) இருந்த இடத்திற்கு அண்மையிலும் ஆலய அழிபாடுகள் உள்ளதாக அறியமுடிகிறது. அக்காலத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள அனைத்துக் கத்தோலிக்க மக்களும் ஒரு பங்கு மக்களாகவே இருந்தனர். ஊர்காவற்றுறைப் பங்குடன் இணைந்திருந்த கரம்பொன் 1938 முதல் தனிப்பங்காக பிரிந்தது

இன்றைய புனித அந்தோனியார் ஆலயத்தின் பழைய முகப்பு போர்த்துக்கேயரின் கட்டடக்கலையில் அமைந்த ஒரு சான்றாக இருந்தது. அது காலத்திற்கு அப்பாற்பட்டதாலோ ஏதோ ஒரு காரணத்தினால் மாற்றி அமைத்து விட்டனர். அவ்விதம் புனித யாகப்பர் ஆலயத்தின் முகப்பிலுள்ள திகதிகளும் அதன் தொன்மையை இன்றும் எடுத்தியம்புகின்றன. இங்கு பல புரட்டஸ்தாந்து ஆலயங்கள் உண்டு. இவை ஒல்லாந்தரால் கட்டப்பட்டவை. ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள ஆலயங்களுல் புனித யாகப்பர் ஆலயம் மிகவும் பழமையானதாகும். இலங்கையில் ஸ்பானிய நாட்டுக்குருக்கள் தொண்டாற்றிய இடங்களில் தம் நாட்டின் பாதுகாவலரான புனித யாகப்பரின் பெயரால் ஆலயங்களை எழுப்பினர் என தெரியவந்துள்ளது. இவ்வாலயத்துக்கான அடிக்கல் 1815ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி கோவைக்குரவரான வண.டல்காடோ என்ற தியான சம்பிரதாய சபை குரவரால் அடிக்கல் நாட்டப்பட்டது

ஓர் ஊரில் முதுசங்களாக போற்றப்படுவது ஆன்மீக ஒளி வீசும் ஆலயங்கள் மற்றது கல்விக்கு வித்திடும் பாடசாலைகள் இவ்விரண்டும் ஒரு சமுதாய வளர்ச்சிக்கு இரு கண்களாகும். இதன் தாற்பரிய உணர்வுகள் இங்கு வெளிப்பட்டு நிற்கின்றன

பண்டைக்காலம் முதல் காவலூருக்கு பொற்காலம் தான் இயற்கைத்துறைமுகம் இயற்கை அழகூட்டும் தென்னை, பனை மரத்தோப்புகள் நெல், வயல்கள், குளங்கள் ஊருக்கு மெருகூட்டும் சைவ, கிறிஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள் இவையாவற்றுக்கும் மேலாக பண்புள்ளம் கொண்ட மக்களை கொண்டமைந்தது.

## ஆங்கிலக்கல்வி அறிமுகம்

போர்த்துக்கீசர் 1639ம் ஆண்டளவில் இலங்கையின் கரையோரங்களை கைப்பற்றினார்கள் போர்த்துக்கீசருக்குப் பின் 1658ல் இலங்கையைக்கைப்பற்றிய டச்சுக்காரரும் அவர்களுக்குப் பின் 1796ல் கைப்பற்றிய பிரித்தானியர்களும் தொடர்ந்து கத்தோலிக்க மதத்தைப்பரப்புவதில் அக்கறை செலுத்தினார்கள். கத்தோலிக்க திருச்சபைகளையும் சுதேசகல்வி நிலையங்களையும் அமைத்து அவற்றினூடாக கத்தோலிக்க மதத்தைப் பரப்பி வந்தனர். பிரித்தானியர்கள் ஆங்கிலப்பாடசாலைகளை நிறுவி கத்தோலிக்க மதத்துடன் ஆங்கிலக்கல்வியையும் போதிப்பதில் அக்கறை செலுத்தினார்கள். அப்போது சிங்கள மக்களை விட தமிழ் மக்கள் ஆங்கிலம் கற்பதில் அதிக ஆர்வம் கொண்டார்கள். அதனால் ஆங்கிலேயர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு உயர்தர பாடசாலைகளை நிறுவினார்கள். அதில் யா/புனித அந்தோனியார் கல்லூரி மற்றும் பெண்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வளர்ச்சிக்கு 1927ல் உருவாகிய கரம்பன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம் குறிப்பிடத்தக்கது. அவற்றின் மூலம் ஆங்கில மொழியினைக் கற்றுத்தேர்ந்த தமிழ்மக்கள் அனைத்து அரசாங்க அலுவலகங்களிலும் வேலைவாய்ப்பைப்பெற்றார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு வெளியே முதன்முதலாக காவலூரில் நிறுவப்படட கத்தோலிக்க பாடசாலையே புனித அந்தோனியார் கல்லூரி ஆகும். கத்தோலிக்க மதகுருவான வண.பிதா வொய்சியூ (Rev.Fr.Boisseau O.M.I) என்பவரே 1896ம் ஆண்டு புனித அந்தோனியார் கல்லூரியை நிறுவினார். இப்பாடசாலையில் இருந்து திரு.K.P.இரட்ணம் (பாராளுமன்ற உறுப்பினர்) (10.03.1914 – 20.12.2010) சேர்.வைத்திலிங்கம் துரைச்சாமி (சட்டத்தரணி, அரசியல்வாதி சிறந்த பேச்சாளர்) (08.06.1874 – 12.04.1966) திரு.சுப்பையா சர்வானந்தா (பிரதம நீதியரசர், கௌரவ முதல் ஆளுனர், தென் மாகாணம்) கரம்பன், மகாதேவா சுவாமிகள் (கரம்பன்), திரு.அல்பிரட் லியோ சவரிமுத்து தம்பிஜயா (பாராளுமன்ற உறுப்பினர், தமிழ் பிரபல வர்த்தகர், அரசியல்வாதி) கரம்பன், திரு.V.A.கந்தையா (சட்டத்தரணி, பாராளுமன்ற உறுப்பினர், அரசியல்வாதி), திரு.வி.நவரட்ணம் (பாராளுமன்ற உறுப்பினர்) கோலாம்பூர் தமிழ் ஆயர் டோமினிக் வேந்தர் கோன், தென்கிழக்காசியாவின் கல்விமான் வண.பிதா.பீற்றர்பிள்ளை, மொழி ஆராய்ச்சி வல்லுனர் வண.பிதா தனிநாயகம் அடிகள் ஆகிய பெருந்தககைளை உருவாக்கிய கலைக்கோயில் இம்மண்ணில் அமையப்பெற்றுள்ளதும் சிறப்பாகும்.

காவலூர் துறைமுகத்துக்கு மிக அண்மிய தொலைவிலேயே புனித அந்தோனியார் ஆலயமும் புனித அந்தோனியார் கல்லூரியும் அமைந்துள்ளன. ஆரம்ப காலங்களில் அங்கு தமிழ் கல்லூரியும் இருந்தது. தமிழ்க்கல்லூரியில் நான்காம் வகுப்பு வரை படித்து சித்தி எய்திய பின்னரே மாணவர்கள் ஆங்கிலக் கல்லூரிக்கு செல்வார்கள், அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும் ஆரம்பக்கல்வியினையும் முறைப்படி போதித்த திரு.ஞானப்பிரகாசம் மாஸ்டரைச்சேரும். அவரை அனைவரும் சட்டம்பியார் என்றே அழைத்து வந்தனர்.

## தமிழ்கல்லூரி அறிமுகம்

இங்கு அமைந்த தமிழ் கல்லூரியாக கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம் விளங்கியது. கல்வி என்ற போர்வையில் இந்துக்கள் கத்தோலிக்க சூழலில் உள்ளீர்க்கப்படுவதை அடுத்து சைவச்சிறார்கள் சைவச்சூழலில் கல்வி கற்க வசதி செய்யப்பட வேண்டும் என்ற நோக்கில் இது ஒரு சைவப்பாடசாலையாக சுவாமி மகாதேவாவினால் வீடுதோறும் பிடி அரிசி பெற்று அதனை விற்றதன் மூலம் கிடைத்த பணத்தைக்கொண்டு இதனை ஆரம்பித்தார். இப்பாடசாலையில் இருந்து பொன்.பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்) மற்றும் திருமதி.ரூபினி வரதலிங்கம் (தற்போதைய செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு. வடக்கு மாகாணம்) ஆகிய கல்விமான்களை உருவாக்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலூர் நகர் (Kayts Town)

1940களில் ஏழு தீவுகளுக்குமான நிர்வாக நகராகவும், வர்த்தக நகராகவும் விளங்கியது. காவலூர் பட்டினத்தில் சகல வசதிகளும் அமைந்திருந்தது. உதாரணமாக வைத்தியசாலை, நீதிமன்றம், பட்டினசபை, சுகாதாரத்திணைக்களம், பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், மீன்பிடி இலாகா, சுங்கத்திணைக்களம், காவல் நிலையம், அஞ்சல் அலுவலகம், தொலைத்தொடர்பு நிலையம், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், பனம்பொருள் அபிவிருத்திச்சபை, விளையாட்டுக்கழகங்கள், சனசமூக நிலையங்கள், நூல்நிலையம், வங்கிகள், மற்றும் திரையரங்கு போன்றவற்றைக் குறிப்பிடலாம். அன்று தொட்டு மக்கள் சமய வேறுபாடின்றி ஒற்றுமையாக எந்த ஆலயத்திருவிழாவானாலும் ஒன்று கூடி மகிழ்வர். இவ்வூர் சந்தை எப்போதும் கலகலப்பு நிறைந்ததாக இருக்கும். அது அயற்கிராமத்து மக்களுக்கும் பெரும் பயனுள்ளதாக இருந்தது.

படகு வலித்தல் போட்டி காவலூருக்கும் காரைநகருக்கும் இடையில் உள்ள கடலில் இடம்பெறும். இப்போட்டிகள் இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் கேம்பிறிட்ஜ் பல்கலைகழகங்களுக்கு இடையில் தேம்ஸ்நதியில் நடைபெறும் போட்டியை ஞாபகமூட்டுவதாக இருக்கும். ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன்கோவில் இந்து மக்கள் வழிபடும் பிரதான ஆலயமாகும். இந்த ஆலயத்தில் வருடந்தோறும் 09 நாட்கள் நடைபெறும் திருவிழா பெரும் இந்திரவிழா போன்று நடைபெறும். ஒவ்வொரு திருவிழா உபயகாரர்களால் விளங்கிய கிராம மக்கள் போட்டி போட்டுக்கொண்டு கலைநிகழ்வுகளை நடாத்துவர். இப்பிரதேச மக்களின் வாழ்வு முறை அடிப்படையில் ஊர்காவற்றுறைநகரின் மேற்குத்தெரு, நடுத்தெரு, கிழக்குத்தெரு ஆகிய இடங்களில் முறையே செம்படவர்(கடலோடிகள்), பள்ளிவலி(மூடை சுமப்பவர்கள்), படையாச்சி, கடையர் (சுண்ணாம்பு தொடர்பான வேலைகள் செய்வோர்) முதலிய இனத்தவர்கள் வாழ்ந்துள்ளனர். ஊர்காவற்றுறை நகரின் முக்கிய பகுதியிலும் அதனை அண்டிய கரம்பன், நாரந்தனை வடக்கு, புளியங்கூடல் பகுதிகளில் வேளாளரும், தம்பாட்டியில் திமிலரும் நாரந்தனை தெற்கு, மத்தி பகுதிகளில் திருவள்ளுவர் சமூகத்தினரும் கரம்பன் கிழக்கில் விஸ்வப்பிரம குலத்தவர்களும் வாழ்ந்துள்ளனர்.

## கலைப்பணியாற்றிய விழுதுகள்

தமிழர் தம் பாரம்பரிய பண்பாடுகளான இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் கலைகளில் மக்களின் அபிமானத்தைப்பெற்றது நாட்டுக்கூத்து ஆகும். நாட்டுக்கூத்தைப்படைப்பதற்கு இரண்டு முக்கிய சூத்திரதாரிகளின் உதவியும் அனுசரனையும் வேண்டும். ஒன்று கதை, வசனம், பாட்டு ஆசிரியர் (எழுத்தாளர்) அல்லது புலவர் ஆவார். இரண்டாமவர் அண்ணாவியார் இவர் கூத்தின் நிர்வாகத்தையும் பாட்டுக்களின் மெட்டுராகங்களையும், நடிகர்களின் கலைப்பயிற்சியையும் மேற்கொண்டு கூத்துக்கு உயிர் கொடுத்து மேடையில் அரங்கேற்றுபவர். தற்போது இவரின் பணியை அண்ணாவியார் என அழைப்போரும் உளர். காவலூரிலேயே இவ் ஆசான்களை இலேசாக கண்டு கொள்ள முடிந்தது. இவர்கள் யாரெனில் "மதுரகவி"ஞா.ம.செல்வராசா புலவர் அவர்களும் "அமிர்தகான்" அருளப்பு அண்ணாவியார் அவர்களுமாவார். இவர்களுடன் பருத்தியடைப்பு கிராமத்தில் பிறந்து வாழ்ந்த அகில இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலி புகழ் வயலின் வித்துவான் வி.கே. குமாரசாமி அவர்களும் ஆவார். இவர் பற்றிய குறிப்புகள் எமக்கு கிடைக்கப்பெறவில்லை.

கிராமத்தில் உள்ளவர்கள் சாதாரணமாகவே தோட்டம், கிணறுகளில் துலா மிதிப்பதிலும் வேறு வீட்டில் "சபாக்களிலும்" சத்தம் போட்டு பாட்டுபடிப்பதில் விவேகமுள்ளவர்கள். இதனால் இவர்களின் "தொண்டை திறந்திருக்கும்" "ராக. தாள, ஞானம்" கூத்துப்பாட்டுக்களை பண்படுத்தி கற்க மிக இலேசாக இருக்கும். அக்கால அரங்குகளில் ஒலிபரப்பி (Speaker) கிடையாது. ஆனால் திறந்த வெளியில் யாவருக்கும் கேட்கும். மின்சார வெளிச்சம் இல்லை "பெற்றோல்மக்ஸ்" தான் அரங்கில் பாவிப்பார்கள்.

## மதுரகவி.ஞா.ம.செல்வராசா



மதுரகவிப்புலவர் உதயதிசையில் 1914ம் ஆண்டு பிறந்தவர் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கிய இவர் சங்கைக்குரிய சைமன் பிறதரிடம் தமிழ் மொழியைக்கற்றதனால் மரபு வழி நின்ற கவிதை எழுதும் திறன் புலவருக்கு ஏற்பட்டது எனலாம். 1947ம் ஆண்டு பாரதநாட்டின் தவப்புதல்வன் காந்தி மகான் காலமானபோது அண்ணல் மாந்தர் என்ற தலைப்பில் எழுதிய இரங்கற் கவிதை மூலம் பெரும் மதிப்பினை சம்பாதித்தார். புலவர் பல வசன நூல்களையும் எழுதியுள்ளார். "சிந்தாகுல மாலை" என்ற பக்திப்பாடலே இவர் எழுதிய முதல் நூலாகும். பல இந்து ஆலய பிரபந்தங்களையும் இவர் இயற்றியுள்ளார். யாழ்ப்பாணத்தில் தென்மோடி நாட்டுக்கூத்து நாடகப்பிரதி ஆக்கங்கள் அருகி வந்த கால கட்டத்தில் தான் காவலூர் கவிஞர் பல நாடகங்களை புதிதாக எழுதி நாடக கலைக்கு புத்துயிர் அளிக்க உதவினார். இவர் முதன் முதலில் எழுதிய "ஞானசவுந்தரி" நாட்டுக்கூத்து பாரம்பரிய நாடகப்பண்பாடுகளுக்கு அமைய இசை மரபுகளுடன் மிக அருமையான பாடல், சொல்வளம், சொற்கோப்பு என்பனவற்றைக் கையாண்டு நாடகங்களை இயற்றியமை அவரது புகழுக்கு காரணமாகும்.

## அமிர்தகான் அருளப்பு அண்ணாவியார்

திரு.அ.அருளப்பு வடக்கு நாரந்தனையைத் தாயகமாக கொண்டவர். இவர் சிறுபராயத்திலிருந்தே பள்ளிக்கூட நாடகங்களில் பங்கேற்று நற்பெயர் பெற்றிருந்தார். இவர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தமையால் நாட்டுக்கூத்துகளில் பங்கேற்க காலம் நேரம் இருந்தது. நாட்டுக்கூத்து நாடக நடிகராக ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை மற்றும் தீவுப்பகுதிகளிலும் பெயர் எடுத்தது போக யாழ்ப்பாணத்தில் பல்வேறு நாடகக்குழுக்களுடன் சேர்ந்து நடிகனாகிபெரும்கீர்த்தனையைத்தேடிக்கொண்டார். அவரின் தொனியில் இனிமையும், ஆதிக்கமும், தன்னம்பிக்கையும் கலந்து ரசனை ஊட்டும் எந்தவித பாகத்திலும் பெண் பாத்திரத்திலும் கூட நடிக்கும் ஆற்றலை நன்கு கற்றுக் கொண்டார். தனது திறமையால் பல நாட்டுக்கூத்துகளுக்கு ஆசானாகி பயிற்றுவித்து அரங்கேற்றினார். எஸ்தாக்கியா:. மனோகரா, செனகப்பு, கருங்குயில்குன்றத்துக்கொலை இம்மானுவேல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய நாட்டுக்கூத்துகள் ஆகும் நாட்டுக்கூத்து பண்பு கெட்டுப்பாதிப்படைந்து அழிந்து மறைந்து போகா வண்ணம் கட்டிக்காத்து மக்கள் கண்டு களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினார். இளைய சந்ததியினருக்கு ஊக்கமும், ஆக்கமும். கொடுத்ததுமல்லாமல் நாட்டுக்கூத்துக்குத் தமிழர் மத்தியில் ஓர் நிரந்தர இடத்தைப் தேடிக்கொடுத்துள்ளார்.

## ஊர் பற்றிய ஆய்வு

ஊர் என்னும் தமிழ்ச்சொல் தமிழ்மொழி போல் தொன்மைமிகு மொழிகளில் ஒன்றான யூதர்களின் கீபுறு மொழியிலும் உள்ளதெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கரம்பொன்

காவலூரின் ஒரு பகுதிக்கு அந்நாளில் கரம்பொன் எனப்பெயரிட்டதற்கு பொன்(னை) கரம் தனிலேந்தி பாலக யேசுவைத்தரிசித்து காணிக்கை செலுத்தச் சென்ற ஞானிகளிலொருவரை நினைவில் கொள்வதற்காக இருக்கலாம் என எண்ணக்கூடியதாகவுள்ளது. கரம்பன் கிராமம் பற்றிக்கூற வந்த யாழ்ப்பாண வைபவ கௌமுதி ஆசிரியர் க.வேலுப்பிள்ளை "தீவுப்பற்றைச்சேர்ந்த இச்சிற்றூரின் பெயரும் மலையாளத்திலே உள்ள ஓர் சேரிப்பெயராகும்" எனக்குறிப்பிடுவார். கதிரன் என்ற பிரதானியின் அதிகாரத்தினுள் இருந்தமையால் கரம்பன் என்ற பெயர் வந்தது என்றும் சிலர் கூறுவர். புராதன காலம் தொடக்கம் முருக வழிபாடு இருந்து வந்துள்ளது. பழந்தமிழர் தாம் வாழ்ந்த இடங்களுக்கு தமது வழிபடு கடவுள் பெயரை இட்டு வழங்கி வந்துள்ளனர். இதற்கமைவாக முருகப்பெருமானின் பெயர்களில் ஒன்றாகிய கடம்பன் என்ற பெயரைத் தாம் வாழ்ந்த கிராமத்துக்கு சூட்டி மகிழ்ந்தனர். நாளடைவில் கடம்பன் என்பது கரம்பன் என மருவி வழங்கப்படலாயிற்று. மேலும் பன்னிரு கரங்களை உடையவன் முருகன் அப்பெயராலே கரம்பன் என வழங்கி இன்று கரம்பொன் என அழைக்கப்படுகிறதென சிலர் கூறுவர்.

1950களில் கரம்பொன் என்ற ஊரிலுள்ள செபஸ்தியார் ஆலயத்திருவிழாவின் போது அண்ணாவி அவுறான் என்பவர் தனது கலைஞர்களுடன் கூத்து ஒன்றினை மேடையேற்றினார். அந்தக்காலத்தில் வரும் அரசன் பாத்திரமாகவும் அவர் நடித்திருந்தார். அவர் அரசனாகச் சிம்மாசனத்திலிருக்கும் காட்சியினை அந்த ஆலயத்தின் பெரும்பான்மை ஆதிக்க சாதிகளான கத்தோலிக்க வெள்ளாளர்களால் பொறுக்க முடியவில்லை ஏற்றுக்கொள்ளவும் இல்லை "திமிலனுக்குச் சிம்மாசனமோ? அதுவும் எங்கள் எதிரிலேயே? எனக் குழப்பம் விளைவித்து கூத்து நிறுத்தப்படவே அப்போது அங்கு பங்குக்குரவராக இருந்த பாதிரியார் (அவரும் இந்த ஆதிக்கசாதிக்காரர்தான்) கூத்தை இடைநிறுத்தக்கூடாது மழை வராமல் போய்விடும் எனவே கூத்தை நடாத்துங்கள் எனக்கட்டளையிட்டார். சிம்மாசனத்துக்குப் பதிலாக உரலில் அமர்ந்திருந்து அரசன் கூத்துப்பாடியும் முடித்தாயிற்று அதன் நீட்சியாக ஆதிக்க சாதியினருடனான முரண்பாடுகள் மீனவ மக்களுக்கு அதிகரிக்க காரணமாகியது. 1656ம் ஆண்டு தங்களுக்கென ஒரு கோவிலை கட்டிக்கொண்டதுடன் உருவானது தான் மெலிஞ்சிமுனை என்ற கிராமம் என மக்களிடம் அறியக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுவைதீவு

ஏழுகடலின்(பருத்தித்தீவு. அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு நெடுந்தீவு, கற்கடதீவு, கச்சதீவு) நடுவே மலர்ந்துள்ள தீவாக எழுவைதீவு விளங்கிறது. இத்தீவுகளுக்கெல்லாம் எழுந்தருளியிருக்கும் தீவாக இது மிளிர்கின்றது உயர்ந்து வளர்ந்த பனை மரங்களும் பவளப்பாறைகள் நிறைந்த என்றும் ஆடிவரும் அலைகள் நிறைந்த கடலும் இத்தீவினை அழகுபடுத்துகின்றன. இத்தீவில் நிறைய மந்தைகள்(ஆடுகள்) காணப்பட்டதால் இதனை எலுவா தீவு (சிங்களத்தில் எலுவா என்பது ஆடுகளைக்குறிக்கும்) என அழைக்கப்பட்டதாகவும் ஏனைய தீவுகளை விட எழில் கொண்ட தீவாக விளங்கியதனால் இது இப்பெயர் பெற்றதாக வரலாற்றாசியர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும் எழுமரம்(முள்ளுமரம்) நிறைந்து காணப்பட்டதால் இப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டதாக முதியவர்கள் கூறுகிறார்கள். இங்கு நாற்பது அடி மனிதனின் பாதச்சுவடுகள் இருப்பதாக குறிப்பிட்டாலும் அதனை வரலாற்றாசியர்கள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. இத்தீவில் இன்றும் கட்டுமரம் கொண்டு மீன்பிடித்தல் நடைபெற்று வருகிறது.

## பருத்தித்தீவு


அனலைதீவின் அருகே அமையப்பெற்ற இன்னுமொரு தீவாக பருத்தித்தீவு காணப்படுகிறது இத்தீவில் நிறைய கொடிப்பருத்தி மரம் காணப்பட்டதால் இதற்கு இப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. இங்கு மூலிகைச் செடிகள் அதிகமாக காணப்படுவதால் பலர் மருந்து தேவைகளுக்காக அடிக்கடி இங்கு வருவார்கள் என பலர் குறிப்பிடுகிறார்கள். (பொடித்தலை. வேலிபருத்தி, குப்பைமேனி, ஆடா தோடை, உத்தனகாணி, பொன்னை, காண்டை, தியங்கு, கோழி அவரை) போன்ற சிலவற்றைக் குறிப்பிட்டு கூறினார்கள். இங்கு 1953ம் ஆண்டு தொடக்கம் மீன்பிடித்தொழிலுக்காக வந்து குடியேறியவர்கள் அங்கு ஒரு ஆலயத்தினை அமைத்து வழிபட்டு வந்தார்கள். மீனவர்களின் குலதெய்வமாக விளங்கிய புனித அந்தோனியார் ஆலயமாக அமையப்பெற்றது. இவ்வாலயத்தில் பிலிப்பாத்தீவு (கற்பிட்டியில் அமைந்துள்ளது) அங்கு தொழிலுக்காக சென்றவர்கள் அங்கு வெளியிடப்பட்ட நாட்காட்டி (கலண்டர்) படத்தினை இவ்வாலயத்தில் வைத்து சிறுகொட்டில் ஆலயமாக அதனை வழிபட்டு வந்தனர். இன்று இவ்வாலயம் காணிக்கைமாதா ஆலயம் என அழைக்கப்பட்டு வருகிறது. 1990ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையால் அங்குள்ள மக்கள் பாதுகாப்புபடையினரால் வெளியேற்றப்பட்டு மீண்டும் எழுவைதீவில் குடியமர்ந்தார்கள். பலகாலமாக மக்கள் இன்றி இருந்த இத்தீவு தற்போது ஏற்பட்ட சாதாரண சூழலினால் அங்கு சென்று ஆலயத்தினை புனரமைத்து வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது.

## அனலைதீவு

இதற்கு அருகில் உள்ள தீவாக அனலைதீவு காணப்படுகிறது. அனல் கக்கும் தீவாக (கூடிய வெப்பம்) விளங்கியதால் இதற்கு இப்பெயர் இடப்பட்டது என வரலாற்றாசிரியர்கள் கூறுகிறார்கள். தொன்றுதொட்டு தமிழ்பேசும் சைவமக்கள் மாத்திரம் தனித்து வாழும் காரணத்தாற் சைவத்தீவு என்னும் சிறப்புபெயரும் இதற்கு உண்டு. தொன்மையும் கலைவளமும் பண்பாட்டுச்சிறப்பும் மிக்க இத்தீவின் வரலாற்று ஆய்வு காலத்தின் தேவையாகும். இங்கு பெரும்பாலான இந்துக்கள் வாழும் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூமியாக இப்பிரதேசம் விளங்கிறது. இலங்கையின் ஆதிக்குடிகளில் ஒரு சாதியினராகிய நாகர் அனலைதீவில் வாழ்ந்தனர் என்பதற்கு புளியந்தீவு நடராசர்கோவில் தக்க சான்றாகும். இன்று நடராசர் கோவில் என்றும் சிவன்கோவில் என்றும் நாகேசுவரன் கோவில் என்றும் வழங்கப்பெறும் இவ்வாலயம் இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் அனைவராலும் நாகதம்பிரான் கோவில் என்றே அழைக்கப்படுகிறது. நாகதம்பிரான் கோவில் என்பதற்கு நாகர் என்னும் சாதியினரின் தலைவன் வாழ்ந்த இடம் என்றும் நாகமாகிய கடவுளை வழிபடும் இடம் என்னும் இருபொருள் உண்டென்பார். (பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை அவர்கள் ஈழத்து வாழ்வும் வளமும்) பாம்பை வணங்கும் வழக்கம் பண்டைத்திராவிடர் மக்களின் வழிபாட்டு முறைகளில ஒன்று எனக்குறிப்பிடுகிறார். இங்கு அவர் திராவிட மக்கள் என்பது நாகரையே குறிக்கும் புளியந்தீவு நாகேசுவரன் ஆலயத்தின் வடமேற்கு வீதியில் காணப்படும் அரச மரத்தில் வாழ்ந்த பாம்புக்கு பால் வைத்து வழிபடும் வழக்கம் அண்மைக்காலம் வரை உள்ளது. நாகர் குடிமரபில் தோன்றிய தையலிசாலி, அனலை என்ற இருபெண்கள் இருந்ததாகவும் தையலிசாலி என்பவர் நயினாதீவையும், அனலை அனலைதீவையும் ஆட்சிக்குட்படுத்தியதாகவும் அறியக்கிடக்கிறது. அனலை என்பவள் ஆட்சி செலுத்தியதால் அனலைதீவு ஆகியதாகவும் இவள் பிறமதக்கலப்பில்லாமல் சிவநெறியையே பின் பற்றி ஊர்முழுவதும் சிவமணம் கமழச்செய்தாள். இன்றும் அந்த மணம் அன்றுபோல் அனலையில் அலைமோதுகின்றது.

நெடுந்தீவு மக்கள் வழிநின்ற அனலைதீவு மக்களும் தாம் தனிநாயக முதலி பரம்பரையினர் என்றே கூறி வந்தாலும் நெடுந்தீவில் தமக்குள்ள நிலபுல உரிமைகளுக்கான ஆவணமாய் நம்முன்னோர் சிலர் வைத்துச்சென்ற தோம்புகளும் உறுதிகளும் மேலும் இதை உறுதிப்படுத்துவதாலும் அனலைதீவு மக்கள் தனிநாயக முதலி காலத்தில் ஈழம் வந்த பாண்டிநாட்டு ஆட்சித்துறை அதிகாரிகளின் பரம்பரையினர் என்பது தெளிவாகும். தவத்திரு.தனிநாயக அடிகளார் நெடுந்தீவின் வழிவந்ததன் வரலாற்று உண்மையை கருத்திற்கொண்டே தந்தையின் அறிவுரைப்படி திசநாயகம் என்னும் அப்பெயர் சூட்டிக்கொண்டார் என்று அவர் சரித்திரம் கூறுகிறது.

கி.பி.1365ம் ஆண்டுக்குச் சற்று முன்னும் பின்னுமாக பாண்டிநாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வந்து அனைத்து தொழிலாளர்களையும் விட்டு அனலைதீவில் நாகர் வழி வந்த தொல்குடியினர் யாவர்? எனச்சிந்திப்போமானால் உழவர்க்கு அடுத்த பெரும்பான்மையினராய் விளங்கும் ஆதிதிராவிடர்களே அவர்கள் என்பது விடையாக கிடைக்கும்

கி.பி.1625ம் ஆண்டளவில் பறங்கியர் யாழ்ப்பாணத்தையும் தீவுகளையும் 32 கோயிற்பற்றுக்களாக பிரித்து பற்றுக்கொரு கோவிலும் அப்பிரிவுகள் கோயிற்பற்றுக்கள் என்னும் பெயரும் இன்னும் வழங்கி வருகின்றன. அனலைதீவு, புளியந்தீவு, பருத்தித்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவைதீவு, காணிகளுடன் தொடர்புடைய பறங்கியர் காலத்தோம்புகளிலும் அதன் பின் வந்த உறுதிகளிலும் அனலைதீவு கோவில்பற்று என்றே எழுதப்பட்டிருப்பதால் போர்த்துக்கேயர் காலத்தே அனலைதீவு தனித்தவோர் ஆட்சி அலகாக விளங்கியமை தெளிவாகிறது. 32 கோவில் பற்றுக்களில் 29 கோவில் பற்றுக்களை குறிப்பிட்டு காட்டும் யாழ்ப்பாண சரித்திர நூலாசிரியர் ஏனோ அனலைதீவை தவிர்த்துக்கொண்டார். அனலைதீவில் இருந்தாக சொல்லப்படும் கிறிஸ்தவமாதா கோவில் இதன்படி 1625ம் ஆண்டை ஒட்டிக்கட்டப்பட்டதாக கொள்வதிற் தவறேதுமில்லை.

கி.பி. 1627 பெப்ரவரி மாதம் 22ம் திகதி பெரும்புயல் ஒன்று யாழ்ப்பாணத்தில் வீசியது கடல் பொங்கி கரை கடந்து பட்டினங்களுட் புகுந்து பொருள், உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியது. ஊர்காவற்றையில் மக்கள் கிறிஸ்தவ கோவில்களுல் புகுந்து தங்கியிருந்தனர். இது ஒரு கடல்கோளாகும் இவ்வேளை அனலைதீவிலும் கடல்புகுந்தும் மக்கள் ஜயனார் கோவில் தஞ்சம் புகுந்ததுமான செய்திகள் வரகவிப் முத்துக்குமாருபுலவர் ஆக்கப்பெற்ற பாடல் மூலம் தெரியவருகின்றன.

போர்த்துக்கேயர் அனலைதீவுக்கு வழங்கிய பெயர் (Donna Clara) என்பதாகும். அவர்கள் ஆட்சிக்காலத்தே இப்பெயருடைய பெண்மணி அனலைதீவை நிருவகித்து வந்தாகவும் அவர் அமர்வதற்கு இருவர் அமரக்கூடிய ஆசனம் தேவைப்பட்டதாகவும் அந்த அளவுக்கு பருத்த சரீரம் உடையவரென்றும் அவர் பெயராலேயே இத்தீவு பெயர் பெற்றதாகவும் தெரிகிறது. 1628ம் ஆண்டளவில் காரைதீவு ஊர்காவற்றுறை, அனலைதீவு முதலிய இடங்கள் வலிகாமம் ஆட்சி அலகுடன் இருந்தது. ஒல்லாந்தர் தம் ஆளுகையின் கீழ் இத்தீவுக்கு வழங்கிய பெயர் Rotterrdam என்பதாகும். இவர்கள் அனலைதீவுக்கருகில் கோட்டையொன்று கட்டியிருந்தனர். இதனால் தான் இன்றும் "கோட்டையடி" என அழைக்கப்படுகிறது. இற்கைக்கு ஐம்பது ஆண்டுகள் முன்பு சிதைந்த நிலையில் காணப்பட்ட இக்கோட்டை அனலைதீவு கிராம ஆட்சி மன்றத்தினரால் முற்றாக இடிக்கப்பட்டு அவ்விடத்தே பயணிகள்மடம் கட்டப்பட்டது

அனலைதீவு மக்களின் புலப்பெயர்வின் முதற்கட்டம் ஒல்லாந்தர் காலத்தே நிகழ்ந்தது. 25க்கு மேற்பட்ட மக்கள் இத்தீவிலிருந்து எழுவைதீவுக்கு சென்று குடிபெயர்ந்ததாக தெரிகிறது. டச்சுக்காரர் காலத்தில் அமைக்கப்பட்ட 200 வருட காலத்தினை கொண்ட வெளிச்சவீடு (மதியக்கட்டை) இன்றும் காணப்படுகிறது. இது ஆங்கிலேயரால் புதுப்பிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டது. இதனை பாதுகாப்பதற்கு வடமாகாண தொல்லியல் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறான கோபுரம் கட்டானை கந்தவலைப்பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ளது.

இத்தீவுக்கு பருத்தித்தீவும் புளியந்தீவும் சொந்தமானவை பருத்தித்தீவை சிறு கடல் பிரிக்கிறது. புளியந்தீவை கற்களாலான பாலம் இணைக்கிறது. இத்தீவின் மேற்கு வடக்குக்கடற்கரையிலே காணப்படுகின்ற சுண்ணாம்பு முருகைக்கற்பார் படையாக இத்தீவுக்கு அணையாக செயற்கையமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளியந்தீவு

நாகம் ஒன்று நயினாதீவுக்கு வடக்கேயுள்ள புளியந்தீவிலிருந்து நாள்தோறும் பூக்கள் கொண்டு வந்து நயினாதீவிலுள்ள அம்பிகையை வழிபட்டு வந்தது. ஓர் நாள் நாகம் பூக்களைக் கொண்டு கடல்மார்க்கமாக வரும் வழியில் ஒரு கருடன் அதனைக்கொல்வதற்கு முனைந்தது. நாகம் பயத்தினால் கடல் நடுவில் இருந்த கல்லொன்றினைச் சுற்றிக்கொண்டது. கருடன் மற்றொரு கல்லில் அமர்ந்த வண்ணம் நாகத்தைச் கொல்ல சந்தர்ப்பம் பார்த்தது. இதன்போது கடல் வழியாக மரக்கலம் ஒன்றில் பண்டங்களை ஏற்றி வந்த வணிகன் ஒருவன் இந்தக்காட்சியைக் கண்டான். பாம்பின் மீது இரக்கம் கொண்டான். பாம்பை கொல்லவேண்டாம் என்று கருடனை வேண்டினான். அதற்குக் கருடன் நீ உனது செல்வம் அனைத்தையும் கொண்டு வந்து அம்பிகைக்கு கோயில் அமைப்பதாக உறுதியளித்தால் நான் இந்த நாகத்தைக் கொல்லாது சென்று விடுகிறேன் என்றது. அவனும் அவ்வாறே உறுதியளிக்க கருடனும் நாகத்தைக் கொல்லாது விலகிச் சென்றது. இக்கதைக்கு சான்றாக நயினாதீவின் வடக்கே இரண்டு கற்கள் இன்றும் காணப்படுகின்றன. அவை பாம்பு சுற்றிய கல், கருடன் இருந்த கல் என்ற பெயருடன் அழைக்கப்பட்டு வருகிறது.

## நாரந்தனை

யாழ்ப்பாணத்தின் கண்ணாக விளங்கும் தீவகத்தின் சைவமும் தமிழும் கமமும் இடமாக விளங்குவது நாந்தனையாகும். நாரந்தனை வடக்கு, தெற்கு எல்லை 02மைல் தூரமாக இருக்கிறது. வடக்கு எல்லை கடலாகவும் தெற்கு எல்லை உவர்மண்ணைக்கொண்ட சரவணைக்கிராமமும், புளியங்கூடல் கிராமமும் அமைந்துள்ளது. அத்துடன் கிழக்கு மேற்கு எல்லை 02 மைல் தூரம் அளவிருக்கும் நாரந்தனைக்கிராமத்தின் கிழக்கு எல்லை மயானமாக அமைந்துள்ளது மேற்கே கரம்பன் கிராமத்தையும் ஊர்காவற்றுயையும், தம்பாட்டிக்கிராமத்தையும் கொண்டுள்ளது. அதாவது நாரந்தனை கிராமத்தின் கிழக்கு மேற்கு எல்லைகளாக 8ம் கட்டையாகவும் 10ம் கட்டையாகவும் அமைந்துள்ளது.

முன்னர் ஒரே ஒரு கிராமசேவையாளர் பிரிவின் கீழ் இயங்கின. இக்கிராமம் தற்போது மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளாக கொண்டுள்ளது. அவையான நாரந்தனை வடக்கு, நாரந்தனை மத்தி நாரந்தனை தெற்கு என்பவை ஆகும். இவ்நாரந்தனை கிராமமானது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் அமைந்தது மட்டுமல்லாமல் ஊர்காவற்றுறை பிரதேசசபை நிர்வாகத்தின் கீழ் உள்ளதுமாகும் இக்கிராமத்தினூடாக யாழ் - பண்ணை பிரதான வீதி ஊடறுத்து செல்கின்றது.

வேலணைத்தீவினதும் அதனுள் அமைந்துள்ள கிராமங்களினதும் பெயர்களையும் ஒப்புநோக்கும் போது நாரந்தனை எனும்பெயர் வருவதற்கு பல காரணங்கள் கூறுகின்றனர். அதாவது முல்லைநிலத்தெய்வமான திருமால் வந்து அணைந்த அதாவது திருமாலின் பெயராகிய நாராயணன்தானை நாரந்தனை என்று மருவியதாக கொள்கின்றனர். ஏனையோர் நாகர்தானை அதாவது நாகர்சேனை தங்கிய இடம் என்றோ நாகர்தாயம் அதாவது நாகரது உரிமைப்பங்கு என்றோ அதுவும் இல்லாவிடின் நாகர் தானம் அதாவது நாகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசித்த இடம் அல்லது நாகர் கொடுத்த இடம் என்றோ கொண்டு நாகர் தானை நாகர் தாயம் ஆகியது என்றும் நாகர் தானம் என்ற பெயர்களே காலப்போக்கில் திரிவுற்று நாரந்தனை என்று எண்ணுவது சிறப்பானது.

இவ்வாறே நாரந்தனை கிராமத்தின் அயற்கிராமங்களான சரவணை என்பது சரவணன் தானை என்பதும் கரம்பொன் என்பது கதிரன் தானை என்பதும் வேலணை என்பது வேலன் தானை என்பதும் ஆக பெயர்கள் அமைந்துள்ளது.

நாரந்தனையில் ஆதிக்குடிகள் நாகர் தான் என்பதனை நாரந்தனை வடக்கிலுள்ள அன்னை தான் தோன்றீஸ்வரி மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் காணப்படும் ஐந்து தலை நாக விக்கிரகம் விளக்கி காட்டுகின்றது. இவ்விக்கிரகம் ஆலயத்தின் அருகாமையில் உள்ள கடலில் கண்டெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்விக்கிரகத்தின் காலத்தினை அறிய முடியாது. இருந்தபோதிலும் நாகர் வாழ்ந்த தொல்பதியானபடியால் இங்கும் அவர்களுக்கு நாக வழிபாடு சிறப்புற்று இருந்தது என்பதனை நாம் அறிந்து கொள்ளும் வாய்ப்பை இதனால் பெற்றுக்கொண்டோம். சோழர்காலத்திலும் நாரந்தனை சிறப்பு மிக்க கிராமமாகவே திகழ்ந்திருக்கிறது என்பதற்கு மேற்கூறிய அம்பாளின் விக்கிரகத்துடன் பூமிக்குள் இருந்து எடுக்கப்பட்ட சோழர் நாணயங்களும் காலத்தினை நிர்ணயிக்க முடியாத நுனிபுரம் ஆதிவைரவர் ஆலயமும் ஆதாரமாக காணப்படுகிறது. இத்தகைய பூர்வீக எடுத்துக்காட்டுக்கள் இத்தீவின் வேறு எந்த கிராமங்களிலும் இன்றுவரை வெளியானதாக தெரியவில்லை ஆகவே ஆதிப்பூர்வீக குடியினர் வாழ்ந்த இடம் நாரந்தனையே என்று கொள்ளலாம்

நாரந்தனையில் வாழ்ந்த பூர்வீக குடிகள் தமக்கு என ஓர் கலப்படமற்ற பண்பாட்டையே கடைப்பிடித்து வந்தனர். இவர்கள் தமது கிராமத்தை குடியிருப்பு பகுதி, வயற்புறம், சிறுபயிற்காணி, ஆலய நிர்வாகத்தின் பிரிவு, மந்தைமேயும்வெளி, எல்லைக்கோடு, காவற்பகுதி என்பனவாக பிரித்து வைத்திருந்தனர் என்பதற்கு பின்வரும் பெயர்கள் எடுத்துக்காட்டுகின்றன. பெரியபுலம், ஈச்சம்புலம், உயரப்புலம், அம்பலப்புலம், நாரிங்கன் புலம், பத்துவாரப்புலம், என்பன போன்ற பெயர்களால் வயற்புறத்தையும் பெரியகாடு, மாவடியாக்காடு, எள்ளுக்காடு, என்று சிறுபயிர்காணிகளையும் குடியிருப்புக்காணிகளை வளவு என்ற பெயரிலும் ஆலய நிர்வாகத்தினர் வசித்த காணிகளை பண்டாரி வளவு, கங்காணி வளவு, கும்பன் வளவு, பணிகாரன் வளவு என்ற பெயரினாலும் ஆலயம் அமைந்துள்ள இடங்களை நுனிபுரம் என்பது போன்ற புரம் எனும் பெயர்களாலும் மந்தைகள் மேயும் இடங்களை தரவைகள் என்ற பெயரினாலும் அழைத்து வந்தனர், அத்துடன் கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் காவற்பகுதிகளையும் அமைத்து இருந்தனர் என்பதற்கு ஆதாரமாக ஊர்காவற்றுறை என்றும் மாவிற்காடு என்றும் வடக்கிலும் மேற்கிலும் காவற்பகுதிகளையும் அமைத்து இருந்தனர். மாவிற்காடு என்ற காணியின் பெயர் மாகாவிற்காடு என்ற சொல்லின் திரிபாகவும் இருக்கலாம். ஏனெனில் இக்காணிக்கு அருகிலுள்ள காணிக்கு தனுக்கடி என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளதாகவும் தனுக்காரர் என்பவர் எதிரிகளை கண்டவர் அல்லது தலைவரின் அறிவித்தலை கேட்டதும் தனுக்கு என்ற தோலால் செய்யப்பட்ட மேளத்தை முழக்கி ஊரில் உள்ளவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியினை தெரிவிப்பவர்களாகவும் இருந்திருக்கலாம். இத்தகைய ஊர் சிறப்பான கிராம அமைப்பு முறை பூர்விக குடி-களிடம் காணப்படுவது இயல்பு ஆகும்.

நாரந்தனை கிராமத்தின் வடபால் தம்பாட்டி என்றும் தம்பநகர் என்று கூறப்படும் கடலை சார்ந்த ஓர் அழகிய சிற்றூர் அதாவது குறிச்சி உண்டு. இக்கடல் பாதையூடாக பருத்தியடைப்பில் இறக்கப்படும் பொருட்கள் வத்தைகள் ஊடாக விறாட்டிமுனை ஊடாக வெட்டாத்து ஓடை (ஆழமாக்கல் பகுதி) வழியாக பொருட்களை ஏற்றிக்கொண்டு அலுப்பாந்தி என அழைக்கப்படும் இடத்திற்கு இரவு வேளைகளில் வரும் படகுகளுக்கு வழிகாட்ட தீப்பந்தங்கள் (தீபத்தம்பம்) வடமேற்கு முனையில் அமைக்கப்பட்ட காரணத்தினால் தம்பங்காட்டி என்பது காலப்போக்கில் தம்பாட்டி எனப்பெயர் பெற்றதாக அறிய முடிகிறது. இவ்வூரின் ஆரம்ப வாயிலிலே காலத்தால் அறியப்படாத நுனிபுரம் ஆதி வைரவர் ஆலயம், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும் நுனிபுரம் என்று அழைக்கப்படும் கேணியும் அமைந்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

## கண்ணகியம்மன் வழிபாடு

தமிழ் இலக்கியங்கள் பண்பாட்டின் ஆணி வேர்களாகத் திகழ்கின்றன. அவை தமிழனின் இருப்புக்கும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் நிறைய பங்களிப்பைச் செய்து வந்திருக்கின்றன. இவற்றுள் சமயம் சார்ந்த இலக்கியங்கள் முக்கியமாக நோக்கப்பட வேண்டியவை. இதில் சிலப்பதிகாரம் தன்னிகரில்லாத காப்பியமாகும். கண்ணகி வணக்கம் இலங்கையின் இரண்டு இனத்தாரிடையே (தமிழர், சிங்களவர்,) வளர்க்கப்பட்டு வந்து கண்ணகி அம்மன் என்றும் சிங்களத்தில் பத்தினி தெய்யொ என்றும் வழங்கப்பட்டு வந்தது. கயபாகு மன்னன் காலத்தில் கண்ணகி வழிபாடு இலங்கைக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. இலங்கைத்தீவில் பல ஆலயங்கள் இருந்த போதிலும் முதல் ஆலயம் எங்கு எப்போது கட்டப்பட்டது என்பது தொடர்பில் தெளிவில்லை எனினும் கட்டப்பட்ட ஆலயங்களில் பெரும்பாலும் கடலோரமாகவே கட்டப்பட்டுள்ளன. எமது மண்ணிலும் கரம்பன் மேற்கு இறங்குதுறைக்கு அண்மையில் ஓரேயொரு கண்ணகை அம்மன் ஆலயம் அமையப்பெற்றுள்ளதனால் அவ்விறங்குதுறை கண்ணகியம்மன் இறங்குதுறை என அழைக்கப்பட்டு வருகிறது.

## சிவில் ஆட்சிமுறை

இலங்கையில் ஸ்தலதாபன அமைப்பு நீண்ட கால வரலாற்றினை கொண்டது ஆரம்பகால கிராமங்களின் பரிபாலனங்களை மக்கள் குழுவின் தலைவர்கள் மேற்கொண்டனர். தமது மக்களின் நல்வாழ்வை உறுதி செய்து பாதுகாத்து தமக்கென ஒரு குடியிருப்பு பகுதியை நிரந்தரமாக உறுதி செய்து கொள்ள இவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். அயலவர்கள், கொள்ளையர்கள், மட்டுமல்லாமல் விலங்குகளால் ஏற்படும் துன்பங்களிலிருந்து மக்களைப்பாதுகாக்க வேண்டியநிலை ஏற்பட்டது. இந்நிலையில் வல்லமை மிக்க கிராம தலைவர்களில் இருந்து அரசர்களும் உருவாகினார்கள்.

செல்வாக்கும் பலமும் மிக்க தலைவர்களின் காரணமாக இலங்கையில் வம்ச ஆட்சிமுறை நிலைபெற்றது. அவ்வம்ச ஆட்சியிலே உள்நாட்டு அரசர்குழாம் சில வேளைகளில் வெளிநாட்டு அரசர்களும் வந்து போரிட்டு ஆட்சியை தம்வசம் எடுத்துக்கொண்ட வரலாற்றைக் காண்கிறோம் இலங்கையில் பல்வேறு அரசர்கள் ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்திய போதிலும் உள்ளூர்மட்ட ஆட்சிமுறை ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் உருவாக்கம் பெற்ற காலப்பகுதியாக பண்டுகாபய மன்னன் காலத்தையும் சோழ அரசனான இராஜராஜ சோழன் காலத்தையும் குறிப்பிடலாம். சோழ அரசர் காலத்தில் குடவோலை முறை வாக்களிப்பு இடம்பெற்றமைக்கு சான்றுகள் உள்ளன. சிங்கள அரசர் காலத்தில் கம்சபா என்னும் கிராம ஆட்சிமுறையும் ரட்டசபா என்னும் சிறுநகர ஆட்சிமுறையும் இருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. இங்கு மக்களின் வாக்களிப்பு பிரதான பங்காற்றியுள்ளது.

பிரபுத்துவ சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளூர் நிர்வாகத்தை கையாளும்படியாகவும் கிராமம் சமாதானமான சூழ்நிலையில் பராமரிக்கப்படவும் இச்சபைகள் உதவின. இவர்கள் அரசுக்குரிய சில வரிகளை அறவிட்டு கொடுப்பவர்களாவும் இருந்துள்ளனர்

இம்முறைமையை ஓட்டியே பின்னர் வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேய ஆட்சியாளர்களும் உயர்குடி நியமன முறைமையைக் கடைப்பிடித்தனர். ஆயி-னும் ஆங்கிலேயர் 1861ம் ஆண்டில் உள்ளூராட்சி முறையையும் மத்திய நிருவாக முறையையும் பிரிட்டன் நாட்டிலுள்ள நடைமுறைகளை ஒத்ததாக மாற்றம் செய்தனர். நாட்டுநிருவாகத்தை மாகாணங்களாக பிரிவு செய்து நடைமுறைப்படுத்தினர். எனவே நிருவா-கம் மத்திய ஸ்தாபனம், மாகாண சபைகளாக பிரிவு செய்து நடைமுறைப்படுத்தினர். நாட்டிலுள்ள பாதைகளை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட அக்காலகட்டத்தில் மாகாண வீதிச்சபை, மாவட்ட சபை என்பன 1861ல் அமைக்கப்பட்டன

1865ம் ஆண்டு கொழும்பு மாநகர சபை ஆரம்பமாகியது. அடுத்த ஆண்டில் சுகாதார சபைகள் (Board of Health) என்னும் அமைப்புகள் மாகாண அடிப்படையில் சில சுகாதார சேவைகளை நடைமுறைப்படுத்த அமைந்தன. இதனை அடுத்து கிராம சமுதாயங்கள் (Village Committee) எனப்படும் கிராம சபைகளின் மூதாதை எனப்படும் கிராமமட்டச்சபைகள் 1871ல் உருவாகின. 1892ம் கட்டளைச்சட்டபடி பெரிய பட்டினங்களுக்கு (Local Boards)எனப்படும் ஸ்தல சபைகளும் ஒரளவு சிறிய பட்டினங்களுக்கு சௌக்கிய சபைகள் (Sanitary Committe) என்பன அமைக்கப்பட்டன. பாடசாலை நிர்வாக விடயங்களை (School Committe) எனப்படும் பாடசாலைச்சங்கங்கள் கவனித்தன.இவை யாவும் அரசினால் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களையும் அதிகாரிகளையும் கொண்டு இயங்கின.

டொனமூர் அரசின் சீர்திருத்தப்படி சர்வஜன வாக்குரிமை 1931ம் ஆண்டில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. வாக்களிக்கும் உரிமை பெற்ற மக்கள் தம் சார்பான பிரதிநிதிகளையும் தெரிவு செய்யும் வாய்ப்பை பெற்றுக் கொண்டார்கள்.

கிராம சங்கம் - பட்டின சங்கம் - நகர சங்கம், -மாநகர சபையென மக்களால் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல்களில் வாக்களித்தனர். வட்டாரப்பிரதிநிதிகளையும் அதன் மூலம் சேர்மன் (Chairman) எனப்படும் தலைவரையும் தெரிவு செய்தனர்

1946ம் ஆண்டு - தலதாபன தேர்தல் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1953ம் ஆண்டு 1959ம் ஆண்டு திருத்தச்சட்டங்கள் 1931ம் ஆண்டு காலப்பகுதியில் ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி அனைத்து தீவுப்பகுதிகளையும் வலிகாமம் மேற்கு பகுதியையும் உள்ளடக்கியதாக அமையப்பெற்றது. இன்றும் தீவுப்பகுதிகளுக்கான தேர்தல் தொகுதியாக ஊர்காவற்றுறையே விளங்கிறது. இவ்வகையில் ஊர்காவற்றுறை பட்டினம் ஆரம்பகாலத்தில் (1947ற்கு முன்னர்) சௌக்கிய சபையாக அமைந்தது. யாழ்ப்பாணகுடாநாட்டில் யாழ்ப்பாண நகர அபிவிருத்தி சபைக்கு அடுத்ததாக ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய மூன்றுமே இவ் அந்தஸ்தினைப் பெற்றன. பின் 1947ல் பட்டின சபையாக 05 வட்டாரங்களையும் தலைவரையும் கொண்டதாக வளர்ச்சி பெற்றது. காரைநகர் கிராமச்சங்கம் நீண்டகாலமாகச் செயலாற்றி 1971.01.01முதல் காரைநகர்வடக்கு, காரைநகர்தெற்கு கிராம சபைகளாக பிரிவடைந்து செயற்பட்டது

வேலணை கிராம சபையின் ஒரு வட்டாரமாக இருந்த நாரந்தனை 1954ம் ஆண்டு தனியாக நாரந்தனை கிராம சபையாக உருவாகியது. அனலைதீவு கிராம சபையின் ஒரு வட்டாரமாக இருந்த எழுவைதீவு இவ்வாறு தனி கிராம சபையாக உருவாகியது.

இவை யாவும் 1972ம் ஆண்டு வரை உள்ளூராட்சிமன்றத்தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை கொண்டிருந்தது. 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்றதும் இச்சபைகள் கலைக்கப்பட்ட விசேட ஆணையாளர்களின் பொறுப்பில் கொண்டு வரப்பட்டன. அத்துடன் 1978ம் ஆண்டு சீர்திருத்தங்களின் படியும் 1980ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச்சபை சட்டபடியும் 1981ம் ஆண்டு ஜுலை 1ம் திகதி தொடக்கம் மாவட்ட அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டன. இதன் அங்கமாக கிராமசபைகளும் பட்டினசபைகளும் உள்ளீர்க்கப்பட்டன இதன்படி நாட்டில் மாநகர சபைகளும் நகர சபைகளும் அபிவிருத்தி சபைகளும் நடைமுறையில் இருந்தன.

1978ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவத்தை பயன்படுத்திய தேர்தல் முறை இதுவாகும். இதன்படி மாவட்ட அபிவிருத்திச்சபைக்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் பதவிவழி உறுப்பினர்களாகவும் இருந்தனர். அத்துடன் மாவட்ட அமைச்சர் அல்லது வேறு பிரதிநிதியும் இடம்பெறுவர்

இச்சபைகள் கிராமமட்டத்தில் மக்களுக்கு அபிவிருத்தி, நிருவாகம், ஆகியவற்றில் தீர்மானம் எடுப்பதில் பங்களிப்பு செய்ய ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களாகும். இவை ஜனநாயக ரீதியா-னவை மக்களால் மக்களுக்காக செயற்படுத்தப்படும் ஸ்தாபனமாகும். இதன் அடிப்படையில் ஊர்காவற்றுறைபிரதேச சபை 1987ம் ஆண்டின் 15ம் இலக்க கட்டளைச்சட்டம் மூலம் 1988ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது இச்சபை தனது நான்கு உபஅலுவலகங்கள் ஊடாக தனது சேவையினை வழங்கி வருகிறது

## எழுத்தாளர்சங்கம் உருவாக்கம்

தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம் 1986ம் ஆண்டு காலப்பகுதியில் இம்மண்ணில் இயங்கி வந்த சான்றுகளும் உள்ளது. சென்னையில் தமிழ்நாடு சங்கத்தலைவராயிருந்தவரும் B.B.C வானொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழோசையினை ஆரம்பித்தவருமான கோ.சிவபாதசுந்தரம் 30,40களில் "கலை மகள்" போன்ற பத்திரிகையில் கட்டுரை எழுதியவர் ஆவார். கரம்பனூர் குலசபாநாதன். சிறுகதை உலகில் காவலூர் இராசதுரை, காவலூர் சிவபாலன். காவலூர் இளையவன் ஜெகநாதன். காவலூர் இரட்டையர் என அழைக்கப்பட்ட உதயன், ரமேஸ் போன்றவர்கள் நினைவு கூரத்தக்கவர்கள். இச்சங்கத்தின் தலைவராக கரம்பொன் சண்முகநாத அதிபர் ஆசிரியமணி திரு. ஆ. சபாரத்தினம் தலைமை தாங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பனைவளம் காப்போம்

ஒரு பிரதேச மக்களின் பண்பாட்டுக்கோலங்களில் உணவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பது எமது இலக்கிய மரபு. யாழ்ப்பாண பிரதேச மக்களின் உணவுப்பழக்கவழக்கங்களுக்கு அடிப்படையாக அமைவது புவியியல் சார் நிலவியல்பே எனலாம். எமது பிரதேச மக்களின் வாழ்வியலோடு அண்மித்த முக்கிய உணவாக அமைந்தது பனம் பண்டங்களே எனலாம். இந்தப்பிரதேச மக்களின் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்வதில் பனம் பண்டங்களுக்கு பிரதான பங்குண்டு.

19ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பனங்காய்ப்பாரதம் என்ற பெயரில் ஓர் இலக்கியம் தோன்றியதையும் இங்கு சுட்டிக்காட்டலாம். சமூகத்தின் சகல மட்டங்களிலும் பனம் பண்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருந்தது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பட்ட சீதன முதுச உறுதிகளில் குறிப்பிடத்தக்களவு (பனம் காணி), (பனம் அடைப்பு) வழங்கப்பட்டமையைக் குறிப்பிடலாம்.



வசதி படைத்தோர், வசதி குறைந்தோர் என்ற பாகுபாடின்றி அந்தக்காலத்தில் பனம் பழங்களை சேர்த்து பனாட்டு செய்வர். இது சாதாரண பனாட்டு, பாணிப்பனாட்டு என வேறுபடுத்தப்படும். இதைவிட பனங்காய்ப்பணியாரம், பனங்காய்பிட்டு, என்பனவும் பனங்கிழங்கை கிழித்து ஒடியல் அதனை அவித்து புழுக்கொடியல் என்பன செய்வர். இவ்ஒடியல் மாவில் ஒடியல் கூழ் காய்ச்சப்படும். இது மச்சக்கூழ், சைவக்கூழ் என பாகுபடுத்தப்படும். கோதுமை மா வருகைக்கு முன்னர் இதன் பயன்பாடு மதிக்க முடியாததாகும்.

## யாழ்.மறைமாவட்டத்தின் குட்டித்திருச்சபை


யாழ்.மறைமாவட்டம் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி ,முல்லைத்தீவு ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய ஒரு பழம் பெரும் மறைமாவட்டம். பல மறைமாவட்டங்களுக்கு தாய் மறைமாவட்டமாக பல மறைமாவட்டங்களை பெற்றெடுத்தமை குறிப்பிடத்தக்கது. அம்மறைமாவட்டங்களின் ஆயர்களை உருவாக்கியதும் எங்களது மண் என்று சொன்னால் மிகையாகாது. அவர்களில் யாழ். மறைமாவட்டத்தின் சுதேச ஆயரும், இலங்கையின் முதல் தமிழ் ஆயருமாகிய பேரருட்திரு. ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை (யாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமாவட்டம்), பேரருட்திரு.வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை (யாழ்.மறைமாவட்டம்), பேரருட்திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,

(மட்டு-திருமலை மறைமாவட்டம்) பேரருட்திரு.L.R.அன்ரனி ஆண்டகை (மட்டு-திருமலைமறைமாவட்டம்), பேரருட்திரு. தோமஸ் சௌவுந்தரநாயகம் ஆண்டகை (யாழ்.மறைமாவட்டம்)



Rt.Rev. Dr. J. Emilianus Pillai

Rt.Rev. Dr. B. Deogupillai

Rt.Rev. Dr. L. R. Antony

Rt.Rev. Dr. Thomas Soundranayagam

Rt. Rev. Dr. Kingsley J. Swampillai



பேரருட்திரு.ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை (யாழ். மறைமாவட்டம்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். தீவுப்பகுதியானது ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை, மண்டைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, சாட்டி ஆகிய ஏழு பங்குகளையும் ஏறக்குறைய 34 ஆலயங்களையும் கொண்ட ஒரு கத்தோலிக்கத்தின் விளைநிலம் ஆகும். யாழ்.மறைமாவட்டத்தின் மிகப்பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களான சரவணை சின்னமடுமாதா யாத்திரைத்தலம், கரம்பொன் அன்னை வேளாங்கன்னி ஆலயம் ஆகியன ஊர்காவற்றுறையில் அமைந்துள்ளன. இலங்கைத்திருச்சபையின் குட்டி உரோம் என அழைக்கப்படும் அளவிற்கு இங்கு உரோமாபுரி நகரில் அமைந்துள்ளது போல மிக அருகில் டோம்(Dome) உள்ள பேராலயங்கள் அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலயம், ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயம், ஊர்காவற்றுறை புனித சூசையப்பர் ஆலயம், கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயம், நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயம்) போன்றனவாகும்.

டச்சுக்காரரின் ஆட்சிக்காலத்தில் காவலூரில் கத்தோலிக்க ஆலயங்கள் (பெரும்பாலும் உறுதியற்ற ஆலய அமைப்புகள்) அழிக்கப்பட்டன அல்லது சிதைக்கப்பட்டன. ஒல்லாந்தர் ஆட்சியின் முடிவில் ஆங்கிலேயர் மதசுதந்திரம் வழங்கியதையடுத்துப் பல ஆலயங்கள் மீண்டும் விரைவாக உருவாகின. காவலூரில் ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலங்களில் முதன் முதலில் அமைக்கப்பட்ட ஆலயம் புனித தோமையார் ஆலயம் என்று கூறப்படுகிறது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1932ம் ஆண்டு எழுதிய காவலூர் புனித அந்தோனியார் ஆலய வரலாற்றில் இதைக்குறிப்பிட்டுள்ளார். தற்பொழுது புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள இடத்திலேயே முந்திய தோமையார் ஆலயம் இருந்தது என அவர் எழுதியுள்ளார். டச்சுக்கால வேதகலாபனையினால் கத்தோலிக்க ஆலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைக்கப்பட்டபோது அவ்வாலயங்களில் இருந்த புனிதர்களின் திருவுருவங்கள் விசுவாசிகளினால் பாதுகாக்கப்பட்டு நிலத்திலும், கிணறுகளிலும், மரப்பொந்துகளிலும் மறைத்து வைக்கப்பட்டன. இவ்வாலயம் தொல்லியல் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட்ட நினைவுச்சின்னமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயர் யூலன் காலத்தில் கிறிஸ்தவ பண்பின் உரைகல்லான தேவமாதாவின் பக்தி பெரிதும் வளர்ந்தது. 1622 செப்ரெம்பர் 8ல் திருச்சபையும் அரசாங்கமும் யாழ்ப்பாண இராச்சியத்தை தேவமாதாவுக்குப் பகிரங்கமாக அர்ப்பணித்த நாள்முதல் யாழ்ப்பாண மக்கள் தேவதாய்மீது விசேட பக்தி கொண்டிருந்தனர். மடுமாதா பக்தி வழிந்து பாய்ந்த காரணத்தினால் 1895ல் மட்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சின்னமடுமாதா ஆலயம் அமையப்பெற்றது. வருடமுழுவதும் யாத்திரிகர்கள் அங்கு போய் வருகிறார்கள். இது யாழ்ப்பாண மாவட்டத்தின் யாத்திரைத்தலமாக பிரகடணப்படுத்தப்பட்டுள்ளதுடன்இத்திருவிழா விற்கான ஒழுங்குகளை ஆலயப்பரிபாலகருடன் இணைந்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் ஏனைய அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்நிகழ்வினை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள்.

## இலங்கையில் திருச்சிலுவைக் கன்னியரின் பணி

யாழ்.மறைமாவட்டத்திற்கு 1924மார்ச் மாதம் 9ம் நாள் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்ட அதி.வண. யோண் அல்பிறட் கியோமர் (அ.ம.தி) ஆண்டகையின் அயராத முயற்சியினால் திருச்சிலுவைக்கன்னியர் சமூகம் 1930ம் ஆண்டு ஆடி மாதம் ஊர்காவற்றுறையில் கால் பதித்தனர். இவர் இந்தியாவின் குயிலோன் மாநிலத்தில் உள்ள (Menzingen) திருச்சிலுவைக்கன்னியர்களிடம் இங்குள்ள வயோதிபர்களினதும், நோயுற்றோரினதும் அத்தியாவசிய பராமரிப்புத் தேவையை புடமிட்டுக்காட்டியதன் பயனாக திருச்சிலுவைக்கன்னியர்களின் முதற்தொகுதியினர் யாழ்ப்பாணத்தின் ஊர்காவற்றுறை மண்ணில் வந்திறங்கினர். அன்று தொடக்கம் அவர்கள் தங்கள் தன்னலமற்ற சேவையை வைத்தியசாலைகளிலும், முதியோர்பராமரிப்பு இல்லங்களிலும், குருநகரிலுள்ள நலன்புரிநிலையத்திலும் அர்ப்பணிப்புடன் வழங்கி வந்தனர். பின்னர் தங்கள் சேவையை ஏனைய மறைமாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தினர்.

திருச்சிலுவை என்ற வித்தை ஊர்காவற்றுறைக்கு



Sisters ' Quarters in Kayts



Sisters travelling in Colombogam

The mode of travel at that time



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்த அருட்சகோதரிகளில் ஒருவரான அருட்சகோதரி. கரோலா (Sr.Carola) நோய்வாய்ப்பட்டு 1931ம் ஆண்டு



தனது இறுதிப்பயணத்தை மேற்கொண்டார். அவரது வித்துடல் ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அவர்கள் ஊர்காவற்றுறை மண்ணில் இட்ட வித்து பெருவிருட்சமாக வளர்ந்து கனி கொடுப்பதற்குக் காரணமாக இருந்த அவரின் கல்லறை இன்று சாட்சிபகர்கின்றது.

## காலணித்துவ நிர்வாகம்

ஒல்லாந்தரிடம் இருந்து ஆட்சியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர் தங்கள் நிர்வாகத்தை இலகுபடுத்தும் நோக்கமாக இலங்கையை ஒன்பது மாகாணங்களாகப் பிரித்தனர். யாழ்ப்பாண நாடு வடமாகாணத்திற்குள் அடங்கியது. யாழ்ப்பாண நாடு - யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு, வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு, வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, தீவுப்பற்று என்னும் எட்டு மணியகாரர்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வடமாகாண அதிகாரியான ஏஜெண்டருக்கு கீழ் ஒவ்வொரு ஊருக்கும் அவருக்கு உதவியாக ஒவ்வொருமணியகாரரும் அவரின் கீழ் பல உடையார்மார்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஊர்காவற்றுறையில் மணியகாரர் ஒருவரும் உடையார் ஒருவரும் ஊர்காவற்றுறை. நாரந்தனை, சரவணை ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் மூன்று விதானைமார்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் அரசிறையை ஒழுங்காகச் சேர்ப்பதற்கும் பிரஜைகளைப் பாதுகாப்பதற்கும் உதவி புரிந்து வந்தனர்.

மணியகாரரின் காரியாலயம் ஊர்காவற்றுறையின் மத்தியில் அமைந்திருந்தது. தீவுப்பற்றுக்கான பொலிஸ் நிலையம், கோடு(நீதிமன்றம்) ஊர்காவற்றுறையில் நிறுவப்பட்டிருந்தது. பணக்காரர்கள், ஏழைகள் படித்தவர்கள். படிக்காதவர்கள் என்றில்லாது சகலருக்கும் சமநீதி கிடைக்க வாய்ப்பேற்பட்டது. வழக்குதீர்ப்புகளில் திருப்தியடையாதவர்கள் மறுபரிசீலனைக்காக சுப்ரீம்கோட் பிரிவுக்கவுன்சில் ஆகியவற்றில் மேன் முறையீடு செய்யவும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டன.

## தோம்புகள் பற்றிய அறிமுகம்

தோம்புகள் பனை ஓலையிலும், கடதாசியிலும் எழுதப்பட்டன. தோம்புகளின் பிரதிகள் அந்தந்தப் பகுதி உடையாரிடம் பேணப்பட்டன. ஒல்லாந்து மொழியிலும் தமிழிலும் தோம்புகள் எழுதப்பட்டன. 1740ம் ஆண்டு தோம்புகள் எழுதும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. தோம்புப்பதிவு புத்தகம் "Dooms Day a Book" என அழைக்கப்பட்டது. பதினைந்து வருடங்களுக்கொரு முறை தோம்புகள் திருத்தியமைக்கப்பட்டன. 1843ம் ஆண்டு இப்பனையோலைத் தோம்புகள் அழிவு நிலையினை அடைந்த நிலையில் அதனை 1844ல் இங்குள்ள 181



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியத்தோம்புகளும் கடதாசியில் எழுதப்பட்டன.

## கலெக்டர் ஆட்சி முறை (Collector)

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து இலங்கையின் கரையோரப்பகுதிகளின் நிர்வாகம் கிழக்கிந்தியக்கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பனியின் தலைமை அலுவலகம் சென்னையிலிருந்தது. இலங்கையின் ஆளுனராக தளபதி நோர்த் நியமிக்கப்பட்டார். தாம் கைப்பற்றிய கரையோரப் பிரதேசங்களில் கலெக்டர்களையும் (Collector) பிரித்தானிய அரசு நியமனம் செய்தது. ஆரம்பத்தில் இறைவரித்திணைக்களம் என அழைக்கப்பட்ட உள்நாட்டு நிர்வாக அலுவலகம் (Revenue Department) பின்னர் சிவில் நிர்வாக அலுவலகம் என பெயர் மாற்றம் பெற்றது. கலெக்டருக்கு உதவியாக உதவி கலெக்டர் ஒருவரும் நிர்வாகத்தை கவனிப்பதற்கு அலுவலக உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மூவரும் பிரித்தானிய பிரஜைகள் ஆவர். இவர்களுக்கு அடுத்தபடியாக தமிழ் முதலியார் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். இவரது காலத்தில் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை போன்ற இடங்களிலிருந்து வர்த்தக நோக்கில் இந்தியா சென்று வருபவர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதுடன் அவர்களிடமிருந்து கடவுச்சீட்டு வரி அறிவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதை விட வேறு பலவரிகளும் அறவிடப்பட்டன.

## மணியகாரன், உடையார் நிர்வாகம்

கிராம மட்டத்தில் மணியகாரன் ஒருவரும் கிராம தலைமை அதிகாரி (Village Head Man) தமிழில் உடையார் என அழைக்கப்படதாக கொல்வின். ஆர்.டி.சில்வா Ceylon under British Occupation என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மணியகாரன் பதவி உதவி அரசாங்க அதிபர் அல்லது பிரதேசசெயலர் பதவிக்கு சமனான பதவியாகும்.

முதலியார், மணியகாரன் உடையார், பதவிகள் உயர் சாதியினருக்கே வழங்கப்பட்டன. ஊர்காவற்றுறையில் ஒல்லாந்தர் காலத்தில் மணியகாரன் என்ற அமைப்பும் இயங்கியதுடன் (மணியகாரன் வீதி) மணிய காரன் அமைத்த புறாக்கூட்டில் (Pigeon Nest) புறாக்கள் வளர்க்கப்பட்டு அவை தூதுப்பணிக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் இவ்வாறான ஓர் அமைப்பு நெடுந்தீவுப்பிரதேசத்தில் அமையப்பெற்றுள்ளதை



காணக்கூடியதாகஉள்ளது.1814ம் ஆண்டு ஏனைய சாதியினருக்கும் முதலியார், மணியக-ாரன். உடையார் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டதாக தகவல் இல்லை. வேறு யாராவது நியமிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் அதற்கான ஆதாரம் ஏதும் இல்லை. 1798ல் தீவகத்தில் சுப்பிரமணிய முதலியார் (காரைதீவு – காரைநகர்), செண்பகவரத சிங்க முதலியார் (ஊர்காவற்றுறை), சின்னத்தம்பி இன்னாசிப்பிள்ளை (நயினாதீவு), கனகநாயக முதலியார் (வேலணை – அல்லைப்பிட்டி, புங்குடுதீவு), அரிகரபுத்திர இராமலிங்க முதலியார் (அனலைதீவு) என்பவர்கள் கடமையாற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு 4.00 இறைசால் சம்பளம் வழங்கப்பட்டதுடன் வாகனமாக பல்லக்கு வழங்கப்பட்டது. 1939ல் தீவுப்பகுதி மணியகாரர் சந்தியாப்பிள்ளை இறந்ததும் அங்கிருந்த இம்முறை ஒழிக்கப்பட்டு அதற்குப்பதிலாக காரியாதிகாரி முறை உருவாக்கப்பட்டது.

## காரியாதிகாரி நிர்வாகம்
(Divisional Revenue Officer)

1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தக்காலப்பகுதியில் மணியகாரர் முறை படிப்படியாக ஒழிக்கப்பட்டு இதற்குப் பதிலாக காரியாதிகாரி (D.R.O) அறிமுகப்படுத்தப்பட்டது. முதலாவது காரியாதிகாரியாக லண்டன் இன்ரர் பரீட்சையில் சித்தியடைந்த எஸ்.சிவஞானம் நியமனம் செய்யப்பட்டதுடன் இவர் வேலணை மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய தீவுகளை ஒரே குடையின் கீழ் நிர்வகித்து வந்தார். இதேபோல உடையார் பதவியும் இல்லாமற்போனது. விதானையார் முறை வழக்கில் தொடர்ந்து இருந்தது. இக்காலப்பகுதியில் திரு.நடராசா, திரு.பற்றிக், திரு.விநாயகமூர்த்தி ஆகியோர் கடமையாற்றினர். 1954ல் மாகாண நிர்வாக முறை ஒழிக்கப்பட்டு மாவட்டமே நாட்டில் உயர்ந்த நிர்வாக அலகாக மாறியது. மாவட்டத்தில் அரசாங்க அதிபர், காரியாதிகாரி,கிராமவிதானைமார் போன்றவர்கள் தொடர்ந்து இருந்தனர்

## மாவட்ட செயலகம்
(District Secretariat)

கோல்புறூக் ஆணைக்குழு 1833ல் இலங்கையில் மேற்கொண்ட சீர்திருத்தங்களையடுத்து கலெக்டர் பதவி அரசாங்க அதிபர் (Government Agent) என பதவிப்பெயர் மாற்றம் பெற்றது. யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராக கடமையாற்றிய எட்மண்ட் றொட்றிக்கோ முதலாவது இலங்கையா என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு மாகாணத்தின் முக்கிய நகரமான யாழ்ப்பாணத்தில் கச்சேரி அமைந்திருந்தது. கச்சேரி அரசாங்க அதிபரின் வாசஸ்தலமாகவும் விளங்கியது. யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் மாவட்ட உதவி அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டன.

இக்காலப்பகுதியில் மாவட்ட நிர்வாகத்தை முன்னெடுத்த ஆங்கில அரசாங்க அதிபர்களில் டைக்(Dyke) அவர்களது காலத்தில் மாவட்ட உதவி அரசாங்க அதிபரின் கீழ் மணியகாரர்,உடையார், விதானைமார் பணிபுரிந்தனர். இவர்கள் அனைவரும் நிலபிரபுத்துவ சமூக மேல்நிலை குடும்பங்களை சார்ந்தவர்கள். இவர்கள் பிரித்தானிய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் சட்டம், ஒழுங்கு பேணுவதில் பெரும் பங்காற்றினர். இராஜகாரிய வேலைகளை முன்னெடுப்பதில் உடையார்கள், விதானைமார்கள் முக்கிய பங்கு வகித்தனர்.

## கிராம அலுவலர் பிரிவுகள் விரிவாக்கம்

1977ல் கிராம சேவகர்களுக்கு உதவியாக ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் ஒரு விசேட சேவை உத்தியோகத்தர்கள் (Special Service Officer) நியமிக்கப்பட்டனர். எமது மாவட்டத்தில் 149 கிராம அலுவலர் பிரிவுகள் இருந்தும் 75 விசேட சேவை உத்தியோகத்தர்களே நியமிக்கப்பட்டனர். 1970ல் கமநலசேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையங்கள் உருவாக்கப்பட்டன. இங்கு விவசாய விரிவாக்க ஊழியர்கள் (K.V.S), கிராம அபிவிருத்தி ஊழியர்கள் குறைவாக இருந்தமையால் 1989ல் இவ் எண்ணிக்கைக்கேற்ப கிராம அலுவலர் பிரிவுகள் அதிகரிக்கப்பட்டதுடன் இவர்கள் கிராமசேவகர்களாக நியமிக்கப்பட்டனர்.

## உதவி அரசாங்க அதிபர் பணிமனை
(Assistant Government Agent Office)

1970களில் காரியாதிகாரி பிரிவுகள் கூடிய அதிகாரங்களுடன் குறிப்பாக நில அதிகாரத்துடன் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளாக தரமுயர்த்தப்பட்டன ஒவ்வொரு பாராளுமன்றத்தொகுதி எல்லைகளுக்கு ஒத்ததாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு இருக்க வேண்டும். இதனால் குறித்த தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினரும் உதவி அரசாங்க அதிபரும் இணைந்து மக்களுக்கு நல்லதொரு அரச சேவையினை வழங்க முடியும் எனக்கருதப்பட்டது.

இதற்கு ஏற்ப யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுவில், சாவகச்சேரி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன்துறை ஆகிய தேர்தல் தொகுதிகளுக்கு ஏற்ப உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட்டன. நிர்வாக ரீதியில் 1973ல் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு தீவுகள் வடக்கு, தெற்கு என இரண்டு பிரிவுகளாக்கப்பட்டன. தீவுகள் தெற்கு வேலணை என அழைக்கப்பட்டது. நெடுந்தீவு நீங்கலாக ஏனைய தீவு முழுவதும் ஊர்காவற்றுறையே தலைமையகமாக விளங்கியது. 1984ல் வடமராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவு வடக்கு, கிழக்கு என இரண்டாகப்பிரிக்கப்பட்டன.

முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சராக இருந்த கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் அவர்களால் அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்ட பத்திரத்திற்கு அமைய 2003ல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு தனியான ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டது. அக்காலப்பகுதியில் தனியார் காணியில் இயங்கி வந்த இப்பணிமனை ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகயிருந்த திரு.J.X.செல்வநாயகம் அவர்களது வழிகாட்டலிலும், திட்டமிடலிலும் கட்டப்பட்ட தற்போதைய கட்டிடம் 2004.12.11ம்திகதி முன்னாள் அரசாங்க அதிபராகயிருந்த திரு.செல்லையா பத்மநாதன் அவர்களால் தற்போதைய பிரதேச செயலக கட்டடம் மக்களிடம் அர்ப்பணிக்கப்பட்டது. இது மக்களின் அபிவிருத்தி செயற்பாட்டில் துரித முன்னேற்றம் ஏற்பட்டதுடன் அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்க ஒரு சந்தர்ப்பமாக மாறியது.

## இச்செயலகத்தில் கடமையாற்றிய உதவி அரசாங்க அதிபர்கள் விபரம்

**பெயர் சேவைக்காலம் தற்போதைய பதவிநிலை**

1.திரு.S.பாலரத்தினம் 1982 - 1983

2.திரு.கா.செந்தில்வடிவேல்1983 - 1984

3.செல்வி.சாந்தி சுப்பிரமணியம் 1984 - 1985
(முன்னாள் பணிப்பாளர், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்)

4.திரு.N.சிவகுருநாதன்1986 - 1986

5திரு.மு.குலசேகரம் 1986 - 1986

6.திரு.தி.பாலசுப்பிரமணியம் 1986 - 1987

7.திரு.S.சீவரத்தினம்1987 - 1990

8.திரு.ஹெக்ரர் யோசேப்1991 - 1992

9.திரு.நா.வேதநாயகன் 1993 - 1993
(அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்)

10.திரு.இ.இளங்கோவன் 1993 - 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆளுனரின் செயலாளர், வடக்கு மாகாணம்)

11.செல்வி.க.ரூபினி. 1994-1994

(செயலாளர்,மாகாணபொதுச்சேவை

ஆணைக்குழு, வடக்கு மாகாணம்)

12. திரு.க.குணராசா 1994 - 1994

13.திருமதி.ப.திலகநாயகம் போல் 1994 - 1995

14.திரு.J.X.செல்வநாயகம் 1996 - 2004

(ஆளுனரின்உதவிச்செயலாளர்,வடக்குமாகாணம்.)

## பிரதேச செயலகம்
## (Divisional Secretariat)

1991ல் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேச செயலக சட்டத்தினால் பிரதேச செயலக கட்டமைப்பு உருவாக்கப்பட்டு உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்களாக தரமுயர்த்தப்பட்டன. இங்கு வாகனப்பதிவு, ஓய்வூதியம், பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்கல், அடையாள அட்டை வழங்கல், பெண்கள் சிறுவர் அபிவிருத்தி போன்ற பல சேவைகள் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டன. இதன் இணைப்பு செயலகமாக மாவட்ட செயலகம் இயங்கியது. பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 1742/7 இலக்கமுடைய 24.01.2012 திகதிய அதிவிசேட வர்த்தமானியில் யாழ்.மாவட்டத்தில் இயங்கிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பிரதேச செயலகங்களாக தரம் உயர்த்தப்பட்டன. இதில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும் உள்ளடங்கும்

## திரு.கனகராசா ஸ்ரீமோகனன்

இவர் இப்பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி தெல்லிப்பளை பிரதேச செயலராக இடமாற்றம் பெற்று அங்கு கடமையாற்றி



வருகிறார். ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராகவும் 2004 இருந்து 2006 வரை காரைநகர் தவி அரசாங்க அதிபராகவும் பதில் கடமையினையும் தொடர்ந்து 2012 வரை ஊர்காவற்றுறை மண்ணிற்கு சேவையாற்றியுள்ளார். இவருடைய காலத்தில் இடம்பெற்ற சுனாமி. நிஷா போன்ற இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மக்களின் மீள்குடியமர்வு காலகட்டத்தில் ஆற்றிய பணிகள் என்றும் மறக்கமுடியாதவை. 2006ம் ஆண்டு பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற முகாமைத்துவ போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய மட்டத்தில் Merit பெறுபேற்றினை ஊர்காவற்றுறைக்கு பெற்றுக்கொடுத்தமை நினைவுகூரத்தக்கது.

இவ்வாறான சிறப்பும் பெருமையும் விளங்கும் இம்மண்ணில் வாழும் மக்களுக்கு சேவை செய்ய கிடைத்தமையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

## உசாத்துணை நூல்கள்


1.யாழ்ப்பாணச்சரித்திரம் ஆங்கிலேயர் காலம் - முதலியார் செ. இராசநாயகம்.

2.யாழ்ப்பாண மக்களின் உணவுப்பழக்கவழக்கம் சிவலிங்கராசா.எஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.சாதாரண மக்கள் நெருங்க முடியாத புராதன கோட்டைகள் ஊர்காவற்றுறையில் - உதயன் - 14.03.2014 – வந்தியத்தேவன்

4.சுந்தர தீபம் - அமரர் லயன் வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த வெளியீடு – 05.09.2014

5.யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருட்சபை சரித்திரச்சுருக்கம்- சுவாமி.சா.ஞானப்பிரகாசர் அ.ம.தி, சுவாமி.ம.பாவிலுப்பிள்ளை அ.ம.தி – 1986, வெளியீடு – யாழ்.கத்தோலிக்க இலக்கிய கழகம்.

6.SISTERS OF THE HOLY CROSS – SRI LANKAN PROVINCE – 1930,1955,2015

7.தமிழ் - சிங்கள மக்களால் இலங்கையில் பேணப்பட்டு வரும் கண்ணகிவழிபாடு - 29.05.2015 தினகரன்

8.நாகம் வழிபட்ட நாயகி – 17.06.2015 உதயன்

9.ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வரலாறு 1820 - 2011(A.F.R)

10.இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு வர்த்தமானப்பத்திரிகை – 2006.11.17, 2007.02.23

11.ஏகலைவன். தென்மோடிக்கூத்து, தமயந்தி – 2014

12.நாரந்தனை கிராமத்தின் வரலாறு – கந்தரூபன்.கு – 2002

13.ANTHONIAN MEMORIES, 140th Anniversary Souvenir, 1872 – 2012

14.சமயம் மற்றும் கல்வி வளர்ச்சிக்கு ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆற்றிய சேவை– 17.07.1998 வீரகேசரி

15.யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலய வரலாறு

16.தொல்லியல் நோக்கில் இலங்கைத்தமிழர் பண்பாடு – கலாநிதி.ப.புஸ்பரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலய வளர்ச்சியும், சமூக எழுச்சியும்...

கூடலூரான்
வேலணை.

சைவமும் தமிழும் தழைத்தோங்கி வளர்ந்துவரும் யாழ்ப்பாணத் தீவகற்பத்தின். தென்மேற்தீவுக்கூட்டத்தில் லைடன் தீவு என வழங்கப்படும் வேலணைத்தீவின் நடுநாயகமாய், ஊர்காவற்றுறைப் பட்டினத்தின் தென்திசையில்



பச்சைப்பசேலென்ற மருத நில சிற்றூராய். சைவத்தமிழ் பாரம்பரியம் வேரூன்றிய கிராமம் புளியங்கூடல். பசும் வயல்வெளிகளும், வானளாவ உயர்ந்த கோபுரங்களுமென பண்டைத்தமிழ்ப் பண்பாட்டிற்கு இலக்கணமாய் நவீனயுகத்துக்குள்ளும் கிராமியச்சூழலால் அழகு சேர்க்கும் கிராமம் இது. செருத்தி, குருந்து கொன்றை போன்ற அரிய வகை மரங்களுடன் புளியமரங்களும் அக்காலத்தில் இங்கு நிறைந்து காணப்பட்டன. அதனால்தான் புளியங்கூடல் என்ற நாமமும் தோன்றியிருக்கக்கூடும். அக்காலம் தொட்டே பெருவிளைச்சல் தரும் வயல்களும், வெங்காயம், மிளகாய்த்தோட்டங்களும் ஊர் மக்களுக்கு செல்வத்தை அள்ளிக்கொடுத்தன.

எந்வொரு வலிய சமூகக்கட்டமைப்புக்குள்ளும் ஆன்மீகமும் பின்னிப்பிணைந்திருக்குமென்பது வரலாற்று உண்மை. அந்த வகையில் இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன்னரே புளியங்கூடலில் அம்பிகை வழிபாடு இடம்பெற்று வந்துள்ளமையை அறியமுடிகிறது.

இப்பகுதியில் வாழ்ந்து வந்த வினாசித்தம்பி மற்றும் அவரது மகன் வைரமுத்து ஆகியோர் அம்பிகையின் தீவிர பக்தர்கள். இவர்கள் பண்டத்தரிப்பிலுள்ள அம்மன் ஆலயமொன்றிற்கு வழிபடச்செல்வது வழமை. அவ்வாறே பொங்கல் வழிபாடு ஒன்றிற்கு இவர்கள் சென்றிருந்த வேளை அங்கு ஏற்பட்ட பிணக்கு காரணமாக அங்கிருந்த பூசைக்குரிய கத்தியை எடுத்துக்கொண்டு கைத்தாங்கலாகவே அராலி கடல் நீரேரிப்பகுதியால் கால்நடையாக புளியங்கூடலை வந்தடைந்தனர். புளியங்கூடலின் கிராத்தனை என்ற இடத்திலுள்ள அவருக்குச் சொந்தமான காணியில் அந்தக் கத்தியை வைத்து வழிபாடுகளைத் தொடங்கினர். பொங்கல் பொங்கி படையல் செய்து தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகங்களைப்படித்து கற்பூரம் ஏற்றி வழிபாடுகள் பக்தியாக நடைபெறலாயிற்று.

இச்சமயத்தில் வினாசித்தம்பியின் மகன் வைரமுத்துவின் கனவில் தோன்றிய அம்பிகை பூசைவழிபாடுகள் தற்போது நடைபெறும் அவ்விடமே தனக்கு உகந்தது என்றும் அந்த இடத்திலேயே ஆலயம் அமைக்குமாறும் கூறி மறைந்தார். அதனைத் தொடர்ந்து அக்காலத்தில் கிராத்தனை என்று கூறப்பட்ட செருத்தனைப்பதியில் சிறு கொட்டில் அமைத்து பூசை வழிபாடுகள் இடம் பெறத்தொடங்கின. ஆலயஸ்தாபகரான விநாசித்தம்பியைத் தொடர்ந்து, அவரது மகன் வைரமுத்து அவர்களாலும், பின்னர் மூன்றாம் தலைமுறையினராகிய கதிரேசராலும் ஆலயம் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது. இக்காலத்தில் ஆலயப்பூசகராகவும் கதிரேசர் அவர்களே இருந்தார். இக்காலத்தில் ஆலயம் சுண்ணாம்புக்கற்களால் கட்டப்பட்டு ஓலை கொண்டு வேயப்பட்டு வளர்ச்சி கண்டது. கி.பி 1882ல் யாழ்ப்பாணக் கச்சேரியில் இவ்வாலயம் கற் கோயில் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் தர்மகர்த்தாவாக வை.கதிரேசர். அவர்களின் பெயரும் இடம்பெற்றுள்ளது. கதிரேசர் அவர்களின் பெரு முயற்சியால் இந்தியாவிலிருந்து ஆலயத்துக்கென மகாமாரி அம்மன் எழுந்தருளி விக்கிரகம் கொண்டு வந்து பிரதிஸ்டை செய்யப்பட்டது.

கதிரேசரைத் தொடர்ந்து அக்காலத்தில் உடையார் பதவியைவகித்து வந்த தம்பர் அவர்கள் ஆலயப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். இவரது காலத்தில் ஆலய மண்டபங்கள் கிடுகுக்கொட்டகைகள் மூலம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டதுடன், ஆலயமும் பிரபலமடையத் தொடங்கியது. தம்பரைத் தொடர்ந்து சுப்பிரமணியம் அவர்கள் ஆலயப்பொறுப்புக்களை ஏற்று ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். இவரது காலத்தில் ஆலய மண்டபங்கள் கிடுகுக்கொட்டகைகள் மூலம் சிறப்பாக வடிவமைக்கப்பட்டதுடன், ஆலயமும் பிரபலமடையத் தொடங்கியது. தம்பரைத் தொடர்ந்து சுப்பிரமணியம் அவர்கள் ஆலயப்பொறுப்புக்களை ஏற்று ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். இவரது காலத்தில் ஆலய மண்டபங்கள் சுண்ணாம்புக்கற்கள் கொண்டு அமைக்கப்பட்டன. அத்துடன் ஆலய ஏனைய கட்டுமான பணிகளும் இவரால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன.

இவரது காலத்தில் இடம்பெற்ற அற்புத நிகழ்வொன்று 1985ல் வெளிவந்த மகாமாரி ஆலய வைபவமாலையில் இடம்பெற்றுள்ளது. ஆலயக் கட்டுமானப்பணிகளுக்குத் தேவையான மரங்களை வெட்டிவருவதற்காக ஊர் இளைஞர்களுடன் வன்னிக்காட்டுப்பகுதிக்கு மாட்டுவண்டியில் சுப்பிரமணியம் அவர்கள் சென்றுள்ளார். தங்களுக்குத் தேவையான மரங்களை வெட்டிக்கொண்டு திரும்பிய வழியில் பாதை தவறி மூன்று நாட்களாக தத்தளித்தனர். ஈற்றில் தம்மைக் காத்தருளும்படி அன்னைமகாமாரியை வேண்டி வழிபாடாற்றினர். என்ன அதிசயம் அந்த அடர்ந்த காட்டில் தோன்றிய ஒரு வயோதிபமாது அவர்களுக்கு உணவும் கொடுத்து பாதையையும் காட்டிவிட்டு மறைந்துள்ளார்.

சுப்பிரமணியம் காலத்தில் எழுச்சியடைந்த மகாமாரி அம்மன் ஆலயத்தை நோக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவான மக்கள் வரத்தொடங்கினர். பிணிகளைப போக்கிக் கொள்ள ஆலயத்திலேயே தங்கி நின்று பெருமளவான மக்கள் வழிபாடாற்றினர். அத்துடன் வேறு பிரதேசங்களிலிருந்தும் பெருமளவான மக்கள் ஆலயத்துக்கு வருகை தந்து மகாமாரி அம்மனை வழிபட்டனர்.

மேலும் சுப்பிரமணியம் அவர்களது காலத்திலேயே விநாயகர், முருகன், மகாமாரி அம்மன், வைரவர் ஆகிய உற்சவமூர்த்திகள் ஸ்தாபிக்கப்பட்டு நித்திய, நைவேத்திய பூசைகள், அலங்கார உற்சவம் என்பன ஏறத்தாழ 1900ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டன.

தொடர்ந்து 1940ம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக்காரரைக் கொண்டு மூன்றுகண் சப்பரதம். சித்திரத்தேர், கைலாசவாகனம் என்பன அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டன. தீவுப்பகுதியிலேயே முதன்முதலாக சித்திரத்தேர் அமைக்கப்பட்டது புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலயத்திலேயே ஆகும். இக்காலப்பகுதியிலேயே வருடாந்தப்பொங்கல் இடம் பெறும் வைகாசி மாத கடைசி வெள்ளிக்கிழமையை கொடியேற்ற தினமாகக் கொண்டு மகோற்சவம் தொடங்கப்பட்டது.

திருவிழாக்காலங்களில் பல ஊர்களிலிருந்தும் பெருமளவான மக்கள் மாட்டுவண்டில்களில் ஆலயத்தில் கூடுவார்கள். நேர்த்திக்கடன்களை நிறைவேற்றவும், அன்னையின் தரிசனத்தைக்காணவும் விழாக்காலங்களில் புளியங்கூடலில் மககள் ஒன்றுதிரளத் தொடங்கிய காலமாக அக்காலம் அமைந்தது.

ஆலயத்தர்மகர்த்தா திரு.சுப்பிரமணியம் அவர்கள் நோயுற்ற காரணத்தினால் 1945ம் ஆண்டு அவரின் மூத்தமகன் திரு.துரையப்பா அவர்கள் ஆலயபரிபாலனம் செய்வதற்காக பொதுமக்களால் நியமிக்கப்பட்டார். தந்தையின் வழியைக் கைக்கொள்ளும் தனயனாக துரையப்பா அவர்களும் அன்னையின் ஆலயத்தைச் சிறப்பாகப் பரிபாலனம் செய்தார். ஆலய உட்பிரகாரத் திருப்பணி வேலைகள், வாகனங்கள் உருவாக்கல், தீர்த்தக்கேணி அமைத்தல், நந்தவனம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திருப்பணிகள் இவரது காலத்தில் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் நாகமுத்து ஸ்தபதி இராஜகோபுரப்பணிகளும் இவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அராலியூர் நாகமுத்து ஸ்தபதி தலைமையிலான ஈழத்து சிற்பக்கலைஞரினால் ராஜகோபுரப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இராஜகோபுரமொன்று முதன்முதலாக வியாழவரி வரை கருங்கல்லினால் அமைக்கப்பெற்றது. இலங்கையின் வடபகுதியிலே-யே இக்கோயிலில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

வெறுமனே ஆலயத்தை மட்டுமே காட்டாமல் மக்கள் மனங்களில் ஆன்மீக சிந்தனையையும் கட்டியெழுப்ப வேண்டுமென்ற நோக்குடன் சமயச் சொற்பொழிவுகள் மூலம் சமயக்கோட்பாடுகளை மக்கள் மத்தியில் துரையப்பா அவர்கள் கொண்டு சென்றார். அத்துடன் விழாக்காலங்களில் சமயநாடகங்கள், கதாப்பிரசங்கங்கள், இசை-வழிபாடுகள் என்பவற்றையும் நடாத்தினார். அக்காலத்தில் மக்கள் மத்தியில் இவர் இட்ட ஆத்மீக அத்திவாரம் தான் தற்போதும் சமயநெறி வழுவா, ஒழுக்கசீலரான மக்களாக புளியங்கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை வழிநடத்திக்கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை.

தொடர்ந்து 1994ம் ஆண்டு துரையப்பாவின் மகன் சிவஞானச்செல்வம் ஆலயப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். அப்பன் வழி பிள்ளை வழி என்பதற்கேற்றாற் போல தந்தை துரையப்பாவினால் விட்டுச்செல்லப்பட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றினார். சிவஞானச்செல்வம் ஆலய இராஜகோபுரம் பூரணப்படுத்தப்பட்டு 1980ம் ஆண்டு இணுவை சிவஸ்ரீஇராமநாதக்குருக்கள் அவர்களால் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து 1987ல் 05வளைவுகளைக் கொண்ட அழகிய மணிமண்டபமும் நிர்மாணிக்கப்பட்டது. இவற்றை விட 1000 கிலோ எடை கொண்ட மிகப்பெரும் காண்டா மணி இலண்டனில் இருந்து கொண்டு வரப்பட்டு மணிக்கோபுரம் அமைக்கப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. 05 வளைவுகளைக் கொண்ட உள் வீதி சுற்றுப்பிரகாரம் மூடு சாந்து இடப்பட்டு அமைக்கப்பட்டது. கருங்கல்லினாலான மூலஸ்தானமும் தூபியும் அமைக்கப்பட்டது. உள்ளிட்ட பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் மணிமண்டபத்துக்கு இடதுபுறமாக இராஜராஜேஸ்வரி அம்மனுக்குரிய ஆலயம் நிறுவப்படுவதற்கான ஆரம்பப்பணிகள் தொடங்கப்பட்டன. மகாமாரியுடன் இராஜராஜேஸ்வரியும் உடனுறைவதால் 2012ம் ஆண்டு தொடக்கம் மகாமாரி என வழங்கப்பட்ட அம்பிகை ஆலயம் இராஜமகாமாரி என வழங்கப்படலாயிற்று. இக்காலப்பகுதியிலேயே 10நாட்களைக் கொண்ட திருவிழாக்காலம் 18 நாட்களைக் கொண்ட பெருந்திருவிழாவாக அதிகரிக்கப்பட்டது. மகாமாரியம்மன் ஆலய வரலாற்றில் மிகப்பெரும் திருப்பணிகளை செவ்வனே நிறைவேற்றி 38வருடகாலம் அறங்காவலராக அம்மனுகச் சேவை புரிந்த சிவஞானச்செல்வம் 2012ல் இயற்கையெய்த அவரது மகன் செந்தூரன் அவர்கள் ஆலயத்தின் எட்டாவது அறங்காவலராக கடமையேற்றுக்கொண்டார்.

வைகாசி மாத இறுதி வெள்ளிக்கிழமை தொடங்கி 18 தினங்கள் நடைபெறும் பெருந்திருவிழா வெறுமனே ஆலயத்திருவிழாவாக மட்டுமல்லாது புளியங்கூடல் கிராமத்தின் பெருவிழாவாகவே கொண்டாடப்படுகிறது. வெளிமாவட்டங்கள், வெளிநாடுகளில் வாழ்ந்துவருகின்ற புளியங்கூடல் மக்கள் சொந்த ஊரில் ஒன்சேருகின்ற காலமாகவும் இக்காலம் அமைகிறது. கைலாசவாகனம். சப்பரதம், தேர் போன்ற திருவிழாக்களில் பெருமளவான உள்ளூர், வெளியூர் மக்கள் ஆலயத்தில் ஒன்று கூடுகின்றனர். அத்துடன் தீவகத்திலேயே காலங்காலமாக காவடிக்குப் பெயர் பெற்ற ஆலயமாக இவ்வாலயமே திகழ்வது மற்றுமொரு சிறப்பம்சம்.

ஆலய மகோற்சவப்பிரதம குருக்களாக புளியங்கூடலைப் பரம்பரை வழியாகக் கொண்ட சிவாச்சார்யதிலகம் சிவாகம விற்பன்னர் சிவஸ்ரீ.கு.குகேஸ்வரக்குருக்கள் அவர்கள் பல வருடங்களாக பணிபுரிகிறார். ஆலயப்பிரதம குருவாக சிவஸ்ரீ. ப.சிற்சபேசக்குருக்கள் பணியாற்றுகிறார்.

2015தை மாதம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளினுடைய ஆலயத்திருப்பணிகளும் பூரணப்படுத்தப்பட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கும், ஸ்ரீ சக்கரமகாமேரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்திரத்துக்கும் மகாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடாத்திமுடிக்கப்பட்டது. தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பவல்லுனர்களை கொண்டு மிக நுன்னிய சிற்பவேலைப்பாடுகளுடன் இவ்வாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ இராஜமகாமாரி அம்பாள் ஆலயத்துடன் கருங்கல் வேலைப்பாடுகளுடன் கூடிய சப்ததள இராஜகோபுர சகித இந்தன்பதி ஸ்ரீ முத்துவிநாயகர். ஆலயமும் புளியங்கூடல் கிராமத்துக்கு நடுநாயகங்களாய் விளங்குகின்றன. அத்துடன் சக்களாபதி முருகன் கோயிலும் ஊர் எல்லைகளை அண்டிய பகுதிகளில் காவல் தெய்வங்களான ஐயனார், வைரவர், வீரபத்திரர், முனியப்பர் ஆலயங்களும் காணப்படுகின்றன.

புளியங்கூடல் மக்களின் பிரதான ஜீவனோபாயத்தொழிலாக விவசாயமே காணப்படுகிறது. மரக்கறிச் செய்கைக்கேற்றவாறான மண்வளம் இல்லாத போதும் பணப்பயிர்கள் செழித்துவளரும் இடமாக இது விளங்குகிறது. புளியங்கூடல் புகையிலைக்கு தென்னிலங்கையிலே தற்போதும் நல்ல கேள்வி காணப்படுகிறது. புளியங்கூடல் புகையிலைக்கு தென்னிலங்கையிலே தற்போதும் நல்ல கேள்வி காணப்படுகிறது. இதைவிட வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களும் புளியங்கூடல் மண்ணுக்கு அதிக விளைச்சலைக் கொடுக்கின்றது. குறிப்பாக நாடளாவிய ரீதியில் பச்சைமிளகாய்க்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட்டு அதிக விலை காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் புளியங்கூடலில் மிளகாய் பெருவிளைச்சலைக் கொடுக்கும் அந்தவகையில் இம்முறையும் மிளகாய்ச்செய்கை புளியங்கூடலுக்கு பெரு வருமானத்தை ஈட்டிக் கொடுத்திருக்கிறது.

நாடளாவிய ரீதியில் வணிகத்திலும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தடம்பதித்துள்ளார்கள். போக்குவரத்து நிறுவனங்கள், மொத்தவியாபார நிறுவனங்கள், நகைவியாபார நிறுவனங்கள், இலத்திரனியல் நிறுவனங்கள் என்பவற்றோடு யாழ்ப்பாணத்தின் பிரபலமான குளிர்களி நிறுவனங்கள் பல புளியங்கூடலைச் சேர்ந்தவர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் புளியங்கூடலைச் சேர்ந்தவர்களின் கல்விசார்ந்த நிறுவனங்கள் பல புத்திஜீவிகளை மாவட்டமட்டத்தில் உருவாக்கிவருகின்றது. கல்வியில் சாதித்துள்ள புளியங்கூடலைச்சேர்ந்த பலர் உயர்பதவிகளை வகித்துவருகின்ற போது அவர்களிற் பெரும்பாலானோரின் சேவைப்பரப்புக்கள் ஊருக்குக் கிடைப்பதில்லையென்பது கவலைக்குரியதே. புளியங்கூடலின் கல்வி அபிவிருத்தியில் புலம்பெயர்ந்து வாழும் ஊர்மக்களின் பங்களிப்பு முக்கியமானது. மகாமாரி இலவசக்கல்வி நிலையம். சிறுவர் நல்வாழ்வு நிலையம் என்பன புலம்பெயர் புளியங்கூடல் மக்களின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் சிறப்பாக இயங்கிவருகின்றன.


ஊருக்கும் சைவத்துக்கும் பெருமைசேர்க்கும் வகையில் ன்னை மகாமாரியின் நாமத்தைத்தாங்கிய சமூக மட்ட அமைப்புக்கள் கலை, கலாசாரம், ஆன்மீகம், கல்வி, விளையாட்டு, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில்சமூகவளர்ச்சியில் அக்கறையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்றன.அந்தவகையில் மகாமாரிசனசமூகநிலையம், மகாமாரி விளையாட்டுக்கழகம் மகாமாரி இந்துவாலிபர். சங்கம், மகாமாரி முன்பள்ளி என்பவற்றைக் குறிப்பிடலாம். அத்துடன் புதிதாகத் தொடங்கப்பப்பட்டுள்ள சமூகநல இளைஞர் மன்றம் சமூகநலநோக்குப்பணிகளில் முழுவீச்சுடன் செயற்பட்டு அரசு வளர்ச்சி கண்டுள்ளது. இவற்றைவிட தங்கம்மா அறநெறிப்பாடசாலை, கிராம அபிவிருத்திச்சங்கம், சிறுவர் நல்வாழ்வு நிலையம், விவசாய சம்மேளனம் என்பனவும் துறைசார்ந்த திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றன.ஆலயச்சூழலில் காணப்படும் மகாமாரி சனசமூக நிலையம், மகாமாரி இந்துவாலிபர் சங்கம், என்பனவற்றில் அறநெறி, பண்ணிசை போன்ற வகுப்புக்கள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. அத்துடன் ஆலயச்சூழலிலுள்ள பொது நூலகமும் ஊர் இளையசந்ததியின் அறிவுப்பசிக்குப் பெருவிந்தாக அமைந்துள்ளது.வெறுமனே வணக்கஸ்தலங்களாக மட்டுமே செயற்பட்டுவரும் இன்றைய சைவாலயங்கள் மத்தியில் சமூகத்துடன் ஒன்றுபட்ட ஒரு ஆலயமாகவும், சமூக மட்டச்செயற்பாடுகளுக்காக சமூக மட்ட அமைப்புகளை ஊக்குவிக்கும், வலுப்படுத்தும் ஓர் ஆலயமாகவும் புளியங்கூடல் ஸ்ரீஇராஜமகாமாரி அம்பாள் ஆலயம் செயற்பட்டு வருகின்றமை இந்து ஆலயங்களுக்கும் ஒரு முன்னுதாரணம் என்பதில் ஐயமில்லை.

## வெளிச்சவீடு



**இது எமது பிரதேசத்தில் அனலைதீவு**
**கிராமத்தில் அமைந்துள்ள**
**நினைவுச்சின்னமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை தரும் வைரவர் வழிபாடு

ந.சத்தியரூபன்
கலாசார அபிவிருத்தி உதவியாளர்,
பிரதேச செயலகம்,ஊர்காவற்றுறை

**திருச்சிற்றம்பலம்**

கலையிலங் கும்மழு கட்டங் கண்டிகை குண்டலம்
விலையிலங் கும்மணி மாடத்தர் வீழிமிழலையார்
தலையிலங் கும்பிறை தாழ்வடஞ் சூலத்தமருகம்
அலையிலங் கும்புன வேற்றவர்க் கும்மடி
யார்க்குமே

என்று வைரவக் கடவுளின் திருக்கோலத்தை சம்பந்தர் தனது திருமுறையில் பாடுகின்றார். வைரவர் என்ற சொல்லுக்கு மிகவும் பயங்கரமானவர் என்பது பொருளாகும். அதாவது எதிரிகளுக்கு பயம் தந்து தன்னை அண்டியவர்களுக்கு அருள்தருபவர் ஆவார். வைரவக்கடவுள் சத்துவகுணத்தில் தாமத குணத்தர். அவர் சங்காரருத்திரரெனப்படுவார். சகல தத்ததுவ சம்பந்தங்களையும் சங்கரித்து ஆன்மாக்களை ஈடேற்றும் கோலமே அவரது வடிவம். அவரது உருவம் சுத்தநிர்வாணமாயிருக்கும். அவ்வுருவத்திற்கு உடைதரிப்பதேயில்லை உலகப்பற்றை விடினும். உடல் பற்றை விடல் சிறிது கடினம். உடல் பற்று இருந்தால் உடையில்லாது இருக்கமுடியாது. அந்தப்பற்றினையும் விடு என்பதே அவருடைய வடிவம் காட்டுகின்றது. வினை விழும் போது தான் உடற்பற்று அழியும் அவைகளை அழிக்கும் கோலம் தன்கோலமாகையால் தாமதகுணத்தை காட்டும் கோரவடிவையுடையவராக இருக்கின்றார். பிரம விஸ்ணு முதலிய தேவர்கள் இறைவனை மறந்து தடுக்குற்ற காலத்தில் அவர்களைத் திருத்துவதற்காக கருணை கொண்டு கருணையிற் கோபவடிவமாய்ச் சென்று பிரமனது ஒரு சிரசை நகத்தாற் கிள்ளி ஏனைய தேவர்களின் இரத்தத்தை அவர்களின் தருக்கடங்கும் வரையும் அவர்களை ஆட்கொண்ட கோலம் வைரவமூர்த்தம் ஆகும். சிவத்தினின்றும் தோன்றிய காரணத்தினால் இவர் சிவகுமாரர் எனப்படுவர். ஆயினும் சிவத்தின் வேறாகாத வடிவமே அவர் ஆவார்.

## ஆகம/ ஆகமநெறிசாரா வழிபாட்டில் வைரவர்

ஆகம விதிக்கமைந்த ஓர் ஆலயத்தில் நைமித்திய கிரிகைகளில் அதாவது மகோற்சவம், கும்பாபிஷேகம் போன்ற கிரியைகளில் கிராமசாந்தி என்னும் கிரியை முதன்மைப்படுத்தப்படுகின்றது. ஸ்ரீமத் உத்தரகாரணாகமம் ஒன்பதாவது கிராமசாந்தி விதிப்படலத்தில் இதன் சிறப்பு கூறப்படுகின்றது. அதே போன்று இருபத்து நான்காவது மகோற்சவ விதிப்படலத்தில் அறுபத்தெட்டாவது சுலோகத்தில் கோயில் அமைப்புப்பற்றி குறிப்பிடுகையில் ஈசானத்தில் வைரவருடைய சந்நிதானம் அமைத்தல் பற்றி குறிப்பிடுகின்றது உத்தரகாரணாகமம் எழுபதாவது படலத்தில் வைரவஷேத்ரபாலகப் பிரதிஷ்டா விதியும் பூர்வகாரணாகமம் நூற்றி மூன்றாவது படலத்தில் ஷேத்ரபாலக அர்ச்சனை விதியும் அஜிதாகமம் முப்பத்தாறாவது படலத்தில் ஷேத்திரபாலகர் சொரூபம் பற்றியும் சுப்பிரபேதாகமத்தில் ஷேத்திரபாலகர் பிம்பலட்சணமும் மகுடாகமத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாவது படலத்தில் ஷேத்திரபாலகர் தியானம் மற்றும் பூசை முறைகளும் ரௌரவ ஆகமம் ஐம்பத்தொராவது படலத்தில் ஷேத்திர பாலகர் ஸ்தாபன விதியும் சிறப்பாக கூறப்படுகின்றது. ஆலய வழிபாட்டு முறையில் விநாயகருக்கு முதலிடம் வழங்குவது போன்று ஆலய வழிபாட்டின் இறுதியில் வைரவருக்கு வணக்கம் செலுத்துவது முக்கிய இடம் பெறுகின்றது. ஆகம விதிக்கமைந்த ஓர் ஆலயத்தில் ஈசான திக்கில் இவருக்குரிய சந்நிதியில் பரிவார தெய்வமாக காணப்படுகின்றார். மகோற்சவகாலத்தில் வைரவர் சாந்தியும் நித்திய பூசையில் அர்த்தஜாமப்பூஜையில் விசேட வழிபாடு நிகழ்ந்து ஆலயத்தின் அனைத்து திறப்புக்களும் அவரிடமே ஒப்படைக்கப்படுகின்றது. ஈழத்தின் வழிபாட்டு மரபில் வைரவருக்கு தனி ஆலயம் அமைத்து மூலமூர்த்தியாக அமைத்து கிரியையாற்றும் மரபும் உள்ளது. ஆகமநெறிசாரா வழிபாட்டு மரபில் வைரவ வழிபாடானது கிராமங்களில் பிரபல்யம் அடைந்து இருந்ததை காணமுடிகின்றது. ஆற்றங்கரைகளிலும், சந்திகளிலும், வீட்டுவளவினுள்ளும், கிணற்றடியிலும் காவல் தெய்வமாகவும் வைத்து பொங்கல்பொங்கி மடைபரவி வழிபாடாற்றினர். இப்பூசை முறையானது அந்தணர் அல்லாத அர்ச்சகர்களாலும் மற்றும் உடல் உள தூய்மை உள்ள அனைவராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த நூற்றாண்டு காலத்தில் சில வைரவர் ஆலயத்தில் பலியிடுதல் நிகழ்வுகள் நடைபெற்று வருவதை அறியமுடிகின்றது, ஆனால் சிவாகம கிரியை வளர்ச்சியினால் பலியிடுதல் நிறுத்தப்பட்டு புனராவர்த்தனம் நடைபெற்று மகாகும்பாபிஷேகம் நிகழ்ந்து நித்திய நைமித்திய கிரியைகள் நடைபெறும் ஆலயங்களாக மாற்றம் பெற்று வருகின்றது.

## சிவனில் இருந்து வேறாகதவர்

மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மன் அகந்தையால் அறிவுமயங்கி சிவநிந்தனை செய்தான் சிவனுக்கு ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து திருமுகங்கள் உள்ளன. அதே போன்று தனக்கும் ஐந்து தலைகள் உண்டு. சிவனிலும் பார்க்க பெரியவன் தானே என்பது தான் அந்த அகந்தை. இவ்வகந்தையை நீக்குவதற்காக எம்பெருமான் ஆகிய சிவபெருமான் தன்னுடைய உக்கிர வடிவில் நின்றும் வைரவரைத்தோற்றுவித்தார். வைரவர் பிரம தேவனின் ஐந்தாவது தலையைக் கிள்ளியெடுத்துக் கபாலமாக்கிக் கொண்டு அவனுக்கு அச்சமூட்டி அறிவை விளக்கம் பெறச் செய்தார். அந்த கசுரனின் அகந்தை அடக்குவதற்கு சிவபெருமான் மகாவைரவரைத் தோற்றுவித்தார். ஒரு சமயம் அந்தகசுரன் தேவர்களை துன்புறுத்தி அவர்களை பெண் அந்தகளை அழிக்குமாறு வடிவம் தாங்கி நடக்க சொன்னான் இதனை அறிந்த சிவபிரான் அந்தகனை அழிக்குமாறு மகா வைரவருக்கு கட்டளையிட்டார். மகாவைரவரும் அதி உக்கிரத்துடன் அந்தகன் மீது போர் தொடுக்க அவருடைய திருமேனியில் இருந்து அஷ்டவைவர்கள் தோன்றினார்கள் அந்த எட்டு வைரவர்களுக்கும். தேவர்கள் அஷ்டமாதர்களை அளித்து இன்பம் பெறச்செய்தனர் அஷ்டவைரவர்கள் முறையே அசிதாங்கவைரவர், குருவைரவர், சண்டவைரவர், குரோதனவைரவர்,கபாலவைரவர்,உன்மத்தவைரவர், பீஷ்ணவைரவர், சம்ஹாரவைரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோராவார். இவர்களுக்கு சக்திகளாக பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி ஆகியோருடன் சண்டி ஆகிய எட்டு மாதர்களுடன் முறையே அன்னம், இடபம், மயில், கருடன், குதிரை, யானை, சிங்கம், நாய் ஆகிய வாகனங்களுடன் உலாவருவர் என்று கூறப்படுகின்றது.

## விரதங்களும் பலன்களும்.

நாம் வழிபாடு செய்யும் ஒவ்வோர் கடவுளர்க்கும் சிறப்பான விரதங்கள் உள்ளன. இந்த வகையில் வைரவர்க்கு சிறப்பான விரதங்களாக தை மாதம் முதல் செவ்வாய் தொடக்கம் வருகின்ற செவ்வாய் கிழமைகள் (மங்கள வாரம்) வைரவர்க்குரிய நாளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அடுத்து சித்திரை மாதத்தில் வருகின்ற பரணி நட்சத்திரம் ஆகும் அதே போன்று ஐப்பசி மாதத்தில் வருகின்ற பரணி நட்சத்திரமும் வைரவர்க்குரிய நாட்களாகும். இந்நாட்களில் விரதமிருந்து பூஜை வழிபாட்டில் ஈடுபட்டால் அனைத்து செல்வங்களையும் பெறலாம். வைரவர் வழிபாட்டில் நந்தியாவர்த்தம் பூ தவிர்த்தல் வேண்டும்.

வைரவரை விதிப்படி வழிபட்டால் நாம் கேட்கும் வரம் கேட்கும் நாளிலே கைகூடும். வைரவர்க்கு விருப்பமான சிவப்புபட்டு, மாவிளக்கு, நெய்அபிஷேகம், நெய்த்தீபம், உடைக்காதமுழுத்தேங்காய், நார்ப்பழங்கள், சிவப்பு நிறம் வாய்ந்த பூசணிக்காய், தேன், வடை போன்றவை உகந்தவை.

மிளகினை பொட்டலமாககட்டி நெய் அல்லது நல்லெண்ணெய்யில் எரித்தால் வறுமை நீங்கி செல்வம் பெருகும். இழந்த செல்வத்தை மீளப்பெறலாம்.

குழந்தை பாக்கியம் இல்லாத கணவன் மனைவியர் ஆறு தேய்பிறை அட்டமியில் சிவப்பு நிற அலரிப்பூவினால் சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் விரைவில் புத்திரபாக்கியம் கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரங்களில் வில்வம் இலைகளினாலும் வாசனை மலரினாலும் வைரவர்க்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் வறுமை நீங்கி செல்வம் பெருகும்.

வைரவர்பெருமானுக்கு சனிக்கிழமைகளில் சகஸ்ரநாமஅர்ச்சனை செய்வதால் சனிபகவான் மகிழ்ச்சியடைந்து ஏழரைச்சனி, அட்டமத்துசனியின் உபாதை நீங்கி நல்ல யோகமான பலன்கள் வந்து சேரும்.

ஆபத்து காலங்களிலும் யுத்தகாலங்களிலும் கொடியவிலங்குகளின் தாக்கம் ஏற்படும் போதும் திருடர்களின்பயம் ஏற்படும் வேளைகளில் சகஸ்ரநாம அர்ச்சனை செய்தால் எல்லாவித கஷ்டங்களும் நீங்கி மனஅமைதி ஏற்படும்.

வைரவர் சகஸ்ரநாமத்தால் ஒன்பது முறை வைரவர்க்கு அர்ச்சனை செய்த அவரவர் வசதிக்கு ஏற்றபடி தயிர்அன்னபாளயம் (தயிர் அன்னப்பாவாடை) தேங்காய், தேன் படைத்து வழிபட்டால் வழக்கில் வெற்றி கிடைக்கும் வியாபாரத்தில் நல்லஇலாபம் எதிரிகளால் ஏற்படும் தொல்லை மற்றும் பில்லி சூனியம் போன்ற மந்திரப் பிரயோகத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் தொல்லைகள் அடியோடு அகலும் எனவே வைரவப்பெருமான் அடியவர்கள் ஆகிய நாம் வைரவரை விதிப்படி வழிபட்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

**உசாத்துணை நூல்கள்**


01.தெய்வத்தமிழ்இசை- திரு.ப.இலக்குமண சாமி மதுரை

02.தினமும் ஒரு தேவாரம் - முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

03.சைவத்திருக்கோயிற் கிரியை நெறி பேராசிரியர்.வ.கைலாசநாதகுருக்கள்

04.ஈழத்தவர் வரலாறு — கலாநிதி .க. குணராசா

05.இந்து ஒளி - திருமதி.கௌரி சுரேசன் (அகில் இலங்கை இந்து மாமன்றம் பொன்விழா சிறப்பு மலர் கட்டுரை) விரிவுரையாளர், யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரவணை - சின்னமடுசெபமாலை அன்னை ஆலயத்தின் குறுகிய வரலாறு

சோ.சத்தியகாந்தன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
ஊர்காவற்றுறை.

சரவணை சின்னமடுமாதா ஓர் அற்புதத்தாய். அவளின் வரலாற்றினைப் படிப்போர் அன்னையினைத் தேடி வருவோர் அவளின் சிறப்பினையும் அவளிடம் கரம் பிடிப்போர் வாழ்வில் தடுமாறியது கிடையாது. அன்னையின் பாதத்தில் சாதி, மதம், மொழி, இனம் அனைத்தையும் கடந்து தஞ்சமடையும் மக்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை. அன்னையின் அருள் பெற பல இடங்களிலிருந்து வருகை தருகின்றார்கள். ஏனென்றால் இவ் அன்னையிடம் காணப்பட்ட அன்பு, கருணை, ஆறுதல், வாழ்வில் விடியல் தன்னிடம் வருபவர்களை ஒரு போதும் வெறும் கையாய் அனுப்பியது கிடையாது என்பதாகும். பலரின் துயர் துடைக்க இத்தாய் இவ்விடத்தில் அற்புதமாய் வீற்றிருக்கிறாள்.

## அன்னை ஆலயத்தின் வரலாறு

சரவணை (சின்னமடு) புனித செபமாலை அன்னை ஆலயம் வேலனை- ஊர்காவற்றுறை வீதியில் புளியங்கூடல் சந்தியிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. தீவுப் பகுதி யில் குறிப்பாக ஊர்காவற்றுறையை அண்டிய பகுதியில் கத்தோலிக்கம் போர்த்துகேயர் காலத்திலிருந்தே பரப்பப்பட்டு வந்துள்ளது. கத்தோலிக்கம் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் அதிகம் நலிவுற்றாலும் மீண்டும் ஆங்கிலேயர் காலத்தில் புத்துணர்வு பெற்று வளர்ச்சி கண்டது இக்காலத்துக்குரியதாக எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள குறிப்புக்களின் படி 1894ம் ஆண்டிற்கு ஆலயம் எதுவும் அமைக்கப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் இல்லை.

சரவணை (சின்னமடு) ஆலயத்தின் வரலாறு பற்றிச்சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்படுமிடத்து இப்பதியில் சுவாமி விஸ்திரினி அவர்களே முதன் முதலில் விசுவாசத்தை பரப்பினார் எனக் குறிப்பிட்டுள்ளார். எனினும்ஊர்காவற்றுறைப்பகுதியில் திருமுழுக்கு இடாப்பில் இடம் பெற்றுள்ள குறிப்பின் படி 1816 ஆம் ஆண்டிலிருந்தே வதியுமிடம் சரவணை என இடாப்பின் குறிப்பினுள்ளோர் திருமுழுக்கு பெற்றுள்ளனர். 1816 முதல் 1841 வரையும் சரவணையைச் சேர்ந்தோர் 43 பேர் திருமுழுக்கு பெற்றுள்ளனர் என மேற்படி இடாப்பிலிருந்து அறியப்படுகின்றது.இக்காலத்தில் இவ்வளவு தொகையானோர் திருமுழுக்கு பெற்றோராயின் சரவணைப்பகுதியில் ஒரு ஆல-யமும் அமைக்கப்படவில்லையா? எனும் வினா எழுகின்றது.

சுவாமி விஸ்திரினி அவர்கள் தீவுப்பகுதிக்குப்பொறுப்பாக நியம-னம் பெற்று மறையப் பரப்பியும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாசத்தை ஆழப்படுத்தியும் பணியாற்றிய காலத்திலேயே சரவணைக் கிராமத்தில் வாழ்ந்த வள்ளுவ வகுப்பாரும் பிரதான உபகாரி வகுப்பாரும் கத்தோலிக்கமறையில் இணைந்து திருமுழுக்குப் பெற்றனர். ஆனால் ஏற்கனவே அமைக்கப்பெற்றிருந்த ஆலயங்களுக்கு சற்றுத்தொலைவில் இவர்களின் வதிவிடமும் அமைந்திருந்த காரணத்தினாலும் சம காலத்தில் இலங்கையில் போதிய குருமார் பணியாற்றுவதற்கு இல்லாமையினாலும் மக்களுக்கு கல்வியறிவு அளிக்கப்பட்டமையாலும் பிற சமயச்சூழலின் செல்வாக்கினாலும் இப்புதிய கிறிஸ்தவர்கள் ஞானக் கடமைகளில் போதிய அறிவுற்ற நிலையில் தங்கள் விசுவாச வாழ்வில் ஆழம் பெற முடியவில்லை, இதனால் காலக்கிரமத்தில் இவர்கள் கத்தோலிக்கர் அல்லாதவர் போன்று வாழ்ந்தனர். என்பது சுவாமி ஞானப்பிரகாசர் கருத்து.

சுவாமி ஞானப்பிரகாசர் கூறும் விஸ்திரினி அவர்களே முதன் முதலில் சரவணைப் பகுதியில் விசுவாசத்தைப் பரப்பியவர் என்னும் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுவதற்குச் சில சிக்கல்கள் உள்ளன சுவாமி விஸ்திரினி அவர்கள் 1846ம் ஆண்டு இத்தாலி நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து இலங்கையின் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க ஆளுநார் பிரிவில் ஆயர். பெற்றக்கினியின் பணிக்காலம் வரையும் அதாவது 1857 வரையுமே இவர் (1846 – 1848) வரையும் பணியாற்றினார். ஆனால் 1816 முதல் 1841 வரையும் 43 பேர் சரவணைப் பகுதியிலிருந்து திருமுழுக்கு பெற்றுள்ளனர் என்பதை ஊர்காவற்றுறை திருமுழுக்கு இடாப்பிலிருந்து அறியக் கூடியதாகவுள்ளது. எனவே சுவாமி விஸ்திரினி தான் முதன் முதலில் சரவணைப் பகுதியில் விசுவாசத்தைப் பரப்பினார் என்னும் கருத்தை ஏற்றுக் கொள்ளுவது சிக்கலாகத் தென்படுகின்றது.

ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதிக்கும் பொறுப்பாக சந்திரசேகர அடிகள் (1893 -1902) நியமனம் பெற்றார். இயற்கையிலே இவரிடம் பல விடயங்களைஒழுங்கமைத்துச்செயற்படுத்தப்படும் திறமை காணப்பட்டது. விஸ்திரினி சுவாமியாரால் சரவணைக் கிராமத்தில் பல வருடங்களுக்கு முன்பு திருமுழுக்கு அளிக்கப்பட்ட மக்களின் ஞான வாழ்வு பற்றி அறிய முற்பட்ட போது இவர்களில் கட்டையன் நாவதன் என்பவரையும் அவரைச் சார்ந்த ஒரு சிலரையும் தவிர ஏனைய அதிகமானோர் கிறிஸ்தவ அனுஸ்டாடங்களையும், கடமைகளையும், செப ஒழுங்குகளையும் மறந்து கத்தோலிக்க அல்லாதோர் போன்றே வாழ்ந்தனர்.

இம்மக்களை மீண்டும் கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதிப்படுத்த கத்தோலிக்க மறையைப் பற்றிய அறிவை ஆழப்படுத்த உறுதிபூண்டு சந்திரசேகர அடிகள் சரவணைக் கிராமத்தில் வாழ்ந்த மக்களின் பிள்ளைகளின் கல்வி அறிவைப் பெறுவதற்கு ஒரு சிறிய பாடசாலையும் மக்கள் வழிபடுவதற்கு ஒரு ஆலயமும் அமைக்கப்படுவதும் இப்பகுதி மக்களை விசுவாசத்தில் வளர்ப்பதற்கு இன்றியமையாத தேவை என்பதை உணர்ந்து பாடசாலையும், ஆலயமும் அமைக்கும் பணியில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

தமது செயற்திட்டத்தின் முதற்கட்டமாக இதற்குத் தேவையான காணியை கொள்வனவு செய்யும் பணியில் இறங்கினார். நாரந்தனைப்பகுதியில் செல்வமும், செல்வாக்குமுள்ள பிரபல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவுக்கரரரும், வைத்தியரும், கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியுள்ளவருமான நீக்கலாப்பிள்ளை பேதுருப்பிள்ளை என்பவரிடம் தமது திட்டங்களை விளக்கி சரவணைப்பகுதியில் பாடசாலையும் ஆலயமும் அமைப்பதற்கு வசதியான இடத்தில் 10ஏக்கர் காணி வாங்கித் தரும்படி கோரினார். பேதுருப்பிள்ளை அவர்களின் பெருமுயற்சியினால் சரவணை சின்ன வி-தானையார் சந்ததியில் வந்த செல்லப்பா என்பவரின் காணியில் 10ஏக்கர் மிக வசதியான இடத்தில் வேலணை-ஊர்காவற்றுறைவீதியில் வாங்கப்பட்டது. 1894ம் ஆண்டு பாடசாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மாதகல் பாவிலுப்பிள்ளை சட்டம்பியார் கண்காணிப்பில் புதிய பாடசாலை இயங்கியது.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட தோடு உடனடியாகவே ஆலயம் அமைக்கும் பணியும் இடம் பெற்றது. முதலாவது அமைக்கப்பெற்ற கொட்டில் ஆலயம் தற்போதுள்ள ஆலயத்திற்கு மேற்கே பனைமரத் தூண்களை கொண்டு கிடுகி னால் தட்டிகள் கட்டப்பட்டு பனை ஓலையினால் வேயப்பட்டு ஆலயமாக அமைக்கப்பட்டது. இக்கொட்டில் ஆலயத்தை அமைக்கும்பணியில் சந்திரசேகர அடிகளாருடன் மாதகல் பாவிலுப்பிள்ளைச் சட்டம்பியாரும் சரவணைக்கட்டையரும் ஆர்வத்துடனும் தியாகத்துடனும் முன்னின்று உழைத்தனர்.

## திருச்சுரூபம் பெற்ற வரலாறு

கொட்டில் ஆலயத்தை அமைத்த சந்திரசேகர அடிகள் அடுத்த கட்டமாக ஆலயத்தில் வழிபாட்டிற்கு வேண்டிய செபமாலை மாதாவின் திருச்சுரூபம் ஒன்றைத் தேடலானர். ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலயமும் இவரது நிர்வாகத்தின் கீழும் கண்காப்பிணிலும் இருந்ததால் புனித யாகப்பர் ஆலயத்தில் பாவனையற்றுக்கிடந்த மாதா சுரூபத்தை பெறுவது நலமெனத் தீர்மானித்து இவ்வாலயத்தைச் சேர்ந்தவரும் செல்வமும் சிறப்பும் பெற்றவருமான தொம்மைக்குட்டி என்பவரிடம் மேற்குத் தெருவைச் சேர்ந்த அண்ணாவிமனுவல் என்பவரையும் அழைத்துச் சென்று சுவாமி அவர்கள் தங்கள் விருப்பத்தை தெரிவித்த போது தொம்மைக்குட்டி அவர்கள் திருச்சுரூபத்தை சுவாமியின் விருப்பத்திற்கிணங்க கையளிப்பதற்கு முன் வந்தார். புனித யாகப்பர் ஆலயத்தின் மூப்பர் யாக்கோம்பிள்ளை என்பவரதும் அடைப்பனார் வஸ்தியாம்பிள்ளை அவர்களினதும் ஒப்புதலை பெற்று புனித யாகப்பர் ஆலயக் குருமனைக்குச் சென்று அங்கு கவனிப்பற்றுக்கிடந்த மாதா திருச்சுரூபத்தை துணியினால் நன்கு துடைத்து தனது சால்வையினால் மூடி சந்திரசேகர சுவாமி யிடம் தொம்மைக்குட்டி அவர்கள் கையளித்தார்.

சந்திரசேகர சுவாமியும் தொம்மைக்குட்டியும் அண்ணாவியார் மனுவலும் திருச்சுரூபத்தை எடுத்துக் கொண்டு மாட்டுவண்டியில் சரவணை நோக்கி புறப்பட்டனர். செல்லும் வழியில் கோவிலுக்குக் காணி வாங்க கொடுத்த அரசப்பதிவாளர் பேதுருப்பிள்ளையும் தம்முடன் சேர்த்துக்கொண்டனர். இவர்கள் சர-வணை மாதா ஆலயத்தை அடைந்த போது மாதகல் பாவிலுப்பிள்ளை சட்டம்பியாரும் சரவணைக்கட்டையரும் இவர்களுடன் இணைந்து கொண்டனர். இவர்கள் முன்னிலையில் சுவாமியார் எவ்வித ஆடம்பரமுமின்றி அன்னையின் திருச்சுரூபத்தை ஆசீர்வதித்து மக்கள் வழிபாட்டிற்கு பீடத்தில் வெறுமனே ஏற்றிவைத்தனர். இதுவே சரவணை சின்னமடுசெபமாலைமாதாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு என அறியப்படுகின்றது. மேலும் இச்சுரூபம் ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்திலிருந்து எடுத்து வரப்பட்டது எனச் சிலர் கூறுவது தவறாகும் என திரு. ஞா.ம.செல்வராசா அவர்கள் தெளிவுபடக் கூறியுள்ளார்.

## முதற் திருப்பலி

புதிதாக அமைக்கப்பட்ட கொட்டில் ஆலயத்தில் முதற்திருப்பலி ஆடி மாதம் 14ம் திகதி 1895 ஆம் ஆண்டு ஒப்புக்கொடுக்கப்பட்டது. இவ்வாலயத்தில் இதே ஆண்டு ஆவணி மாதம் 4ம் திகதி இரண்டாம் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந் நிகழ்வுடனேயே அன்று முப்பத்து மூன்று பேர் திருமுழுக்கு அளிக்கப்பட்டு திருச்சபையில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

புதிதாக அமைக்கப்பட்டு திருச்செபமாலை அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு இக் கொட்டில் ஆலயம் வெகுவிரைவில் தீவுப்பகுதியின் பல பாகங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையிலான மக்களிற்கு ஆன்மீக அருள் வளம் அளித்து ஒன்றிணைக்கும் திருத்தலமாக மாறியது. 1806 ஆம் ஆண்டு முதல் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் இப்புதிய திருத்தலத்தை நோக்கி கூட்டம் கூட்டமாக திருச்செபமாலை ஒதிக் கொண்டு பிரார்த்தனை பாடிக்கொண்டு வரும் காட்சி சாதாரண காட்சியாக மாறியது என சுவாமி.ஞானப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். தீவுப்பகுதியின் எல்லாம் பக்கங்களிலிருந்தும் மக்கள் வருகை தந்தார்கள் எனவும் குறிப்பாக சனிக்கிழமைகளில் பெரும் எண்ணிக்கையில் கூடினார்கள் எனவும் அறியமுடிகின்றது. ஒரு காலத்தில் மனித நடமாட்டமற்ற வரண்ட பாலை வனம் போன்று கவனிப்பாரற்று திறந்த வெளியாகக் காணப்பட்ட இடம் அன்னைமரியின் ஆசீர் வேண்டி பெரும் கூட்டமாக மக்கள் கூடும் பகுதியாக மாறிப் புதுப்பொலிவு பெற்றது.

1896 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதம் 5ம் திகதி செபமாலை மாதாவின் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது, ஆரம்ப காலங்களில் திருவிழாவில் சரவணைப் பகுதியை அண்மித்த நாரந்தனை, சுருவில், கரம்பன், ஊர்காவற்றுறை, சாட்டி, அல்லைப்பிட்டி ஆகிய கிராமங்களின் மக்கள் மட்டும் பங்குபற்றினர். 1896ன் பின் மாதகல், இளவாலை சில்லாலை,பண்டத்தரிப்பு என்னும் கிராமங்களினின்றும் யாழ்ப்பாணத்தின் ஏனைய ஆலயங்களினின்றும் மக்கள் பெரும் கூட்டமாகவும், மாட்டுவண்டில்களிலும் கால்நடையாகவும் செபமாலை ஓதிக்கொண்டு வந்தனர். இவ்வாறு வரும் மக்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கு ஆங்காங்கே தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு பக்தர்களுக்கு தாகசாந்தி அளிக்கப்பட்டது.

காலக்கிரமத்தில் நாட்டிலுள்ள பெரும் யாத்திரைத்தலங்களான மருதமடு, தலவில்லு ஆகிய திருத்தலங்களுக்கு மக்கள் கூடுவது போன்று யாழ்.மறை மாவட்டத்திலுள்ள பல பங்குகளிலிருந்தும் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் மக்கள் திருத்தலத்திற்கு வருகை தருவதாக சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டார்.

இத் திருத்தலத்தில் மக்கள் பக்தி விசுவாசத்தில் வளர்ச்சியும், உறுதியும் பெற்று அன்னையின் அருள் வளம் நிறையப்பெற்று உள்ளத்தில் அமைதியும் பெற்று செல்லும் யாத்திரைத்தலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியதால் சின்னமடு மாதா போன்று ஒரு சிறிய திருத்தலம் என்னும் பொருள்பட அழைக்கப்படலாயிற்று. அன்று முதல் இன்று வரையும் இப்பகுதி சரவணை சின்னமடு என்றே அழைக்கப்படுகின்றது. இத்திருத்தலத்திற்கு சனிக்கிழமைகளிலும் திருவிழாக்காலங்களிலும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் ஒன்று கூடியதால் ஆயர்.யூலன் அவர்கள் இத்திருத்தலத்தை மறைமாவட்டத்தின் யாத்திரைத்தலமாக 1909 ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தினார்.

1896ஆம் ஆண்டு முதல் ஆவணி மாதம் 5ம் திகதி கொண்டாடப்பட்டு வரும் திருவிழாவிற்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வந்துள்ளது. முதல் திருவிழாவிற்கு 6000பக்தர்கள் வருகை தந்திருந்தனர். திருவிழாத் திருப்பலியின் பின் பக்தர்களுக்கு விருந்து வழங்கும் மரபு பின்பற்றப்பட்டு வந்தது. அடுத்த ஆண்டுத் திருப்பலியில் 13000 பக்தர்களும் வேறு சில ஆண்டுகளில் 15000 மக்களும் கலந்து கொண்டனர்.

1894ம் ஆண்டு சந்திரசேகர அடிகளினால் கொள்வனவு செய்யப்பட்ட காணியின் பரப்பளவுடன் படிப்படியாக இக்காணியை அண்டிய காணிகளும் கொள்வனவு செய்யப்பட்டு பெருப்பிக்கப்பட்டது. இவ்வாறு 1925ம் ஆண்டிற்கு முன்பே எல்லாமாக 16 ஏக்கர் காணி கொள்வனவு செய்யப்பட்டது. இதற்கு மறைமாவட்டம் ரூபா2300/=வை வழங்கியது. இக்காலத்தில் ஆலயத்தினதும், ஆலயவளவினதும் பராமரிப்பதற்கு வருடா வருடம் ரூபா 500/= செலவிடப்பட்டிருக்கின்றது.

சரவணை (சின்னமடு) செபமாலைமாதா ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட போது நாரந்தனைப் பங்கு ஊர் காவற்றுறைப்பங்குடன் இணைக்கப்பட்ட நிலையிலேயே நிர்வாகமும் இடம் பெற்றுள்ளது. இவ்விணைப்பானது 1893முதல் 1908வரையும் நீடித்துள்ளது. 1908ம் ஆண்டிலிருந்து நாரந்தனை ஊர்காவற்றுறையிலிருந்து பிரிக்கப்பட்டுத் தனிப்பங்காக இயங்கியது. இக்காலம் முதல் சரவணை செபமா-லை மாதா ஆலயம் நாரந்தனை பங்கின் நிர்வாகத்தின் கீழே இருந்துள்ளது. வண.டோறாட் (Fr. Duart) அடிகள் முதல்முறை ஊர்காவற்துறைப் பங்குத்தந்தையாக பணியாற்றிய போது சரவணை செபமாலை மாதா ஆலயத்தில் குருக்களுக்கான பணிமனையும் ஏனைய வசதிகளும் கொண்டதாக கட்டிடம் ரூபா3200/=செலவில் அமைக்கப்பட்டது. சில வருடங்களுக்குப் பின்பு யாத்திரிகர்களுக்கு ஒரு தங்குமிடம் ரூபா 600/= நிதி உதவியை அந்நாட்களின் மலேசியாவில் அரச ஊழியராகப் பணியாற்றிய திரு.S.C.பொன்னையா அவர்கள் வழங்கினார். மேலும் சில்லாலையச் சேர்ந்த சில்லாலைத்தம்பி என அழைக்கப்படும் திரு.சூசைப்பிள்ளை அவர்கள் பலிப்பீடத்தை அன்பளிப்புச் செய்தார்.

1925 ஆம் ஆண்டு புதியதோர் கட்டிடம் அமைக்கப்பட்டதாகவும் இது ஆரம்பத்தில் தற்காலிக ஆலயமாகவும் பின்பு யாத்திரிகர்கள் தங்குமிடமாகவும் மாற்றப்பட்டது. எனச் சுவாமி. ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். இப்பின்னணியில் நோக்கும் போது இக்கட்டிடம் தற்காலிகமாக இயங்கிய காலத்தில் முதலில் கொட்டில் கோயில் இருந்த இடத்தில் இயங்கிய காலத்தில் முதலில் கொட்டில் கோயில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் சுண்ணாம்பினால் ஒரு புதிய ஆலயம் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டு. நாரந்தனைப் பங்குத் தந்தையாகவும், இவ்யாத்திரைத்தலத்தின் பரிபாலகராகவும் பணியாற்றிய அருட்தந்தையர்கள் காலத்துக்குக் காலம் தேவை கருதி பல திருத்த வேலைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இவ் ஆலயத்திற்குரியதாக அமைக்கப்பட்டதே தற்போதுள்ள மணிக்கூட்டுக்கோபுரம், சுண்ணாம்புக்கல்லினால் அமைக்கப்பட்ட ஆலயம் மணிக்கூட்டுக்கோபுரத்திற்கு மேற்கே அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளல் பொருத்தமானது. இம்மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்ட மணியானது வெளிநாட்டில் செய்யப்பட்டுள்ள காலம் சென்ற வீனஸ் மரியாம்பிள்ளை என்பவரினால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது என மணியில் காணப்படும் குறிப்பிலிருந்து அறியக்கூடியதாயுள்ளது.

பலிப்பீடத்திற்கு முன்பு சீமெந்து நிலத்தில் 1948ம் ஆண்டு குறிப்பிடப்பட்டுள்ளமை பலிப்பீடப்பகுதியில் இதே ஆண்டில் திருத்த வேலை அல்லது புதிதாக நிர்மாண வேலை இடம் பெற்றிருக்க வேண்டும் எனக்கொள்ள இடமுண்டு. அதே போன்று ஆலயத்தின் முகப்புப்பக்க வாசலில் 1952ம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்குறிப்பைப் பின்னணியாகக் கொண்டு நோக்கும் போது 1952ம் அண்டு முகப்பு வேலை நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம். மேற்குறிப்பிட்ட இரண்டு ஆண்டுகளும் எழுதப்பட்ட அடையாளங்கள் 2000- 2001ம் ஆண்டுகளில் இடம் பெற்ற திருத்த அல்லது அமைப்பு வேலைகளின் போது சிதைந்து விட்டன. ஏனெனில் 2000 – 2001ம் ஆண்டும் புனரமைப்பின் போது முழு ஆலயத்திற்கும் புதிதாக சீமெந்து நிலம் அமைக்கப்பட்டது. இத்திருத்தலத்திற்கு வருகை தரும் பக்தர்களின் நலன் கருதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சைவப்பெரியார் இராமையா அவர்களினால் தற்காலிகமாகத் தண்ணீர்த்தொட்டி அமைக்கப்பட்டது. இவர் மறைவிற்குப் பின் கரம்பொன் கிராமத்தைச் சேர்ந்த வர்த்தகரான சவிரிமுத்து இன்னாசிமுத்து என்பவர் மேற்படி பணியைத் தொடர்ந்து மேற்கொண்டார். இப்பணியைச் சிறந்த முறையில் ஆற்றுவதற்கு 1932ம் ஆண்டு ஆலய வளவினுள் நிரந்தரமான ஒரு தொட்டியை அமைத்தார்.

1894ல் சந்திரசேகரசுவாமியினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆலயத்தின் அருகாமையில் தொடர்ந்து இயங்கி வருகின்றது. தற்போதுள்ள பாடசாலை அமைக்கப்படுவதற்கு முன்பு இரண்டாவது பாடசாலை சுண்ணாம்புச்சுவரினால் அமைக்கப்பட்டிருக்கலாம் தற்போதுள்ள பாடசாலை மூன்றாவது பாடசாலையாக இருக்கலாம் எனக் கொள்ளத்தோன்றுகின்றது.

1950களின் பின்பு போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் திருவிழாவில் கலந்து கொள்ள ஏதுவாய் அமைந்தது. பேருந்து வசதிகள் அமைக்கப்பட்டமை, குறிக்கட்டுவான் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டமை, இங்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை பெருகியமைக்கு ஏனைய காரணிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் வருடத்திற்கு இரண்டு திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வந்ததாக அறியப்படுகின்றது. ஆவணி மாதத்தில் கொண்டாடப்பட்டு வந்த விழாவில் மறைமாவட்டத்தின் எல்லா இடங்களிலிருந்தும் வரும் பக்தர்கள் பங்கு கொண்டார்கள். ஐப்பசிமாதத்திருவிழா குறிப்பாக சில்லாலை, பண்டத்தரிப்பு, இளவாலை, மாதகல் ஆகிய கிராமங்களிலிருந்து வரும் மக்களால் கொண்டாடப்பட்டது. இன்று ஆலயத்தில் காணப்படும் மரத்திலான பல சித்திர வேலைப்பாடுகளுடன் காணப்படும் திருப்பலிப்பீடம் சில்லாலை வைத்தியர் இன்னாசித்தம்பி அவர்களால் அன்புளிப்புச்செய்யப்பட்டது. தற்போது இது சிம்மாசனத்தின் இடப்பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இடம்பெற்ற போராட்டத்தில் இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் பல மக்களின் உடமைகள், இல்லிடங்கள், ஆலயங்கள் பாதிக்கப்பட்டது போன்று இவ்வாலயமும் பல சேதங்களுக்குள்ளானது. 1990ம் ஆண்டு இலங்கை இராணுவம் யாழ்.நகரைக்கைப்பற்றும் நோக்குடன் ஊர்காவற்றுறையில் தரையிறக்கப்பட்டு முன்னேறிச்சென்று கொண்டிருந்த வேளையில் ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை, சரவணைப்பகுதி மக்கள் பலர் இவ்வாலயத்தில் தஞ்சமடைந்தனர். ஈற்றில் 150 குடும்பங்களை பராமரிக்கும் நலன்புரி நிலையமாக இவ்வாலயம் செயற்பட்டது.

1991 ஏப்ரல் 27ம் திகதி ஊர்காவற்றுறையிலிருந்து புளியங்கூடல் நோக்கி இராணுவம் முன்னேறமுற்பட்டபோது இங்கிருந்த மக்கள் இடம் பெயர்ந்து வேலணை, சாட்டி, யாழ். நகர் நோக்கிச் சென்றனர். முன்னேறிய இராணுவத்தினர் ஆலயத்தின் மேற்குப்பக்கமாக சுமார் 250 மீற்றர் தூரத்தில் பாதுகாப்பரண்கள் அமைத்து இங்கே நிலை கொண்டனர். இங்கிருந்து ஏவப்பட்ட ஷெல் ரொக்கட், துப்பாக்கிச் சன்னங்களினால் ஆலயம் பாரிய சேதங்களுக்குள்ளானது.

எனினும் 1996ல் மக்கள் தீவகத்தில் மீளக்குடியமர்ந்த வேளையில் இவ்வாலயத்தையும் துப்பரவு செய்தனர். இக்காலத்தில் இவ்ஆலயத்தின் நிர்வாகப்பொறுப்பையேற்ற அருட்பணி மௌலிஸ் அடிகள் ஐந்து ஆண்டுகள் இடைவெளியின் பின்பு மீண்டும் இங்கு வழிபாடுகள் நடத்தியதோடு சில திருத்தப்பணிகளை மேற்கொண்டார்.

இக்காலத்திலேயே வடக்கிற்கான புனர்வாழ்வு, புனருத்தாரண அதிகாரசபையின் (RRAN) தலைவர் திரு.ஒபடகே அவர்களின் பணிப்புரையில் ஊர்காவற்றுறை – நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு.J.X.செல்வநாயகம் அவர்களின் பரிந்துரையிலும் இவ்வாலயத்தின் புனருத்தாரணத்திற்கு ரூபா அறுபது இலட்சம் வழங்குவதென உறுதியளிக்கப்பட்டது. இதன் முதற்கட்டவேலைகள் ரூபா முப்பத்தெட்டு இலட்சத்திற்கு இடம் பெற்றுவிட்டதாகவும் இதில் ரூபா இருபத்தைந்து இலட்சம் வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு அமைச்சினால் வழங்கப்பட்டுவிட்டதாகவும் பங்குத்தந்தை அருட்பணி. எறிக்றொசான் மூலமாக அறிகின்றோம். 2000 – 2001ல் இடம்பெற்ற புனரமைப்பு பணிகளில் சில முக்கிய விடயங்களை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் ஆலயத்தின் நடுப்பகுதியிலுள்ள தூண்கள் மட்டும் மாற்றியமைப்பது என்னும் திட்டத்துடனேயே புனருத்தாரணப் பணிகள் ஆரம்பமாயின. பின்பு பல திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டு முன்பு இருந்த முகப்பு, திருப்பண்டங்கள் பாதுகாப்பறை (Sacristy) தவிர்ந்த ஏனைய அனைத்து பகுதிகளும் புதியதாக அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான புனருத்தாரணப்பணியின் முதற்கட்ட வேலைகள் புரட்டாதி மாதம் 2000ம் ஆண்டில் ஆரம்பமாகி ஆனி மாதம் 2001ம் ஆண்டு பிற்பகுதியில் நிறைவுபெற்றது.

பழைய ஆலயம் அமைந்திருந்த அதே அத்திவாரத்தை கொண்டே புதிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் ஆலயத்தின் இரு பக்கங்களிலும் பத்து அடிக்கொன்றாக (கொங்கிறீற் தூண்கள் அமைக்கப்பட்டு இத்தூண்களிலேயே முகட்டு இரும்புப்பட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆலயத்தின் நீளத்திலோ அகலத்திலோ மாற்றம் ஏற்படவில்லை ஆலயத்தின் நீளம் 140அடியாகவும் அகலம் 40அடியாகவும் உள்ளது. ஏனைய புகழ் பெற்ற யாத்திரைத்தலங்களின் அமைப்பையொத்த வகையில் பலிப்பீடமும் அதன் பின்புறமாக போதிய இடைவெளியுடன் சிம்மாசனம் போன்று நிறுவப்பட்டுள்ளது. பலிப்பீடத்திற்கும், சிம்மாச அமைப்பிற்கும் இடையிலுள்ள பகுதி அன்னையின் திருச்சுரூபத்திற்கு முன்பு மக்கள் கூடிச்செபிப்பதற்கு ஏற்ற இடவசதியையும் சூழலையும் கொண்டதாயுள்ளது.

திருவிழாக்காலங்களில் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கருத்தில் கொண்டு ஆலயத்தின் வடக்குப் பகுதியில் சிறிய அழகான போட்டிக்கோவும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இதே இடத்தில் முன்பு ஒரு சிறிய மேடை மட்டும் அமைந்திருந்தது இப்போட்டிக்கோ திருவிழாத்திருப்பலியம், திருவிழாவின் முதல் நாள் மாலை நற்கருணை வழிபாடும் சிறந்த முறையில் நடத்தவும் மக்கள் பக்தியாக பங்கு கொள்வதற்கு ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் பெரும் பகுதி புதிய அமைப்பாகக் காட்சியளிக்கும் போது ஆலயத்தின் முகப்புப்பகுதி பழைய ஆலயத்திற்குரியது என்பது இலகுவில் இனம் காணக்கூடியதாயுள்ளது.

40அடி அகலமான ஆலயமாக அமைந்துள்ள போதும் நடுவே தூண்கள் இல்லாது இரும்புப் பட்டங்களினால் அமைக்கப்பட்டு முகட்டுக்கூரைத் தாங்கணைப்புகள் (Trusses) மூலம் கூரையின் முழுப்பாரத்தையும் தாங்கும் வண்ணம் பொறியியல் அமைப்பு முறை இடம்பெற்றுள்ளமை குறிப்பில் இடம் பெறுதல் பொருத்தமானது.

இத்திருத்தலத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்கள் நலன் கருதி பன்னிரண்டு கழிப்பறைகள் ஆலயத்தின் தென்மேற்குப்பகுதியில் அமைக்கப்பட்டதோடு 12000கலன் நீர் கொள்வனவுள்ள தண்ணீர் தொட்டியும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆலயத்தின் வளவிலுள்ள மூன்று கிணறுகளில் இரண்டு மக்களின் பாவனைக்கு ஏற்றவையாக புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் வளவு எல்லைகளில் ஏற்கனவே இருந்த காப்பரண்களுடன் மேலும் 720 அழகுக்காப்பரண்கள் அமைக்கப்பட்டு மிகுதிப்பகுதி முட்கம்பியினால் அடைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இலட்சம் ரூபா செலவில் புரைமைக்கப்பட்ட ஆலயத்தின் திறப்பு விழா ஆடி மாதம் 27ம் திகதி அதாவது 20ம் ஆண்டு திருவிழாவின் முதலாம் ஆயத்த நாள் அன்று இடம் பெற்றது. இதில் தீவுப்பகுதி மக்கள் ஏனைய பங்குகளிலிருந்து வருகை தந்த ஏராளமான பிரதிநிதிகள் இருபது அருட்தந்தையர்கள், பதினைந்து அருட்சகோதரிகள் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். இதற்கான ஒழுங்கினை யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையமும் நாரந்தனைப் பங்கு தந்தையும் இணைந்து மேற்கொண்டனர். அன்றைய தினம் நான்கு மணிக்கு பங்குப்பிரதிநிதிகள் தங்கள் பங்குகளின் கொடியுடன் ஆலயத்தின் முன்பு ஏனைய மக்களுடன் கூடிய போது அருட்பணி J.P.E.செல்வராசா அடிகள் நாடாவை வெட்டி ஆலயத்தை திறந்து ஆலயத்தையும் செபமாலை அன்னையின் புதிய சுரூபத்தையும் ஆசீர்வதித்தார். (இத்திருச்சுரூபம் இவ்வாலயத்தின் புனரமைப்பிற்கு மேஸ்திரியாகவும் ஆசாரியாகவும் பணியாற்றிய பொன்னாலையைச் சேர்ந்த திரு.நற்குணலிங்கம் என்பவரும், சுருவிலை பிறப்பிடமாகக்கொண்டு தற்போது நீர்கொழும்பில் வசிப்பவருமான சாந்ததேவி விஜயரட்ணம் குடும்பத்தினரும் இணைந்து அன்பளிப்புச்செய்தனர் தொடர்ந்து திருச்செபமாலையும் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

குறிப்பு:- (சின்னமடுமாதா ஆலயத்தின் வரலாறானது நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தினரால் வெளியிடப்பட்ட சின்னமடுச்செபமாலைமாதாவின் ஆலய வரலாறும் யாத்திரைக்கைநூல் எனும் நூலை ஆதாரமாகக்கொண்டு இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது)

## சுமைதாங்கி



**இது எமது பிரதேசத்தில் பருத்தியடைப்பு**
**கிராமத்தில் அமைந்துள்ள**
**நினைவுச்சின்னமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளசமூகப்பிரச்சினையும் ஊர்காவற்றுறையும்

திருமதி . உஷா பதீஸ்ராஜா
அபிவிருத்தி உத்தியோகத்தர் (உளவளத்துறை)
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

உலகில் பிரச்சனை இல்லாத மனிதர்கள் யாருமில்லை. பிரச்சனையானது ஒரு மனிதனுக்கு நெருக்கீடு அதிகரிக்கும் போது பிரச்சனை ஏற்படுகின்றது. அதுமட்டுமல்ல பல்வேறுபட்ட விடயங்களை எதிர்பார்த்து இருக்கும் பொழுது அது நிறைவு பெறாதபட்சத்தில் பிரச்சனை ஏற்படுகின்றது. மனித வாழ்வில் பிரச்சனை என்பது பல வடிவங்களில் தோன்றுகின்றது இவ்வாறு மனிதர்கள் நாளாந்தம் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளுக்கும் துக்கங்களுக்கும் அவனது மனமே அடிப்படையாக விளங்குகின்றது. இத்தகைய பிரச்சனைகளின் நிமித்தம் அனேகமான மனிதர்கள் உளரீதியாக பாதிக்கப்படுகின்றனர். இது தொடர்ச்சியாக மனிதவாழ்வில் நிகழக்கூடியதாக இருக்கும். உளசமூகம் என்பது மனிதனுடைய வாழ்வில் செல்வாக்கு செலுத்துவதாக காணப்படுகின்றது. இத்தகைய விடயங்களின் அடிப்படையில் உளசமூகப்பிரச்சனைகள் என்பதனை ஊர்காவற்றுறை பிரதேச மக்களது உளப் பிரச்சனைகள் தொடர்பாக ஆராயும் பொழுது "உளசமூகப் பிரச்சனைகள் என்பது தனிநபரில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் சமூகரீதியில் தாக்கத்தை ஏற்படுத்துதலும், சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சனைகள் தனிநபரில் தாக்கத்தை ஏற்படுத்துவதனையும் உளசமூகப் பிரச்சினையாக கருதலாம் இத்தகைய கருப்பொருளின் அடிப்படையில் மனிதனுடைய வாழ்க்கை என்பது இவற்றுடன் முற்றும் முழுதாக சம்பந்தப்பட்டதாக காணப்படுகின்றது.

உளசமூகப் பிரச்சனைகள் ஏற்படுவதற்கான காரணங்களை எடுத்து நோக்கும் போது கூடுதலாக இப்பிரதேச மக்கள் போருக்கு பின்பும் இயற்கை அனர்த்தமான சுனாமியின் பின்பு தான் அதிகளவில் உளப்பிரச்சனைகளுக்கு ஆளகாக வேண்டியிருந்தது. இதனை விட இடப்பெயர்வு குறைந்த கல்வியறிவு சமூக மாவட்ட நிறுவனங்களின் செயற்பாட்டின்மை இழப்புக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பிரச்சினைகள் ஏற்பட்டு அதனை சமாளிக்க அதில் இருந்து மீள முடியாதவன் அதிக உளசமூகப் பிரச்சனைகளுக்கு ஆளாகின்ற தன்மைகளை காணக் கூடியதாக இருக்கின்றது. பொதுவாக சமூகப் பிரச்சினைகளாக பின்வருவற்றை குறிப்பிடலாம்.

1.பாடசாலை இடைவிலகல்
2.சிறுவர்துஷ்பிரயோகம்
3.வேண்டாத கர்ப்பம்
4.இளவயதுத்திருமணம்.
5.பலதாரமணங்கள்
6.மதுபாவனை
7.வீட்டுவன்முறை
8.வறுமை
9.இளங்குற்ற நடத்தைகள்
10.சமூகவிரோத செயல்கள்

இவற்றுள் முதலில் பாடசாலை இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகல் என்ற சமூகப்பிரச்சனையானது விலகல் என்பது பொதுவாக கல்வியை பூர்த்தி செய்யாது இடையில் பாடசாலையை விட்டு மாணவர்கள் இடைவிலகுவதே இடைவிலகலாகும். எம்மை பொருத்தமட்டில் வறுமையின் காரணமாக பெண்கள் கூலிவேலைக்கு செல்வதும் தாய்மார் வெளிநாடுகளுக்கு சென்று பணிப்பெண்களாக வேலைக்கு செல்லும் பொழுது தமது பிள்ளைகளை உறவினர்களின் பராமரிப்பில் விட்டு செல்லும் போது அவர்களது அக்கறை இன்மை காரணமாகவும் பிள்ளைகள் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்தி பாடசாலை செல்லாத நிலைகள் காணப்படுகின்றது. அது மட்டுமல்ல தாயை இழந்தவர்கள் தன் கீழ் உள்ள சகோதரர்களை கவனிப்பதற்காகவும் பாடசாலை இடைவிலகிய நிலைகள் காணப்படுகின்றன. பாடசாலை சென்று தமது கல்வியைத்தொடரமுடியாத அளவுக்கு வறிய நிலையில் இங்கு மக்கள் உள்ளதால் அவர்களும் பாடசாலை இடைவிலகுகின்ற தன்மைகளை அவதானிக்க கூடியதாக உள்ளது. இத்தகைய இடைவிலகலுக்கு முக்கியமான காரணமாக பெற்றோர்களின் அக்கறையின்மையே ஆகும். இதனால் மாணவர்கள் மத்தியில் இவ்இடைவிலகல் ஓர் சமூகப்பிரச்சனையாக காணப்படுகிறது.

அடுத்து சிறுவர் துஷ்பிரயோகத்தினை நோக்கும் போது தந்தைமார் மது அருந்திவிட்டு பிள்ளைகள் மீது வன்முறைகளை வெளிப்படுத்துவர். மேலும் பாடசாலைகளில் இருக்கின்ற சிறுவர் இல்லங்களிலும் கூடுதலாக இத்தகைய துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. அந்த வகையில் சிறுவர் துஷ்பிரயோக நிலையை குறைக்க எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டியவைகளாக இன்றைய சிறுவர்கள் நாளைய எதிர்காலம் நன்றாக அமைய இன்றைய சிறுவர்களை நல்ல ஒரு பிரஜையாக உருவாக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். சி-றுவர் துஷ்பிரயோகம் என்பது பொதுவாக நடக்கும் விடயமாகிவிட்டது. இந்நிலைமை மாற்றப்பட வேண்டும். பெற்றோர் இருக்கும் சூழலும் குடும்பநிலைமை நண்பர்கள் போன்ற காரணிகளும் நன்றாக செயற்படும் பொழுது இத்தகைய துஷ்பிரயோகத்தை குறைக்க முடியும்

அடுத்து வேண்டாத கர்ப்பம் என்ற சமூகப் பிரச்சனையினை நோக்கும் போது மக்கள் கூடுதலாக கல்வியறிவு குறைவாக இருக்கின்ற காரணத்தினால் வாழ்க்கை என்ற பொக்கிஷத்தை மறந்து கூடுதவாக ஆண்களால் ஏமாற்றப்பட்டு வேண்டாத கர்ப்பம் என்ற நிலைக்குள்ளாகும் தன்மைகள் காணப்படுகின்றது. மற்றவர்களை நம்பி மோசம்போவது பலாத்காரமாக மோசடிக்கப்படுவது ஆகிய நிலைமைகளில் இங்கு வேண்டாத கர்ப்பம் என்ற நிலைக்கு தள்ளப்படுவதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது. இதனால் இதுவும் ஓர் சமூகப் பிரச்சனையாகப் பார்க்கப்படுகின்றது.

அடுத்து இள வயதுத்திருமணம் என்ற சமூகப்பிரச்சனையை நோக்கும் போது வளங்களில் மனிதவளம் ஏனைய வளங்களைப் போல பெறுமதி கூடிய ஒன்றாகும். மனித தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணம் காணப்படும் அன்றி அது குறைவதில்லை. அறிவியல்சார் வளர்ச்சிகள் சிந்தனைசார் வளர்ச்சிகள் போன்ற காரணிகளால் மனித சமூகம் பல்வேறுபட்ட தேவைகளை அதிகரிக்க வேண்டி உள்ளது. இங்கு வாழுகின்ற மக்களும் இளம் சமூதாயத்தினரும் பெற்றோர்களினால் முறையாக வழிநடாத்தப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய கட்டாயநிலையில் உள்ளனர். ஏனெனில் நாகரீக மோகம் ஆடம்பரவாழ்க்கையை விரும்பும் பருவத்தில் ஏற்படும் ஆபாசங்கள் என்பன இவர்களை முற்றிலுமாக முடக்கி இறுதியில் வாழ்க்கையை முடக்கிவிடும் அளவிற்கு சென்று விடுகின்றன. பெரும்பாலான மக்கள், அன்பு, பாதுகாப்பு, கவனிப்பு எனும் தேவைகளை நோக்கி காதல் எனும் பெயரில் தனது வாலிபக்கோலங்களை கண்ணீரில் கழிக்கும் ஏராளமான பெண்கள் இங்கு காணப்படுகின்றனர். பொதுவாக இளம் வயதில் திருமணம் செய்வோர் பல்வேறு சிக்கல்களையும் பிரச்சனைகளையும் எதிர்நோக்க வேண்டியிருக்கும். பறந்து திரிந்த பருவத்தில் பெற்றோர்களின் பாதுகாப்பில் இருந்து விடுபட்டு குடும்பம் என்ற நிலைக்கு ஆளாகின்றார்கள் இவர்களுக்கு குடும்பத்தை பராமரிக்கும் அனுபவமும் அதற்கான பக்குவமும் அறியாத வயதில் திருமணத்தையும் ஏற்கும் நிலையினை இப்பிரதேச பெண்கள் கூடுதலாக எதிர்நோக்குகின்றனர் புரிந்துணர்வு, தோல்வி, வெற்றி, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுப்பு, சிக்கனம் போன்ற உளம்சார்ந்த உயர்ந்த தன்மைகள் மிகக் குறைவாகவே இவர்களிடம் காணப்படுகின்றது. அதற்கான வயதுப்பக்குவமும் அடையாதவர்கள் பல சிரமங்களை மேற்கொண்டு கணவன் கைவிட்ட நிலையிலும் காணாமல்போன நிலையிலும் கூடுதலாக வாழ்கின்றனர். இவ்வாறு இளவயதுத்திருமணத்தின் மூலம் அவர்களின் வாழ்க்கை அரைவாசியிலேமுடிவடைந்து விடுகின்றது. எனலாம் இவ்வாறான செயல்களினாலேயே தற்கொலை, சிறுவயதிலேயே விவாகரத்து போன்றவற்றுக்கும் வழிகோலுகின்றன. இவ்வாறு இளவயதுத்திருமணம் என்பது முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாக காணப்படுகின்றது. இது போன்ற செயல்களில் இளவயதினர் ஈடுபடுதலை தடுக்க பெற்றோர்கள் பெரும் கவனம் செலுத்த வேண்டும் கல்வியினூடாக எமது வாழ்வை மாற்றியமைக்கலாம் என்பதனை எமது இள வயதினர் புரிந்து கொண்டு செயற்படவேண்டும்.

பலதாரமணம் பற்றிய சமூகப்பிரச்சனையை எடுத்துக்கூறும் போது விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கில் இவை இடம்பெற்று பின்பு அச்செயற்பாடு குடும்ப வன்முறையாகவும் அதேநேரம் பிள்ளைகளுக்கு புதிதாக வந்த தந்தை பிள்ளைகளை கொடுமைப்படுத்தி அவர்களை துன்பத்தினுல் இட்டுச்செல்லும் சம்பவங்களும் கூடுதலாக இடம்பெறுகின்றது. இதுவும் ஒரு சமூகப்பிரச்சனையாக பார்க்கப்படுகின்றது.

அடுத்து மதுபாவனைப்பிரச்சனை என்பது முக்கியமான ஒரு சமூகப் பிரச்சனையாக நோக்கப்படுகின்றது. இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் யுத்தத்தாலும் இடப்பெயர்வாலும் சொல்லத்தகாத துன்பத்தை அனுபவித்து இன்னமும் அதிலிருந்து மீண்டு வரமுடியாத நிலையில் தத்தளித்துக்கொண்டிருக்கும் அனேகமானவர்கள் தமது குடும்பத்தை சீரழித்துக்கொண்டு இருக்கின்றார்கள். குடும்பத்தலைவன் மது பாவனையில் ஈடுபடும் பொழுது அது அதிகளவில் பெண்களை பாதிக்கின்றது குடும்பத்தலைவன் தனது வருமானத்தில் பெரும் பகுதியை மதுபாவனைக்கு செலவிடும் போது வீட்டிலுள்ள குடும்பத்தலைவிகள் ஏனைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத்திண்டாடும். நிலைமை காணப்படுகிறது. கூடுதலாக பெண்களை வன்முறைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்படுத்தும் ஒரு நடவடிக்கைக்கு மதுபோதை காரணமாக உள்ளது. இதனால் பிள்ளைகளுக்கு போஷாக்கான உணவையோ தரமான கல்வியையோ பெற்றுக்கொடுப்பதில் பல நெருக்கடிகளை சந்தித்துக்கொள்கின்றார்கள் இச்செயற்பாடுகள் இப்பிரதேசத்தில் கூடுதலாக அவதானிக்க கூடியதாக உள்ளது. இவ்வாறான மதுபாவனையானது "குடி குடியை கெடுக்கும்" நிலைக்கு வளர்ந்து கொண்டு போகின்றது மதுபாவனையால் பாதிக்கப்படுபவர்கள் பல விதமான மன உளைச்சலை சமூகத்தின் மத்தியில் சந்திக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் மதுபாவனை பிரச்சனை ஒரு சமூகப் பிரச்சனையாக காணப்படுகின்றது. இவ்வாறான பிரச்சனைகள் சமூகப்பிரச்சனையாக பார்க்கப்படுகின்றது.

அடுத்தாக இத்தகைய சமூகப்பிரச்சனைகளுக்கு மக்கள் முகம்கொடுக்கும் போது அது உளப்பிரச்சனையா மாற்றம் அடைகின்றது. அந்தவகையில் இப்பிரச்சனைகள் காரணமாக இப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு பயம், துயரம், இழவிரக்கம், மெய்ப்பாடு, நித்திரையின்மை என்பன ஏற்படுகின்றன. மற்றவர்களுடனான உறவில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன அத்துடன் மதுவிற்கு அடிமையாகிவிடும் நிலையும் ஏற்படுகின்றது ஒருவர் மீண்டும் மீண்டும் இவ்வாறான சமூகப் பிரச்சினைகளக்கு முகம் கொடுக்கும்போது / தொடர்ச்சியான நெருக்கீட்டிற்கு உள்ளாகும் போது அதனை சமாளிக்க முடியாத நிலைக்கு ஆளாகின்றான். இதனால் மிதமான உளக்கேளாறுகளுக்கு ஆளாகின்றான் எனவே ஆரம்பகட்டத்திலேயே இனங்கண்டு எதிர்கொள்வதன் மூலம் ஒருவரில் மிதமான உளநலக்கோளாறுகள் ஏற்படாத வண்ணம் தடுக்கலாம். இவ்வாறான பிரச்சனைகளின் மூலம் இங்கு வாழும் மக்கள் கூடுதலாக நரம்புத்தளர்ச்சி என்ற நோய் நிலைக்கு ஆளாகும் தன்மைகள் காணப்படுகின்றன. மேலும் நெருக்கீடுகளுக்கும் போதியளவு ஈடுகொடுக்க முடியாமையினாலும் உளசமூகப் பிரச்சனைகளை பாதகமாக எதிர்நோக்குவதாலும் கூட்டாக உண்டாகப்படும் ஒரு நிலைமை உணர்ச்சி கோளாறாக மாற்றமடைகின்றது.

கூடுதலாக இப்பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் அதிகளவு நெருக்கீடுகளுக்கு முகம் கொடுத்துள்ளமையினால் அதிகளவான உளநலக்கோளாறுகள் உடையவர்களாக காணப்படுகின்றனர். இவர்களிடம் காணப்படுகின்ற உளநலக்கோளாறுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1.பதகளிப்பு (Anxiety)
2.மனச்சோர்வு (Deperssion)
3.மெய்ப்பாடு (Somatization)
4.நெருக்கீட்டிற்குட்பட்ட மனவடுநோய் (PTSD)

இத்தகைய கோளாறுகள் ஒரு மனிதனுக்கு ஒன்று இருந்தாலும் பல சேர்ந்து இருந்தாலும் இது அவரை பாதிக்கலாம் உதாரணம்:- ஒருவருக்கு பதகளிப்பு இருக்கும் போது அவர் மனச் சோர்வையும் கொண்டிருப்பார்.

இங்கு வாழும் மக்கள் எதிர்நோக்கும் உளப்பிரச்சனையான பதகளிப்பினை நோக்கும் போது பயம்/நெருக்கீடு காரணமாக வெளிக்கொணரப்படும் சாதாரண உணர்வு பூர்வமான இடர்பாடுகளாகும். இது இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ளுவதற்கான உடலியல் இசைவாக்கம் இயற்கையான பண்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கவலை அளவு மீறி அல்லது தொடர்ந்து காரணமின்றித் தோன்றும் போது அதனை பதகளிப்பு எனலாம். பதகளிப்புக்கு உள்ளானவர் ஒரளவு சாதாரணமாகத் தோன்றுவார். ஒருவர் பதகளிப்பிற்கு உட்பட்டிருக்கும் போது அவர் பின்வரும் அறிகுறிகளை கொண்டிருப்பர், பயம், பதட்டம் ஏக்கம், அந்தரப்படல், ஆறுதலின்மை, களைப்பு, நடுக்கம், தலைச்சுற்று, வயிற்றுப்போக்கு பாலியல் இடர்பாடுகள் போன்றவற்றை கொண்டிருப்பர். இவ்வாறு பதகளிப்பு கூடுதலாக இருப்பவர்களுக்கு பீதிநோய் (Panicaltde) உடையவராக காணப்படுவார்கள் இப்பீதிநோயானது. திடீரென அதி உச்சமான பயத்திற்கு உள்ளாதல் என்பவற்றால் ஏற்படுவது ஒருவர் அடிக்கடி கை கழுவும் பழக்கம் உடையவாராக இருந்தால் இவருக்கு Panic altde இருக்கிறது என்பதனை விளங்கிக் கொள்ளலாம். இத்தகைய உளப்பிரச்சனை உடையவருக்கு மருத்துவ பரிசோதனை செய்வது மிக முக்கியமானது. அத்துடன் குடும்ப,சமூகஉறவுகளுடன் கதைத்தல். பொருத்தமான அமைதியான சூழலுக்கு மாற்றல், பாரம்பரிய சிகிச்சை முறைகள், வழிபாடு சார்ந்த வழிமுறைகளும் பதகளிப்பை குறைக்கும், நடத்தை மாற்று சிகிச்சையினை மேற்கொள்ளல் இவ்வாறு ஓவ்வொரு உளநலக் கோளா-றுகளும் உடையவர்களாக இப்பிரதேசமக்கள் காணப்படுகின்றார்கள். இத்தகைய பிரச்சனை உடையவர்களுக்கு அதற்குரிய தலையீடுகளைமேற்கொண்டு செயற்பட வேண்டும். அதாவது உளசமூகப் பிரச்சனை குறைப்பதற்கு சேவையாற்றுதல் அல்லது குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு இங்கு வாழும் பொழுது மக்கள் யாவரும் பிரச்சனைகள் ஏற்படும் போது அதனைக்கண்டு துவண்டு விடாமல் துணிச்சலுடன் எதிர்கொள்ள வேண்டும். அதற்கான தீர்வும், தீர்வுக்கான வழிமுறைகளும் நம்மைச்சுற்றியே காணப்படுகின்றன. தீர்வுக்கு பொருத்தமான வழி ஒன்றைத் தேர்ந்தெடுப்பதிலேயே எமது வெற்றி தங்கி உள்ளது. “தேனீக்கள் கொட்டும் என்று அஞ்சிக் கொண்டே இருந்தால் எப்பொழுதும் நம் நாவினால் அத்தேனின் தித்திப்பை உணரவே முடியாது” எனவே பிரச்சினையை கண்டு பயந்து விடாமல் அதனை துணிச்சலுடன் எதிர்கொண்டு எமது இலக்கினை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும். இத்தகைய உள சமூகப்பிரச்சனைகளுக்கு சமூகமட்டத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் சமுதாய மக்களுக்கு உளசமூக பிரச்சனைகள் ஏற்படாமல் மக்கள் வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும், அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது பற்றி விழிப்புணர்வு வழங்கல் வேண்டும். இதனை விட சமூகமட்ட நிறுவனங்களான சனசமூகநிலையம், விளையாட்டுக்கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர்கிராம அபிவிருத்திச்சங்களுடன் இணைந்து அவ் அமைப்புக்களுடன் அணுகி பலப்படுத்தவேண்டும். உதவி வலைப்பின்னலை வழங்கும் சமூகமட்ட தொண்டாற்றுகின்ற மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பொருத்தமான சேவையைப்பெற உதவ வேண்டும்.

அது மட்டுமல்ல எமது பிரதேச அமைப்புக்களின் நிர்வாகங்கள் பிரதேச மக்கள் பற்றிய தொடர் கண்காணிப்பின் மத்தியிலும் தான் எமது பிரதேச உளசமூகப் பிரச்சனைகள் பெரும்பாலானவை தீர்வுக்கு வரும் வரை செயற்படுத்தப்படுகின்றது. அதே நேரம் எமது பிரதேசத்தில் உளவளத்துணை சேவையும் அதன் மருத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையும் வைத்தியசாலையில் முற்றிலும் முழுதாக இடம்பெறுகின்றது. அதனை விட சுயதொழில் வாய்ப்புக்கள் யாவும், அரச சார்பற்ற நிறுவன உதவிகளை பெற்று மக்களுக்கு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை இப்பிரதேசத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும் சமூகமட்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அதன் மூலம் பிரச்சனைகள் தீர்வுகள் வரும் நிலைமைகளும் காணப்படுகின்றது.

இவ்வாறான உளசமூகப்பிரச்சனை குறைப்பதற்கும் ஒவ்வொரு பிரதேசமட்டங்களிலும். கிராமமட்டங்களிலும், கலாசார சீரழிவு, சிறுவர் துஷ்பிரயோகம், மதுபாவனை என்ற பல விடயங்கள் தொடர்பாக விழிப்புணர்வுகளை, நடாத்திக்கொள்ளும் சமயத்தில் ஓரளவு குறைத்துக்கொள்ளலாம். அதாவது வெள்ளம் வர முன் அணை கட்டவேண்டும், என்பதனை முக்கியத்துவப்படுத்தலாம் இதனைவிட ஒவ்வொரு பிரச்சனைகளாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவள ஆலோசணை வழங்குவதன் மூலமும் அவர்களது நெருக்கீட்டை குறைத்து கொள்ள வேண்டும். பொதுவாக இத்தகைய பிரச்சனைகளை குறைத்து கொள்ள ஏற்கனவே பல சட்டங்கள் இருந்தாலும் அதனை முறையாக நடைமுறைப்படுத்துவதில்லை ஆதலால் தான் பிரச்சனை என்பது கூடுதலாக ஏற்படுகின்றது. அந்த வகையில் சட்டங்களை பலப்படுத்த வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்.


1.தமிழர் சமுதாயத்தின் உளநலம் பேராசிரியர். தயா சோமசுந்தரம்

2.உளசமூகப்பிரச்சினைகள் அருட்தந்தை “ஸ்ரலின்”

3.உளவியல் உளவளத்துணை அணுகுமுறைகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் முதியோர் வாழ்வு

செல்வி . இராமச்சந்திரன் சிந்துஷா,
அபிவிருத்தி உத்தியோகத்தர்(சமூகசேவைகள்)
பிரதேசசெயலகம், ஊர்காவற்றுறை

சனத்தொகைப்பெருக்கம் பல பரிமாணங்களில் உலகை அச்சுறுத்தும் ஒரு விடயமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. சனத்தொகைப்பெருக்கத்தைப் போன்றுஅதன் உள்ளார்ந்த அமைப்பு மாற்றங்களும் குறிப்பாக சிறுவர் தங்கிநிற்றல், முதியோர் தங்கிநிற்றல் போன்ற விடயங்களில் பல நாடுகளின் அபிவிருத்தியில் சமூக, பொருளாதார அடிப்படையில் நீண்டகால பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன.

இதுவரை காலமும் குழந்தை இளம் பிராயத்தினருக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தற்போது முதுமைக்குத் தரப்படுகின்றது. முதுமையின் செம்மையினை உயர்த்தும் பொருட்டு உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) பிரசீலியாவில் முதுமை பற்றிய பிரகடனத்தில் பின்வருமாறு கூறியது.

"ஆரோக்கியமான முதியவர்கள் தமது குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் பொருளாதாரத்திற்கும் ஆதாயம் ஆவர். அவர்கள் எவ்வளவு முயற்சி உள்ளவராக இருக்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் சமூகத்திற்கு உதவ முடியும். ஆகவே நாடுகள் ஆரோக்கியமான முதுமை எய்தலை தமது நாட்டின் முன்னேற்றத்திட்டத்தில் முக்கியமான ஒன்றாகக் கருத வேண்டும் முதுமை அடையும் மக்களை பிரச்சினையாகக்கருதாது, பிரச்சனைகளுக்கு தீர்வு தரக்கூடியவர்களாக எண்ண வேண்டும். பெரும்பாலும் அவர்களுக்கு எது தேவை என்பதைப் பற்றியே பேசுகிறோம் அல்ல, முதன்மையாக அவர்களால் எமக்கு தரக்கூடிய ஆதாயம் பற்றிப் பார்க்கவும் வேண்டும். தனது முதியோருக்கு ஒரு சமூகம் அளிக்கும் அந்தஸ்தையும் ஆதரவையும் வைத்துத்தான், அந்தச் சமூகத்தின் நாகரிக மேன்மை மதிக்கப்படும்

மனித வாழ்வில் முதுமை என்கிற பருவம் எப்பொழுது தொடங்குகிறது என்பதைப் பொதுவாக வரையறை செய்வது கடினமாகும். வருடங்களின் எண்ணிக்கையை மட்டும் வைத்துக் கொண்டு முதுமைப்படிநிலையை எல்லைப்படுத்துவது அவ்வளவு பொருத்தமாகாது. ஏனெனில் சிலர் மிகக் குறைந்த வருடங்களிலேயே முதுமையின் சுவடுகள் பதிக்கப்பட்டவர்களாகி விடுகிறார்கள். வேறு சிலர் 70,80 ஆண்டுகால வாழ்விலும் இளமை குன்றாப்பொலிவுடன் காணப்படுவர். எனவே வெறும் வருடங்களை வைத்து திருப்திகரமான எல்லையை வகுக்கமுடியாது எனலாம் எனினும் இலங்கையில் பாராளுமன்றத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க முதியோர் உரிமை பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் 60 வயதைத்தாண்டியவர்களே முதியோர்களாக கணிக்கப்படுகின்றனர். (முதியோருக்கானதேசிய செயலகம்). இதனடிப்படையில் இலங்கையின் அரசநிர்வாக செயற்பாடுகளிலும் முதியோர் என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையறுக்க 60 வயதிற்கு மேற்பட்டோா என்ற வரையறையே பயன்படுத்தப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேசசெயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக சமூகசேவைகள் பிரிவில் 02வருடகாலமாக கடமையாற்றிய அனுபவம், கள அவதானம் மற்றும் இக்காலத்தில் இப்பிரதேசம் பற்றி அறிந்துகொண்ட விடயங்கள், நூல்களுக்கூடாக வாசித்தறிந்தவற்றையும் அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசத்தில் வாழும் முதியவர்களின் தற்கால நிலைமை, அவர்களின் மேம்பாட்டுக்கான சவால்கள், வழிவகைகள் என்பவற்றை ஆராய்ந்து குறிப்பிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தனக்கென ஒரு தனித்துவமான பாரம்பரியத்தையும், நீண்டகால வரலாற்றையும், மீன்பிடி, விவசாயத்தை பிரதான தொழில்மார்க்கமாகவும் கொண்டமைந்த ஒரு தீவுப்பகுதியே ஊர்காவற்றுறை பிரதேசமாகும். நீண்டகால போரிற்கு பின்னரும் கூட இன்றுவரை அழிந்தும், அழியாமலும் பல வரலாற்று தொல்லியற்சான்றுகள் நிலை பெற்று இப்பிரதேசத்தின் மகிமையை உணர்த்தி நிற்கின்றது இன, மதப்பரம்பலை நோக்கும் போது இலங்கைத்தமிழரே பெரும்பான்மையிரைாகின்றனர். இந்தியத்தமிழர் மிகக் குறைந்தளவிலேயே வாழ்ந்து வருகின்றனர். மதப்பரம்பலைப் பொறுத்தவரை இந்துக்களும், கிறிஸ்தவர்களுமே சகல இடங்களிலும் பரந்து வாழ்கின்றனர். கரம்பொன், நாரந்தனை, ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனை ஆகிய பிரதேசங்களில் கிறிஸ்தவர்கள் அதிகளவில்வாழ்ந்து வருகின்றனர். 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியிலும் கல்வியறிவு, சிறந்த தொழில்களைப் பெற்றவர்கள் தீவுப்பகுதியில் மேற்குறித்த பிரதேசத்தினரேயாவர். (குகபாலன்,கா தீவகம் - வளமும் வாழ்வும் page -23) சமூக கட்டமைப்பை நோக்கும் போது, கிராமிய தன்மையிலிருந்து மெதுவாக நகரமயப்பட்ட வாழ்க்கை முறைகள் செல்வதனை நோக்க முடியும். இத்தகு சிறப்பு மிக்க ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் முதியோரின் வாழ்வினை அடுத்து நோக்குவோம்.

சென்ற தசாப்தகாலத்தில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம், அதன் விளைவாக பல்வேறுபட்ட இடப்பெயர்வுகள், அகதி முகாம் வாழ்க்கைகள், பொருளாதாரகஷ்டங்கள், உயிரிழப்புக்கள், அனர்த்தங்கள் இவற்றுடன் இணைந்த சமூகமாற்றங்களில் தமது இளமை, நடுந்தரவயதுப் பருவவாழ்க்கையை மேற்கொண்டவர்களே இன்றைய முதிய பிரஜைகள். இவர்கள் கடந்து வந்த பாதையில் குத்திய முற்களின் வலியை இன்று அனுபவிக்கின்றனர். அதாவது பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, கலாசார, உடல், உளப்பாதிப்புக்களை எதிர் நோக்க வேண்டியுள்ளனர்.

ஊர்காவற்றுறை பிரதேச முதியவர்களின் வாழ்வை பொருளாதார ரீதியில் நோக்கும் போது, வெளிநாட்டுத்தொடர்புகள்" பண உதவிகள், தேடிய தேட்டங்கள், பரம்பரைச்சொத்துக்களின் மூலம் வருமானம் பெறுபவர்கள், ஒய்வூதியம் பெறுபவர்கள் இன்றும் தொழிலில் ஈடுபட்டு வருமானம் ஈட்டுபவர்கள், பொருளாதார பலம் வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். புளியங்கூடல், அனைலதீவு, நாரந்தனை, கரம்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய பிரதேசங்களில் இத்தகு பொருளாதார பலம்மிக்க முதியவர்கள் செறிந்து வாழ்கின்றனர். இத்தகைய முதியோர் தத்தமது குடும்பங்களின் வருமானத்திற்கு பங்களிப்புச்செய்பவர்களாக காணப்படுகின்றனர். எனினும் உடல் ரீதியாக பலவீனமடைந்து, நோய்வாய்ப்பட்ட முதியவர்களால் குடும்பவருமானத்திற்கு பங்களிப்பு செய்யும் வகையில் உழைக்கமுடியாது. இதனால் இவர்கள் குடும்ப சுமையாகின்றனர். சில பிள்ளைகள் பெற்றோரின் ஒய்வூதியத்திற்காக, சொத்துக்களைப் பெறுவதற்காக பராமரிப்பவர்களாக உள்ளனர். இவர்களை விட வறுமையான குடும்ப பின்புலத்தில் தங்கிவாழும் முதியோரும் சிலர் வாழ்கின்றனர். தமது குடும்பத்தின் நாளாந்த செலவுகள், பொருளா-தார சுமை இவற்றுக்கே வருமானம் ஈட்டமுடியாத நிலையில் உள்ளவர்கள் தமது முதுமையான பெற்றோரையும் பராமரிப்பது என்பது நாளாந்த செலவுகள் அதிகரித்துச் செல்லும் இவ்வுலகில் மிகக்கடினமானது. இது முதியோர்களின் உடல் ஆரோக்கியத்தை கெடச்செய்வதுடன் மனநிம்மதியையும் இழக்கச் செய்கின்றனர். மெலிஞ்சிமுனை, நாரந்தனை தெற்கு, கரம்பன் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் வாழும் முதியவர்கள் அதிகம் தங்கிவாழ்வோராக காணப்படுகின்றனர்.

சமூகரீதியாக நோக்கும் போது, சமூகத்தில் பொதுவாக 02வகையான குடும்ப அமைப்பு காணப்படுகின்றது. அவை தனிக்குடும்பம், கூட்டுக்கும்ப அமைப்பு முறைகளாகும். பெரும்பாலான கிராமிய சமுதாயங்களில் கூட்டுக்குடும்ப அமைப்பு நிலவுவதால் வயதானவர்கள் சமூகத்தில் உயர்வாக மதிக்கப்படும் நிலை காணப்படுகின்றது. சமூகத்தில் ஆரோக்கியமான கருத்துக்களை வழங்கக் கூடியவர்கள் என்ற கருத்தியல் பாரம்பரிய கிராமிய சமூகங்களில் வெகுவாக நோக்கப்படுகின்றது. ஆனால் இன்றைய நவீன சமூகத்தில் தனிக்குடும்ப அமைப்பு முறையே அதிகமாக காணப்படுகின்றது. தனிக்குடும்ப அமைப்பானது கிராமங்களை விட நகரத்தில் அதிகமாக காணப்படுகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டதைப்போன்று ஊர்காவற்றுறைப் பிரதேச நீண்டகால கிராமிய வாழ்க்கை கட்டமைப்பு மெதுமெதுவாக/ மெல்ல மெல்ல நகரக்கட்டமைப்பு நோக்கி நகர்ந்து கொண்டே செல்கின்றது. இளைய தலைமுறையினரிடம் முதியோர் குறித்த ஒற்றுமைப்போக்கு பொதுவாக குறைந்து வருகின்றது. நல்லிணக்கமின்மை, சீரற்ற உறவுகள் போன்றவை முதியோரை வெறுத்து புறக்கணிக்கும் நிலைக்கு ஆளாக்கி விடுகின்றது.

சமூகத்தின் ஆதரவும் அரவணைப்பும் தேவைப்படுபவர்களாக முதியோர்கள் உள்ளனர். ஆனால் சமூகத்தில் ஏற்படும் விரைவான மாற்றங்கள் முதியவர்களின் பராமரிப்பில் பாரியமாற்றத்தை, தடங்கலை ஏற்படுத்தி விடுகிறது. அதாவது மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவதினால் அவர்களுடைய தைரியம் சமூகச்செல்வாக்கு குறைக்கப்படுகிறது. இதனால் எல்லாம் இருந்தும் தனிமைப்படும் சமூகமாக முதியோர்கள் காணப்படுவது தற்காலத்தில் அவதானிக்க முடியும்.

கடந்த நூற்றாண்டில் பொருளாதார தேட்டத்தினைச் பெறுவதனைக் கருத்திற்கொண்டு காலத்துக்கு காலம் வெவ்வேறு நோக்குடன் இடம்பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வுகள் முதியோரின் பாரமரிப்பில் தற்போது பாரிய தடங்கலை ஏற்படுத்தியுள்ளது.

1.ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சேவைத்தொழிலை மேற்கொள்ளும் முகமாக இடப்பெயர்வினை மேற்கொண்டமை.
2.ஆங்கிலேயர் ஆட்சியில் மலாயா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குச் சென்று பொருட்தேட்டத்தினைப் பெற்றுக்கொண்டமை.
3.நாட்டின் சுதந்திரத்தையடுத்து குடியேற்றத்திட்டங்களுக்குச் சென்றமை.
4.திரு.அல்பிரட் தம்பி ஐயா அவர்களின் முயற்சியினால் துறைமுக சரக்கு ஏற்றி இறக்கும் கம்பனியில் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளும் முகமான இடப்பெயர்வினை மேற்கொண்டமை.
5.1950களைத் தொடர்ந்து கொழும்பில் இந்திய வர்த்தகர்களில்கணிசமானோர் தாயகம் திரும்பியமையால் அவ்விடங்களை நிரப்புவற்கு தொழில் முயற்சியாளர்களாகவும் சிப்பந்திகளாகவும் இடப்பெயர்வினை மேற்கொண்டமை.
6.அண்மைக்கால சர்வதேச இடப்பெயர்வும் மாற்றமுற்றுவரும் பொருளாதார முறைமையும்.
7.1992ம் ஆண்டு இராணுவ அனர்த்தத்தினால் பெரும் எண்ணிக்கையினர் இடப்பெயர்வினை மேற்கொண்டு பொருளாதார, சமூக, பண்பாட்டுக்கஷ்டத்துடன் வாழும் நிலை.

மேற்குறித்த நிகழ்வுகள், இடப்பெயர்வுகள் ஊர்காவற்றுறைப்பிரதேசத்தில் பாரிய சமூக, பொருளாதார, பண்பாட்டு, பௌதீக மாற்றங்களை ஏற்படுத்தியது. பிள்ளைகளிடமிருந்து பெற்றோர் தனிமைப்பட்டு போயுள்ளனர். பல குடும்பங்கள் வெற்றுக்கூடுகளாக (Empty Nest) மாறியுள்ளது. அனலைதீவு, புளியங்கூடல் பிரதேசங்களில் வாழும் பெரும்பாலன முதியவர்கள் பொருளாதார ரீதியாக உள்ளனர். தம்மிடமுள்ள பணத்தைக்கொண்டு தமக்கு வேண்டிய உணவுப்பொருட்களை வாங்கி அதனை சமைத்து உண்பதற்கே சிரமப்படுகின்றனர். கணவன், மனைவி என ஒருவருக்கொருவர் உறுதுணையாக வாழ்ந்த முதியவர்களில், ஒருவர் இறப்பின் மற்றையரது நிலை தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதேவேளை மெலிஞ்சிமுனை, சூரியவத்தை, கரம்பன் கிழக்கு போன்ற கஷ்ட பிரதேசங்களில் வாழும் முதியவர்கள் அதிகம் தங்கிவாழ்வோராக உள்ளனர். வறிய மக்களை அதிகமாக கொண்ட பிரதேசமாக காணப்படுவதால் அதிகமான குடும்பங்கள் தமது நாளாந்த இதரசெலவுகளை மேற்கொள்வதற்கே திண்டாடும் நிலையில் தமது பெற்றோரையும் சிறப்பாக பாதுகாப்பது என்பது முடியாத காரியமாகிவிடுகின்றது, இவ்விடத்தில் நாம் பிள்ளைகளையும் குறைகூறமுடியாது. இது தவிர்க்க முடியாத ஒரு இக்கட்டான சமூக சூழ்நிலையாகும் எனினும் பாராட்டப்படவேண்டிய விடயம் யாதெனில் எவ்வளவு வறியவர்களாக இருந்தபோதும் தமது பெற்றோரை ஒதுக்காது, முதியோர் இல்லம் அனுப்பாது தம்மோடு கூட பராமரிக்கும் சில குடும்பங்களையும் என்னால் இங்கு அவதானிக்க முடிந்தமையாகும்.

ஒப்பீட்டுரீதியாக ஊர்காவற்றுறை பிரதேச முதியவர்களின் சமூகநிலை யாழ். மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களிலும் பார்க்க சிறப்பானதே. ஏனெனில் கிராமிய அமைப்பு முறை, கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை இன்றும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் காணப்படுவதால் முதியவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர் இல்லங்களில் விடும் தன்மை மிகமிகக் குறைவாகவே உள்ளது. சொந்தப்பிள்ளைகள் பராமரிக்காத சந்தர்ப்பங்களில் கூட ஏனைய சமூகஅக்கறையுடையவர்கள் முதியோரை பாரமரிக்கும் நிலைமை காணப்படுகின்றது. சில கிராமங்களில் இன்றும் நாட்டாமை செய்யுமளவிற்கு அதிகாரம்/வல்லமைமிக்கவர்களாக முதியோர்கள் காணப்படுகின்றமை சந்தோசத்தை தருகின்றது. அதேபோன்று கிராமமட்ட சமூக அமைப்புக்களில் அதிகம் பங்களிப்புச் செய்பவர்களாகவும் இப்பிரதேச முதியவர்கள் காணப்படுகின்றனர்.

அடுத்ததாக கலை, கலாசார, சமயரீதியில் முதியவர்களின் நிலைமையை நோக்கும் போது, இன்றுவரை பாரம்பரிய கலையான கூத்துமரபை இப்பிரதேச முதியவர்கள் பேணி வளர்த்து வருகின்றனர். குறிப்பாக மெஞ்சிமுனை, தம்பாட்டி எழுவைதீவு ஆகிய கிராம முதியவர்கள் இக்கூத்து மரபினை வளர்த்து வருகின்றனர். இன்றும் மேடையேற்றி வருகின்றனர். அதே வேளை இம்முதியவர்களிடம் பாரிய ஒரு பொறுப்பு ஒன்று உள்ளது அதாவது இக்கூத்துமரபை உரிய முறையில் தற்போதைய இளைய தலைமுறையினரிடம் கையளிக்க வேண்டியுள்ளது. இது இக்கூத்துக்கலை மரபின் நீடிப்பிற்கு இன்றியமையாத ஏன்றாகும் மதரீதியாக நோக்கும்போது, இந்து ஆலயங்களிலும் சரி கிறிஸ்தவ தேவாலயங்களிலும் சரி கோயில் நிர்வாகத்தை திறமையாக வழிப்படுத்துபவர்களாக இப்பிரதேச முதியவர்களே காணப்படுகின்றனர். இச்செயற்பாடானது தற்போதுள்ள இளைய சந்ததியினருக்கு முன்மாதிரியாக விளங்கும் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். இதுவரை ஊர்காவற்றுறை பிரதேச முதியவர்களின் நிலையை பொருளாதார, சமூக, கலை, கலாசார, பண்பாட்டுரீதியாக நோக்கினோம். அடுத்து இம்முதியவர்களுக்கு நலனைப் பாதுகாக்கும் பொருட்டு முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகள் பற்றி நோக்குவோம்.

இலங்கையில் முதியோர்களின் நலனைப் பேணும் பொருட்டும், உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டும் அமைக்கப்பட்ட ஒரு அரச அமைப்பாக முதியோருக்கான தேசிய செயலகம் காணப்படுகின்றது. இது சமூகசேவைகள். அமைச்சின் கீழ் இயங்குகிறது. முதியோருக்கான தேசிய செயலகம் ஊடாக பல்வேறுபட்ட சேவைகள் முதியோருக்கான முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவற்றில் அப்பிரதேச முதியோர் பெறும் சேவைகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

70வயதினைக் கடந்த முதியவர்களுக்கு ரூபா 2000/=வீதம் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கல். 430 முதியவர்கள் ஊர்காவற்றுறைப் பிரதேசசெயலகத்தின் கீழ் இப்பண உதவியை பெற்றுவருகின்றனர். வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த முதியவர்களுக்கு அப்பண உதவி ஒரு சிறந்த மூலதனமாக காணப்படுகின்றது. பிள்ளைகள் தமது பெற்றோரை பராமரிக்க முன்வரும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது.

*கற்றைக் நோயினால் பாதிக்கப்பட்ட சத்திரசிகிச்சை செய்யப்பட வேண்டியுள்ள வறிய முதியவர்களுக்கு இலவச கண்வில்லை வழங்குதல்.

*முதியோருக்கான இலவச அடையாள அட்டை வழங்குதல்

*சர்வதேச முதியோர் தின கொண்டாட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்துதல்.

*கிராமமட்ட பிரதேசமட்ட முதியோர்சங்கங்களை அமைத்து பதிவுசெய்தல்.

*முதியோர்களுக்கு சேவைகளை வழங்குகின்ற அமைப்புக்கள் மற்றும் நபர்களினை பதிவுசெய்தல்.

*முதியோர்களுக்கான பகல் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல். 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் தமது கருத்துக்களைப்பரிமாறுதல், சுயதொழிலில் ஈடுபடல் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரை யாடுதல், ஆண்மீகச் செயற்பாடுகள், பயிற்சி மற்றும் பொழுது போக்குச்செயற்பாடுகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவதற்கு வாய்ப்புக்களினை பெற்றுக்கொள்வதை நோக்காகக்கொண்டது. இப்பகல் பராமரிப்பு நிலையங்களிற்கான தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா25,000/=ம், சுய தொழில் மூலப்பொருள் கொள்வனவுக்காக ரூபா10,000/=ம் வழங்கப்படும்.

*முதியோர்களுக்கான பராமரிப்புச்சபை முதியோர்களுக்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. முதியோருக்கான தேசிய செயலகத்தின் சேவைகள் தவிர வடக்குமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தினால் பொதுசன மாதாந்த உதவிக்கொடுப்பனவு, ஊனமுற்றோருக்கு உபகரணம் வழங்கல் போன்ற சேவைகளும், தியாகி அறக்கொடை நிறுவனமூடாக இலவச மருத்துவமுகாம், பண உதவித்திட்டங்கள் என்பன வழங்கப்படுகின்றது. தீர்வுகளும், மேம்பாட்டுக்கான வழிவகைகளும்

சுயமாய் செயலாற்றும் முதியோர் உள்ள சமூகம் ஆரோக்கியமானது. ஏனெனில் முதுமையின் அனுபவமும், ஆசீர்வாதமும் உள்ளது தான் சமூகத்திற்கு பலமாய் அமையும். இக்கருத்தின் அடிப்படையில் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் வாழும் முதியவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வுகள்.

1.முதியோர்.
2.குடும்பம்.
3.சமூகம், ஏனைய நிறுவனங்கள் ஆகியோரில் தங்கியுள்ளது.

## முதியோரின் பொறுப்புக்கள்

*முதுமைப்பருவத்தை உடல்,உள, சமூகரீதியாக ஏற்கக்கூடிய வகையில் தன்னை மாற்றிக் கொள்ளல். நான்பலவீனமானவர் என்றோ, எதற்கும் பயனற்றவர் என்றோ, குடும்பத்திற்கு பாரமானவர் என்றோ, எண்ணாமல் வாழ்க்கை இன்பமயமானது என்று எண்ணி செயற்படல்

*பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடல், புதிய நண்பர்களைத் தேடிக் கொள்ளுதல்.

*சொந்த லாபம் கருதி செயற்படாமல் சமூகத்தின் சேவைகளை பெற்றுக் கொடுக்கும். உத்தம சிந்தனையோடு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடலாம்.

*சமூகத்தின் பாரம்பரிய சமய, கலாசார விழுமியங்களைக் காப்பாற்றுவதில் பங்களிப்புச்செய்தல் தமது கருத்துக்களை கூற முன்வருதல்.

*வீணே வீட்டில் ஒதுங்கி வாழாமல் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பதன் மூலம் மனநிம்மதியைப் பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

E.g:-தோட்டவேலை
*குடும்பத்தில் பிணக்குகளை ஏற்படுத்திக் கொள்ளாமல் இயலுமானவரை குடும்பத்தவருடன் இணைந்து செயற்படல் குடும்ப அங்கத்தவர்கள், அயலவருடன் இன்பமாகப் பொழுதைக்கழித்தல்.
*முதுமையில் எவருக்கும் கையேந்தரமல் சுதந்திரமாக வாழ்வதற்கு வழிகோலும் வகையில் தம் வருமானத்திலிருந்து ஒருதொகையை சேமிக்கப்பழகிக் கொள்ளுதல் வேண்டும்.
*சரியான உணவுப்பழக்கவழக்கங்களை பின்பற்றல். நோய்வாய்ப்பட்டவுடனே வைத்தியரைச் சந்திக்க தவறாமல் வருடம் ஒரு தடவையாவது வைத்தியபரிசோதனைகள் மேற்கொள்ளல்.
* இறைவன் மீது நம்பிக்கை முதுமையின் பயணத்தை ஆனந்தமாகவும், சௌகரியமாகவும் நடாத்திச் செல்லும்

## குடும்பம்

குடும்ப அமைப்புக்களிலும் வயதானவர்கள் பிரச்சனைகள் இன்றி ஆரோக்கியமாக வாழவழி செய்வது ஒவ்வொருவரினதும் கடமையும், பொறுப்புமாகும். முதியவர்களின் ஆரோக்கியம், சௌகரியத்தினை கருத்திற் கொண்டு வீட்டுவசதிகளை முடிந்தளவு ஏற்படுத்திக்கொடுத்தல் (E.g:-குளியலறை - கழிப்பறை) சிறிது நேரமாவது. குடும்ப உறுப்பினர்கள் முதியவர்களின் நலனை விசாரித்து அவர்களுடன் உரையாட வேண்டும். உடல்நலன் தொடர்பாக, காலத்துக்குகாலம் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ள உதவிபுரிய வேண்டும். முதியவரின் தனிமையைப் போக்க சிறுசிறு வேலைகளை அவர்களுக்கு வழங்கலாம் இதனூடாக இதுவரை அவர்களிற்கு இருந்த மதிப்பையும் அந்தஸ்தையும் குறைய விடாது தொடர்ந்து பேணவேண்டும். அதே போன்று நேரம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் முதியோரை வெளி இடங்களிற்கு பொழுதைக்கழிக்க அழைத்துச் செல்ல வேண்டும்.

முதியவர்களின் கருத்துக்களை செவிமடுப்பதுடன் குடும்ப செயற்பாடுகளிலிருந்து ஒதுக்காமல் பேணல் முதியவரின் தேவைகளை இயலுமானவரை நிறைவேற்றக் கொடுத்தல், வெளியிடங்களில் பிரிந்து வாழும் குடும்ப உறுப்பினர்களும் முதியவருடன் தொடர்பைப் பேணி நலன் விசாரித்தல் வேண்டும்.

## சமூகமும் ஏனைய நிறுவனங்களும்.

முதியோர் பிரச்சினை என்பது தனியாள் மட்டத்திலிருந்து சமூகப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளமையால் இப்பிரச்சினையை தீர்ப்பதில் சமூகமும் அக்கறை காட்ட வேண்டும். அந்தவகையில் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தல் அவசியமாகும்.

1.முதியோர் உரிமை மீறப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் அதனைத் தட்டிக்கேட்டு அவர்களுக்கு ஆதரவாக இருப்பதுடன் உரியவர்களுக்கு தகவல் வழங்குதல் வேண்டும்.

2.ஊர்காவற்றுறைப் பிரதேசத்தினைப் பொறுத்த வரையில் 15 கிராம சேவகர் பிரிவுகளிலும் முதியோர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனி னும் அவற்றில் கரம்பன், பருத்தியடைப்பு, நாரந்தனைவடக்கு முதியோர் சங்கங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமாக இயங்கிவருகின்றன. இவற்றைப் போன்று ஏனைய முதியோர் சங்கங்களும் இயங்குதல் அவசியம் இதன் மூலம் முதியோர்கள் வீட்டில் வீணே இருப்பதை விடுத்து அனைவரும் ஒன்றாகக்கூடி ஆற அமரப்பேசி மற்றவர்களை சந்தித்து ஆறுதல் பெற வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் சிறந்தது இதனை மேலும் விருத்தி செய்து பகல் பராமரிப்பு நிலையங்களை உருவாக்கலாம்.

3.இளைஞர், சிறுவர், முதியோர்களிடையே சிறந்த தொடர்பாடலை வளர்க்கும் பொருட்டு சிறுவர், இளைஞர், முதியோர்அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

4.கர்ப்பிணிப்பெண்கள், சிறுவர்களுக்காக நடாத்தப்படும் கிராமமட்ட சிகிச்சை நிலையங்களினூடாக முதியோர்களுக்கும் மாதாந்தசிகிச்சை, உடல் பரிசோதனைகள், மேற்கொள்ள உரிய அமைப்புக்கள் முன்வரவேண்டும்.

5.இறைவன் மீது நம்பிக்கை முதுமையின் சுமையினை ஆனந்தமாகவும், சௌகரியமாகவும் நடாத்திச்செல்லும். உடலுக்கும் மனத்திற்கும் சமூக செல்வங்களுக்கும். அப்பாற்பட்டது. ஆத்மா. அதற்கு அழிவு இல்லை ஆத்மாவும் ஆத்மீகமும் முதுமையுடன் மட்டும் தொடர்புடையன அல்ல அவை மனித வாழ்வின் இன்றிய மையாத உயிர் சக்தியாகும் இளம்வயதிலிருந்தே ஆத்மீக அடிப்படையில் ஒருவர் வாழுவாரானால் முதுமையில் உடல், மனநலிவுகள் ஏற்படும் நிலையில் அவரின் ஆத்மாவின் பலம் பரிபூரணமாக எதையும் தாங்கி சாந்தி தரும். ஏனெனில் ஆத்மா வயோதிபம் அடைவதில்லை. எனவே மதநிறுவனங்களும் முதியவர்களின் பிரச்சினைகளை குறைப்பதில் அதிக அக்கறை எடுக்க வேண்டும். முதியோர்களின் நலனை மேம்படுத்தும் பொருட்டு தியானப்பயிற்சி, ஆன்மீகபோதனை போன்றவற்றை மத பாரபட்சமின்றி முன்னெடுத்தல் வேண்டும்.

6.இனிவரும் இளைய சந்ததியினரிடையே முதுமை பற்றிய போதிய அறிவையும், முதியோர் மீதான நன்மதிப்பையும் அதிகரிக்கவும் கல்விசார்நிறுவனங்கள் முன்வரவேண்டும். அதே போல ஊடகங்களும் இதில் அக்கறை செலுத்த வேண்டும்.

## முடிவுரை

நீண்டகால சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களின் பின்னர் இன்று இப்பிரதேசத்தில் வாழும் முதியோவர்கள், மூத்தோர் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர். எனினும் ஒப்பீட்டளவில் யாழ்.மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களில் வாழும் முதியவர்களை விட சமூக ரீதியாக மேம்பட்ட நிலையிலேயே உள்ளனர்.

முதியோர்களின் பிரச்சனைக்கான தீர்வுகளில் முதியோரும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அதாவது முதுமைக்கேற்ப தம்மைத்தாமே தகவமைத்தல் அவசியமானது. அதேபோன்று சமூகமும், குடும்பமும், ஏனைய நிறுவனங்களும் முதியோர் நலவாழ்வில் அக்கறை காட்டல் வேண்டும்.

"செயலாற்றலுடனான முதுமையடைதல்" (Active aging) என்ற இலக்கை நோக்கி எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தை வழிநடத்துவதன் ஊடாக, சமூகச்சுமையாக கருதப்பட்டு வருகின்ற முதுமையை, சமூகத்துக்கு பயனுள்ளதாக மாற்றமுடியும்.

முதியோர் - அனுபவத்தில் முதிர்ந்தவர்கள், கௌரவமானவர்கள் எனும் அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1.குகபாலன் கா, (1994), தீவகம் - வளமும் வாழ்வும் தீவகக்கோட்டக் கூட்டுறவு ஒன்றியம், யாழ்ப்பாணம், பக்க இல – 118, 119

2.சிவயோகன் சா, தயாசோமசுந்தரம், (2001), முதுமை, பக்க இல – 02, 08, 35.


### புனித அந்தோனியார் ஆலயம்



இது எமது பிரதேசத்தில் ஊர்காவற்றுறை
கிராமத்தில் அமைந்துள்ள ஓர்
பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாகும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுவி காயவிடப்பட்ட கிணறுகள்

T.D.G. பிராங்கிளின்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

தண்ணீர் என்பது உயிர் வாழ்வதற்கு மிக அவசியமான ஒன்று. நீரானது இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
1.மேற்பரப்புநீர் (Surface Water)
2.தரைக்கீழ்நீர் (Ground Water)
தரைக்கீழ் நீர் என்பது புவியின் மேற்பரப்புக்கு கீழாக காணப்படும் நீராகும். இந் நீர் படிவு வீழ்ச்சி, நீர் நிலைகள். வடிநிலங்கள் என்பனவற்றின் மூலம் மேற்பரப்புக்கு வருகின்ற நீரானது ஊடு வடிதல் செயன் முறைக்கு உட்பட்டு மண், பாறைகளுக்கு இடையே உட்புகுந்து செல்லா வண்ணம் தடுக்கப்பட்டு வன் பாறைகளில் தேக்கி வைக்கப்படுகின்றது. தரைக்கீழ் நீரானது காற்றுடன் கலந்த வலயம் (Zone of Aeration), நிரம்பல் வலயம் (Zone of Saturation) என்ற இரண்டு பிரதான வலயங்களை கொண்டுள்ளது. தரைக்கீழ் நீரானது மழை மூலம் கிடைக்கும் நீரின் ஒரு பகுதி நிலத்தினுள் ஊடு புகுந்து தரைக்கீழ் நீராக மாறுகிறது. அதே போல புவி யின் உட்பகுதியில் காணப்படும் சிறிதளவான நீர் தரைக்கீழ் நீராக மாறுகின்றது. இத்தரைக்கீழ் நீரானது பின்வரும் காரணிகளில் தங்கியுள்ளது.
1.கிடைக்கப் பெறும் மழை நீரின் அளவு
2.நில மேற்பரப்பின் சாய்வுத்தன்மை
3.ஆவியாக்கல் தன்மை
4.தாவரப்போர்வையின்அளவு
5.மண்ணின்தன்மை
6. நீரை உட்புக விடும் பாறைப்படைகளின் இயல்பு


இவை தரைக்கீழ் நீர் பற்றிய ஒரு சிறு குறிப்பாக பார்க்கப்பட்டுள்ளது. இனி ஊர்காவற்றுறை பிரதேசத்தின் தரைக்கீழ் நீர் பற்றி ஆராய்வோம். இப் பிரதேசத்தின் உருவ இயல் பண்பை பார்க்கும் போது மயோசின் காலத்தில் (22.5 – 5 மில்லியன் வருடங்கள்) கடலின் கீழிருந்து தொடர்ச்சியாக மேல் உயர்த்துகைக்கு உட்படுத்தப்பட்ட சுண்ணாம்பு பாறைப்படைகளால் உருவானது ான் யாழ்ப்பாண குடாநாடாகும். இதிலும் தீவுகள் மயோசின் காலத்தின் பிற்பகுதியில் உருவானதாக காணப்படுவதால் யாழ்ப்பாணத்து சுண்ணக்கல் பாறைகளிலிருந்து சற்று வேறுபட்டு காணப்படுகிறது. சுண்ணக்கல் பாறைகள் நுண் துளைகளையும் மூட்டுக்களையும் கொண்டு காணப்படுவதனால் இவற்றின் ஊடாக ஊடு புகப்படும் நீரானது ஊடு புக விடப்படா பாறையில் தேங்கி தரைக்கீழ் நீராக காணப்படுகிறது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறை பிரதேசத்தை எடுத்துக் கொள்வோமானால் இங்கு படிவு வீழ்ச்சி முறை மூலம் கிடைக்கும் நீரே தரைக்கீழ் நீராக சேமிக்கப்படுகிறது. கார்த்திகை, மார்கழி, தை ஆகிய மூன்று காலப்பகுதியிலும் 95% மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறுகிறது. குறுகிய கால மழை வீழ்ச்சியும் நீண்ட கால வரட்சியும் கொண்டதாக இப்பிரதேசம் காணப்படுகிறது. ஓப்பீட்டளவில் யாழ்ப்பாண குடாநாட்டை விட குறைவான மழை வீழ்ச்சியே கிடைக்கப்பெறுகின்றது. இதற்கு மன்னார் போன்று வடகீழ் பெயர்ச்சி பருவக்காற்று ஒதுக்குப்புறமாக காணப்படுவதே காரணமாகும். இப் பிரதேசத்தில் காணப்படும் தரைத்தோற்ற அமைப்பானது சமதரையாக காணப்படுவதுடன் நீரை உட்புக விடக்கூடிய மண், பாறைப்படைகளையும் கொண்டு காணப்படுகின்றது. ஒரு பிரதேசத்தின் தரைக்கீழ் நீர் எவ்வளவு உச்ச மட்டத்தில் தேங்கி நிற்குமோ அதுவே நிரம்பு நீர் வலயமாகும் (Saturation Zone) இதனை நீர் மட்டம் ( Water Table) எனவும் கூறுவர். மழை மூலம் குறைந்தளவு நீரைப் பெறும் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தரைக்கீழ் நீராக சேமிக்கப்படும் நீரின் அளவும் குறைவாக காணப்படுகின்றது. ஆனால் சேமிப்பை விட அதிகளவான நீர் தரைக்கீழிருந்து வெளியேற்றப்படுகிறது. இதனால் இப் பிரதேசத்தின் நீண்ட நாட்கள் நன்னீரை பயன்படுத்த முடியாதுள்ளது. இங்கு 4 வருடங்களுக்கு ஒரு முறை மிகையான வரட்சியும் கிட்டத்தட்ட 4 வருடங்களுக்கு ஒரு முறை அதிகளவான மழை வீழ்ச்சியும் கிடைக்கப்பெறுகிறது. ஆனால் குறைந்தளவான சேமிப்பும் அதிகப்படியான பாவனையும் சித்திரை, வைகாசி மாதங்களுடன் நீர் அற்று வரட்சி ஏற்பட காரணமாகிறது.





இப்பிரதேசத்தில் நீரை தேக்கி வைக்கக் கூடிய வன் பாறையானது மிக ஆழத்தில் உவர் நீர் பரப்பில் காணப்படுகிறது. தரைக்கீழ் நீராக ஊடு புகும் நீரானது நன்னீர் வில்லையாக உவர் நீரின் மேல் மிதந்து கொண்டிருக்கின்றது. இவ் வில்லையானது கரையோரப்பகுதியிலிருந்து மையப் பகுதியை நோக்கி செல்லும் போது இவ்வில்லையின் தடிப்பு அதிகரிக்கிறது. இதனால் J/57 (நாரந்தனை வடக்கு) J/60 (புளியங்கூடல்), J/55 (நாரந்தனை), J/59 (சுருவில்) பகுதிகளில் ஒப்பீட்டளவில் ஊர்காவற்றுறையின் ஏனைய பகுதிகளை விட நீர் வில்லைகளின் அளவு அதிகமாக இருப்பதனால் அதிக வரட்சி தவிர்ந்த ஏனைய காலப்பகுதிகளில் நீரை பெறக் கூடியதாக உள்ளது. ஆனால் J/56 (தும்பாட்டி), J/54 (மெலிஞ்சிமுனை), J/53 (கரம்பொன் தென் கிழக்கு), J/51 (கரம்பொன்), J/52 (கரம்பொன் கிழக்கு), J/49(ஊர்காவற்றுறை), போன்ற பிரதேசங்கள் கரையோரத்தை அண்டிக் காணப்படுவதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மிக விரைவாகவே நீர் உவர் நீராக மாறுவதுடன் வன் பாறைப்படை மிக ஆழத்தில் இருப்பதனால் 3 மாத மழைக்காலம் முடிந்தவுடன் நிரம்பு நீர் வலயம் குறுகலடைகின்றது. பின்னர் நீரற்ற கிணறுகள் புழுதி படிந்த கிணறுகளாக காட்சி தருகிறது. குறைந்த மழை வீழ்ச்சி, நீண்ட வரட்சி, நீரினை அதிகளவு சேமித்து வைக்க முடியாத இட அமைவு, பாறைப் படைகளின் தன்மை, கடலின் தூரம் மிக அண்மையில் காணப்படுவது, குறுகியதான நன்னீர்ப்படை இவை அனைத்தும் ஊர்காவற்றுறை பிரதேசத்தை வரட்சி வலயமாக்குகின்றது. இப்பிரதேசத்தில் கிணறுகள் 6-15 அடி ஆழம் வரை காணப்படுகின்றது. மழை மாதங்களில் (3மாதம் ) நன்னீராகவும் பின்னர் உவர்நீராகவும் மாறிவிடும். இங்கு 19% கிணறுகள் நன்னீராகவும் 24% கிணறுகள் மாரி காலத்தில் நன்னீராகவும் ஏனைய காலத்தில் குடிநீர் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு பயன்படுத்தக் கூடியதாகவும் 57% மான கிணறுகள் முற்றாக உவர் நீர் கொண்டதாக காணப்படுகின்றது. (செந்தில் வடிவேல் 1985 ஆய்வு) இப்பிரதேச தரைக்கீழ் நீர் இங்கு காணப்படும் 50ற்கு அதிகமான குளங்கள், குட்டைகள் என்பன அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. மழை நீரை தரைக்கீழ் நீராக மாற்றும் செயல் முறையை இவையே அதிகம் மேற்கொள்ளுகின்றன. இங்கு குளங்கள் சுண்ணாம்பு கரசலினால் ஏற்பட்ட குளங்களாகவும் தரைக்கீழ் நீரை சேமிக்க வெட்டப்பட்ட குளங்களாகவும் தோட்டங்களுக்கு மண் அகழ்வதற்கு வெட்டப்பட்ட குட்டைகளாகவும், மழை நீர் கடலுக்கு செல்வதை தடுக்க தரவைகளில் சேமிக்கப்பட்ட குளங்களாகவும் காணப்படுகின்றது. இக் குளங்கள் நீண்ட காலங்களாக (யுத்த காலப்பகுதியில்) புனரமைக்கப்படாமையினால் இவற்றின் கொள்ளளவு குன்றியும், நீர் மாசடைந்தும் காணப்பட்டது. உவர் நீர் தடுப்பணை பாதிப்படைந்து நன்னீர் உவர் நீராக மாற்றம் அடைந்தன. இவையும் இப்பிரதேசத்தின் வரட்சியும் செல்வாக்கு செலுத்துகின்றன.

இப்பிரதேசத்தில் குறிப்பாக கரம்பொன், கரம்பொன் கிழக்கு, மெலிஞ்சிமுனை, கரம்பொன் தென்கிழக்கு போன்ற பிரதேசங்களில் காணப்படும் காட்டு கருவேல மரம் (Prosopis Juliflora) பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. அமெரிக்காவில் தாவரவியல் பூங்காவால் வளர்க்க கூடாத நச்சு மரங்கள் என்ற பட்டியலில் முன்னணியில் இவ் மரம் காணப்படுகிறது. 1950ம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியாவில் தூவப்பட்ட இவ் மரங்கள் படிப்படியாக இலங்கையில் வட தீவுகளையும் ஆக்கிரமித்துள்ளது. இம்மரத்தின் வேரானது 40 அடி ஆழத்தில், 40 அடி அகலத்திலும் ஊடுருவி செல்லக் கூடியதாகும். இதனால் மிக வரட்சியான காலப்பகுதியிலும் கூட செழிப்பாக காணப்படக் கூடியது. அதுமட்டுமல்லாது காற்றிலுள்ள ஈரப்பதனை கூட உறிஞ்சி தன் நீர்த்தேவையை பூர்த்தி செய்துவிடும் இதனால் இவை காணப்படும் பிரதேசங்கள் மிக விரைவாக வரட்சி அடைந்து காணப்படுவதுடன் உவராதல், நஞ்சாதல்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற செயற்பாட்டையும் மேற்கொள்கிறது.

கருவேல மரம் (Prosopis Juliflora) இனி இப்பிரதேச நீர் பாதுகாப்பு பற்றி கீழ் வருமாறு அவதானிப்போம்.

1.மழை நீர் கடலுக்கு செல்வதை தடுத்து அந்நீரை தேக்கி தரைக்கீழ் நீராக மாற்றுதல் இப்பிரதேசத்தில் கடலை அண்டிய பகுதிகளில் தடுப்பு அணைகளை அமைத்து தரவைகளில் நீர் தேக்கப்படுகிறது ஆனால் அப்பகுதிகளில் நன்னீர் வில்லைகளின் கொள்ளளவு மிகக் குறைவாகவே காணப்படும். அதனோடு உவர்நீர்ப்படையும் ஆழம் குறைவான நிலையிலேயே காணப்படும். இதனால்




தரவைகளை ஆழமாக்கமுடியாது. அதற்கு மாறாக பரந்த அளவிலேயே நீரை தேக்க முடியும். இதனால் ஆவியாக்கல் பரப்பு அதிகமாக காணப்படுவதனால் மிக விரைவாக இந்நீர் ஆவியாக்கம் அடைந்து விடும். மேலதிகமாக கிடைக்கும் நீரும் கடலுடன் கலந்துவிடும் ஆனால் மழை மூலம் கிடைக்கும் நீரை இப்பிரதேசத்தில் உட்பகுதியில் காணப்படும் குளங்களில் அதிகளவில் சேமிப்பது தரைக்கீழ் நீரை நீண்ட காலத்திற்கு பாவனைக்கு உட்படுத்த முடியும் இதற்கு இங்குள்ள குளங்களை வாய்க்கால்களின் மூலம் ஒன்றிணைக்க வேண்டும். அத்துடன் அவ் வாய்கால்கள் வெள்ளம் தேங்கும் பகுதிகளூடாக வெட்டப்பட வேண்டும். (அதிக பரப்பளவில் நிகழும் ஆவியாக்கத்தை தடுத்தல்) இதனால் இப்பிரதேசத்தில் வெள்ள அழிவுகள் நிகழ்வதை தடுப்பதுடன் வரட்சியையும் குறைக்க முடியும்.

2.குளங்கள், கிணறுகள்ஆழமாக்கப்படுதலும் மாசடைதலும்இப்பிரதேசத்தில் குளங்களில் உள்ள மண் தோட்டங்களுக்காக அள்ளப்படுகின்றன. அத்துடன் குளத்தில் நீரை அதிகமாக சேமிக்க ஆழமாக்கவும்படுகின்றன. இதனால் குளத்தின் கீழ் பகுதி நன்னீர் வில்லைகள் வெளித்தெரியவோ அல்லது அதன் மேல் பகுதி மெல்லியாதாக்கவோப்படுகின்றன. இதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்சிக் காலத்தில் தரைக்கீழ் நீர் நேரடியாக ஆவியாக்கமடைகின்றன. இதேபோல வரட்சிக்காலத்தில் கிணறுகளில் நீர் இல்லாமல் வற்றி விட அக்கிணறுகளை மேலும் ஆழமாக்குகின்றனர் இதனால் நீர் கிடைக்கக்கூடிய கிணறுகளின் நீரும் நீர் அற்று போய்விடும். இதனால் கிணறுகள் ஆழமாக்கப்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். அத்துடன் குளங்களும் தரைத்தோற்றத்தின் தன்மையை கொண்டே ஆழமாக்கப்படுதல் வேண்டும். குளங்களில் குப்பைகள், கழிவுகள் கொட்டப்படுவதனால் நீர் மாசடைவதுடன் அதன் நீர் கொள்ளவும் குறைந்துவிடும். குளங்கள் புனரமைப்பு செய்யும் போது குளங்களுக்கான நீர் உள்வரும், வெளிச் செல்லும் பகுதிகள் அமைக்கப்பட வேண்டும் இல்லையேல் குளத்துக்கான நீர் கிடைப்பின்றி போய்விடும். (உதாரணம்:- J/51அக்கா தங்கை குளம்)

3.தாவரப்போர்வை இங்கு காணப்படும் நீர் நிலைகள் நேரடியாக சூரிய ஒளியின் பார்வைபடுவதனால் நீர் விரைவாக ஆவியாக்கமடைகின்றன. இதனால் நீர் நிலைகளில் நீர் தாவர போர்வைகளை (தாமரை, அல்லி) உருவாக்குவதுடன் குளங்களில் கிழக்கு, மேற்கு கரைகளில் மருத மரங்களை நடுவதனால் இதன் வேர்கள் நன்னீரை பாதுகாப்பதுடன் நீரை தேக்கி வைக்கக்கூடிய இயல்பையும் கொண்டுள்ளது. இதன் தாவரப்போர்வை சூரிய ஓளியின் தாக்கத்தையும் குறைவடைய செய்யும்.

4)நீர் வெளியேற்றம்.இப்பிரதேசத்தின் நீர்ப்பிரச்சனையில் இதுவும் முக்கியமானது. அதாவது வரட்சி காலங்களில் ஒரு கிராமத்தில் உள்ள நீர்ப்பிரச்சனையை தீர்க்க இன்னொரு கிராமத்து நீரை பம்பிகளை கொண்டு வெளியெடுத்து நீர் விநியோகிக்கப்படுகிறது. இது மிகப்பாதகமான விளைவை தரக்கூடியது. அதாவது நன்னீராக காணப்படும் அக்கிராமமும் உவர் நீராக மாறி விடும் அத்துடன் 5-6 வருடங்களில் அப்பிரதேசங்களும் நன்னீரற்ற பிரதேசங்களாகமாறிவிடும். இதனால் தீவுப்பகுதிகள் தவிர்ந்த வேறு பகுதிகளில் இருந்து தான் இப்பிரதேச நீர் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் இல்லாது விடின் நன்னீர் வில்லைகள் உவர்நீராக மாறிவிடும்.

5.கடலை அண்டிய தரவை நிலங்களில் கல் அகழ்வது மற்றும் நீரை வெளியேற்ற கடலுக்கு வெட்டி விடுதல் என்பனவும் நீர் உவராக முக்கிய காரணமாகும்.

6.புகையிலை செய்கையில் பயன்படுத்தப்படும் அதிகப்படியான பசளைகளும் தரைக்கீழ் நீரை நஞ்சாகவும் உவராகவும் மாற்றி விடும் எனவே நீர் மாசடைவுகளை தடுப்பதுடன் மழை நீரை தரைக்கீழ் நீராக மாற்றி இருக்கும் நீரை பாதுகாப்பதும் அவசரமானதும் அவசியமானதுமான செயற்பாடாகும். இதைக் கைக்கொள்ள தவறினால் ஊர்காவற்றுறை கிணறுகள் அனைத்துமே கழுவிக் காயவிடப்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

## உசாத்துணை நூல்கள் :-

1. தீவகம் வாழ்வும் வளமும் க. குகபாலன்

2."யாழ்ப்பாண குடாநாட்டின் உருவாக்கமும் அதன் உருவவியல் அமைப்பும்" -S.T.B இராஜேஸ்வரன்

3."யாழ்ப்பாணத்து தரைக்கீழ் நீர்" முகநூல் 19,23.08.2010 பேராசிரியர் இரா.சிவச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேசத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

மு.சஞ்ஜீவன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
திட்டமிடல் கிளை
பிரதேசசெயலகம், ஊர்காவற்றுறை

உலகில் இன்றுவரை வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரதுறைகளில் ஒன்றாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் இத்துறையானது பெரும் பங்களிப்பினை வழங்கிவருகின்றது. வறுமை வீதம் உயர்வாக உள்ள நாடுகளில் வறுமை நிலையினை குறைப்பதில் சுற்றுலாத்துறை முக்கியம் பெறுகின்றது. அத்துடன் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்குள்ளாகும் துறையாக இத்துறை விளங்குகின்றது. இவற்றை விட உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு, ஊழியச்செறிவுக்கான வேலைவாய்ப்புகளை விருத்தி செய்தல், சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் பின்தங்கி இருக்கும் சுற்றுலா இடங்களையும் விருத்தி செய்யவும் இத்துறை பங்களிப்பு வழங்குகின்றது. ஓர் சேவைத்துறையாக விளங்கும் இத்துறை ஸ்பெயின், பிரான்ஸ், மெக்சிக்கோ, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, மாலைதீவு போன்ற சுற்றுலாத்துறை வளமுள்ள நாடுகளில் உயர் அன்னிய வருமானத்தையும், வேலைவாய்ப்பினையும் ஈட்டித்தருகின்றது.

உலகத்தையே அன்பினால் அணைக்கும் சுற்றுலாவானது எல்லா வயதினருக்கும் பால் வேறுபாடு இன்றி அமையும் மனத்து அனுபவத்தை வாரிவழங்கும் சுற்றுலாத்துறையை ஐக்கிய நாடுகளின் சுற்றுலாத்துறை நிறுவனமானது "சம்பளம் பெறும் செயற்பாட்டுடன் தொடர்பில்லாத பொழுதுபோக்கு, வணிகம் மற்றும் வேறு நோக்கங்களுக்காக தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்களுக்கு குறையாமலும் ஒரு வருடத்திற்கு மேற்படாமலும் வழமையான சூழலில் இருந்துவேறு சூழலுக்கு சென்று தங்குதல் சுற்றுலா ஆகும்" என வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. சுற்றுலாத்துறையானது ஆரம்பத்தில் ஒரு சேவைத்துறையாக காணப்பட்ட போதும். இன்று ஏனைய துறைகளுடன் இணைந்த வகையில் பெரும் வளர்ச்சியினை கண்டுள்ளது.

சுற்றுலாத்துறையானது இயற்கைவளங்கள், வனவளங்கள், கடற்கரைகள், நீர் வீழ்ச்சிகள், மதஸ்தலங்கள், பண்டையகால ஆட்சியாளர்களின் நினைவு எச்சங்கள், காலணித்துவ ஆட்சியாளர்களினால் அமைக்கப்பட்ட கோட்டைகள் போன்ற மையங்களைக் கொண்டு காணப்படுகின்றது. இவற்றை விட பிரதேசங்களின் பண்பாட்டு அம்சங்களும் சுற்றுலாத்துறையினரை கவருவனவாக விளங்குகின்றது. இவ்வாறான நிலையில் இலங்கையில் சுற்றுலாத்துறை வளர்ச்சி பெற்று வருகின்றது. இப்பின்னனியில் ஊர்காவற்றுறை பிரதேசத்தில் சுற்றுலாத்துறை விருத்திக்கான சாத்தியப்பாட்டினை விளக்குவதாக இக்கட்டுரை வரையப்படுகின்றது.

ஊர்காவற்றுறை பிரதேசம் யாழ்ப்பாணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில் இருந்து கிட்டத்தட்ட 22கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இது யாழ்ப்பாண ஊர்காவற்றுறை வீதியால் இணைக்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறையானது எழுவைதீவு, அனலைதீவு, புளியந்தீவு, பருத்தித்தீவு போன்ற தீவுகளையும் உள்ளடக்கியுள்ளது. இத்தீவுகள் ஊர்காவற்றுறையில் இருந்து கடற்போக்குவரத்து மூலமே இணைக்கப்படுகின்றது. இவ்வாறான பௌதீக தன்மைகளைக் கொண்ட ஊர்காவற்றுறையில் சுற்றுலாப்பயணிகளைக் கவரும்சுற்றுலா மையங்கள்பல காணப்படுகின்றது. குறிப்பாக கோட்டை, மதஸ்தலங்கள், கடற்கரைகள், தீவுகள், புராதன சின்னங்கள் போன்றன காணப்படுகின்றன அத்துடன் இப்பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்களும். சுற்றுலாப் பயணிகளை கவருவனவாக உள்ளன. இவ்வாறான அம்சங்கள் காணப்படுவதனால் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தக்கூடிய வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

ஊர்காவற்றுறை ஆனது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக விளங்குகின்றது. இலங்கையில் புராதன காலத்தில் காணப்பட்ட முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக ஊர்காவற்றுறை காணப்படுகின்றது. ஊர்காவற்றுறை முற்காலத்தில் ஊராத்துறை என அழைக்கப்பட்டது. சோழர்களின் ஆட்சி இலங்கையில் ஏற்பட்ட போது இத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தினை அறிந்து அவர்கள் செயற்பட்டனர். வட இலங்கையை கட்டுப்படுத்துவதற்கான கேந்திர நிலையமாகவும் வெளிநாடுகளிற்கான வியாபாரம் இடம்பெறும் வர்த்தகதுறையாகவும் இது விளங்குகின்றது. முதலாம் பராக்கிரமபாகுவின் நைனாதீவு தமிழ் கல்வெட்டில் இத்துறைமுகத்திற்கு வரும் கப்பல்கள் பற்றிய ஒழுங்கு முறைகள் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாக வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடமாக ஊர்காவற்றுறை விளங்குகின்றது.

ஊர்காவற்துறையில் அனைவரையும் கவரும் சுற்றுலா மையமாக கடற்கோட்டை காணப்படுகின்றது. இக்கோட்டையானது யாழ்ப்பாண கடலைப்பாதுகாப்பதற்கும், இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் செல்லும் கப்பல்களைக் கண்காணிப்பதற்கும் இக்கோட்டை கட்டப்பட்டதாகும். காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் உள்ள கற்பாரையின் சிறுதீவில் போர்த்துக்கீசரால் கட்டப்பட்டது. இக்கோட்டை ஹமன்ஹீல் கோட்டை எனவும் அழைக்கப்படுகின்றது. இக்கோட்டையினை ஒல்லாந்தர் திட்டமிட்டு பெருப்பித்து கட்டியுள்ளனர். ஒல்லாந்தர் திட்டமிட்டு பெருப்பித்து இக்கோட்டையினை பயன்படுத்தினர். அந்நியரின் எண்ணிக்கருவில் உருவான இக்கோட்டை சுற்றுலாப் பயணிகளை கவரும் இடமாக விளங்குன்றது.

பருத்தியடைப்பு கிராமத்தில் காணப்படும் உருண்டி கோட்டை வரலாற்று முக்கியமிக்க ஒன்றாகும். இக்கோட்டை ஒல்லாந்தரினால் கட்டப்பட்டதாகும். ஊர்காவற்றுறை துறைமுகமாக காணப்பட்டமையினால் இப்பகுதியினூடாக செல்லும் கப்பல்களை அவதானிப்பதற்காக ஒல்லாந்தரால் கட்டப்பட்டதாகும். இக்கோட்டை இன்று சிதைவடைந்து காணப்படுகின்றது. தற்போது இக்கோட்டை தொல்லியல் துறையின் அதிகாரத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொள்ளும் போது கோட்டை தொடர்பான புராதன கால தகவல்கள் பலவற்றை அறியக்கூடியதாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறையில் உள்ள தீவுகள் சுற்றுலாதுறையை விருத்தி செய்யக்கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக எழுவைதீவு, அனலைதீவு, புளியந்தீவு, பருத்தித்தீவு போன்ற தீவுகள் காணப்படுகின்றன. எழுவைதீவு என்பது காரணப்பெயராக விளங்குகின்றது. அதாவது தென் இந்தியாவில் இருந்து ஈழக்கரைக்கு சங்கு குளிக்க வந்தோர் முதலில் காட்சிக்கு எழுந்த தீவு என்ற படியால் எழுவைதீவு என பெயர் வந்தது எனக் கூறுவர். இதனை விட சூரியன் எழும் திசையில் இத்தீவு காணப்படுவதனால் எழுவான்தீவு எனவும் அது எழுவைதீவாக மாறியது எனக் கூறுவோறும் உள்ளனர். இவ்வாறான காரணப்பெயரைக் கொண்டுள்ள இத்தீவினை சுற்றுலா மையமாக உருவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளன.

எழுவைதீவை பண்பாட்டு சார்ந்த சுற்றுலா மையமாக உருவாக்க முடியும். உணவுப்பொருட்களையும்; அழகுசார் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கென்றே சுற்றுலாப்பயணிகளின் வருகை இடம் பெறுகின்றது. இந்நிலையில் எழுவைதீவை இவ்வாறான சுற்றுலா மையமாக மாற்றமுடியும். தென்னிலங்கை சுற்றுலாப்பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் பனம் சார் உற்பத்திகளான கிழங்கு, புழுக்கொடியல், ஒடியல்மா. பனாட்டு மற்றும் பனங்கட்டி போன்றவற்றை சுற்றுலாத்துறையினர் பெரிதும் விரும்புவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் பனம் சார் உற்பத்திகளான கிழங்கு, புழுக்கொடியல், ஒடியல்மா. பனாட்டு மற்றும் பனங்கட்டி போன்றவற்றை சுற்றுலாத்துறையினர் பெரிதும் விரும்புகின்றனர். அத்துடன் ஒடியல் கூழ் அனைவராலும் விரும்பும் உணவாக காணப்படுகின்றது. அத்துடன் பனம் சார் கைப்பணிப்பொருட்கள் மற்றும் சிற்பி, சங்கு போன்றவற்றில் இருந்து செய்யப்படும் அலங்காரப்பொருட்களும் சுற்றுலாப் பயணிகளை கவர்வனவாக உள்ளன. இவற்றை உற்பத்தி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்து இழுக்க முடியும். இதன் மூலம் எழுவைதீவை பண்பாட்டுசார் சுற்றுலா மையமாக மாற்றமுடியும்.

அனலைதீவு இப்பிரதேசத்தில் காணப்படும் இன்னோர் தீவாகும். அனலைதீவு என்ற பெயர் காரணப்பெயராகவே ஏற்பட்டது என்பர். அனலை என்ற பெண் ஆட்சி செய்தமையால் அனலைதீவு என்ற பெயர் ஏற்பட்டது என்பர். இத்தீவினை சுற்றியுள்ள கடல் குமுறிப் பொங்கியெழும் நேரங்களில் கடல் அலைகளால் அழிவுறாவண்ணம் இதன் சுற்றுப்புற கரையோரங்களில் கற்பாறைகள் அரண்களாக அமைந்து உள்ளது. இதன் பின்னனியில் கரையோரத்து கற்பறைகள் நீர் தீவினுள் புக-ாதவாறு தடுத்து பாதுகாக்கின்றது. இதனால் அணைதீவு அணைதீவு என்ற காரணசிறப்புப்பெயர் ஏற்பட்டது இப் பெயர் காலப்போக்கில் அணைதீவு அணலதீவு, அனலைதீவு என வழங்களாயிற்று. இவ்வாறாக காரணப்பெயர் பெற்று விளங்கும் அனலைதீவானது சுற்றுலாப்பயணிகளை கவரும் இடங்களைக் கொண்டுள்ளது.

அனலைதீவில் காணப்படும் மதஸ்தலங்கள் சுற்றுலாத்துறையினரை கவருவனவாக உள்ளன. குறிப்பாக ஐயனார் ஆலயம் சிறப்புப்பெற்ற ஆலயமாக விளங்குகின்றது. இக்கோயிலின் உருவாக்கம் பற்றி ஐதீகக் கதை காணப்படுகின்றது. இவ் ஆலயம் 375



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன் தோற்றம் பெற்றது. மேற்கு கடற்கரையில் கரை ஒதுங்கிய பெட்டியில்ஐயனார் சிலை காணப்பட்டதாகவும் அச்சிலையினை ஊர்மக்கள் இணைந்து தூக்கி வந்த போது அதன் பாரம் தாங்காமல் மருதமரத்திற்கு கீழ் வைத்ததாகவும் அதனை மீண்டும் தூக்க முற்பட்ட போது அதனை அசைக்க முடியாமல் போனது. அந்நிலையில் அந்த இடத்தில் ஐயனாருக்கு கோயில் கட்டியதாகவும் ஜதீகக் கதைகள் கூறுகின்றது. யாழ்ப்பாணத்தில் இக்கோயிலிலேயே பெரிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டதாகும். இவ்வாறான சிறப்பம்சங்களைக்கொண்டதாக ஆலயம் விளங்குகின்றது.

கடற்பயணங்களில் போது நவீன உபகரணங்கள் இல்லாத காலத்தில் கடற்கரையினை கண்டறிவதற்கு வெளிச்சவீடு அமைக்கப்பட்டது. இவ் வெளிச்சவீடு வரலாற்று முக்கியம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இவ் வெளிச்சவீட்டிற்கு அருகில் தெளிவான நீரைக் கொண்ட கடற்கரை காணப்படுகின்றது. இங்கு காணப்படும் கடல் அலையின் தாலாட்டும் இதமான காற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற இடமாக உள்ளது.

அனலைதீவிற்கு அருகில் உள்ள புளியந்தீவில் ஸ்ரீ நாகேஸ்வரன் ஆலயம் சிவ நாக வழிபாட்டுடன் தொடர்புபட்டு விளங்குகின்றது. இக்கோயில் நயினாதீவில் உள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்துடன் தொடர்புபட்டு விளங்குகின்றது. ஸ்ரீ நாகேஸ்வரன் ஆலயத்தில் இருந்து பாம்பு நயினாதீவு அம்மன் ஆலயத்திற்கு பூ கொண்டு சென்றதாக ஜதீகம் உள்ளது. இவ்வாறாக சிறப்புப் பெற்ற இவ் ஆலயம் உள்ள இத்தீவை ஆன்மீகம் சார் சுற்றுலா மையமாக உருவாக்க முடியும். கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத்தலமாக சின்னமடுமாதா ஆலயம் முக்கியம் பெறுகின்றது. இவ் ஆலயம் கிறிஸ்தவர்களின் புனித தலமாகவும் சுற்றுலா தலமாகவும் காணப்படுகின்றது. மன்னாரில் உள்ள மடுமாதா தலத்தை போன்று ஊர்காவற்றுறையின் சின்னமடுத்தலம் புனித தலமாக விளங்குகின்றது. உள்நாட்டு யுத்தம் இடம் பெற்ற காலத்தில் யாழ்.மாவட்டத்தில் இருந்து பெரிய மடுமாதா ஆலயத்திற்கு செல்ல முடியாத கிறிஸ்தவ மக்கள் இத்தலத்திற்கே வருகை தந்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதனால் இத்தலம் புனித தலமாக விளங்குகின்றது. தற்பொழுதும் கூட இவ்வாலயத்தில் இடம்பெறும் திருவிழாக்களின் போது பெருமளவு பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட இத்தலத்தை மையமாகக் கொண்டு சுற்றுலாத்துறையை விருத்தி செய்ய முடியும்.

ஊர்காவற்றுறையில் உள்ள சென்.ஜேம்ஸ் தேவாலயம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஒல்லாந்தர் ஆட்சி இங்கு இடம் பெற்ற வேளையில் இவ் ஆலயம் கட்டப்பட்டதாகும். ஒல்லாந்தரினால் கட்டப்பட்ட ஆலயங்களில் பெரும்பாலான ஆலயங்கள் அதன் ஆரம்ப கட்டட அமைப்பில் இருந்து மாற்றியமைக்கப்பட்டுள்ள நிலையில் இவ்ஆலயம் பழமையான கட்டட அமைப்பினை இன்றும் கொண்டுள்ளமை இவ்வாலயத்தின் சிறப்பு வாய்ந்ததாகும். ஒல்லாந்தரின் கட்டட அமைப்பினை இத்தேவாலயத்தில் கண்டு கொள்ள முடியும். இவ்வாலயத்திற்கு அருகில் உள்ள கப்பல் ஏந்திய மாதா ஆலயமும் முக்கியம் வாய்ந்ததாக விளங்குகின்றது. கடற்றொழிலுக்கு செல்லும் தொழிலாளர்கள் தொழிலுக்கு செல்வதற்கு முன்பு இவ்வாலயத்திற்கு சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டுச் செல்லும் வழக்கம் காணப்பட்டது. இதே போன்று இவ் ஆலயத்தை அண்டிய கடற்பகுதியில் கடற்கலங்கள் நிறுத்தி வைக்கப்படும் இடமாக இது விளங்கியதாகவும் கூறப்படுகின்றது.

இங்குள்ள முக்கிய சின்னமாக சுமைதாங்கி காணப்படுகின்றது. பொருட்களை தலையில் சுமந்து வருபவர்கள் தலைச்சுமையை குறைப்பதற்காக பயன்படுத்துவதே சுமைதாங்கி இவ்வாறன சுமைதாங்கி பருத்தியடைப்பு கிராமத்தில் உள்ளது. தென்னிந்தியாவில் இருந்து வரும் பொருட்களை கப்பலில் இருந்து இறக்கி சுமந்து வருபவர்கள் தமது சுமையை இறக்கி ஓய்வெடுப்பதற்காக இதனை பயன்படுத்தினர். இவ்வாறான சுமைதாங்கிகளை அன்று காண்பது அரிது. இச்சுமைதாங்கி இங்கு இருப்பது முக்கியத்துவமிக்க ஒன்றாக உள்ளது.

ஊர்காவற்றுறையில் காணப்படும் பாரம்பரிய பண்பாட்டு அம்சங்கள் சுற்றுலாத்துறையினரை ஈர்க்கும் வகையில் மேம்படுத்த வேண்டும். இங்கு காணப்படும் கடல் பிரதேசத்தில் நீண்ட காலமாக நீச்சல் போட்டி இடம் பெற்று வந்துள்ளது. இதே போன்று படகு சவாரிப்போட்டி இடம் பெற்று வந்துள்ளன இப்போட்டிகளில் பெருமளவானோர் பங்குபற்றினர். இவ்வாறான போட்டிகளை மேலும் பரந்துபட்டஅளவில் மாபெரும் போட்டியாக நடாத்த வேண்டும். இதனை விட இப்பிரதேசத்தின் முக்கியம் பெற்ற விளையாட்டாக மாட்டுவண்டிச்சவாரிப்போட்டி இடம் பெற்றிருந்தது. ஊர்காவற்றுறையின் எட்டாம் கட்டைப்பகுதியில் உள்ள நாய்க்குட்டி வாய்க்கால் பகுதியில் மாட்டுவண்டிச்சவாரி இடம்பெற்றிருந்தது. இதனைப் பார்ப்பதற்கு பெருமளவானோரை பங்குபற்றி இருந்தனர் இந்நிலையில் இவ்வாறான பாரம்பரிய போட்டிகளை பாரிய அளவில் நடத்துவதன் மூலம் பெருமளவானோரை கவர முடியும். இதன் மூலம் பாரம்பரிய அம்சங்களை பாதுகாப்பதுடன் இது சார்ந்த சுற்றுலாப்பயணிகளை கவர முடியும்.

ஊர்காவற்றுறையில் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யக்கூடிய மேலும் பல்வேறு அம்சங்கள் காணப்படுகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு சுற்றுலாத்துறையை மேம்படுத்த முடியும் சுற்றுலாத்துறையின் விருத்திக்கு போக்குவரத்து பிரதான இடம் வகிக்கின்றது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தையும் ஊர்காவற்றுறையையும் இணைக்கும் வீதி தற்போது புனரமைக்கப்பட்டு உள்ளனர் இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்குமான போக்குவரத்தினை இலகுபடுத்த முடியும். இதனால் சுற்றுலாப்பயணிகனை இலகுவாக வரவழைக்க முடியும். இவற்றை விட ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையில் பாதை போக்குவரத்து இடம்பெறுகின்றது. இதன் மூலம்போக்குவரத்தை துரிதப்படுத்தமுடியும். தீவுகளுக்கான போக்குவரத்துக்களை சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் மாற்றியமைக்க வேண்டும். இப்பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத்துறை சார்ந்த மையங்கள் பற்றி அறியாத நிலையிலே காணப்படுகின்றது. எனவே சுற்றுலா மையங்கள் பற்றி விளம்பரப்படுத்தல் அவசியமாகும் சுற்றுலாத்துறை சம்பந்தமாக உள்ளூர் மக்களிடம் விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் சுற்றுலாத்துறையினை மேம்படுத்தலாம்.

சுற்றுலாத்துறை இங்கு விருத்தியடைவதனால் இப்பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இத்துடன் மக்களின் வாழ்க்கைத்தரத்தில் முன்னேற்றத்தினை ஏற்படுத்த முடியும். ஊர்காவற்றுறை பிரதேசமானது வரலாற்று சிறப்புமிக்க பிரதேசமாக காணப்படுவதுடன் பல வரலாற்று சின்னங்களும் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான பண்புகளைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்திக்கொள்வதன் மூலம் இப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தினை ஓரளவேனும் மேம்படுத்த முடியும். எனவே சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளுதல் தற்காலத்தில் சாலச்சிறந்ததாகும்.

## உசாத்துணை நூல்கள்


1.தீவகம் பல்துறை நோக்கு, கா. குகபாலன்

2.தீவகமும் வளமும், கா. குகபாலன்

3.ச.ஜெயராசா, இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி - இலங்கையின் சமகால சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் - பொருளியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

4.எம். ஏ. எம் முஸ்தப்பா, எஸ் சந்திரசேகரம், இலங்கையில் சூழல் சுற்றுலா - இலங்கையின் சமகால சமூகப்பொருளாதாரப்பிரச்சினைகள் - பொருளியல்துறை, யாழ் .பல்கலைக்கழகம்.

5.சுற்றுலாவும் பிறதுறைகளும் கமலம் சங்கர் - நியூ செஞ்சி புக்கவுஸ் பிறைவேட் லிமிடட்

6.பிறந்த மண்ணில் பெற்ற சுகந்தம் பாகம்-02 செந்தில் செல்லையா


**அருள்மிகு ஹரிஹர புத்திர ஐயனார் ஆலயம்**



**இது எமது பிரதேசத்தில் அனலைதீவு கிராமத்தில் அமைந்துள்ள பழமையபன ஆலயமாகும்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை பிரதேசத்தின் இயற்கை பேரிடர்களான வெள்ளமும் வரட்சியும்

S. செந்தூரன்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
(அனர்த்த முகாமைத்துவம்)
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை

இயற்கை அனர்த்தப்பாதிப்புகளுக்கு இடம், காலம் என்பன ஒருபோதும் தடையாக இருப்பதில்லை. இருந்ததும் இல்லை, இவை எங்கும், எப்போதும் தோன்றலாம். அனர்த்த வாய்ப்புக்கள் குறைவானதென கருதப்பட்ட பல பகுதிகளில் அண்மைக்காலங்களில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டதாக அறிகின்றோம்.

இயற்கை அனர்த்தம் என்பது ஓர் உலகத்தின் செயற்பாடுகளின் மனிதப்பொருட்கள் அல்லது சுற்றாடலில் இழப்புக்களை ஏற்படுத்தும் பாரதூரமான இடையூறு ஆகும். இவ்அனர்த்தங்களை புவியியல்சார்ந்த இயற்கைஅனர்த்தம், காலநிலை சார்ந்த இயற்கை அனர்த்தம், உயிரியல் சார்ந்த இயற்கை அனர்த்தம் என வரையறை செய்யலாம்.

### 01.காலநிலை அனர்த்தம்

இது சுறாவளி (ஹரிக்கேன், தைபூன், நோனாடோ) சுழற்காற்று, கடும் குளிர் வெள்ளப்பெருக்கு (கரையோரப்பகுதி ஆற்றுகழிமுகம்), வரட்சி, பனிக்கட்டியாதல் காலநிலை சார்ந்தவை (புவி வெளியுருவம், புவிச்சரித அனர்த்தம்) புவிநடுக்கம், ஏவையவை நிலவழுக்கை, பனிப்பாறை சரிவு, சுனாமி, என்பன காலநிலை அனர்த்தங்களாக பாகுபடுத்தப்பட்டுள்ளன.

### 02.உயிரியல் அனர்த்தம்

உயிரியல் அனர்த்தம் என்பது தாவரம் சார்ந்தவை ஆக கருதப்படுகின்றன அதாவது நச்சுத்தாவரங்கள், பூஞ்சணம் சார்ந்த நோய்கள், நீரை மாசுபடுத்தும் தாவரங்கள். போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் மற்றும் சில காரணிகளாக வசந்த கால சளிக்காய்ச்சல், உயிரினங்களினால் ஏற்படும் நோய்கள் உதாரணமாக:- மலேரியா, சிக்கன்குனியா, டெங்கு, போன்றவையும் மற்றும் வெட்டுக்கிளியால் ஏற்படும் அழிவுகள் முதன்மையானவையாக நிகழ்கின்றன. இவை உயிரியல் அனர்த்தம் எனப்படும்.

இவ்வாறாக இயற்கை அனர்த்தங்களை வகைப்படுத்தும்போது அதிகளவிலான தீவகத்தின் தரைத்தோற்ற அமைப்பும் அதன் பாங்கும் அங்கு வெள்ளப்பெருக்கையும், வரட்சியையும் மாறி, மாறி விளைவிப்பதை காணலாம். தீவகத்தில் ஊர்காவற்றுறை பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ளப்பெருக்கின் பாதிப்புக்கள் அதிமாக இருந்துள்ளன. இதற்கு அப்பிரதேசத்தின் புவியியல் அமைப்பு இதற்கான வாய்ப்புக்களை வழங்குகின்றது. இங்கு வெள்ளம் ஏற்படுவதற்கு பிரதான மூலகாரணமாக மழையே காணப்படுகின்றது. இலங்கையின் ஏனைய பகுதிகளைப்போல ஆறு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையோ அல்லது பெரிய குளங்களையோ யாழ். மாவட்டத்தில் காணக்கூடியதாக இல்லை. இங்கு தாழ் அமுக்கம்(Depression) புயல், சூறாவளி, மழைவீழ்ச்சி வெள்ளப்பெருக்கு என்பவற்றுக்கிடையில் ஒரு சங்கிலிதொடர்பு காணப்படுகிறது. அதாவது வங்களா விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்க நிலமைகளே அதிக மழைவீழ்ச்சிக்கு காரணமாக இருக்கின்றன. கிடைக்கின்ற மழைவீழ்ச்சியின் அளவு குறுகிய காலப்பகுதிக்குள் மிக அதிகமாக இருந்தால் அது வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தும்.

யாழ்.குடாநாட்டில் சராசரி கால மழைவீழ்ச்சியை பொறுத்த வரையில் 1231.3mm மழைவீழ்ச்சி காணப்படுகின்றது. ஆனால் இந்த மழை வீழ்ச்சியில் காலரீதியான வேறுபாடுகளும், இடரீதியான வேறுபாடுகளும் காணப்படுகின்றன. மழையானது பின்வரும் வழிக-ளில் கிடைக்கப்பெறுகின்றது.

1.வடகீழ் பருவக்காற்று

2.மேற்காவுகை

3.சூறாவளி தாழ் அமுக்கம்

போன்ற நிலையில் ஏற்படுகின்ற மழைவீழ்ச்சியின் தன்மையினால் எமது பிரதேச செயலகத்துக்கு 15 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அதன் தாக்கத்தினை உணரக்கூடியாக உள்ளது. ஆயினும் கூடுதலாக வெள்ளப்பாதிப்புக்கு உட்பட்ட பகுதிகளாக புளியங்கூடல J/60 கிராம சேவை யாளர் பிரிவில் உள்ள சூரியவத்தை கிராமமும், நாரந்தனை வடமேற்கு கிராம சேவை யாளர் பிரிவில் உள்ள கடற்கரையோரத்தை அண்டிய பகுதிகளும் கரம்பொன் மேற்கு J/54 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள புதுக்குடியிருப்பு, கிராமமும் நாரத்தனை போன்ற பகுதிகளில் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றன. எனவே இவற்றில் இருந்து விடுபடுவதற்கான நடவடிக்கைகள் பின்வருமாறு இயற்கை அனர்த்தங்களை தடுக்க முடியாது. ஆனால் இயற்கை அனர்த்த பாதிப்புக்களை உரிய நடவடிக்கை ஊடாக குறைக்க முடியும். இத்தகைய தடுப்பு நடவடிக்கைகள் பின்வரும் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்படும்.

1.வெள்ளப்பெருக்கு ஏற்பட முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டியவை

2.வெள்ளப்பெருக்கின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறைகள்

3.வெள்ளப்பெருக்கின் பின் செய்யவேண்டியவை

## வெள்ளப்பெருக்கின் முன்னரான நடவடிக்கைகள்

1.வெள்ள தடுப்பு சுவர் அணைகளை அமைத்தல் (Build the Flood prevent walls) பெரிய வெள்ள வாய்க்கால்களில் மழைக்காலங்களின் போது நிரம்புகின்ற மேலதிக நீர் குடியிருப்புகளுக்கு சென்று பாதிப்பினை ஏற்படுத்தவல்ல தடுப்பு சுவர்கள்,அணைகள் என்பவற்றினை அமைக்க வேண்டும்.

2.வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

3.கட்டிடங்களை சீராக்குதல்.

4.திட்டவட்டமான கட்டுமானப்பணிகள்.

5.குறுக்கு அணைகளை அமைத்தல்.

6.அனர்த்த மீட்பு குழுக்களை உருவாக்கல்.

7.தற்காலிக இல்லிடங்களை அமைத்தல்.

8.நவீன முன்னெச்சரிக்கை நிலையங்களை அமைத்தல்

போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ள அனர்த்தத்தின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

1.குழந்தைகள் , முதியோர்களை பாதுகாப்பான இடத்துக்கு இடமாற்றம் செய்தல்.

2.அனர்த்தம் பற்றிய நிலவரங்களை உடனுக்குடன் அதற்கேற்ப செயற்பட வேண்டும். இதற்கேற்ப வானொலி ,செய்மதி ஊடகங்களினூடாக தகவல் அறிந்து கொள்ளலாம்.

3.வெள்ள அனர்த்தத்தின் போது இயன்ற வரை மீன் பாவனைப்பொருட்களை பாவிப்பதை தடுக்க வேண்டும்.

4.தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அனர்த்த மீட்புக்குழுக்களை சந்தித்து தொடர்பு கொண்டு உதவிகளைப்பெறல்.

5.வெள்ள அனர்த்த பகுதிகளில் இருந்து பாதுகாப்பான பகுதிக்கு நகர்வதற்கான பாதுகாப்பான பாதைகளை அறிந்து அதனூடாக நகருதல்.

போன்றவை வெள்ள அனர்த்தத்தின் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகும்.

## வெள்ள அனர்த்ததின் பின்னரான நடவடிக்கைகள் பின்வருமாறு.

1.உரிய அறிவிப்பு வரும் வரை பாதுகாப்பாக இருக்கும் இடங்களை விட்டு திரும்பாமல் இருத்தல்.

2.குடிநீர் தொடர்பில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும் சுத்தமான குடிநீரைப்பெறுவதுடன் குடிநீர் பெறும் இடத்தினையும் துப்பரவாக வைத்திருத்தல்.

3.பாதுகாப்பானது என்று தெரிந்த பின்னரே உணவுப் பொருட்களை உட்கொள்ளுதல் வேண்டும்.

4.மலசல கூடம் மற்றும் வீட்டுச்சூழலை துப்பரவாக வைத்திருத்தல் வேண்டும்.

5பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் ஆலோசனைகளைப்பெற்று நோய்த்தடுப்பு முறைகளை கையாளுதல் வேண்டும்.

6.பிரதேசத்தின் மின்சாரம்,தொலைத்தொடர்புகளை மேம்படுத்துவதற்காக பொதுமக்களுக்கு ஒத்துழைப்புக்களும், உதவிகளும் புரிந்து இயன்றளவில் விரைவில் அவற்றை மேம்படுத்தி மீளமைத்தல் வேண்டும்.

இவை வெள்ளம் வந்த பின் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் ஆகும்.

இயற்கை அனர்த்த முகாமைத்துவத்தில் குறைவார்க்கல் வட்டம் (Mitigation circle), முக்கியமான ஒரு விடயமாக காணப்படுகிறது. குறைவாக்கல் வட்டம் என்பது தயார்படுத்தல் (Preparedness),பொறுப்பெடுத்தல் (Response),மீளமைத்தல்(Recovery), குறைத்தல்(Mitigation),பொறுப்பெடுத்தல் என்பது ஒவ்வொரு துறைசார்ந்த வேலைகளையும் ஒவ்வொரு துறை பொறுப்பெடுத்து செயல்படுவதை குறிக்கும். இலங்கை பாராளுமன்றம் தெரிவுக்குழுவின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1.தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம (NCDM )

2.மாவட்ட ச்செயலகம்

3.மாவட்ட முகாமைத்துவ மத்திய நிலையம்

4.பிரதேச செயலகம்

5.மாநகர சபை

6.முப்படைகள்....................

மேற்கூறப்பட்ட விடயங்களின் அடிப்படையில் தவிர பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக வெள்ளப்பெருக்கினை குறைக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.அனைத்து கிராமசேவையாளர் பிரிவுகளிலும் வினைதிறன் மிக்க செயற்பாட்டாளர்களை கொண்ட அனர்த்த மீட்பு குழுவை உருவாக்கி அவர்களுக்கான பயிற்சிகளும் வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும். இவர்கள் அக்கிராம சேவகர்பிரிவில் ஏற்படும் எத்தகைய அனர்த்தங்களின் போது உடனடி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அனர்த்த பகுதியில் இருந்து மக்களை வெளியேற்றுதல் வேண்டும்.

2.பிரதேசத்தில் அனர்த்தம் ஏற்படும் போது உதவுவதற்கு சில குழுக்களை நியமித்தல் வேண்டும் இதற்காக அரசசார்பற்ற நிறுவனங்களை பயிற்றுவித்தல் நன்று.

3.ஒவ்வாரு கிராமசேவையாளர் பிரிவிலும் உயரம் கூடிய உயரம் குறைந்த பகுதியை அடையாளப்படுத்தப்பட்டிருப்பதுடன் அவற்றுக்கு செல்வதற்கான பாதுகாப்பான பகுதிகளாக பிரதேசமக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

4.மாவட்ட வானிலை அவதானிப்பு நிலையத்தினை நவீன மயமாக்கப்படுத்துவதுடன் யாழ். மாவட்டத்துக்கான தனியார் வானிலை முன்னறிவிப்புக்களை செயற்படுத்தல் வேண்டும்.

5.அனர்த்தம் ஒன்றின் போது உதவி புரியக்கூடிய அனைத்து பொதுச்சேவை துறைகளும் வலுவானதொரு ஏற்படுத்துதல் வேண்டும்.

மேலும் எமது பிரதேசத்தில் வெள்ள தவிப்புக்களை சின்னமடு பிரதேசத்தில் வெள்ளத்தினை தவிர்ப்பதற்காக 4.3million செலவில் வெள்ளவாய்க்கால் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தம்பாட்டி கிராமசேவையாளர் பிரிவில் 1.5km உவர்நீர் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 1.1km தூரம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2km தூரம் வரை அமைக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன் சூரியவத்தை கிராமத்தில் 2km தூரத்துக்கு வெள்ளவாய்க்கால் அமைக்கப்படுதல் வேண்டும். மெலிஞ்சிமுனை கிராமத்துக்கு உவர்நீர் தடுப்பணை 5km தூரத்துக்கு அமைத்தல் வேண்டும். மழைநீர் சேகரிப்புத்தொட்டிகள் போன்றவற்றையும் அமைக்க வேண்டும். எட்டுப்பாடசாலைகளில் மழைநீர் சேகரிப்புத்தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தலாம்.

## 2013ம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டகுடும்பங்கள்

குடும்பஎண்ணிக்கை 972,அங்கத்தவர்கள்- 3213 2013ம் ஆண்டு வீடுகள் பாதிக்கப்பட்ட மொத்த குடும்பம் வீடுகள் - 90, அங்கத்தவர்கள் - 333 2014 ம் ஆண்டு - 135 வீடுகள் பாதிக்கப்பட்டன 2014ம் ஆண்டு - குடும்ப எண்ணிக்கை 2578, அங்கத்தவர்கள் - 8609

அத்துடன் எமது பிரதேச செயற்பாட்டுக்குட்பட்ட பகுதிகள் வரட்சியினாலும், கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது. 15 பிரதேச செயலகங்களிலும் வரட்சியின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. இதற்கும் எமது புவியியல் தன்மையே காரணமாக உள்ளது. அத்துடன் மெலிஞ்சிமுனை, கரம்பொன், நாரந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமேற்கு, நாராந்தனை தெற்கு, கரம்பொன் தென்கிழக்கு, பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை போன்ற கிராமசேவகர் பிரிவுகளில் கடுமையான வரட்சியின் தாக்கம் உணரப்பட்டுள்ளது. 2014 ஆண்டு 2680 குடும்பங்களை சேர்ந்த 8946 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடதக்க ஒரு விடயமாகும். எமது பிரதேசமானது August, November, December காலப்பகுதியில் அதாவது நான்கு மாத காலப்பகுதியில் வரட்சி ஏற்படுவது வழமையானது. ஆனால் 2014 ஆன்டு April - December எட்டு மாத காலத்தில் வரட்சி ஏற்பட்டு மக்களின் வாழ்வாதாரத்தினை பாதித்தமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தில் வரட்சி ஏற்படுவதற்கான காரணங்களாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1.காலம் பிந்திய மழைவீழ்ச்சி.

2.அதிகரித்த வெப்பம்.

3.காடழிப்பு.

4.தொடர்ச்சியான விவசாயத்துக்கான நீர்ப்பாசன நடவடிக்கை.

5.மேய்ச்சல் நடவடிக்கை .

6.அதிகரித்த வெப்பக்காற்று .

7.ஆவியாக்கல் செயற்பாடு அதிகரித்த நீர் நிலைகள்.

குளங்கள், கிணறுகள் போன்றன வற்றி மக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யமுடியாத நிலை மற்றும் விலங்குகளுக்கு தேவையான நீர் மனிதனின் அத்தியாவசிய தேவைகளுக்கு கூட நீரைப்பெறமுடியாத நிலை அத்துடன் தாவரங்களுக்கு நீர் இன்றி பாலைவனமாதல், தோல் சம்பந்தமான நோய்கள் போன்றவனவும் ஏற்படுகின்றன. எனவே தீவகப் பிரதேசத்தின் நீர் வளத்தினை பேணிப்பாதுகாத்து கொள்வதற்கான வழிமுறைகள் கண்டறியப்பட்டு விட்டால் தீவகப்பிரதேசத்தில் இருந்து மக்கள் முற்றாக வெளியேற வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்படும்.

எமது பிரதேசத்துக்கு தேவையான நன்னீர் ஆனது தீவகப்பிரதேசத்தில் சாட்டியில் உள்ள நன்னீர் வில்லையில் இருந்தே பெற்றுக்கொள்ளப்படுகிறது. அந்நீரினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம் நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆயினும் 2014ம் ஆண்டு வரட்சியின் உச்சக்கட்டத்தினை தொட்டபோது சாட்டியில் இருந்த நன்னீர் குறைவடைந்தமையால் அங்கு நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது.

எனவே தீவகப்பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்களுக்கு தொடர்ந்தும்குடிநீரை விநியோகிக்க வேண்டிய நிலைக்கு பிரதேச செயலகம் தள்ளப்பட்டுள்ளது. இருந்தும் கட்டிடங்கள் உயர்வாக இருந்த போதும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை மற்றும் பிரதேச சபை நாரந்தனை கிராம அபிவிருத்திச்சங்கம், தம்பாட்டி கிராம அபிவிருத்திச்சங்கம் என்பவற்றினூடாக தொடர்பு கொண்டும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நிலாவரையில் இருந்து குடிநீர் பெறப்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

அவ்வாறே கட்டணத்துக்கு மாநகரசபையின் ஏற்பாட்டில் 1000ml குடிநீர் நாளாந்தம் வழங்கப்பட்டது. இவற்றினை பிரதேச சபை பெற்று வழங்கியமை குறிப்பிடத்தக்கது ஆகும். அத்துடன் மக்களின் தண்ணீர் தட்டுப்பாட்டை தீர்க்கும் நோக்குடன் கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் கிராமசேவையாளர் பிரிவுக்கு குடிநீரினை வழங்கியது. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படையினரால் மெலிஞ்சிமுனை கிராமத்துக்கு நாரந்தனை வடமேற்கு கிராமசேவகர் பிரிவிலும் குடிநீரினை வழங்கின. அத்துடன் வடக்கு மாகாணசபை மூலம் தம்பாட்டி, நாரந்தனை வடமேற்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு மாகாண விவசாய அமைச்சு நீர் வழங்ககியமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

இவ்வாறு எமது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியானது தொடர்ந்தும் வரட்சியினால் பாதிக்கப்படுவதுடன்மனிதன் குடிப்பதற்கு மட்டுமன்றி அன்றாட தேவைகளுக்கும் கூட நீரினை பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகின்றது. அத்துடன் கால்நடைகள் நீர் இன்றி இறப்பதுடன் வீதியில் பயணிக்கும் போது ஏற்படும் துர்நாற்றங்களும் அங்கப்பிரிகையாகும். அத்துடன் அதனால் ஏற்படும் தொற்றுக்களும் குறிப்பிடதக்கது ஆகும்.

எமது பிரதேசத்தின் மக்களின் தொடர் இருப்பு நிலையானது வீதி, நீர் இரண்டுமே பிரதான இடத்தை வகிக்கின்றது. வீதியானது தற்போது புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது. எனவே நீர் அனைத்து மக்களுக்கும் கிடைப்பதற்கான அனைத்து துறைகள், துறைசார் அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

1.எமது பிரதேசத்தினுடைய பிரிவில்தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபை மூலம் குழாய் நீர் விநியோக கட்டணத்துக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது காலை 6மணி தொடக்கம் 7மணி என்ற நிலை காணப்படுகிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.
2.இந்நீர் விநியோகத்தினை மக்கள் கட்டணம் செலுத்தி பெறுவதன் காரணமாக மக்கள் தொடர்ந்தும் பெறுவதற்கான நிலையை உருவாக்குதல் வேண்டும். (24மணி நேரமும்)
3.அத்துடன் எல்லோருக்கும் தனி இணைப்புக்கள் வழங்கப்படுவதுடன் ஒரளவுக்கேனும் சலுகைகள் காட்டப்படல் வேண்டும்.
4.எமது பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் குழாய் நீர் விநியோகத்தினைதேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையே மேற்கொள்வதன் காரணமாக குழாய் நீர் வசதி இல்லாத கிராமசேவகர் பிரிவுகளுக்கு குழாய்நீர் விநியோகத்தினை விஸ்தரித்தல் வேண்டும்.

J/53 - கரம்பொன் தென்கிழக்கு
J /52 – கரம்பொன் கிழக்கு
J /54 - மெலிஞ்சிமுனை புதுக்குடியிருப்பு
J /50 – கோட்டைக்கடையடி அண்டிய மாட்டுக்காளை பகுதி
J/ 57 – நாரந்தனை
J/ 55– நாரந்தனை
J/ 60 - சின்னமடு

போன்ற பகுதிகளுக்கு குழாய் நீர் விநியோகத்தினை விஸ்தரித்தல் வேண்டும்.

5.அத்துடன் குழாய்நீர் விநியோகம் சிறப்பாக இடம்பெற ஏதுவாக ஊர்காவற்றுறை நூலகத்துக்கு முன்பாக உள்ள தண்ணீர் தாங்கியில் நீரினை வழங்கி அவற்றின் ஊடாக சேவைகளை வழங்குவது இலகுவாகும். இரணைமடுத்திட்டம், கழிக்குளத்திட்டம் என பல்வேறு திட்டங்களை, மருதங்கேணி கடலினை சுத்திகரித்து தீவகத்துக்கு குடிநீர் வழங்கும் திட்டம் என பலவகையான திட்டங்கள் தீவக பிரதேச மக்களின் நிலையை உணர்ந்து உடனடியாக நடைமுறைபடுத்தக்கூடிய திட்டங்களாக செயற்படுத்தி மக்களின் அன்றாட பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பாாப்பாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் வரட்சிதணிப்பு செயல்திட்டங்களாக எமது பிரதேச செயலரின் முயற்சியின் பயனாக குளங்களை இணைத்து மழை காலத்தில் விரைவாக கடலை சென்றடையக்கூடிய மழைநீரை சேகரித்து வரட்சியின் காலஅளவை குறைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வகையில் 2014ம் ஆண்டில் குளங்கள் 8.6 million ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது ஆகும்.

(ஒழுவில்குளம், மெலிஞ்சிமுனைகுளம், முதலைக்கழிக்குளம், செருக்கன்குளம்,வடலிக்குளம், கொத்திக்குளம், நுனிபுரக்குளம், என்பன குறிப்பிடத்தக்கது ஆகும) அத்துடன் 10கிணறுகள் புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் மூன்று கிராமசேவகர் பிரிவுகளில் குடிநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் உவர் நீர்த்தடுப்பணைகள், தடுப்பணை கதவுகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே மழைநீர் சேகரிப்பதற்காக ஏழு பாடசாலைகளில் மழைநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கமை ஆகும்.

அத்துடன் எமது பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குளங்கள், கால்வாய்களை புனரமைப்புச் செய்வதன் ஊடாக ஓரளவு ஏனும் வரட்சியின் நிலைமைகளை சமாளிக்கக்கூடியதாக இருப்பதுடன் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

## ஊருண்டி கோட்டை



**இது எமது பிரதேசத்தில் பருத்தியடைப்பு**
**கிராமத்தில் அமைந்துள்ள**
**பழமையான கோட்டையாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உள்ளத்தின் ஆழத்திலிருந்து...............

கடலலை தாலாட்ட, செந்நெல்மணிகள் தலையசைக்க, ஆநிரைகள் துள்ளி மகிழ, மாரிமழை பொழிய மண் குளிர, மக்கள் மகிழ்ச்சியில் திளைத்திட எம்மண்ணில் கருவாகி, கனியாகி **அலைமொழி** மலர்ந்திருக்கின்றாள்.

இம்மலரின் வருகையினை மண்ணின் மாந்தர்களும் புலம் பெயர்நாடுகளில் வாழும் உறவுகளும் ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் இத்தருணத்தில் மலர்ந்திருப்பது எம் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியினை அளிக்கின்றது.

இவ்வாறான மலரை சிறப்பான முறையில் வெளியிட உதவி புரிந்த அன்பான உள்ளங்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றிகளை கூறி நிற்கின்றோம்.

இவ்வெளியீட்டிற்கான நிதியுதவியினை வழங்கிய வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கும் மற்றும் ஆசிச்செய்திகள் வழங்கிய இந்து, கிறிஸ்தவ குருமணிகளுக்கும் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் வாழ்த்துச்செய்திகளை வழங்கிய மதிப்பிற்குரிய அரசாங்க அதிபர், பிரதேச செயலர் ஆகியோருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.இதனை ஆக்கபூர்வமான மலராக வெளியிடுவதற்கு ஆக்கங்களை உரிய காலப்பகுதியில் தந்து உதவிய நல் உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

மண்ணின் மணம் வீசும் இம்மலரை சிறப்பாக அச்சிட்டு தந்த ஈஸ்வா டிஜிற்றல் அச்சகத்தினருக்கும் எமது நன்றிகளை கூறி நிற்கிறோம்

எமது மண்ணில் இன்னும் பல மலர்கள் தொடர்ந்து மலர்ந்து மணம் வீச எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கிறோம்.

அடுத்த இதழில் மலரும் வரை

என்றும் நன்றியுடன்
**இ.ஜோன்சன்**
செயலாளர்
தீவகம் வடக்கு கலாசாரப்பேரவை
பிரதேச செயலகம்
ஊர்காவற்றுறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Eeswaa, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org